# IDENTITY WARS
## The road to Freedom

**By**

**Adrian Ebens, Australia Translation in Tamil**

**By**

**K.R. Peter Simon**
**The Ministry of Great Controversy**
**Roy-Grace Cottage**
**Peria Alankulam, Valayapatti Post**
**MADURAI-625 022, INDIA.**

ஒரே தன்மையுள்ள யுத்தங்கள்
ஆக்கியோன், அட்ரியன் ஈபென்ஸ், ஆஸ்திரேலியா

தமிழில்

**K.R.** பீட்டர் சைமன்
மாபெரும் ஆன்மீகப் போராட்ட ஊழியங்கள்
ராய்-கிரேஸ் இல்லம்
பெரிய ஆலங்குளம், வலையபட்டி அஞ்சல்
மதுரை-625 022, இந்தியா
செல் : 9443728300, 9487439702

## சமர்ப்பணம்

எப்பொழுதும் உயர்ந்து நிற்கும்படியாகவும் எப்பொழுதும் நேர்மை உள்ளவனாக இருக்கும்படியாகவும் எதை நீ தொடங்கினாயோ அதை நிறைவுசெய், என்றவரும் அநீதியை ஒருபோதும் சகித்துக் கொள்ளாதே என்று போதனை செய்தவருமான என்னருமைத் தந்தைக்கும்,

கனவு கண்டு கொண்டிருக்கும்படியாகவும் ஆக்கபூர்வமானவனாக இருக்கும்படியாகவும் இயற்கையை நேசித்து தாராளமானவனாக இருக்கம்படியாகவும் எனக்குப் போதனை செய்த என்னருமை அன்னை ஈவ்லின் அவர்களுக்கும்

எனது பிள்ளைப் பருவப் பயணத்தில் என்னுடன் பங்கு கொண்டிருந்து அடிக்கடி அவருடைய விரைவான நகைச்சுவை மிக்க பேச்சினால் என்னைச் சிரிக்கச் செய்கின்ற பழக்கமுள்ளவளான என்னருமை சகோதரி கரீன் ஆகியோருக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

இவண்

**அட்ரியன் ஈபன்ஸ்.**

# ஒரே தன்மையுள்ள யுத்தங்கள்
# பகுதி – 1
# இரண்டு ராஜ்யங்கள்

## 1. ட்ராசெல் மரம்

அந்த அறை மங்கலாக ஒளிப்படுத்தப்பட்டிருந்தது. சுவர்களில் ஒன்றின்மீது பல எண்ணிக்கையிலுள்ள விளம்பரச் சுவரொட்டிகளும் ஒரு பாப் இசைக்கலைஞனின் படமும் மற்றொன்றில் உண்மைக்காக ஏக்கமுள்ள ஒரு விளையாட்டு வீரனின் படமும் அடிக்கடி சன்னல்களாகச் செயல்பட்டவைகளாக இருந்திருந்தன. மற்றொரு சுவரின் நீளவாட்டத்தில் ஒரு சாய்வு மேஜையும் அதன்மீது சில பள்ளிப் புத்தகங்களும் இருந்தன. ஆனால் அந்தச் சாய்வு மேஜையின்மேல் நடுவில் சக்திமிக்க ஒரு முக்கிய அம்சமாக ஒரு சிறிய ஆனால் சக்திவாய்ந்த ஒரு ஸ்டீரியோ அமைப்பும் இருந்தது. உண்மையில் இது இளைஞனின் (13 முதல் 19 வரை வயதுள்ள) அறையாக இருந்து அது அதன் பேராவலின் அடையாளங்களனைத்தையும் வன்முறைமிக்க உணர்ச்சிக் கொந்தளிப்பையும், ஆம் கனவு காண்பதையும் காட்டியிருந்தன.

என்னுடைய இருதயத்தில் தலைவிதி பற்றியும் சத்தியத்தின் ஒரு வினாடி நேரம் பற்றியுமுள்ள ஒரு பெரும் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. ‘‘அதைப் போன்ற எதையாவது நான் செய்ய வேண்டும் என்று நான் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. நூன் அந்தத் தரையை உற்றுப் பார்த்தபோது, நான் முணுமுணுத்தேன். ஏன்னுடைய சொந்த மனத்தோற்றம் மிகவும் கடுமையாகச் சோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதற்குமுன் பல தடவைகள் எனக்கு உதவி செய்திருந்த, அந்த சுவர்களின் மீதிருந்த விளம்பரச் சுவரொட்டிகளிலிருந்து

நான் ஆறுதலைத் தேடியிருந்ததுடன் இப்பொழுது நான் அறுவடை செய்துகொண்டிருந்த அறுவடையிலிருந்து என் மனத்தைத் திசைதிருப்ப நான் வகை தேடிக்கொண்டிருந்தேன்.

ஆந்தக் காற்று ஆபத்தை உணர்ந்தும், பொருட்படுத்தாத துணிச்சல் மிக்க உணர்வினால் நிறைந்திருந்தது. என் மனத்தின் நிலைமையைச் சமநிலைப்படுத்தக்கூடிய அடையாளங்களைப்பிடித்துக் கொண்டிருந்தது. நான் பற்றிக்கொள்ள விரும்பியிருந்த அடையாளங்களாகக் கல்வி, விளையாட்டு, பேச்சுத்திறன் போன்றவைகள் இருந்தன. ஆனால் இப்பொழுது எனக்கு உதவி செய்வதற்கு அவைகள் வல்லமை இல்லாதவைகள்போல் காணப்பட்டிருந்தன. என்மீது நோயுண்டாக்கும் ஒரு மேகம் இறங்கி எனது பேராவலின் உணர்வைப் பிழிந்து வெளியேற்றப் புறப்பட்டிருந்தன. அது இருதயத்தின் மதிப்புமிக்கதாக இருக்கின்ற இடங்களின் மீது திறக்கும்படி உதைத்து, பொக்கிஷங்களைத் திருடினதுடன் அதற்குப்பின் அது எல்லா நம்பிக்கையின் மிகவும் அதிகமான பரிசுத்தத்திற்கான அறையை உண்டுபண்ணினது.

நான் என்னுடைய அன்னையிடத்தில் ஒருபோதும் பேசமாட்டேன் என்று எனக்குள் வாக்குத்தத்தம் செய்திருந்த ஒருவிதமாக, நான் என்னுடைய அன்னையிடத்தில் பேசியிருந்தேன். நான் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டுமென்று நான் விரும்பியிருந்தேனா அப்படிப்பட்டவனாக நான் இருக்கவில்லை என்பதை என்னை உணரும்படி செய்தது இந்த வைக்கோலாக இருந்தது. என்னை நான் விரும்பாமலிருந்ததுடன், நான் மாறுதல் செய்ய விரும்பினேன். ஆனால் அது நம்பிக்கை இல்லாததுபோல் காணப்பட்டிருந்தது.

**மனச்சோர்வு**

இன்று நமது சமுதாயத்தைத் துன்பப்படுத்துகின்ற ஒரே மிகப்பெரிய சாபமாக மனச்சோர்வு இருக்கின்றது. உலக உடல்நல அமைப்பின் பொது இயக்குனராக இருக்கின்ற டாக்டர் Gக்ரோ ஹார்கென் இவ்விதமாக அறிவித்தார். இன்று உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஏறத்தாழ 450 மில்லியன் மக்கள் மனம் சம்பந்தமான அல்லது நரம்பு சம்பந்தமான சீர்கேடு உள்ளவர்களாக இருக்கின்றனர்..... பாதிக்கு மேற்பட்ட மனச்சோர்வுக்கு இப்பொழுது உலகளாவிய விதமாகத் திறமையின்மைக்கு நடத்துகின்றதற்கான ஒரு காரணமாக, (மனச்சோர்வு) இருக்கின்றது.

1998-99களில் இருந்துள்ள கீழ்க்காணும் புள்ளி விபரங்களிலிருந்து இந்தப் பிரச்சனையின் மிகப்பெரிய அளவை பற்றிக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

- ஒவ்வொரு வருடத்திலும் ஒரு மில்லியன் தற்கொலைகள்.
- ஒவ்வொரு வருடத்திலும் 10 மில்லியனிலிருந்து 20 மில்லியன் வரையிலான அல்லது ஒவ்வொரு நிமிடத்திற்கும் 38 தற்கொலை முயற்சிகள்.
- ஐக்கிய அமெரிக்காவில் நிகழுகின்ற தற்கொலைகளில் 35 முதல் 49 வயதுவரை உள்ள ஆண்களின் இந்த எண்ணிக்கை மரணத்திற்கான மூன்றாவது காரணமாக உள்ளது.
- ஆஸ்திரேலியாவிலுள்ள வாலிபர்களின் தற்கொலை விகிதம் உலகத்தில் மிகவும் உயர்ந்ததாக இருக்கின்றது.

பூமியின்மேல் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கின்றது? மில்லியன்களான மக்கள் மற்றொருநாளைச் சந்திப்பதை விட அதிகமாக இறப்பதைத்

தெரிவுசெய்து கொள்ளுவதற்கு, வாழ்க்கையைப் பற்றி, அவ்வளவு மனச்சோர்வு எது உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது?

பிலிப் Dடே என்பவர், இந்த மிக அதிகமாக வெளிப்படுத்துகின்ற அறிக்கையை அவருடைய "மனவிளையாட்டு" என்னும் புத்தகத்தில் கொடுக்கிறார்.

சென்றுபோன காலங்களில் கரிசனை செய்கின்ற குடும்ப அங்கத்தினர்கள் மனச்சோர்வடைந்த உறவினரைச்சுற்றி ஒன்றுகூடி, வாக்குறுதியையும் கவனத்தையும் கொடுத்து, காரியங்களைப்பற்றி நேரடியாகப் பேசியிருந்தனர். இன்று குடும்பம் என்னும் முழுக்குழுவை உடைத்தும் மதத்தின் பெருமையைக் குலைப்பதனாலும் 21ம் நூற்றாண்டு வாழ்க்கையின் நிதானமான நடத்தையில் உள்ள பிரிவினையில் அநேக குடும்பங்கள் ஒன்றுக்கொன்றுள்ள பிரிவினையினாலும் மூளைநரம்புக் கோளாறுகளைக் கண்டுபிடிக்கின்ற மனம்பற்றிய ஆராய்ச்சியில் ஆலோசனை வழங்குதல் என்னும் கடினமான வேலையைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டு உறவினர்களை அல்லது அயலகத்தினராக உள்ள ஊழியரைக் கவனிப்பதனால், அதைச் செயலாற்றப் பழக்கப்பட்டுள்ளனர். இது நமது சமுதாயத்தின்மீது ஒரு நாசகரமான தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றது என்பதை நான் பலமாக நம்புகிறேன்.

பிலிப்Dடே, மூன்று காரணங்களைப் பட்டியலிடுகிறார். (1) குடும்பக்குழு உடைதல் (2) மதத்தின் பெருமையைக் குலைத்தல் (3) 21ம் நூற்றாண்டு வாழ்க்கையின் நிதானமான நடத்தையில் உள்ள பிரிவினையில் அநேக குடும்பங்கள் பிரிதல், குடும்பக் குழுவின் உடைதல்

அச்சாணி போன்ற காரணமாக இருக்கின்றது. டேவிட் வான் Bபியேமா என்பவர் இந்த விஷயத்தின்மீது கீழ்க்காணும் விளக்கம் கூறுகிறார்.

வேறு ஒன்றைப்போல இல்லாத ஒரு தலைமுறை இந்த யுகத்தின் மேல் வந்திருக்கின்றது. அதில் ஒன்றில், மில்லியன்களானவர்கள் ஒரு ஆழ்ந்த தொடக்க காலத்துயரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் விவாகரத்து செய்துகொண்டுள்ளவர்களின் பிள்ளைகளாக இருக்கின்றனர். அவர்கள் ஒரே நோக்கத்துடன் செயலாற்றும் ஒரு குழுவினரின் முன்னிலையில் இருப்பவர்களைப்போலக் காணப்படுகின்றனர்.

ஜிம் கான்வே என்பவர் அவருடைய "சட்டப்படியானதும் மனக்கிளர்ச்சியினாலும் நிகழ்ந்த விவாகரத்தின் வயதுவந்த பிள்ளைகள்" என்னும் புத்தகத்தில், சட்டப்படியாகவோ அல்லது மனக்கிளர்ச்சியினாலோ, உடைந்துபோன குடும்பத்தின் பலன்களை அனுபவித்திருக்கின்ற ஆயிரங்களானவர்களால் வேதனையையும் இழப்பையும் அனுபவித்திருக்கின்றவர்கள் என்று தெளிவான விபரத்துடன் விவரிக்கிறார். முதல் திறவுகோலான சிறப்புக்களில் ஒன்றாக அவர் விவரிப்பது நான் யாராக இருக்கிறேன்? அன்பு செலுத்தப்படுவதற்கு நான் தகுதி உள்ளவனாக இருக்கிறேனா? என்பது பாதுகாப்பின்மையும் தொடர்ச்சியுமான கேள்விகளாக இருக்கின்றது.

இந்தக் கேள்விகள் மானிட இக்கட்டுக்களின் அதே ஆதாரத்திற்கு விசேஷமான அர்த்தமுள்ள உணர்வுக்குத் துரத்துகின்றது. யாராவது ஒருவர் உண்மையிலேயே என்னைப்பற்றிக் கரிசனை உள்ளவராக இருக்கிறாரா? நான் எந்த விஷயத்திலாவது மதிப்புள்ளவனாக இருக்கின்றேனா? இந்தக் கேள்விகள் மனித மனதில் அவைகளாகவே

பதிவதற்கு எப்படி வந்தன? இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு நாம் ஆரம்பத்தை நோக்கித் திரும்பிச்செல்ல வேண்டியது நமக்கு அவசியமாக இருக்கின்றது.

திடீரென்று ஏவாள் விலக்கப்பட்டிருந்த மரத்தை அவளாகவே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவளாகக் காணப்பட்டாள். இந்த மரத்திலிருந்து நாம் புசிக்கக்கூடாது என்று தேவன் ஏன் தடை செய்திருக்கிறார்? என்று அவள் ஆச்சரியப்பட்டாள். அந்தக் கனி மிக அதிகமாக வசீகரிப்பதாக இருந்ததுடன், முன்செல்லும்படி அவளைச் சைகை செய்து அழைத்திருந்தது. திடீரென்று அவள் அந்த மரத்திலிருந்து ஒரு குரல் வந்துகொண்டிருந்ததைக் கேட்டாள். சாத்தான் அவனுடைய வாய்ப்பைக் கண்டுகொண்டு, சர்ப்பமாகிய ஒரு ஊடகத்தின் மூலமாக அவளைச் சோதிக்கிறான். அது (சர்ப்பம்) ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ? என்றது சாத்தான் ஏவாளை ஆசைகாட்டி இணங்கவைக்கவும், விவாதம்செய்து தேவனுடைய வார்த்தையில் உள்ள எழுத்தின்படியான தன்மையைப் பற்றிய சந்தேகத்தை, அவளுடைய மனதில் பதிய வைக்கும்படியான இரண்டையும் செய்துகொண்டிருக்கிறான். விவாதம், தற்கஇயல் ஆகியவைகளின் ஆளுகையின் பிரதேசத்தில், ஏவாள் சாத்தானுக்கு இணையானவளாக இருக்கவில்லை. இதனுடன் பழக்கத்திலில்லாததாக இருந்த ஆயுதங்களான ஏமாற்றுதலையும் இருளையும் கூட்டவும் செய்தபோது, ஏவாள் அவளுடைய வாயைத் திறந்து இந்தப் போட்டியில் ஈடுபடுவதற்கான அவருடைய விருப்பத்தை அடையாளம் காட்டினபோது அந்தப்போட்டி, நாசத்தை உண்டுபண்ணுகின்றவிதமாகக் குறுகியதாக இருந்தது.

"ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவிலிருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்" என்றாள். தேவன் கூறியிருந்த வார்த்தைகளைத் திரும்பவும் கூறினதால் ஏவாள் அந்த சவாலை ஏற்றுக்கொள்ளுகிறாள். ஆனால் இப்பொழுது அவள் ஆழமாகக் கஷ்டத்தில் இருக்கிறாள். சாத்தானின் வெளிப்படையான சவாலுடன் அவளுடைய சொந்தத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆவடன் இணைந்து, கீழே காணப்படுகின்ற நீங்கள் சாகவே சாவதில்லை என்னும் தாடையை விழச்செய்கின்ற அவனுடைய அறிக்கை அவளை ஆயத்தமில்லாதவளாக விட்டுவிட்டிருந்தது.

16. நட்பின் விவாதம் என்னும் பெயராலும், அந்த நிலைமை சம்பந்தப்பட்ட விதமாகக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்னும் உணர்வுடனும் உங்களுடைய எதிர்ப்பக்கத்தில் இருப்பவர் எதையாவது உங்கள் மீது போட்டுவிட்டு இடத்தை விட்டு விலகிச் செல்லுகின்றவரை நீங்கள் எப்பொழுதாவது ஒரு உரையாடலில் இருந்திருக்கிறீர்களா? நீங்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்காத ஏதாவது எண்ணெயில் நன்கு தோய்க்கப்பட்டுள்ள ஒரு சக்கரத்தில் பல்லின்மீது ஏதாவது ஒரு, மறை திருகும் ஆயுதத்தை விர்ரென்று சத்தத்துடன் வீசினதால் உங்களுடைய மனத்தைச் சுற்றி வீசும் அவைகளை நிற்கும்படி அரைக்கின்றதா? அவர்கள் கூறின எதுவும் ஆழமானதாக அல்லது அறிவூட்டுவதாக இருக்கவில்லை என்பதனால் அல்லாமல், ஆனால் அது

அவர்களிடத்திலிருந்து வரும் என்று நீங்கள் ஒருபோதும் எதிர்பார்க்காமலிருந்ததனால் அப்படியிருந்தது.

17. சாத்தான் அவனுடைய இரையை நகரமுடியாததாகச் செய்திருப்பதைக் கண்டு இப்பொழுது மிக நுட்பமான சர்வநாசம் செய்யக் கூடிய, அவனுடைய வெற்றி உண்டுபண்ணக்கூடிய அடியைச் சரியான குறியில் அடிக்கிறான். "..... நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

18. இந்தச் சில வாக்கியங்கள் நீங்கள் ஒரு சிறிய நாட்டுப்புற ஊருக்கு ஊடாகக் கடந்து செல்லுகின்றபோது, நீங்கள் கண்சிமிட்டி அவைகளைத் தவறவிடுவதைப்போல இருக்கமுடியும். சுயாதீனமுடையதாகச் செய்யக்கூடியது என்று அப்படி ஒலிக்கின்ற ஒரு கருத்து, மனித ஆத்துமாவைத் துன்பத்திலும் இருளிலும் அடிமைத்தனத்தில் கட்டுகின்ற சங்கிலியின் அதேபொருளாக ஏற்படுத்துகின்றது. ஒரு நீளமான (உலோக)த் துண்டினைப்போல ஒலிக்கின்றதா? நீங்கள் சாகவே சாவதில்லை என்னும் கருத்துள்ள இந்த மூட்டையை நாம் கட்டவிழ்க்கின்றவரை என்னுடன் தங்கியிருந்து அந்தக் கனியையும் குற்றமென்று வசைகூறும் அந்தக் கேள்வியின் அறுவடையின் ஒரு பங்காக உள்ள "எங்களைப்பற்றி எந்த ஒருவராவது கரிசனை உள்ளவராக இருக்கிறாரா?" என்பதுடன் அன்புகாட்டப்படுவதற்கு நான் தகுதி உள்ளவனா? என்பதையும் பாருங்கள்.

19. நான் எட்டு வயதுள்ளவனாக இருந்தபோது, என்னுடைய சகோதரி கிறிஸ்துமஸ்ஸுக்காக ஒரு பொம்மையைப் பெற்றிருந்தாள். அது

அழவும் சிரிக்கவும் பால் குடிக்கவும் கூட செய்யக்கூடியதாக இருந்தது. நீங்கள் செய்யவேண்டியதாக இருந்ததெல்லாம் அதன் முதுகில் ஒரு ஜோடி பாட்டரிகளை வைக்கவேண்டியதாக மட்டும் இருந்து அப்படிச் செய்திருந்தபோது அது தூரமாகச் சென்றிருந்தது. அது எனது சகோதரிக்கு மணி நேரங்களாகப் பொழுதுபோக்கை ஏற்படுத்தியிருந்தது. அதனுடைய சத்தமிடுதல் எனக்குத் தொல்லையாக இருந்ததனால் நான் அதை நாய்க்கு உணவாகக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். சிறிது நேரத்திற்குப்பின் அதைப்பற்றி நல்லவிதமாக நினைத்தேன். ஏனென்றால் எனது சகோதரி ஒருமணி நேரம் அழுவதைக் கேட்பதற்கு நான் விருப்பமில்லாதவனாக இருந்தேன். இந்தக் குழந்தை சாதாரணமாக அதன் முதுகின்மேல் இரண்டு பாட்டரிகள் வைக்கப்பட்டதனால் உயிருடையதாக ஆனது. ஏவாளைப் பெற்றுக்கொள்ளும்படி சாத்தான் முயற்சி செய்திருந்தது மிக நுணுக்கமாக இந்த யோசனையாக இருந்தது. "ஏவாளே, வேறு யாராவது ஒருவர் கூறுகின்ற யோசனை பற்றி நீ கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீ உனக்குள் ஜீவனை உடையவளாக இருக்கிறாய். நீ விரும்புகின்றபடியெல்லாம் உன்னால் செய்ய முடியும். நீ எந்தத் தீங்கையும் அனுபவிக்க மாட்டாய். ஏனென்றால் நீ உன்னில்தானே ஜீவனை உடையவளாக இருக்கின்றாய். நீ இந்த இடத்திற்கு இந்த மரத்திற்குத் திரும்பிவந்து உன்னுடைய பாட்டரிகளைத் திரும்பவும் சக்திப்படுத்துகின்ற காலம் நெடுகிலும் நீ நிச்சயமாக சாகவே சாவதில்லை என்பதுடன் நீ நன்றாக இருப்பாய்" என்பதாக இருந்தது.

20. 18 மாத வயதை உடைய ஒரு சிறு குழந்தை அதன் பெற்றோர்களிடத்தில் இப்பொழுது நான் அதை என்னுடைய

சொந்தமாகவே செய்துகொள்ள முடியும். நான் இப்பொழுதுதான் கொல்லைப்புறத்திலுள்ள தோட்டவேலைக்காரரிடத்தில் பேசிக் கொண்டிருந்தேன். நான் எனக்குள்ளாக வல்லமை உள்ளவனாக இருக்கிறேன். அது என்னை உயிருடன் காத்து, எனது தேவைகளையெல்லாம் ஏற்பாடு செய்யும். எனவே உங்களுடைய எல்லா உதவிகளுக்கும் நன்றி. நாம் ஏதாவதொரு நாளில் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொள்ளுவோம் என்று கூறுவதை, உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இதுதான் மிகச் சரியாக நிகழ்ந்தது. "நீங்கள் சாகவே சாவதில்லை என்னும் இந்த யோசனை அவர்கள், அவர்களுடைய பரலோகப் பிதாவை முழுவதுமாகச் சார்ந்திருந்தனர் என்னும் அவர்களுடைய உணர்வை வெட்டி முறித்திருந்தது. தனிப்பட்டவர்களாக அவர்கள் எவர்களாக இருந்தனர் என்னும் அஸ்திபாரங்களை அது தாக்கியிருந்தது. அது அவர்களுடைய அடையாளத்தின் உணர்வையும் அதன் பலனாக தேவனுடைய பிள்ளைகள் என்னும் அவர்களுடைய மதிப்பையும் குழப்பமடையச் செய்தது. ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய பரலோகப் பிதாவின்மீது மொத்தமாகச் சார்ந்துகொள்ளுகின்ற ஒரு நிலைமைக்கு அவர்களால் ஏன் திரும்ப முடியவில்லை? பேரானந்தமுள்ள அந்த நிலையிலிருந்து, நீங்கள் எப்பொழுதும் திரும்புவதிலிருந்து, உங்களைத் தடைசெய்கின்ற உடனடியான சக்தி வினாடி நேரத்திற்குக்கூட இல்லை. ஏனென்றால் நீங்கள் உங்களுக்குள்ளேயே வல்லமை உள்ளவர்களாக இருப்பதனால் நீங்கள் சாகவே சாவதில்லை என்னும் கருத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது சாதாரணமானதாக இருந்திருக்க

வேண்டும் என்பதை நான் விரும்புகிறேன். இதைப்பற்றி நாம் பின்னர் அதிகமாகப் பேசுவோம். ஆனால் முதலில் நாம் விதியுள்ள அந்த மரத்திற்குத் திரும்பிச் செல்வோமாக.

21. அவர்கள் அந்தக் கனியைப் புசித்தபோது எந்த விதத்திலாவது உயிர்வாழ்வின் ஒரு உயர்ந்த நிலைக்கு அவர்களுடைய கண்கள் திறக்கப்படும் என்னும் சாத்தானன் கருத்தைக் கவனியுங்கள். இங்குள்ள அனுமானம், நீங்கள் உங்களுக்குள்ளேயே வல்லமை உள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்பது மட்டுமின்றி ஆனால் இந்தப் பொருள்முதல் பிரபஞ்சம், வல்லமையுள்ள பொருள்களை அடக்கிக் கொண்டிருக்கின்றது என்பதுடன், ஒரு தடவை நீங்கள் (பொருள்களை) உடையவர்களாகின்றபோது, அதனால் உங்களை இன்னும் அதிகமான வல்லமை உடையவராகச்செய்யும். பொருளாலான உலகத்திற்கு வரவேற்பு ஆதியாகமம் 3:4,5ல் சாத்தான் அவனுடைய புதிய நடைமுறைக்கு ஒவ்வாத ராஜ்யத்திற்கு மதமாற்றம் செய்து ஜெயிப்பதற்கு முழு அளவில் சுவசேஷக மாதிரியில் செயலாற்றுகிறான். அவன் வல்லமையையும் திருப்தியையும் வாக்குத்தத்தம் செய்த ஒரு ராஜ்ஜியத்தை, அவன் அதைத் தழுவுகின்ற அனைவருக்கும் கொடுத்தான். அந்த ராஜ்யம் இரண்டு மூலாதாரமான கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டதாக இருந்தது.

22.1. மொத்தமாக வெளிப்படையாக நன்மை செய்பவர் அல்லது அதிகாரமுடையவர் ஒரவரும் இல்லாது மொத்தமாக உங்களைத் தனித்தவராகச் செய்கின்ற ஜீவனை நீங்கள் உங்களில் உடையவராக இருக்கின்றீர்கள்.

2. நமது சுற்றுப்புறம் மக்களையும் பொருள்களையும் உடையதாகவும், அல்லது அவைகளுடன் தோழமை உடையதாகவும் இருக்கின்றபோது, நம்மை மிகவும் அதிகமான வல்லமை உடையவர்களாகவும் அறிவூட்டப்பட்டவர்களாகவும் வாழ்க்கையில் அதிகமான நிறைவேறுதலையும் உடையவர்களாகவும் செய்கின்றது.

23. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் மூலமாகச் சாத்தான் பாட்டரியினால் வல்லமை ஊட்டப்பட்ட ஒரு உயிர்வாழ்க்கையை வெளிப்படையான நன்மை செய்பவர் ஒருவருடைய அவசியமும் இல்லாத ஒரு வாழ்க்கையைக் கொடுத்துக் கொண்டிருந்தான். எனவே இந்த அதிகாரத்தின் பெயர் டுராசெல் மரம் என்றிருக்கின்றது. நமது உடலின் உயிரணுக்கள், வாழ்க்கையைப் பற்றிய அவனுடைய தத்துவத்தை நாம் பின்பற்றும்போது, எப்பொழுதும் உயிர்வாழக்கூடியதாக இருக்கும் என்று சாத்தான் நம்மிடத்தில் கூறுகிறான்.

24. ஆதாமும் ஏவாளும் அந்த மரத்தின் கனியைப் புசித்தபோது, அவர்களைப் பயப்படும்படியாகவும் பாவமுள்ளவர்களாகவும் கலகம் செய்பவர்களாகவும் செய்யக்கூடிய பிரிக்கமுடியாத விஷம் எதுவும் அதில் இருக்கவில்லை. அது புசிப்பதற்கு நல்லதாக இருந்தது என்று வேதாகமம் கூறுகின்றது. சாத்தான் ஏவாளிடத்தில் பேசின வார்த்தையில் அந்த விஷம் இருந்தது. அந்த விஷம் அவனுடைய ராஜ்யத்தின் கொள்கைகளாக இருக்கின்றது. ஆதாமும் ஏவாளும் அந்தக் கனியைப் புசித்ததற்காக நான் ஏன் துன்பமனுபவிக்க வேண்டும்? என்னும் கேள்வியைச் சில மக்கள் எழுப்புகின்றனர். அந்த மரத்திலிருந்து நான் புசிக்கவில்லை. தேவன் இல்லாமல் நாம் செயல்படுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் ஆதாமும் ஏவாளும் செய்த அதேவிதமாக மிகச்சரியாக ஒவ்வொரு சமயத்திலும்

நாம் செய்கிறோம் என்பது உண்மையாக இருக்கின்றது. ஏனெனில் சாத்தானின் ராஜ்யத்தின் விஷத்தை நாம் விழுங்கியிருக்கிறோம். உண்மையில் நாமனைவரும் ஒவ்வொரு நாளிலும் புசிக்கிறோம் என்பதையும் அதன் பலனாக நாமனைவரும் பயங்கரமான அஜீரணத்தினால் பாடுபடுகிறோம்.

25. தேவனைவிட்டுத் தூரமாக விலகி நம்மால் வாழ்ந்திருக்க முடியும் என்பது அநேக ஜனங்களுக்கு மாறுபட்டதாகக் காணப்படாம லிருக்கலாம். ஆனால் அடுத்த அதிகாரத்தில் இந்தவிதமான சிந்தித்தல், தற்கொலை போன்ற விதமாக இருக்கின்றது என்பதை நாம் கற்றுக்கொள்ளுவோம்.

## 2-ம் அதிகாரம்

## ஜீவ ஊற்று

1. அது வேலையில் ஒரு நீண்ட நாளாக இருந்தது. ஒரு வரவு செலவுத் திட்டத்தை ஆயத்தம் செய்வதில் நாங்கள் இறுதிக் கட்டத்தில் இருந்தோம். உண்மையில் ஏறக்குறைய தொண்ணூறு வரவுசெலவுத் திட்டங்கள் ஒன்றாகத் திரட்டப்பட வேண்டியவைகளாக இருந்தன. அது ஒரு நுண்மையான செயல்முறையாக இருந்தது. கிடைக்கக்கூடிய வருமானங்களனைத்தையும் பேராவல்மிக்க மேலாளர்களுக்கு மத்தியில் பங்கிடுகின்ற ஒன்றாக அது இருந்தது. ஒவ்வொரு மேலாளரும் தேவை உள்ளவராகவும் நம்பிக்கை உள்ளவராகவும் அவருடைய குறிக்கோளை அடைவதற்காக, ரொட்டியின் பெரிய துண்டைக் கோரிக்கை செய்பவராகவும்கூட இருந்தனர். இந்தத்

தொகைகளையெல்லாம் என்னுடைய தலையிலிருந்து வெளியேற்றுவதற்கு நான் வீணாக முயன்றுகொண்டிருந்தபோது திடீரென்று தொலைபேசி மணி ஒலித்தது. ஹலோ மகனே அப்பா பேசுகிறேன். அப்பா அவடைய தோள்களின் மீது எம்பயர் ஸ்டேட் கட்டிடம் இருப்பதுபோல் சத்தமிட்டார். அப்பா என்ன விசேஷம் (என்றேன்). அன்னை ஒரு அபாயகரமான கார் விபத்தில் இருக்கிறாள் (என்றார்). அந்த வார்த்தைகள் ஒரு பளுவான சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது. உடனே நான் நடுங்கத் தொடங்கினேன். மின்வெட்டும் நேரத்தில் எனது இருதயத் துடிப்பு இரண்டு மடங்காயிற்று. ஒரு அட்ரலின் மருந்தின் விரைவு என் உடலின் மீது நிகழ்ந்ததுடன் எனது தசைகள் இழுத்துக் கட்டினதுபோல் ஆயின. விபத்து நான் ஏறத்தாழ மெதுவாகத் தொலைபேசியை சீராகப் பிடித்துக்கொள்ள முயன்றுகொண்டு எப்படி அபாயகரமானதாக இருக்கிறது (என்றேன்) மகனே அது மிகவும் அபாயகரமானதாக இருக்கிறது (என்று அப்பா கூறினார்).

2. அந்த வினாடியில் நான் அந்தத் தொலைபேசிக் கூடாகப் பாய்ந்து உடனே என்னுடைய தந்தையைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால் சாலை வழியாக அவர் 12 மணி நேர தூரத்தில் இருந்தார். மேலும் ஒரு விமானத்தைப் பிடித்துக் கொள்ளுவதற்காக நான் காலைவரை காத்திருக்க வேண்டியவனாக இருந்தேன். நான் தொலைபேசியைத் தொங்கவிட்டபோது என்னுடைய மனம் சுழன்று கொண்டிருந்தது. அதிர்ச்சி, பயம், மரத்துப்போகுதல் ஆகிய அனைத்தும் என்னை உடனே தாக்கின. அப்பொழுது சரியாக நான் இயேசுவை நினைத்து, உடனே எனது முழங்காலில் நின்று நான் சத்தமிட்டேன். ஓ இயேசுவே, தயவுசெய்து அவளை மரிக்கும்படி விட்டுவிடாதீர்கள் என்றேன். நான் என்னுடைய வேதாகமத்தைத் திறந்து

உடனே அமைதியின் ஒரு உணர்வு என்னிடத்தில் வரும்வரை நான் திரும்பவும் திரும்பவும் ஜெபம்செய்து ஏறத்தாழ நான் சமாதானத்தை அடைந்ததை உணர்ந்தேன். அதற்குப்பின் என்னுடைய மனம் இம்மைக்குரிய வாழ்க்கையின் விஷயங்களின்மீது அலைந்தது. அது மறுபடியும் என்னை பயம், உதவியில்லாத நிலைமை, அதிர்ச்சி ஆகியவைகளால் மறுபடியும் தாக்கும் வரை அப்படி இருந்தேன். திரும்பவும் திரும்பவும் நான் என்னுடைய முழங்காலில் நின்று, இயேசுவினிடத்தில் ஜெபம் பண்ணி, இயேசுவின்மீது பற்றிக்கொண்டேன்.

3. அன்னை ஒரு பாடல் பாடத்தைப் போதனை செய்வதற்காக அவளுடைய பாதையில் பயணம் செய்து கொண்டிருந்தாள். அவள் ஒரு இருவழி நெடுஞ்சாலையில் இருந்தாள். அந்த இரண்டு சாலைகளுக்கும் இடையில் 10 மீட்டர் இடைவெளி உள்ள தோட்ட வரிசை இருந்தது. அவள் அப்பொழுதுதான் ஒரு காரைக் கடந்து கொண்டிருந்த ஒரு மேட்டைக் கடந்து கொண்டிருந்தாள். அதை மட்டுமே அவள் நினைவு கூறுகிறாள். மற்றொரு பாதை வழியாக வந்துகொண்டிருந்த ஒரு கார் அதன் கட்டுப்பாட்டை இழந்திருந்து அந்த இரண்டு சாலைகளுக்கும் இடையிலிருந்த 10 மீட்டர் இடைவெளியைக் கடந்து நேருக்கு நேராக என்னுடைய அன்னையின்மீது மோதினது. அந்த மோதலின் அழுத்தத்தின் வலிமை அன்னையின் காரின் இஞ்சினை நெருப்புச்சுவருக்கூடாகத் தள்ளினது. அதே நேரத்தில் ஸ்டீரிங் சக்கரத்தை என்னுடைய அன்னையின் முகத்திற்கு நேராக உள்ளே தள்ளிக் கொண்டிருந்தது. அறியமுடியாத ஏதோ காரணத்தினால் அந்த வினாடியில் இருக்கை உடைந்துவிட்டது. அதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அப்படியில்லாமலிருந்திருந்தால் அவள்

அந்த வினாடியிலேயே உடனடியாக மரித்திருந்திருப்பாள். அவர்கள் அவனை மருத்துவமனையில் சேர்த்தபோது அவள் உடைந்த புயங்களையும், கால்களையம், அவளுடைய முகத்தின் இடதுபக்கம் முழுவதையும் சிதைந்தவளாக இருந்தாள்.

4. என்னுடைய அன்னை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, தனது ஷிப்ட் முறையை அப்பொழுது முடிக்கப்போகின்றவராக ஒரு மருத்துவர் இருந்தார். என்னுடைய அன்னையை அவர் பார்த்தபோது உடனே, அவர் வேலை செய்யச் சென்றார். அவளுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர் எட்டு மணி நேரம் போராடியிருந்து, முடிவாகக் கவலைக்கிடமான அநேக மணி நேரங்களுக்குப்பின், அவள் ஸ்திரமானவளானாள். அந்த மருத்துவருக்கு நன்றிகூறக்கூடிய வார்த்தைகளை என்னால் காணமுடியாதவனாக நான் இருந்தேன். இப்பொழுதும்கூட அது எனக்குக் கண்ணீரைக் கொண்டு வருகின்றது. அந்த மனிதர் தொடர்ந்து 16 மணி நேரங்கள் வேலை செய்தபின் காலை 3 மணிக்கு என்னுடைய தந்தையினிடத்தில் தொலைபேசியின் மூலமாக எனது அன்னை நெருக்கடியான நிலைமையில் இருக்கிறாள் என்றம் ஆனால் ஸ்திரமாக இருக்கிறாள் என்றும் தெரிவிக்க சிந்தனைமிக்க தன்மையை உடையவராக இருந்தார். நான் இன்னும் பெரிய அளவில் அவருடைய திறமையின் ஒளிவீசும் உதாரணத்திற்கும் பலத்திற்கும் மருத்துவத் தொழிலில் உள்ள அன்பான தன்மைக்கும் நன்றி உள்ளவனாக இருக்கிறேன்.

5. சில நாட்களுக்குப்பின் நானும் என் மனைவியும் எனது அன்னையுடன் தீவிர சிகிச்சை வார்டில் இருந்தோம். அவருடைய சுகமடைவதன் வேகத்தின் விகிதத்தில் மருத்துவர்கள்

வியப்படைந்தவர்களாக இருந்தனர். அவளை உயிருடன் பார்ப்பதில் நான் மிகவும் சந்தோஷமுள்ளவனாக இருந்தேன். அவளால் மறுபடியம் இனி ஒருபோதும் பியானோ இசைக்கமுடியாது என்பதுடன் நடக்கவும்கூட முடியாதவளாக இருக்கலாம் என்று நாங்கள் கூறப்பட்டவர்களாக இருந்தோம். அது கடினமான அடியாக இருந்தது. ஆனால் அவள் இன்னும் எங்களுடன் இருந்தாள். நான் நன்றி உள்ளவனாக இருந்தேன். அன்னைக்கான மருத்துவ நாட்குறிப்பின் பதிவுகளை லொரில்லி பார்த்துக்கொண்டிருந்து என்னை அருகில் வரும்படி சைகை காட்டி அழைத்தாள். அவர்கள் அன்னையை இழக்கப்போவதாக நினைத்திருந்தனர் என்றும் ஆனால் திடீரென்று அவளுடைய ஜீவாதாரமான அடையாளங்கள் மறுபடியும் ஒன்று திரண்டு விடவே அவள் ஸ்திரப்படுத்தப்பட்டாள் என்னும் ஒரு குறிப்பை அது காட்டினது. இது எப்படி நிகழ்ந்தது என்பதற்கான விபரம் இருக்கவில்லை. ஜீவனுக்கு ஆதாரமானவராக இருக்கின்ற என்னுடைய இயேசு வந்திருந்து அவளுடைய ஜீவனைத் தாங்கினார் என்பதை நான் அறிந்தேன். ஜீவனைக் கொடுக்கின்ற இயேசுவின் வல்லமைக்காக நான் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். இன்று என்னுடைய அன்னை நடந்து கொண்டிருப்பதையும் சில சமயங்களில் அவள் பியானோவை இசைப்பதையும் காணும்போது, என்னுடைய அன்னையை குறிப்பிட்ட மரணத்திலிருந்து காப்பாற்றியிருப்பதற்காக நான் இயேசுவுக்கு ஒரு ஆழமான நன்றியை உணருகிறேன்.

6. ஜீவனைப் பற்றிய ஆதாரத்தைப் புரிந்துகொள்ள வருகின்றபோது, வேதாகமம் நம்மை சந்தேகங்களுக்குள் விட்டுவிடுவதில்லை. கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் இயேசுவைப் பற்றி நாம் பின்னுள்ளவைகளை வாசிக்கிறோம்.

7. ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப் படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும் கர்த்தத்துவங்களானாலும் துரைத்தனங்களானாலும் அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. (கொலோசெயர் 1:16,17)

8. நம்மால் காணக்கூடிய அல்லது உணரக்கூடிய ஒவ்வொன்றும் நம்மால் காணமுடியாததுமான ஒவ்வொன்றும் இயேசுகிறிஸ்துவால் படைக்கப்பட்டு இப்பொழுது தாங்கப்பட்டும் இருக்கின்றன. இறுதி வாக்கியத்தில் உள்ள வார்த்தைகளைக் கரிசனையுடன் கவனியுங்கள். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. தேவகுமாரனிடத்திலிருந்து புறப்பட்டு வருகின்ற ஜீவசக்தி பிரபஞ்சம் முழுவதையும் ஒன்று சேர்த்துப் பிடித்துக்கொண்டிருக்கின்றது என்று அந்த வசனம் தெளிவாகக் கூறுகின்றது. பவுல் அப்போஸ்தல நடபடிகள் என்னும் புத்தகத்தில் வேறொரு விதமாக வைக்கிறான்.

9. உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானதுபோல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளகிறதுமில்லை. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி பூமியின்

மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம். அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். அப.நடபடிகள் 17:24-28

10. இங்கு நாம் நமது உயிர்களுடன் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ள ஒரு தேவனைக் காண்கிறோம். பவுல் அந்தப் பெரிய படத்துடன் ஆரம்பித்து, அதற்குப்பின் கீழே பூஜ்யம் வரை அவனுடைய தனிப்பட்டதும் நெருக்கமானதுமான வட்டம்வரை கொண்டு வருகிறான்.

1. அவர் ஒவ்வொரு தேசத்தின் காலங்களையும் இடங்களையும் தீர்மானம் செய்கிறார்.
2. அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல.
3. மேலும் முடிவாகப் பவுல் பிரச்சனையின் இருதயத்திற்கு நேராகச் சென்று அவருக்குள் நாம் பிழைக்கிறாம், அசைகிறோம், இருக்கிறோம் என்று கூறுகிறான்.

11. நாம் அவரில் பிழைக்கிறோம் என்னும்போது சாதாரணமான தர்க்கஇயல் அவரில்லாமல் நம்மால் உயிர்வாழ முடியாது என்று கூறுகின்றது. அதை வேறுவிதமாக வைத்து என்னையில்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று இயேசு கூறினார். இதன் அர்த்தம், உடலாலோ, மனத்தாலோ அல்லது ஆவியினாலோ அவரில்லாமல் ஒன்றும்

செய்ய முடியாது என்பதைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். நாம் ஒவ்வொன்றிற்கும் மொத்தமாகவும் முற்றிலுமாகவும் இயேசுவின்மீது சார்ந்தவர்களாக இருக்கிறோம். ஒரு சிறு குழந்தை அதன் பெற்றோரைச் சார்ந்திருப்பதைப் போல இருக்கிறோம்.

12. இந்த விஷயத்தைச் சித்தரித்துக்காட்ட என்னை அனுமதியுங்கள். ஏனெனில் அதன் தாத்பரியங்கள் வெகுதூரம் சென்று சேரக்கூடியவைகளாக இருக்கின்றன. இருதயத்தின் வியப்பான உறுப்பைப் பற்றி யோசனை பண்ணுங்கள். இரத்தத்தை நமது உடல்களைச் சுற்றிலும் சுழன்றுவரச் செய்வதற்கு அது ஒரு (தண்ணீர்) இறைக்கும் இயந்திரம்போல இடைவிடாமல் அநேக பத்து ஆண்டுகளாக செயலாற்றுகின்றது. இருதயம் பற்றிய வியப்பு என்னவென்றால் இருதயத்தின் துடிப்புகள் அதற்கு வெளியில் உள்ள எதனாலும் உதவி செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றதில்லை. இருதயத்தின் தசைகள், நரம்பு மண்டலத்திலிருந்துள்ள எந்த நேரடியான ஊக்குவித்தலும் இல்லாமல் சுருங்கவும் விரியவும் முடியக்கூடியதாக இருக்கின்றது.

எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். 1 நாளாகமம் 29:14, யோவான் 15:5.

கல்வி என்னும் புத்தகத்தில் எலன் G. ஒயிட் கீழ்க்காணும் விதமாக அறிவிக்கிறாள். கிறிஸ்துவின் மூலமாக ஒவ்வொரு மனிதனும் உயிரை உடையவனாக இருப்பதைப் போல, அவர் மூலமாக ஒவ்வொரு ஆத்துமாவும், தெய்வீக ஒளியின் ஏதாவது ஒளிக்கதிரைப் பெற்றுக் கொள்ளுகின்றது. நுண்ணறிவின் வல்லமையை மட்டுமில்லாமல் ஆவிக்குரிய வல்லமையும் சரி என்பதைப் பற்றிய உணர்த்துதலும்

நன்மையின் மீதான ஒரு வாஞ்சையும் ஒவ்வொரு இருதயத்திலும் உயிர் வாழுகின்றது கல்வி பக்கம் 29. அது உண்மையான (தன்னில்தானே) ஒழுங்குபடுத்துகின்ற ஒரு முறையை உடையதாக இருக்கின்றது அழைக்கப்படுவதாகத் தோன்றுகின்றது. உடல்கூறு இயல் பாடப்புத்தகம் முன்வைப்பதைப்போல மின்சாரத் துடிப்புகளை உற்பத்தி செய்யவும் பகிர்ந்தளிக்கவும் கூடிய விதமாக இருதயத் தசைநார்களைச் சுருங்கும்படி செய்வதற்கு ஊக்குவிக்கின்ற விதமாக நிச்சயமாகவே (மின்) கடத்தல் முறை சிறப்பான தசைத் திசுக்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் தசைநார்கள் நிச்சயமாகவே சிறப்புமிக்கவைகளாக இருக்கின்றன. ஏனெனில் அவைகள் நரம்பு மண்டலத்திலிருந்து வராமலிருக்கின்ற மின்துடிப்புகளை உற்பத்தி செய்கின்றன. இருதயத் தசைகளைச் சுருங்கும்படி செய்வதற்கு, இருதயத் தசைநார்கள் எப்படி மின் இயக்கத்தை உண்டுபண்ணுகின்றன என்னும் கேள்விக்கு உடற்கூறு புத்தகத்தில் எந்த இடத்திலும் விளக்கம் கூறப்படவில்லை என்பது மொத்தமாக வியப்பை உண்டுபண்ணுவதாக இருக்கின்றது. அது சிறப்பூட்டப்பட்டது என்றும் இயற்கையானது என்றும் அழைக்கப்படுகின்றது. ஆனால் அது அதை எப்படிச் செயல்படுத்துகின்றது. இந்த சக்தி எங்கிருந்து வருகின்றது?

13. இங்குதான் சாலை பிரிகின்றது. அந்த சக்தி நேரடியாகத் தேவனிடத்திலிருந்து வருகின்றது என்று வேதாகமம் கூறுகின்றது. அவருக்குள் நாம் பிழைக்கிறோம். அப்.நடபடிகள் 17:28. ஆனால் அது பிரிக்கமுடியாத விதமாக நமக்குள் இருக்கிறது. அது சாதாரணமாக உயிரியல் செயல்முறையின் ஒரு பகுதியாக நாம் நமக்குச்

சொந்தமானதாக உடையவர்களாக இருக்கிறோம் என்று சாத்தான் நம்மிடத்தில் கூருகிறான். நீங்கள் சாகவே சாவதில்லை ஆதியாகமம் 3:5. இது அப்படிப்பட்ட ஒரு அடிப்படையான பிரச்சனையாக இருக்கின்ற. அது ஒன்று அல்லது மற்றொன்று என்னும் இரண்டில் ஒன்றாக இருக்கின்றது. இந்தப் பிரச்சனையில், சாலையின் நடுப்பகுதியை எடுத்துக்கொண்டு ஆம் தேவன் எல்லாவற்றையம் உண்டுபண்ணினார். அது சாவி கொடுத்து இயங்குகின்ற ஒரு கடிகாரத்தைப்போல இருக்கின்றது. ஆம் அவர் அதை ஆரம்பம் செய்து அதை ஓடுவதாக என்றார். அது எப்படியாவது தேவன் நீண்ட ஆயுளுள்ள உயிரணுக்களாலான மின்கலங்களை உண்டுபண்ணி அவைகளை நமக்குள் வைத்தார் என்பதுபோல இருக்கின்றது. வேதாகமம் இந்த யோசனையைப் போதகம் செய்கின்றதில்லை. நாம் அவருடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டவர்களாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாடியின் பத்துலட்சத்தில் ஒரு பங்கு நேரத்திலும் ஒவ்வொரு மணித்துளியிலும் ஒவ்வொரு மணி நேரத்திலும் ஒவ்வொரு நாளிலும் அவருடன் பிணைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். தேவன் தீவிரமாகவும் அறிந்துகொண்டும் அன்புடனும், நமது இருதயத்தைத் துடிக்கும்படி காத்துக்கொள்ளுகின்ற மின் இயக்கத்தை நமக்கு விநியோகம் செய்துகொண்டிருக்கிறார். இந்த உண்மையைப் பற்றி மனிதர்களாக உள்ள நம்மை உண்மையாக அசௌகரியப்படுத்தக்கூடிய ஏதோ விஷயம் இருக்கின்றது. ஆனால் அதைப் பற்றிப் பின்பு நாம் பேசுவோம். உண்மை என்னவென்றால், இந்தப் பிரச்சனையை இப்பொழுது நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அவரில் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம்,

இருக்கிறோம் என்று நாம் நம்புகிறோம். அல்லது நாம் சாகவே சாவதில்லை என்னும் இரண்டிலொன்றை நம்புகிறோம். அதில் நடுச்சாலை என்பது இல்லை.

14. நம்மில் அநேகருக்கு இதைப்போன்றது சவால் விடுவதாக இருக்கும் என்பதைப்போல மனித உயிர் வாழ்வின் உடல் சம்பந்தப்பட்ட பகுதியைப் பற்றி மட்டும் நாம் இடைப்பட்டிருந்தோம். இப்பொழுது நாம், மனத்திற்குரிய, ஆவிக்குரிய பகுதிகளைப்பற்றி சிந்தனை பண்ணுவோம். பின்வரும் வசனங்களைப் பற்றி ஆழ்ந்து யோசனை பண்ணுங்கள்.

15. அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன். அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. கொலோசெயர் 2:2,3.

16. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலேயேலை பேர்சொல்லி அழைத்து, வினோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்குப் பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும் மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும் மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும்

புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக அவனைத் தேவ ஆவியினால் நிரப்பினேன் யாத்திராகமம் 31:1-5.

17. தேவன் எல்லா ஞானத்திற்கும் அறிவுக்கும் ஆதாரமானவராக இருக்கிறார் என்று வேதாகமம் கூருகிறது. கொலேசெயர் 2:2,3. மானிடர்களாக இருக்கின்ற நம்மிடத்தில் ஞானமும் அறிவும் தோன்ற முடியும் என்னும் யோசனையை இது சவால் செய்கின்றது. எல்லா ஞானமும் எல்லா அறிவும் தேவனிடத்திலிருந்து வருகின்றது. இதைப் பற்றிய ஒரு உதாரணம் யாத்திராகமம் 31:1-5ல் காட்டப்பட்டிருக்கின்றது. இங்கு தேவன் ஒரு மனிதனுக்கு ஞானத்தையும் திறமையையும் தொழில் திறமையையும் கொடுத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். நாம் அடிக்கடி பெரிய திறமையையும் தாலந்தையும் ஈவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றவர்களாகக் காட்டுகின்ற ஜனங்களைக் குறிப்பிடுகிறோம் என்பது ஆர்வத்தை உண்டுபண்ணுவதாக இருக்கின்றது. உண்மையில் அவர்கள் தேவனால் ஈவைப் பெற்றுள்ளவர்களாக இருக்கின்றனர். ஒரு இசைக் கச்சேரியின் நடுவில் நம்மை நாம் கொண்டுசெல்லுவோமாக. உணர்த்தக்கூடிய விதமாக அந்த மேடையின்மீது வைக்கப்பட்டிருக்கின்ற பெரிய பியானோவின்மீது, திறமைமிக்க ஒரு இளம்பெண் அவளுடைய விரல்களை மேலும் கீழுமாக ஓடச்செய்கின்ற போது கேட்போர்கள் அசையாது மௌனமாக இருக்கின்றனர். அந்தத் தலைவியின் கையின் தொடுதல் எழுத்தின்படி அந்தப் பியானோவைப் பாடச்செய்கின்றது. அதற்குப்பின் உச்சகட்டத்தைக் காட்டுகிறாள். அப்பொழுது முடிவு வந்திருக்கிறதென்றும் நாம் உணருகிறோம். அவள் தொடரவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் அந்தப் பாடல்

முடிவடைகின்றது. அந்தக் கூட்டத்தினர் அப்படிப்பட்ட கம்பீரத்திற்காகவும் வசீகரத்திற்காகவும் தீவிர உணர்ச்சியுடனும் தீவிரத்துடனும் மரியாதை உணர்ச்சியுடனும் கைதட்டி வெளியேறுகின்றனர். அந்த வாலிபப் பெண் குனிந்து பாராட்டுக்களின் சுகந்த வாசனையை நுகர்ந்தவளாகிப் பின்பு அந்த மேடையிலிருந்து வெளியேறுகிறாள்.

**18. (கீழ்க்குறிப்பு) ஜெரார்ட் டோர்டோரா நிக்கொலாஸ் அனக்னோஸ் டாக்கோஸ். உடலுறுப்பு இயல் உடல் இயக்க இயல் ஆகியவைகளின் கொள்கைகள் (ஹாப்பெர் & ரோ வெளியீட்டாளர்கள், நியூயார்க் 1984) பக்கம்.463.**

படைப்பு தேவனுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. கர்த்தரால் மனிதனை அலட்சியம் செய்து அவனுடைய சுவாசத்தை உடனே நிறுத்த முடியும். அவர் இருக்கின்ற அனைத்தும் அவருடையவைகளாக இருக்கின்ற அனைத்தும் தேவனுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. உலகம் முழுவதும் தேவனுடையதாக இருக்கின்றது. மனிதனுடைய வீடுகள் அவனுடைய சொந்தமாக அடைந்து கொண்டிருப்பவைகள், அவைகள் எவைகளாக இருந்தாலும் மதிப்புள்ளவைகளாக அல்லது பொலிவுடன் விளங்குகின்றவைகளாக இருந்தாலும், அவைகள் தேவனுக்குச் சொந்தமான அவருடைய நன்கொடைகளாக இருக்கின்றன. அவைகளனைத்தும் மனிதனின் இருதயத்தைப் பண்படுத்துவதற்காக தேவனிடத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. விசுவாசமும் செயல்களும், பக்கம் 22.

19. இந்தப் பொதுவான காட்சியைப் பற்றி ஆர்வத்தை உண்டபண்ணக்கூடிய ஏதோ இருப்பதனால் நாம் கொஞ்சம் இதைத்

தாங்குவோமாக. இதைப்போன்ற ஏதாவது நிகழுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் கேட்போர்கள் எவரிடத்திலிருந்து எல்லா ஆசீர்வாதங்களும் ஒழுகி வருகின்றதோ அந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று கூறவேண்டும் அல்லது அந்தவிதமான தன்மையை உடைய எதையாவது கூறவேண்டம். அந்தக் கைதட்டுதல், திறமையையும் ஞானத்தையும் தகுதியையும் கொடுத்த தேவனுக்கு நேராகத் திருப்பப்பட வேண்டும். பியானோ இசைப்பவள், பயன்படுத்தும்படி, தேவன் அவளுக்குக் கொடுத்திருக்கின்ற ஈவுக்காக அவளுடைய இதயம் அன்பினாலும் நன்றியறிதலினாலும் தேவனுக்கு நேராக நிரம்பி வழிய வேண்டும். ஆனால் இந்த விஷயம் அபூர்வமானதாக இருக்கின்றது. நாம் இந்தவிதமாக உண்மையாகச் செயல்பட்டிருந்தால், வெற்றியினால் நாம் இருமாப்புள்ளவர்களாக இல்லாமலும் அல்லது தோல்வியினால் அதைரியமடையாதவர்களாக இல்லாமலும் இருப்போம். ஏனெனில் செயலாற்றுகின்ற திறமை நம்மிடத்தில் ஆரம்பமாவதுடன் மேலும் அது நம்மிடத்தில் ஆரம்பமாகாமல் இருக்கும்போது நாம் வெற்றியடையும்போது வரவு வைக்கவும் நாம் தோல்வியை அனுபவிக்கின்றபோது செலவு எழுதவும் நம்மால் முடியாது.

20. இங்கு நீண்ட ஆயுளுள்ள உயிரணு மரத்தின் சாபம் இருக்கின்றது. இந்த மரம் ஒரு மலை உச்சியின் பாறையின் நுனியில் இருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். நாம் வெற்றியடைகின்றபோது அனுபவிக்கின்ற சுதந்தர உணர்வும், நாம் தான் அந்த வெற்றியை உண்டுபண்ணியிருக்கிறோம் (தோற்றுவித்திருக்கிறோம்) என்பதும் ஒப்பிடப்படுகின்றபோது உயரமான மலை உச்சியிலிருந்து தனித்தன்மை வாய்ந்த மீள் சக்தியை உடைய கயிறை உடலில் கட்டிக்கொண்டு தரையை நோக்கி குதிப்பதைப் போன்றதாக உள்ள

சுதந்தரமான விழுகையினால் உண்டாகும் வெற்றிச் சிரிப்பைப் போன்றதாக இருக்கின்றது. அது அந்த மரத்தின் அடிமரத்தில் அந்தக் கயிறைக் கட்டிக்கொண்டு தூரமாகக் குதிப்பதைப் போன்றதாக இருக்கின்றது. ஆனால் தோல்வி வருகின்றபோது, அந்த மீள்திறன் கயிறு, ஒரு கவண் வீசுவதைப் போல மாறி மூச்சை இழுக்கின்ற வேகத்துடன் எங்கிருந்து நாம் குதித்தோமோ அந்த இடத்திற்கு நம்மைத் திரும்பவும் திணிக்கின்றது. மேலும் அதற்குள் கிடக்கின்ற வல்லமையுடன் நாம் மேற்கொண்டு பாய்கின்றபோதும் தோல்வி வருகின்றபோதும் அதன் வேகம் அதற்குத் தக்கவிதமாக அதிகரிக்கின்றது. நீண்ட ஆயுளுள்ள உயிரணு மரத்தின் கனியை நீங்கள் ஒருதடவை ருசித்திருக்கின்றபோதும், அந்தக் கயிறு உங்களுடைய காலுடன் உறுதியாகக் கட்டப்பட்டிருக்கும்போதும், மீதமுள்ளது தவிர்க்கமுடியாததாகவும் அந்த மரத்தின் சாபத்திலிருந்து தப்புவதும் முடியாததாகவும் இருக்கின்றது. உலகளாவிய தகுதியின்மைக்கு மனச்சோர்வு தலையாய காரணமாக இருக்கின்றது என்பது தற்செயலானதாக இருக்கின்றதில்லை. செங்குத்தான ஒரு பாறையின் உச்சியின் நுனியில் நீண்ட ஆயுளுள்ள உயிரணு மரம் நிற்கின்றது. நம் ஒவ்வொருவருடைய கால்களிலும் ஒரு கயிறு பாதுகாப்பாக உறுதியாக கட்டப்பட்டிருக்கின்றது. மேலும் அந்தப் பாறை நுனியின் முகத்தின் மீதிருந்து நாம் பாய்கின்றபோது, தோல்வி வருகின்றபோது நாம் மிகவும் அதிகக் கடினமாக அந்த மரத்தின் அடித்தளத்திற்கு முன்னோக்கிச் செலுத்தப்பட்டிருக்கிறோம். எத்தனை அநேக அடிகளை நீங்கள் ஏற்கனவ பெற்றிருக்கிறீர்கள்? அதைப் பற்றிச் சிந்திப்பது தகுதியுள்ளதாக இருக்கின்றது.

21. அடுத்த மட்டத்திற்கு நாம் செல்லுவோமாக. உடல் சார்ந்த விதமாகவும் மனம் சார்ந்தவிதமாகவும் உள்ள சார்ந்திருத்தலை நாம் பார்த்திருக்கிறோம். இது சவால் விடுகின்ற ஒரு பிரச்சனையாக இருக்கின்றது. ஆனால் ஆவிக்குரியதையும் சன்மார்க்கத்திற்குரியதையும் சா்ந்திருப்பதைப் பற்றி என்ன? இது சவால்விடுகின்ற ஒரு பிரச்சனையாக இருக்கின்றது. எனவே உங்களுடைய இருக்கையின் கச்சையைக் கட்டிக்கொள்ளுங்கள். ஏனென்றால் அது ஒரு கரடுமுரடான சவாரியாக இருக்கக்கூடும்.

22. தேவன் அன்பாயிருக்கிறார் 1 யோவான் 4:8 என்று வேதாகமம் கூறுகின்றது. இது, தேவன் அன்பின் ஆதாரமாக இருக்கிறார் என்று நம்மிடம் வேதாகமம் கூறுகின்றது. தேவன் நம்பிக்கையின் தேவனாக இருக்கிறார் என்று நம்மிடம் வேதாகமம் கூறுகின்றது. தேவன் நம்பிக்கையின் தேவனாக இருக்கிறார் என்றும்கூட அது குறிப்பிடுகின்றது. ரோமர் 15:13. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் இந்த யோசனை பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.

**23. (அடிக்குறிப்பு) Bungy பங்கி என்பது மீள்திறன் உள்ள ஒரு நீண்ட கயிராக இருக்கின்றது. மயிர்சிலிர்க்கச் செய்யும் செயல்களைத் தேடுபவர்கள் பெரிய பாலங்களிலிருந்தும் மற்ற உயரமான இடங்களிலிருந்தும் குதிப்பதற்கு இதை உபயோகம் செய்கின்றனர். இந்த பங்கி கயிறு நிலத்திலிருந்து சில மீட்டர் தூரத்திற்கு நீள்வதுடன் அதற்குப்பின் அதைக் கட்டிக்கொண்டிருக்கும் நபரை அந்தக் கயிறு கட்டப்பட்டிருக்கும் தொடர்பான இடத்திற்கு மேல்நோக்கிச் செல்லுகின்றது. "மன விளையாட்டு" பிலிப் DடேҮ.**

24. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கலாத்தியர் 5:22,23.

25. இந்த வசனங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பவைகள் சுவாசத்தை எடுப்பவைகளாக இருக்கின்றன. அதை நாம் ஒரு நிமிட நேரத்திற்கு பிரித்துப் பார்ப்போமாக. தேவனுடைய ஆவியை உடையதாக இருப்பதிலிருந்து இந்தச் சிறப்புக்களனைத்தும் வருகின்றன. தேவனுடைய ஆவி இல்லாமல் உங்களால் அன்பு சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு ஆகியவைகளையும் அதைப் போன்றவைகளையும் உடையவராக உங்களால் இருக்க முடியாது என்பதை இது சாதாரணமாக அர்த்தப்படுத்துகின்றது. ஒருநாள் ஒரு குளத்தினருகிலிருந்த ஒரு பூங்காவில் நடந்துகொண்டிருந்தபோது, இந்த வேதாகம சத்தியத்தைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருந்தேன். நான் அமைதியம் சமாதானமும் உள்ளவனாக இருந்தேன். ஒரு அன்னை அவருடைய மகளை ஆடும் வண்டியின்மீது நகர்த்திக் கொண்டிருந்ததைத் திடீரென்று நான் கவனித்தேன். அவர்களிருவரும் ஒன்று சேர்ந்து சிரித்துக்கொண்டும் வெளிப்படையாக ஒருவருக்கொருவருடைய தோழமையை மகிழ்ச்சியுடன் அனுபவித்துக்கொண்டுமிருந்தனர். அந்த அன்னை அவளுடைய மகளுக்காக அனுபவித்துக் கொண்டிருந்த அன்பு தேவனால் ஊக்கமளிக்கப்பட்டதாக இருந்தது. அந்த எண்ணம் அன்புகூருவதாகவும், பட்சமுள்ளதாகவும் அவளுடைய மகளுக்கு நேராக உள்ளதாகவும் இருந்திருந்தது. அந்த அன்னையின் இருதயத்திற்குள்ளாக இருந்து

தானாகத் தோன்றாமல் தேவனுடைய இருதயத்திலிருந்திருந்து அதை வெளிக்காட்டுவதைத் தெரிந்திருந்த அந்த அன்னைக்கு தேவனால் கொடுக்கப்பட்டிருந்தது. அது அன்பாக ஆகியிருந்தது. இந்த அர்த்தத்தில் உண்மையாகவே அது அன்னையின் அன்பாக இல்லாமல் தேவனுடைய அன்பாக இருந்து அன்னையின் மூலமாக வெளிக்காட்டப்பட்டிருந்தது. அந்த அன்ப அன்னையின் ஒரு பகுதியாக ஆயிருந்தது. ஏனென்றால் அவர் தேவனுடைய ஆவிக்குப் பதிலளித்திருந்ததுடன் அதை வெளிக்காட்டியிருந்தாள். இந்த மிக அதிகமான உண்மையுள்ள அர்த்தத்தில் அன்னையின் அன்பு என்பது போன்ற ஒரு பொருள் அவளுடைய பிள்ளைகளுக்கு நேராக அல்லது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் உள்ள அன்பு போன்ற பொருள் இல்லாமலிருந்தது அடிப்படையானதா? வேதாகமம் சம்பந்தப்பட்டது!!

26. நான் ஆவிக்குரிய பிரசங்கங்களைச் செய்து கொண்டிருந்த அநேக நேரங்களில் அல்லது கருத்தரங்கங்களில் பேசிக்கொண்டிருந்த அநேக நேரங்களில் இந்த யோசனையை நான் முன்வைத்திருக்கின்றேன். மேலும் கேட்பவர்கள் பதிலளிப்பதைக் காண்பது ஆர்வமூட்டக் கூடியதாக இருக்கின்றது. சில மக்களின் முகங்கள், நான் இப்பொழுது மனித இனத்தின் மெய்யான அஸ்திபாரத்தையே தாக்கிக் கொண்டிருக்கிறேன் என்பதுபொல் காணப்படுகின்றது.

27. ஏனெனில் இன்றுவரை எப்பொழுதும் பாடப்பட்டிருக்கின்ற பத்து லட்சங்களான (காதல்) அன்பின் பாடல்களனைத்தும் திருமண பீடத்தின் மீதிருந்து நான் உன்னை நேசிக்கிறேன், நான் எப்பொழுதும் உங்களை நேசிப்பேன் என்று கூறப்பட்டிருக்கின்ற நூறுகோடிக்கும் அதிகமான

திருமண வாக்குத்தத்தங்களில் ஒன்றையும் கூடப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆத்துமாக்களில் தேவனுடைய அன்பு ஊற்றப்படாமலிருக்கின்றவரை, ஒருபோதும் காக்கப்பட முடியாது. அன்பின் சிறப்புக்களை நாம் அந்த மீள்திறனுள்ள கயிறின் ஒரு முனையில் வைப்போமாக. அநேக மக்கள் அன்பிலிருந்து ஏன் வெளியில் விழுந்து விடுகின்றனர்? அன்பு நமது ஆத்துமாக்களில் பிறக்கின்றது என்று நினைக்கின்ற ஒரு நபர் அடிக்கடி காலையில் விழித்தெழுகின்றபோது, அவர்களுடைய பாகஸ்தருடன அன்பை உணராமலிருக்க முடியும். அவர்/அவள், இந்த நபர் இனிமேல் தங்களுக்குச் சரியானவரா என்று சந்தேகப்பட ஆரம்பித்து அடிக்கடி அந்த உணர்ச்சியைத் திரும்பவும் கொண்டுவருவதற்காக வேறொருவரைப் பார்க்க ஆரம்பிக்கிறார்/ஆரம்பிக்கிறாள். நீண்ட ஆயுசுள்ள உயிரணு மரத்தின் கிரடிட் கார்டு (வரவு அட்டை) அதன் எல்லையைச் சென்று சேர்ந்திருக்கின்றது. இப்பொழுது மீண்டும் பணம் செலுத்திப் புதுப்பிக்க வேண்டிய நேரமாக இருக்கின்றது.

தனது மனைவியை என்றென்றைக்கும் நேசிப்பதாகச் செய்த பிரமாணங்களைப்பற்றி உண்மையுள்ள மனிதன் எதைப்பற்றி உண்மையாக அர்த்தம் கொண்டிருந்து, திடீரென்று அவன் வேறொரு ஸ்திரீயினிடத்தில் கவரப்பட்டுள்ளதாகத்தானே காணுகின்ற மனிதனைப் பற்றி என்ன? இந்தவிதமாக அவன் உணர விரும்பாதவனாக இருக்கலாம். ஆனால் அவனால் அதற்கு உதவமுடியாது (அவனால் அதைத் தவிர்க்க முடியாது). அன்பு என்பது சிற்றின்ப இச்சையுடன் குப்பமடையச் செய்யப்பட்டிருப்பதுடன் ஒருவருடைய நேர்மையைப் பற்றியும் சந்தேகம் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றது. அதற்குப்பின் அவன் அவனுடைய

பாகஸ்தரிடத்திலிருந்து பின்வாங்க ஆரம்பிக்கிறான். ஏனெனில் இப்படி நடந்துகொள்ளுவதிலிருந்து உண்டாயிருக்கின்ற குற்ற உணர்வு, அவன் இன்னும் நேசிக்கப்படக்கூடியவனாக இருக்கிறான் என்பதை நம்புவதிலிருந்து அவனைத் தடை செய்திருக்கின்றது. அவனுடைய இருதயத்திலிருந்து ஒழுகக்கூடிய அன்பை அவனால் பராமரிக்க முடியும் என்று அவன் நினைத்தான். ஆனால் இப்பொழுது அந்த மீள்திறன் கயிறு, அவன் எங்கிருந்து குதித்தானோ அந்த நீடித்த உயிரணு மரத்தின் அடிமரத்தை நோக்கி அவனை உந்துகின்றது. அத்துடன் அவனுடைய திருமணம் முடிவடைந்திருக்கின்றது. (திருமண உறவு முடிவுக்கு வந்துவிட்டது). திருமணத்தில் மகிழ்ச்சியைக் காண்பது அதிகமான மக்களுக்கு ஏமாற்றம் தரக்கூடியதாக இருக்கின்றது என்பதில் ஏதாவது அதிசயம் இருக்கின்றதா?

தங்களுடைய திருமணம் இதற்குமேல் எந்தவிதமான மதிப்பையும் உடையதாக இல்லை என்பதுபோல் உணருகின்றவர்களுக்காக அன்பு தேவனுடைய இருதயத்திலிருந்து மட்டுமே தோன்றுகின்றது என்பதை நினைக்கும்படியும் அதற்காக அவரிடத்தில் கேட்பவர்களுக்கு அது இலவசமாகக் கிடைக்கின்றது. உங்களுடைய பாகஸ்தருக்கான உங்களுடைய அன்பை நீங்கள் இழந்திருக்கிறீர்கள் என்று நீங்கள் உணரும்போது, அதைத் திரும்பவும் கொடுக்கும்படி தேவனிடத்தில் கேளுங்கள், அவர் செய்வார், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

## 3-ம் அதிகாரம்

## தேவனுடைய இருதயத்திற்குப் பக்கத்தில்

1. தாராளமான பாதையில் மிகப்பெரிய வேகத்தில் நாங்கள் விரைந்து சென்றுகொண்டிருந்தோம். லோரில்லியின் சுருக்கங்கள் ஒரு அழகிய சீரான விதமாக முன்னேற்றமடைந்திருந்தது. நாங்கள் வெளியில் நிறுத்திவிடப்பட விரும்பவில்லை. எனவே நாங்கள் மருத்துவமனைக்கு விரைந்தோம். அது முழுவதும் மிகவும் பதியதாகவும் கிளர்ச்சியூட்டுவதாகவும் இருந்தது. விரைவில் நாங்கள் எங்களுடைய முதல் குழந்தையை உடையவர்களாக இருப்போம். நாங்கள் மகப்பேறு பகுதிவரை ஓசையில்லாமல் மேல்நோக்கிச் சென்றோம். அந்த செவிலியர் எங்களைப் பார்வை பார்த்து நீங்கள் மிக அதிகமான மகிழ்ச்சி உள்ளவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு குறுநடை செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று அவள் கூறினாள். அது எங்களுக்கு ஒரு தாமதத்தை உண்டுபண்ணினது 45 நிமிடங்களுக்குப் பின் நாங்கள் திரும்பி வந்தோம். இப்பொழுது அதற்கு மேலாக லோரில்லி புன்சிரித்துக் கொண்டிருக்கவில்லை. மற்றொரு 30 நிமிடங்கள் நாங்கள் சரியாக மகப்பேறுக்கு நடுவில் இறங்கினோம். அதை விவரிப்பதற்கு வேறு எந்த வார்த்தையும் இருக்கின்றதில்லை. மகப்பேறு, கடினமான மகப்பேறு, மகப்பேறுக்கு முந்தின வகுப்புகளிலிருந்து நாங்கள் அறிந்திருந்த செய்முறைகள் அனைத்தையும் நினைப்பதற்கு நாங்கள் முயன்றோம். ஆனால் அவைகளைக் குவிமையப்படுத்திய நினைவில் தங்கவைப்பது மிகவும் கடினமானதாக இருந்தது. அந்த சுருக்கங்கள் ஒரு சரக்கு ரெயில் நேராக வந்து மோதுவதைப் போல இருந்தது. நீங்கள் ஒன்றுடன் இடைப்பட்டு முடிந்த உடனே, விரைவில் அடுத்த ஒன்று நேராக உங்கள் மீதிருந்தது. முடிவில் பதினோற மணி நேரங்களுக்குப் பின் நாங்கள் எங்கள் முதற்பேறான மகன் மைக்கேலைப் பெற்றோம்.

2. இது லோரில்லியின் மகப்பேறுக்குப்பின் அவளும் நானும் சேர்ந்து எடுத்துக்கொண்ட உண்மையாகவே உற்சாகமூட்டும் புகைப்படமாக இருக்கின்றது. அது முற்றிலுமாக வியப்புள்ளதாக இருக்கின்றது. அவள் அது முழுவதும் ஒரு நாளின் வேலையாக இருந்தது என்பதைப்போல முகமலர்ச்சியுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். நான் சுருண்டு விழுந்துவிட இருப்பவனைப்போலத் தோற்றமளித்துக்கொண்டு அந்தத் தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருக்கிறேன். அந்த நாளில் நான் பெண்மைக்கு ஒரு ஆழமான புதிய மரியாதையை முன்னேற்றம் செய்தேன். பெண்களே, உங்களுடைய மனைவிக்கு மகப்பேறு நிகழ்வதைக் கவனித்துக் கொண்டிருப்பது (பார்த்துக்கொண்டிருப்பது) உண்மையாகவே கடினமான வேலையாக இருக்கின்றது என்பதை நான் உங்களிடத்தில் கூறியாக வேண்டும். நீங்கள் சிரிப்பதை மூடிக்கொண்டிருக்கும்போது, நான் என்னுடைய விஷயத்தை முடிப்பேன். நீங்கள் நேசிக்கின்ற ஒருவள் அவ்வளவு வேதனையில் இருக்கின்றபோது அதைக் கவனித்துக் கொண்டிருக்கின்ற (பார்த்துக்கொண்டிருக்கின்ற) மனக்கிளர்ச்சியின் அழுத்தம் நம்பமுடியாததாக இருக்கின்றது. புருஷர்களாக இருக்கின்ற நமக்கு, இயல்பாகவே நாம் ஒரு பிரச்சனைக்கு ஒரு தீர்வை உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் இந்த நேரத்தில் நான் பதில் இல்லாதவனாக இருந்தேன். அது புண்படுத்தினது. தேவனே, இந்த வேதனைகளுக்கெல்லாம் ஒரு காரணமிருக்கின்றது என்பதை நான் அறிகிறேன். ஆனால் சரியாக இப்பொழுது என்னால் பார்க்கமுடியாது என்று நான் உடனே ஜெபம் பண்ணினேன். மனிதனே அது முடிந்தபின் நான் சந்தோஷமுள்ளவனாக இருந்தேன்.

3. முதல் தடவையாக நான் என் மகனை கைகளில் ஏந்திக் கொண்டிருந்தபோது அது ஒரு நித்தியமான மதிப்புள்ளதாக இருந்தது. நான் கீழ்நோக்கி அவனுடைய கண்களுக்குள் பார்த்தேன். அவன் திரும்பி நேராக என்னைப் பார்த்தான். அது ஒரு மாயாஜாலமாக இருந்தது. நான் அச்சத்துடனும் அதிசயத்துடனும் அவனைக் கீழ்நோக்கிப் பார்த்தபோது நான் இந்த ஆழமான பயஉணர்வினால் பிடித்துக்கொள்ளப்பட்டிருந்தேன். என்னுடைய இயல்பைப் போன்ற அதே இயல்பினால் என்னுடைய மகன் முத்திரையிடப்பட்டிருந்ததை நான் அறிந்தேன். அந்த இயல்பு அதிகாரத்தை எதிர்த்துச் சவால் செய்வதாகவும் கீழ்படிதலைவிட அதிகமாகக் கலகத்தை ஈர்க்கின்ற இயல்பாகவும் இருந்தது. அந்த (அவனுடைய) சித்தத்தை வழிநடத்துவதும் உண்மையான அன்புடன் பட்சம், சுயநலம் இல்லாமை, கீழ்ப்படிதல் ஆகியவைகளுக்கு அவனைப் பயிற்சி செய்கின்றதற்கான பொறுப்பை உடையவனாக நான் இருந்தேன் என்பதை நான் அறிந்தேன். இவைகளனைத்திற்கும் பின்னால் அவன் என்னுடைய நண்பனாக இருப்பானா? என்று நான் அதிசயித்தேன். எங்களுக்கிடையில் ஏதாவது வந்து எங்களைப் பிரிக்கமுடியுமா? நான் சரியாக அங்கேயே ஜெபம் பண்ணினேன். ஓ, பரலோகத்திலிருக்கிற அருமையான தகப்பனே, எனக்கும் என்னுடைய மகனுக்கும் இடையில் எதுவும் வருவதற்கு அனுமதிக்காமலிருப்பீராக. நாங்கள் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கவும் நான் யாராக இருக்கிறேன் என்றும் அவன் எனது நண்பனாக இருக்கவேண்டும் என்றும் அவன் அறிவதற்கு வரவேண்டும் என்றும் நான் ஜெபம் பண்ணுகிறேன். அந்த ஜெபத்தின் தீவிரத்தின் அளவு என்னுடன் இருக்கின்றது. அதை நான்

அடிக்கடி உணர்ந்து தேவன் அதை ஒரு உண்மையானதாகச் செய்வார் என்ற நம்பிக்கொண்டு இன்னும் நான் ஜெபம் பண்ணுகிறேன்.

4. நான்கு வருடங்களுக்குப்பின் கர்த்தருடன் நடந்து கொண்டும், பேசிக்கொண்டும், ஒரு அமைதியான ஓய்வுநாளை வாழ்க்கையின் நெருக்கத்திலிருந்தும், பரபரப்பிலிருந்தம், தூரமாக விலகி, நான் செலவு செய்துகொண்டிருந்தேன. நான் என் பரலோகப் பிதாவையும், என்மீதான அவருடைய அன்பைப் பற்றியும் அது எவ்வளவு விலைமதிப்புள்ளதாக இருக்கிறதென்றும் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என்னுடைய மனதில் என்னுடைய மகனின் பிறப்பைப் பற்றியும், அவனிடத்திலிருந்து நான் ஒருபோதும் பிரிந்துவிடக்கூடாது என்னும் என்னுடைய தீவிரமான வாஞ்சையைப் பற்றியும், அவன் உண்மையாகவே என்னை அறியவேண்டும் என்பதைப் பற்றியும் ஒரு திரைப்படம் ஓடத்தொடங்கி என்னை விடுவித்தது. அந்தக் காட்சி கடந்து செல்லவே ஆழ்ந்த அமைதியில் நான் இன்னும் ஒரு சிறிய குரலை என்னுடைய மனதின் ஆழத்தில் கேட்டேன். அது நான் உன்னைப் பற்றி அந்தவிதமாகத்தான் உணருகிறேன் என்று அது கூறினது. நான் சிரிப்பதா அல்லது எனக்குத் தெரியாமலிருந்ததுடன் அதை ஏற்றுக்கொள்ளுவது நம்பமுடியாத விதமாகக் கடினமாக இருந்ததை நான் கண்டேன். ஆனால் கர்த்தாவே, நான் எப்படிப்பட்டவனாக இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அநேக தவறுகளை நான் செய்தும் பேசியும் இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்று நான் கூறி அப்படியே நான் சண்டையிடுவதில் சென்றிருந்தேன். உண்மையாகவே நான் என்னைப்பற்றி ஆச்சரியமுள்ளவனாக இருந்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். கிறிஸ்துவை அவனுடைய இரட்சகர் என்ற ஏற்றுக்

கொண்டிருக்கிற ஒரு மனிதனாக நான் இருக்கிறேன் என்பதுடன் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் நம்புகிறேன். ஆனால் தேவன் அந்தவிதமாக எனக்கருகில் வந்து என்னைப் பற்றி அவர் உணருகின்ற விதத்தை அவர் என்னிடத்தில் கூறினபோது, அதை ஏற்றுக்கொள்ளுவது கடினமானதாக இருந்தது. முடிவாக, உமக்கு நன்றி, உமக்கு நன்றி, எனக்காக நீங்கள் செய்திருக்கின்ற அனைத்திற்காகவும் நன்றி, நான் கதறினேன். நான் உங்களை மிகவும் அதிகமாக நேசிக்கிறன். ஒரு மிகவும் உண்மையான உணர்வில் அவருடைய புயங்களால் பற்றிக்கொள்ளப்பட்டவனாக நான் இருக்கிறேன் என்பதைப்போல நான் உணர்ந்தேன். என்னால் அதிகமான சந்தோஷமுள்ளவனாக இருந்திருக்க முடியாது. பரலோகத்திலிருக்கிற என்னுடைய பிதா மிகவும் அதிகமாக என்னை நேசிக்கிறார் என்பதையும் எங்களுக்கு மத்தியில் வேறு எதுவும் வருவதை அவர் விரும்புகின்றதில்லை என்பதையும், நாங்கள் பிரிக்கப்பட்டுவிடமுடியும் என்று நினைப்பது அவரைப் புண்படுத்துகின்றது என்பதையும் அது எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டிருப்பதை நிறுத்துவதற்காக அவர் எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கிறார் என்பதையும் நான் உணர்ந்தேன்.

5. இந்த அனுபவத்தில் தேவனுடைய ராஜ்ஜியத்தின் ஒரு உறுப்பாக இருப்பதில் உள்ள ஆச்சரியமான சிலாக்கியம் பற்றி என்னுடைய இருதயத்தின் மட்டத்தில் எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த அனுபவத்திற்குப்பின் விரைவில் வேதாகமத்திலுள்ள சில வாசகங்களுக்கு நான் விட்டுவிடப்பட்டிருந்தேன். அது உண்மையாகவே என்னுடைய கண்களைத் திறந்து, அது மேலும் அதிகமாக தேவனைத் துதிக்கும்படி என்னை நடத்தினது. இந்த வார்த்தையின் முக்கியத்துவம்

உங்களுடைய இருதயத்திற்குள் எரியும் என்றும் உங்களை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது என்றும் நான் ஜெபம் பண்ணுகிறேன். தேவனுடைய ராஜ்யத்திற்குள்ளான ஒரு தெளிவான ஜன்னல் இங்கு இருக்கின்றது.

6. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. ஆகையால் பயப்படாதிருங்கள். அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிம் நீங்கள் விசேஷித்தவர்களா யிருக்கிறீர்கள். லூக்கா 12:6,7.

7. இயேசு அவருடைய ராஜ்யத்தின் கொள்கைகளை விளக்கிக் கொண்டிருக்கிறார். இந்த வசனங்களில் அந்த ராஜ்யத்தில் எது மக்களை முக்கியத்துவமுள்ளவர்களாகச் செய்கின்றது என்பதற்கான ஒரு சூத்திரத்தை உடையவர்களாக நாம் இருக்கிறோம். எது அவர்களை எண்ணிக்கை செய்யும்படி செய்கின்றது. ஏதாவதில் எது அவர்களை மதிப்புள்ளதாகச் செய்கின்றது. எது அவர்களை விலைமதிப்புள்ளவர் களாகும்படிசெய்கின்றது. இந்தப் பிரச்சனைகள் உங்களுக்கு முக்கியமானதாக இல்லாமலிருந்தால் அப்பொழுது அந்த வசனம் அதிகமான அர்த்தத்தை உண்டுபண்ணாது. ஆனால் நான் இன்னும் இதுவரை அதனுடன் மல்யுத்தம் செய்யாமலிருக்கின்ற எந்த ஒருவரையும் இதுவரை கண்டிருக்கின்றதில்லை.

8. இயேசு இரண்டு அடைக்கலான் குருவிகளின் விலை மதிப்பை மானிட வரையரையில் அறிவிக்கிறார். காசு என்னும் வார்த்தை அங்கு அஸ்சாரியஸ் என்பதாக இருக்கின்றது. ஒரு அஸ்சாரியஸ் என்பது ஒரு

சராசரி மனிதனின் ஒருநாள் கூலியாக இருந்தது. இரண்டு நாட்களில் உங்களால் ஐந்து அடைக்கலான் குருவிகளை வாங்கமுடியும். இவ்வாறாக பூமிக்குரிய ஒரு அர்த்தத்தில் இந்த அடைக்கலான் குருவிகள் சிறிய விலை மதிப்பை உடையவைகளாக இருக்கின்றன. அதற்குப்பின் இயேசு ஒரு ஒப்புமை செய்து, அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை என்று கூறுகிறார். இங்குள்ள ஒப்புமை என்னவென்றால், தேவன் அந்த அடைக்கலான் குருவிகளை நினைவுகூருகிறார். தேவனுடைய ராஜ்யத்தில் அவைகள் விலைமதிப்பு மிக்கவைகளாக இருக்கின்றன. அடைக்கலான் குருவிகளுடன் ஒப்பிடப்படுகின்றபோது தேவன் நம்மைப் பற்றி எவ்வளவு அதிகமாக நினைக்கிறார் என்று ஒப்பிடுவதனால், இயேசு இந்தக் கொள்கையை விரிவாக்கம் செய்கிறார். உங்களுடைய தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. இந்தக் காரியம் மிகவும் நெருக்கமான அளவிற்கு முக்கியத்துவம் பெற்றதாகவும் தனிமனிதன் ஒருவனின் நலத்தில் காட்டப்படும் அக்கறை எப்படிப்பட்டது என்றும் நமக்குக் காட்டாவிடில் வேறு எது நமக்குக் காட்டமுடியும்? உங்களைப்பற்றி மிகவும் அதிகமாக அறிந்துகொள்ள விரும்புகிற எந்த ஒருவர் உங்களுடைய தலையில் உள்ள மயிர்களையும்கூட கவனிக்கிறார் என்பதை நீங்கள் அறிகிறீர்களா? அதற்குப்பின் ஒரு வேடிக்கைப் பேச்சின் உச்சகட்டம் வருகின்றது. ஆதலால் பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். தேவனுடைய ராஜ்யத்தில் மதிப்பும் முக்கியத்துவமும் எப்படி ஆதாயப்படுத்தப்படுகின்றது என்பதை உங்களால் காணமுடியுமா, தேவன் அன்புடன் நம்மைப் பற்றித் தொடர்ச்சியாக நினைக்கிறார் என்பதைச் சாதாரணமாக உணருவதிலிருந்து

அது வருகின்றது. நிச்சயமாகவே நாம் அவரது மனத்தில் இருக்கிறோம். அவர் நமக்கு ஜீவனைக் கொடுத்துக்கொண்டும் இருதயத்தைத் துடிக்கச் செய்துகொண்டும், நமது ஜீவன்களில் தீவிரமாக அவருடைய அன்பைப் பொழிந்துகொண்டும் இருக்கிறார். அதனால் நம்மால் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடியும் என்பதுடன் அவர் நமக்குச் செழுமையான ஈவுகளையும், தாலந்துகளையும், திறமைகளையும் நமது திருப்திக்காகவும், மகிழ்ச்சியின் அனுபவித்தலுக்காகவும், பிறருக்கான சேவைக்காகவும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியம் முக்கியத்துவத்தின் இரகசியம் இங்கு இருக்கிறது. மதிப்பில்லாமையையும் மனச்சோர்வையும் உண்டுபண்ணும் அடிமைப்படுத்துகின்ற ராஜ்யத்தின் பூட்டைத் திறக்கின்ற திறவுகோலாக அது இருக்கின்றது.

9. நாம் இந்த முக்கியமான விஷயத்தில் இருக்கின்றபோது, தேவன் உங்களைப் பற்றி எவ்வளவு அதிகமாக நினைக்கிறார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

என் தேவனாகிய கர்த்தாவே! நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது. ஒருவராலும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிட முடியாது. நான் அவைகளைச் சொல்லி, அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள். சங்.40:5.

10. தேவன் நமக்கு நேராக உடையவராக இருக்கின்ற அன்புள்ள எண்ணங்களால் நமது மதிப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்றால், அப்பொழுது இந்த வசனம் நாம் விலைமதிப்பில்லாதவர்கள் என்று

நம்மிடத்தில் கூருகின்றது. ஏனென்றால் நமக்காக உள்ள அவருடைய திட்டங்களும் எண்ணங்களும் அறிவிக்கப்பட முடிவதைவிட அல்லது எண்ணிக்கை செய்யப்பட முடிவதைவிடப் பெரியவைகளாக இருக்கின்றன. அது விலைமதிப்பில்லாததாக இருக்கின்றது என்பது எப்படி உணரப்படுகின்றது? ஆனால் நாம் எப்படி நல்லவர்களாக அல்லது கெட்டவர்களாக இருக்கிறோம் என்பதைப் பற்றிக் கருதாமல் தேவன் நம்மை மிகவும் அதிகமாக நேசிக்கிறார் என்னும் சத்தியத்தின் மீதுள்ள உங்களுடைய நம்பிக்கையைப்போல் மட்டும் அது நல்லதாக இருக்கலாம். இது அதிசயமான செய்தியாக இருக்கின்றதுடன் நான் அதற்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அப்படியே உங்களுடைய மதிப்பைப் பற்றிச் சந்தேகப்படும்படி நீங்கள் சோதிக்கப்பட்டிருக்கின்றபோதெல்லாம், உடனே அந்த அடைக்கலான் குருவிகளைப் பார்த்து நம்புங்கள்.

## 4-ம் அதிகாரம்

## குடும்ப ராஜ்யம்

1. அது ஈரப்பசையுள்ள உஷ்ணமான நாளாக இருக்கின்றது. ஒரு பண்டிகை சம்பந்தமான ஆவி அந்த அறையில் பரவியிருக்கின்றது. சுவையும் மணமுமுள்ள ஒரு நல்ல வாசனை ருசியின் நரம்புகளுக்கு ஒரு உண்மையான விருந்தை வாக்குத்தத்தம் செய்துகொண்டு சமையல் அறையிலிருந்து காற்றில் மிதந்து வருகின்றது. கடந்த காலங்களின் கதைகள் கூறப்பட்டிருக்கின்றபோது, சிரிப்புகள் ஒலிக்கின்றன. கிறிஸ்மஸ் மரம் மூலையில் நின்றுகொண்டு அதன் பாதங்களில் கிடக்கும் பொக்கிஷங்களின் உறைகளைத் திறக்கும்படி சைகை காட்டி

வீட்டிலிருப்பவர்களை அழைக்கின்றது. பிள்ளைகள் வீட்டுக்கு வெளியில் பின்புறத்தைக் குளிர்ச்சியடையச் செய்வதற்காக ஹோஸ் குழாய் மூலம் எல்லா இடங்களிலும் தண்ணீரைத் திவலைகளாகத் தெளித்துக் கொண்டிருக்கின்றனர். இது ஆஸ்திரேலியாவில் கிறிஸ்துமஸ்ஸாக இருக்கின்றது. குடும்பத்திற்கான ஒரு நேரமாக, நீங்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் திரும்பவும் உறுதிப்படுத்துகின்ற ஒரு நேரமாக, நீங்கள் அன்பு கூறுபவர்களுடன் திரும்பவும் பிணைக்கப்படவும் அன்பளிப்புகளைப் பகிர்ந்துகொள்ளுகின்ற ஒரு நேரமாகவும் ஒன்று சேர்ந்திருப்பதற்கான விலை மதிப்புள்ளதும் முக்கியமானதுமான நேரமாக இருக்கிறது.

2. மனச்சோர்வு தகுதியில்லாத நிலைமை ஆகியவைகளின் காரணமாக எப்பொழுதும் விரிவடைந்து கொண்டிருக்கின்ற தாடைகளிலிருந்து (பற்களுக்கிடையிலிருந்து) நம்மைப் பாதுகாப்பதற்கு ஒரு நெருக்கமாக உள்ள குடும்பத்தின் உணர்வைவிட அதிகமாக, ஆபத்தான நிலைமை வேறு எதிலும் இருக்கின்றதில்லை. நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றதுடன், நீங்கள் எங்கு நீங்களாகவே இருக்க முடிகின்றதுமானதும், நீங்கள் எங்கு தவறுகளுக்கு மன்னிப்பைப் பெறக்கூடியவராக இருக்க முடியுமோ அந்த இடத்திலும், சாதாரணமாக எங்கு உங்களுடைய வாழ்க்கையை ஒன்று சேர்ந்து அனுபவிக்க முடியுமோ அந்த ஒரு இடமாகக் குடும்பம் இருக்க முடியும்.

3. இயேசு, நாம் எப்படி ஜெபம் பண்ண வேண்டுமென்பதை நமக்குப் போதனை செய்தபோது, அவர் தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு ஜீவாதாரமான சித்திரத்தை நமக்காகத் திறக்கிறார். அப்படியே பின்பு,

நீங்கள் எப்படி ஜெபம் பண்ண வேண்டும் என்பது இப்படியாக இருக்கின்றது. பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே... இயேசு அருமையான தேவனே அல்லது உம்முடைய பரிசுத்தமான மகத்துவம் அல்லது அருமையான அரசரே என்று கூறாமல் குறிப்பில் அவைகளைவிட அதிகமாக எங்கள் பிதாவே என்பது நமது முதல் குறிப்பின் விஷயமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

4. **தேவனுடைய ராஜ்யம் ஒரு குடும்பமாக இருக்கின்றது** சிலருக்கு அது மிகவும் வெளிப்படையானதுபோல் தோன்றுகின்றது. ஆனால் ஒரு குடும்ப ராஜ்யத்தின் அர்த்தங்கள் மிகவும் தூரமாகச் சென்று சேரக் கூடியதாக இருக்கின்றது. இந்த அர்த்தங்களை கருத்துக்களை நாம் வருகின்ற அதிகாரங்களில் பார்ப்போம்.

பிதாவாகிய தேவன் மனித இனத்துடன் முதல் தடவையாகப் பேசுவது மத்தேயு 3:17ல் இருக்கின்றது. காலத்தின் உதயம் முதல் இயேசுவின் ஞானஸ்நானம் வரை, தேவன் அவருடைய குமாரனின் மூலமாக நம்முடன் தகவல் தொடர்பு செய்திருந்தார். செங்கடலைத் திறந்த யேகோவாவாக இயேசு இருந்தார். சீனாய்மலையின் மீதிருந்து முழங்கின யேகோவாவாக அவர் இருந்ததுடன், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த தேசத்திற்குள் யோசுவாவை நடத்தியிருந்த யேகோவாவாக அவர் இருந்தார். 1 கொரிந்தியர் 10:1-4. கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் நேரத்தின்போது, தேவகமாரன் இம்மானுவேலானார் - தேவன் நம்மோடிருக்கிறவரானார்-நம்மில் ஒருவரைப்போலானார். எனவே முதல் தடவையாக இப்பொழுது பிதா பேசுகிறார். அவருடைய வார்த்தைகள் ஆழமாக முக்கியத்துவம் உள்ளவைகளாக இருக்கின்றன.

(அவைகள் எப்பொழுதும் உள்ளவைகளாக இருப்பதைப் போல் இருக்கின்றன). ஏனெனில் தேவன் சரியாக இங்கு அவருடைய ராஜ்யத்தின் மையத்தின் இயல்பை வெளியில் வைக்கிறார். இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். தேவனால் அவருடைய குமாரனை வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின படைப்பாளராக இவர் இருக்கிறார். அவர் பேசுவதைக் கவனியுங்கள் அல்லது உங்களுடைய அரசராக அவர் இருக்கிறார். அவருக்குக் கீழ்ப்படியுங்கள் என்பதைப் போன்ற பலவிதங்களில் தேவனால் அவருடைய குமாரனை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடிய பல வழிகள் இருக்கின்றன. ஆனால் தேவன் அவருடைய குமாரனின் அடையாளத்தை ஒரு அரசர் அல்லது அதிபதி என்னும் உறவுகளில் அறிவிப்பதைவிட அதிகமாக குடும்ப அங்கத்தினர் (மகன்) என்னும் உறவில் அறிவிக்கிறார். இந்த அறிக்கையை நாம் பிரித்துப் பார்க்கும்போது கீழ்க்காணுபவைகளை நாம் கவனிக்கிறோம்.

6. 1. இவர் என்னுடைய குமாரன் - அடையாளம்

2. இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்-மதிப்பு

7. தேவனுடைய ராஜ்யத்தில் முக்கியத்துவமும் மதிப்பும் அவருடன் நமக்குள்ள உறவினால் தீர்மானம் செய்யப்படுகின்றன. இது சாத்தானின் ராஜ்யத்துடனான மொத்தமான ஒப்புமையாக இருக்கின்றது. அதில் உங்களுடைய முக்கியத்துவமும் மதிப்பும் உங்களுடைய வெற்றிகரமான செயலினாலும் சாதனையினாலும் உங்களாலும் உங்களைச் சுற்றிலுமுள்ளவர்களாலும் நிதானம் செய்யப்பட்டதாக கணக்கிடப்பட்டதாக இருக்கின்றது. தேவனுடைய ராஜ்யத்தில் அவர் நமது தகப்பனாக இருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாக இருப்பதுடன்

அது நமது அடையாளமாகவும் இருக்கின்ற. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைவிட அதிகமாக நீங்கள் யாரைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள் என்பதனால் அறியப்பட்டிருக்கிறீர்கள். தேவன் அவருடைய பிள்ளைகளை நேசித்துத் தொடர்ச்சியாக அவர்கள் மீது அவருடைய ஆசீர்வாதங்களைப் பொழிந்து கொண்டிருக்கிறார் என்னும் உண்மை அவர்களைப் பற்றித் தொடர்ச்சியாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்னும் உண்மை, அவர்களைப்பற்றித் தொடர்ச்சியாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதாகவும், அவர்களுடன் நெருக்கமாக இருக்க விரும்புகிறார் என்பதும் அவர்களுக்கு நம்பமுடியாத மதிப்பின் உணர்வைக் கொடுக்கின்றது. பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

8. தேவனுடைய ராஜ்யத்தில் உங்களுடைய அடையாளமும் மதிப்பும் நித்தியமானவைகளாகவும், ஒருபோதும் மாறாதவைகளுமாக இருக்கின்ற, தேவனைப்போலவே நீடித்திருக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. வெற்றி அல்லது தோல்வியுடன் சம்பந்தப்படாமல் அந்த உறவு தொடர்ச்சியானதாகவும், உங்களுடைய மதிப்பு பாதுகாப்பாகவும் இருக்கின்றது. சாத்தானின் ராஜ்யத்தில் உங்களுடைய மதிப்பு செப்டம்பர் 11, 2001, பங்குச் சந்தையைப் போன்ற பாதுகாப்புள்ளதாக இருந்ததைப்போன்று, அளவுக்கதிகமாக ஏறவும் இரங்கவும் செய்யக் கூடியதாகவும் மொத்தமாகப் பாதுகாப்பில்லாததாகவும் நொறுங்கி விழுந்துவிடக்கூடியதாகவும் இருக்கின்றது. நீங்கள் எப்பொழுதும் வெற்றியடைந்துவிடுவீர்களென்று உங்களால் உத்தரவாதம் செய்ய முடியுமா? தைரியமூட்டுவதற்காகவும் உங்களைத் தாங்குவதற்காகவும் உங்களைச் சுற்றிலுமுள்ள மக்கள் எப்பொழுதும் உங்கள்

முயற்சிகளுக்குக் கைதட்டுவார்கள் என்று உங்களால் நிச்சயமுள்ளவராக இருக்க முடியுமா? முடியாது! ஏனென்றால் காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள். ஞானமுள்ள மனிதன் புதைமணலின்மேல் வீட்டைக் கட்டுவதைவிட கன்மலையின்மேல் கட்டுவதைத் தெரிந்துகொண்டு கன்மலையின்மேல் வீட்டைக் கட்டினான்.

9. நமது தனிப்பட்ட அடையாளத்தைப் பாதுகாப்பாக்கவும், நம்பிக்கையின்மை, அதைரியம், மதிப்பில்லாத தனித்தன்மை, மரணம் ஆகியவைகளில் பிரவேசிப்பதிலிருந்து நம்மைப் பாதுகாக்கவும், தேவன் அவருடைய ராஜ்யத்தின் இருதயத்தில் உறவுகளைப் பாதுகாக்கின்ற ஒரு பிரமாணத்தைப் பொறித்திருக்கிறார். அது இரண்டுவிதமான உறவுகளுடன் இடைப்படுகின்றது. நமக்கும் நமது பரலோகத் தந்தைக்கும் இடையில் உள்ள ஒரு உறவும், தேவனுடைய ராஜ்யத்தில் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருக்கக்கூடிய நம் ஒவ்வொருவருக்கும் இடையில் இருக்கக்கூடியதுமாக, அந்த உறவு இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் இயேசு இப்படிக் கூறினார்.

10. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். மத்தேயு 22137-40.

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதன் நமது அடையாளத்தையும் விலைமதிப்பையும் பாதுகாப்பதற்காக இந்த இரண்டு கற்பனைகளும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு பெரிய கற்பனைகளும் உண்மையில் பத்துக் கற்பனைகளின் சுருக்கமாக இருக்கின்றது. உங்களுடைய சுயவிலைமதிப்பை நீங்கள் இழக்கும்படி செய்யப்படுவதிலிருந்து, உங்களைத் தடை செய்வதற்கான ஜீவாதாரமாக இந்தப் பத்துக் கற்பனைகள் இருக்கின்றன என்று நீங்கள் எப்பொழுதாவது சிந்தனை செய்திருக்கிறீர்களா? தேவனுடைய ராஜ்யத்திற்குள் பத்துக் கற்பனைகள், உறவுகள் என்னும் அமைப்பில் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த உறவுகளை நீங்கள் முறிக்கும்போது, நீங்கள் உங்களுடைய அடையாளத்தை அழித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுடன் உங்களுடைய அடையாளத்தை நீங்கள் அழித்துக் கொண்டிருக்கின்றபோது, மரணம் உங்களைத் தழுவவதற்கு ஏக்கமுடையதாக இருக்கின்றது. பாவத்தின் சம்பளம் மரணம் என்னும் தேவனுடைய அறிவிப்பில் ஒருதலைப்பட்சமாக எதுவும் இருக்கின்றதில்லை. பாவம் (வேதாகமம் அதனை நியாயப்பிரமாணத்தை மீறுவது என்று விளக்குகின்றது. 1 யோவான் 3:4) பாவம் நமது அடையாளத்தையும் மதிப்பையும் அழிக்கின்றது. அடையாளமும் மதிப்பும் இல்லாமலாகின்றபோது ஆத்துமா மரணத்திற்காக ஏங்குகின்றது. இன்று சமுதாயத்தில் தற்கொலையும் மனச்சோர்வும் மிகப்பெரிய பிரச்சனைகளாக ஏன் இருக்கின்றன? என்பதற்கான மிகச்சரியான காரணமாக இது இருக்கின்றது என்பதற்கான பதில் சாதாரணமாக பாவமாக இருக்கின்றது. தேவன் பாவத்தை ஏன் அவ்வளவு அதிகமாக வெறுக்கிறார் என்பதை

உங்களால் காண முடிகின்றதா? பாவம், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ற நமது அடையாளத்தையும் கொள்ளையடிப்பவனாக இருக்கின்றது. தேவன் அதை அழிக்கின்ற தீர்மானத்தை உடையவராக இருக்கிறார்.

12. நாம் எங்கு இருந்திருக்கிறோம் என்பதை உடனே விரைவாகச் சுருங்கச் சொல்லுவதற்காக

1. தேவனுடைய ராஜ்யம் ஒரு குடும்பமாக இருக்கின்றது.
2. தேவன் நமது தகப்பனாகவும் நாம் அவரது பிள்ளைகளாகவும் இருக்கிறோம்.
3. தனிப்பட்டவர்களாக இருக்கும் நமது அடையாளமும் மதிப்பும் தேவனுடனுள்ள நமது உறவின் அடித்தளத்தின் மேலுள்ளதாக இருக்கின்றது.
4. தேவனுடைய ராஜ்யம் உறவின் ஒரு ராஜ்யமாக அந்த உறவை அடித்தளமாகக் கொண்டதாக இருக்கின்றது.
5. இந்த உறவுகள் பத்துக் கற்பனைகளால் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன.
6. கற்பனைகளை மீறுவது நமது அடையாளத்தையும் மதிப்பையும் அழிக்கின்றது.

## 5-ம் அதிகாரம்

## குடும்ப நெருக்கடி

1. அவனுடைய முகத்தைப் பார்த்ததனால் ஏதோ ஒருவிதமான காயத்தை அவன் அனுபவித்திருந்தான் என்று என்னால் கூறமுடிந்திருந்தது.

அவனுடைய கண்களுக்குக் கீழாக இந்தப் பைகள் ஒட்டுமொத்தமான துணிவுள்ளவனாக இருக்கிறான் என்னும் தோற்றத்திற்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தது. நீங்கள் உண்மையாகவே மாறுபாட்டிற்கு உட்பட்டவராக இருக்கிறீர்கள் என்று நான் அவரிடத்தில் கூறினேன்.

2. நானும் என் மனைவியும் பிரிந்திருக்கிறோம் என்று அவர் வேதனையுடன் கூறினார். அது வந்துகொண்டிருந்ததை நான் உடனே பார்க்கவில்லை என்று வருத்தத்தில் மூழ்கினவராக அவர் கூறினார். அவர் எதிர்நோக்கிக்கொண்டிருந்த சவால்களைப்பற்றி நாங்கள் பேசினோம் அதற்குப்பின் அவர் தெளிவில்லாதவிதமாக சிறுவர்களைப் பார்க்காமலிருப்பதைச் சமாளிப்பது என்னால் முடியாததாக இருக்கின்றது. அது இப்பொழுது என்னைக் கொல்லுகின்றது. அவரை ஒன்று சேர்த்து பற்றிக்கொள்ளவதற்கு அவர் போராடிக்கொண்டிருந்ததுடன் அவருடைய வேதனையையும் நான் உண்மையாகவே உணர்ந்தேன். என்னால் அவருக்கு உதவி செய்திருந்திருக்க முடியும் என்று நான் அக்கறையுடன் விரும்பினேன், அவருடைய முடிவான விமர்சனம், இதற்கு மேலாக எந்தப் பாதை மேல்நோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கின்றது அல்லது நான் எங்கு சென்று கொண்டிருக்கிறேன் என்பதை இப்பொழுது நான் அறியாமலிருக்கிறேன் என்பதாக இருந்தது.

3. பிரிவினை விவாகரத்து ஆகியவைகள் என்னும் நரகத்தனமான தேசத்தில் இருந்திருக்கின்றவர்கள் மட்டும், அந்த வார்த்தைகளுக்குப் பின்னாலுள்ள மனக்கிளர்ச்சிகளை அறிவார்கள். விருப்பமில்லாத கட்சியினால் உணரப்பட்டிருக்கின்ற அதிர்ச்சி, கோபம், வருத்தம் ஆகியவைகள் அடிக்கடி ஒரு பாகஸ்தரின் மரணத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கின்றது. விவாகரத்தின் நாசத்தை உண்டுபண்ணும்

உண்மைகள், சாதாரணமாகச் சொத்துக்களின் பாகப்பிரிவினையைவிட அதிகமான அர்த்தம் உள்ளதாக இருக்கின்றது. அதின் அர்த்தம் உங்களுடைய முழு அடையாளத்தையும் திரும்பவும் விவரிப்பதாக இருக்கின்றது. பிறரால் மிகப்பெரிய விதமாகத் துன்புற்றவர்களாக இருப்பவர்கள், உண்மையில் பிள்ளைகளாக இருக்கின்றனர். ஒரு பிள்ளையின் இருதயத்திற்கூடாகக் கடந்து செல்லுகின்ற அழிவுக்குரிய மனக்கிளர்ச்சிகளின் பரப்பு, அந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றபோதுமாக மட்டும் இல்லாமல் ஆனால் அவர்களுடைய மீதம் முழுவதிலும் முழுவதுமாகக் கணக்கிட முடியாததாக இருக்கின்றது.

4. ஜிம்கான்வே என்பவர் விவாகரத்தின் பிள்ளைகளாக இருந்த நூற்றுக்கணக்கான வயது வந்தவர்களை ஆராய்ந்தபோது, அவர்கள் உணர்ந்திருந்த மனக்கிளர்ச்சியின் பரப்பு கீழ்க்காணும் விதமாக உணரப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| மகிழ்ச்சியில்லாதவர்கள் | 72% |
| வல்லமையில்லை என்று உணர்ந்தவர்கள் | 65% |
| தனிமையை உணர்ந்தவர்கள் | 61% |
| பயந்தவர்களாக இருந்தவர்கள் | 52% |
| கோபமாக இருந்தவர்கள் | 50% |
| கைவிடப்பட்டவர்கள் என உணர்ந்தவர்கள் | 48% |
| சொந்தமாக நிராகரிக்கப்பட்டதை உணர்ந்தவர்கள் | 40% |
| மதிப்பில்லாமையை உணர்ந்தவர்கள் | 30% |

5. விவாகரத்துக்கு உள்ளாகிப் பிள்ளைகளாக இருந்தவர்களிடத்திலிருந்து எழுந்த பிரச்சனைகள் இந்த வயது வந்தவர்களைக் கீழ்க்காண்பவைகளுடன் விட்டுச் சென்றது.

தொடர்ச்சியாக அங்கீகாரம் தேடுதல்

அவர்களுடைய கடந்தகாலத்தின் சிலவற்றை மூடி மறைப்பது 54%

தங்களைத்தாங்களே கடுமையாக நியாயம் தீர்த்துக்கொள்ளுதல் 53%

தங்களைத்தாங்களே மனப்பூர்வமாக மிக அதிகமாக எடுத்துக்கொள்ளுதல் 47%

தங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல் இருக்கின்ற நிலைமைகளின் மீது அளவுக்கு அதிகமாகச் செயல்படுதல் 42%

உறவுகளுடன் இன்னும் கஷ்டங்களை உடையவர்களாக இருத்தல் 40%

**6. கீழ்க்குறிப்பு நெல்லசோலாவும் ரெனட்டாசிங்கரும் விவாகரத்துப் பிரதேசத்திலிருந்துள்ள உண்மைக் கதைகள் (பான்மாக்மில்லன் சிட்னி, 1996) பக்கம்.2, கான்வே, 31.**

7. தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் மல்கியா 2:16 என்று தேவன் கூறுவதில் ஏதாவது அதிசயம் இருக்கின்றதா? அது எப்படி நிகழுகின்றது என்று கருதாமல் அல்லது யார் யாரை விட்டு வெளியேறிச் செல்லுகிறார் என்பதைப்பற்றியும் இல்லாமல், குடும்ப உறவுகளின் இழப்பு, அனைத்துக் கட்சிகளையும் பாழாக்குவதாக இருக்கின்றது. குடும்ப உறவுகள் உடைகின்றபோது வெற்றிபெறுபவர்கள் இருக்கின்றதில்லை. ஆயினும் பரலோகத்தில் நிகழ்ந்தது என்னவென்றால், இது மிகச் சரியாக நிகழ்ந்திருக்கின்றது. தேவனுடைய குடும்பத்திலிருந்த, அருமையாக

நேசிக்கப்பட்டிருக்கின்ற குமாரர்களில் ஒருவன் அவருக்கு எதிராகத் திரும்பினபோதுண்டான ஒரு நெருக்கடியில் தேவனுடைய குடும்பம் ஒரு புறமாகக் கிழிக்கப்பட்டிருந்தது.

8. வானத்திலே யுத்தமுண்டாயிற்று என்று வெளி 12:7ல் வேதாகமம் கூறுகின்றது. இந்த வசனத்தை நாம் வாசிக்கின்றபோது இது இரண்டு அரசர்களுக்கிடையிலும் அவர்களுடைய ராஜ்யங்களுக்கிடையிலும் நிகழ்ந்த ஒரு போர் என்று நாம் நினைக்கும்படி சோதிக்கப்பட முடியும். ஆனால் இந்தப் போர் தேவனுடைய குடும்பத்தை ஒருபுறமாகக் கிழிப்பதாக இருந்தது. தேவன் முதலில் லூசிபரை உண்டுபண்ணினபோது, அவருடைய புதிய மகனை மென்மையாகப் பிடித்திருந்தார் என்பதை உங்களால் உருவகப்படுத்த முடியுமா? தேவன் இந்த தேவதூதனுடன் அவருடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் பங்களித்திருந்தார். அவர் அவனிடத்தில் அன்பைத்தவிர வேறு ஒன்றையும் காட்டாமலிருந்து அவடைய குடும்ப அரசாங்கத்தின் மிகவும் உயரமான மட்டங்களில் சேவை செய்கின்ற சிலாக்கியத்தை அவனுக்குக் கொடுத்திருந்தார். ஆனால் இப்பொழுது அவருடைய பிள்ளையாக இருந்த அவன் கோபமும் கலகமும் உள்ள வார்த்தைகளை உமிழ்ந்துகொண்டிருந்தான். வஞ்சகம், பொய்கள் ஆகியவைகளின் நிழல்களில் மறைந்துகொண்டு அவன் தேவனுடைய மற்ற அநேக பிள்ளைகளின் மனங்களில் விஷமிட்டான். அந்தத் துயரத்தை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அவ்வளவு பூரணமானவனாகப் படைக்கப்பட்டிருந்த லூசிபர் இப்பொழுது வெறுப்பிலும் கொலையிலும் நிறைந்தவனானான். அவன் தேவனுடைய நித்திய குமாரனை அழிப்பதில் தீர்மானமுள்ளவனாக இருந்தான். ஏனென்றால் சாத்தான் ஆதிமுதல் கொலைபாதகனாக இருந்தான் என்பதை இயேசு

வெளிப்படுத்துகிறார். சாத்தான் இயேசுவை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று நம்பியிருந்த இந்த உணர்ச்சியின் உண்மை கல்வாரி சிலுவையின்மீது வெளிக்காட்டப்பட்டிருந்தது.

9. தேவன் அவருடைய குமாரனான லூசிபரின் இழப்பை அவர் உணர்ந்திருக்கின்ற விதத்தை யாரால் அறிந்துகொள்ள முடியும். தாவீது அப்சலோம் என்பவர்களின் கதையில் தேவனுடைய இருதயத்திலிருந்துள்ள ஒரு எதிரொலியை நாம் உடையவர்களாக இருக்கிறோம். என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும். அப்சலோமே என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான். அப்சலோம் ஒரு அழகான பொருத்தமான தாவீதின் மகனாக இருந்து அவனுடைய தகப்பனைக் கொலைசெய்து அவனுடைய ராஜ்யத்தை எடுத்துக்கொள்ள வாஞ்சை உள்ளவனாக இருந்தான். ஆனால் தாவீதின் சேனை அவனுடைய மகனின் சேனைகளை முறியடித்ததுடன் அந்தப் போரில் அப்சலோம் கொலை செய்யப்பட்டிருந்தான். வெற்றியின் சந்தோஷத்திற்குப் பதிலாக தாவீது கலகம் செய்பவனாக இருந்த அவனுடைய மகனின் இழப்புககாக தாவீது அழுதான். குடும்பங்கள் ஒரு பக்கமாக இழக்கப்பட்டிருக்கின்றபோது, வெற்றிபெற்றவர்கள் இருக்கின்றதில்லை.

10. தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு நபருடைய அடையாளமும் மதிப்பும் நமது பிதாவாகிய தேவனான படைப்பாளராக இருக்கின்ற தேவனிடமுள்ள உறவில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நினைப்பது கடினமானதாக இருக்கின்றது. லூசிபர் அந்த உறவிலிருந்து வெளியே காலடி எடுத்து வைத்தபோது, அவன் மனம் சார்ந்த விதமாகவும் கிளர்ச்சியுடனும் தன்னைத் தற்கொலை செய்துகொண்டு எதிர்பாராத

விதமாக இருளின் பெருவெள்ளத்தின் வாசல்களைத் திறந்தான். லூசிபரின் கலகத்திற்கு முன் நீ யாராக இருக்கிறாய்? என்று அவனிடத்தில் கேட்டிருந்தால், அவன் அமைதி மிக்க நிச்சயத்துடனும் நம்பிக்கையுடனும், நான் தேவனுடைய ஒரு மகனாக இருக்கிறேன். அவர் என்னை நேசிக்கிறார் என்று கூறியிருந்திருப்பான். லூசிபர் அவனுடைய பிதாவை ஒருதடவை நிராகரித்தபின், நீங்கள் அவனிடத்தில் அதே கேள்வியைக் கேட்டிருந்தால் லூசிபரே, நீ யாராக இருக்கிறாய்? என்று கேட்டிருந்தால் அவனால் என்ன கூற முடிந்திருக்கும். அதற்குமேல் அவனிடத்தில் ஒரு அடையாளம் இருக்கவில்லை. அவன் அதை அழித்திருந்தான். அவன் தனக்குத்தானே எந்த ஒரு அடையாளத்தை உண்டுபண்ண வகை தேடியிருந்தாலும், அந்தக்கட்டத்திலிருந்து முன்னால் இருந்த வெறுமையை அவனால் ஒருபோதும், ஒருபோதும், ஒருபோதும் நிரப்பியிருந்திருக்க முடியாது என்பதுடன், அந்த வெறுமையான நிலைமையையும் அவனுடைய பரலோகப் பிதாவுடனிருந்த அவனுடைய நெருக்கமான உறவை உடைத்ததனால் அவன் அனுபவித்திருந்த இழப்பின் உணர்வையும் அவனால் நிறைவு செய்ய முடியாது.

**அநேக நேரங்களில் அவன் எதை இழந்திருந்தானோ அதை மறுபடியும் ஆதாயமாக அடைந்துகொள்ள முடியும் என்று அவன் விரும்பியிருந்தான். ஆனால் அவனுடைய அகந்தை அதற்கு அவனை ஒருபோதும் அனுமதிக்காமலிருந்தது**. அதனுடன்கூட அவனுக்குள் ஆழமாக அவன் தழுவியிருந்த வெட்கக்கேடான தன்மைக்கும் கலகத்திற்கும் பின், அவன் மன்னிக்கப்படுவான் என்று ஒருபோதும் அவனால் நம்பமுடியாதவனாகவும் அவன் இருந்தான். இப்பொழுது

சாத்தான் என்பவனாக இருக்கின்ற லூசிபர் தனியாக நிற்கிறான். அவனைத் தாங்குவதற்கு ஒருவரும் இல்லை. அவனை நேசிப்பதற்கு ஒருவரும் இல்லை. அவனை அழைப்பதற்கு ஒரு இடமும் இல்லை. இப்பொழுது சாத்தான் மதிப்பில்லாத தன்மை, பாதுகாப்பின்மை, பொறாமை, அகந்தை, சுயநீதி, தற்பெருமை, பெருங்கோபம் கட்டுப்படுத்தும் ஒரு ஆவி ஆகியவைகளால் தூண்டப்பட்டவனாக இருக்கிறான்.

12. சாத்தான் இனிமேல் எந்தப் பாதை உயர்வானதாக இருக்கும் என்பதை அறியாதவனாக இருந்தான். அவன் யாராக இருந்தான் என்பதையும் எப்படியாவது தனக்குள் உணர்ந்திருந்த வெறுமையான தன்மையை நிரப்பவும் திரும்ப விளக்கவும் வேண்டியவனாக இருந்தான். எந்த ஒரு சிறு பிள்ளையும் தனது மதிப்பின்மையை உணருவதைப்போல, சாத்தான் அவனுடைய பாதுகாப்பின்மை, பயம், பயித்தியத்தன்மை, எவரிடத்திலிருந்து அங்கீகாரத்தைப்பெற முடியுமோ அதை அடைவதற்கான வெற்றியின் நிச்சயமில்லாத துணிவு ஆகிய அடையாளங்களையெல்லாம் அவன் சுமந்துகொண்டிருக்கிறான். அவன் கவனிக்கப்படுவதிலும் அந்த வெறுமையான தன்மையைத் திருப்திப்படுத்துவதிலும் தீராத ஆவலுள்ளவனாக இருக்கின்றான் என்பதுடன், திரிபுசெய்யப்பட்டுள்ள அவனுடைய இயல்பு, தொழப்படுவதற்கும், புகழப்படுவதற்கும், நேசிக்கப்படுவதற்கும் ஏங்குகின்றது. அந்த வேதனையையும் தனிமையில் இருக்கின்ற நிலையையும் தூரமாக எடுத்துக்கொள்ளக்கூடிய எதற்காகவும் அவன் ஏங்குகிறான்.

13. மதிப்பிற்கு அடித்தளமாக இருக்கின்ற உறவுகளைச் சாத்தான் நிராகரித்திருக்கின்றதிலிருந்து, அவனால் உறவுகளின் அடித்தளத்தின் மீதுள்ள ஒரு ராஜ்யத்தை ஒருபோதம் ஏற்படுத்த முடியாது. வேண்டியதைத்

தேர்ந்தெடுக்கின்ற ஒரே ஒரு விருப்பம் மட்டும் அவனுக்கு விட்டுவிடப்பட்டிருந்தது. நீங்கள் எவருக்குச் சொந்தமானவராக இக்கிறீர்கள் என்பதைவிட அதிகமாக, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதிலிருந்து அறியப்பட்டவராக இருக்கிறீர்கள். ஜீவன், ஞானம், அன்பு ஆகிய அனைத்தும் தேவனிடத்திலிருந்து வருகின்றது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புகை செய்திருந்தால் இந்த ராஜ்யம் ஒருபோதும் செயல்படாது. தேவனை ஒரு சொந்த உறவு இல்லாமல் இருக்க முடியாத ஒரு சக்தியாகக் குறையும்படி செய்வதற்காக, அப்படியே சாத்தான் "உள்ளுக்குள் இருக்கும் வல்லமை" என்னும் அடிப்படைக் கொள்கையைக் கண்டுபிடித்தான். உங்களுடைய சித்தத்தின்படி அல்லது உங்களுடைய சித்தத்தின்படியாக இல்லாமல் தகாதவிதமாக உபயோகப்படுத்தப்படக்கூடிய ஒரு சக்தியாக அது இருக்கின்றது. சாத்தானுடைய ராஜ்யம் வல்லமை, செயல்பாடு, இன்பங்களைத் தேடுதல் ஆகியவைகளின் ஒரு ராஜ்யமாக இருக்கின்றது. அதன் மத்திய உள்ளுறைப் பொருளாக, ஒருவருக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதும், எவர்கள் உங்களுக்கு உபயோகமுள்ளவர்களாக இருப்பார்களோ அவர்களை மட்டும் கவனிப்பதாக இருக்கின்றது.

14. உண்மையில் இந்த ராஜ்யம் தண்டனையளிக்கப்பட்டதாக இருக்கின்றது. ஏனெனில் ஜீவசக்தி, உயிரோட்டமில்லாத ஒருவருக்குச் சொந்தமானதாக இல்லாமல் இருப்பதுடன் ஒருநாள் அவர் அதனை, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர் என்பதற்கான அடையாளத்தை ஒப்புகை செய்வதற்குப் பிடிவாதமாக மறுப்பவர்களிடத்திலிருந்து அதனைப் பின்னிழுத்துக்கொள்ளுவார். அந்த

அடையாளத்தை நிராகரிப்பதிலிருந்து வருகின்ற வேதனையையும் இழப்பையும் எதனாலும் தூரமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அது தண்டனையளிக்கப்பட்டதாக இருக்கின்றது. துன்மார்க்கனுக்கு இளைப்பாறுதல் இல்லை என்னும் நீதிமொழியின் சத்தியத்தை இங்கு கற்றுக்கொள்ளுகிறோம்.

15. இந்த அடக்கத்திற்குள்ளாக, நாம் ஏதேன் தோட்டத்திற்கத் திரும்பும்போது, அதற்கு வெளியே சாத்தான் தந்திரமும் சாமர்த்தியமும் உள்ளவனாக இருந்து, தேவனால் அவன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை நாசம்செய்ய (தோற்கடிக்க) அவன் வகைதேடுவதை நாம் காண்கிறோம். ஆனால் அந்த உட்பக்கத்தில் வெறுமையினாலும் பாதுகாப்பின்மையினாலும் நிறைந்ததாக இருந்து, ஒரு புதிய அடையாளத்தை உண்டுபண்ணுவதற்காகவும் எப்பொழுதும் விரிவடைந்து கொண்டிருக்கின்ற நம்பிக்கையின்மையின் பிளவிலிருந்து தப்புவதற்காகவும் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு இருதயம் அங்கு கிடக்கின்றது.

## 6-ம் அதிகாரம்

## பூமியின் மேல் நரகம்

1. அது வாழ்க்கையில் இருதயத்தை உடைக்கின்ற மிக அதிகமான அனுபவங்களில் ஒன்றாக இருந்திருக்கின்றது. அது வருடங்களை அதிகமாக எடுத்துக்கொண்டிருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் யாரோ ஒருவருடன் கட்டியான ஒரு நட்பை முன்னேற்றமடையும்படி செய்திருந்திருக்கலாம். யாரோ ஒருவருடன் நேரத்தைச் செலவு செய்வதில் நீங்கள் உண்மையாகவே மகிழ்ச்சியை அனுபவித்திருந்திருக்கலாம்.

திடீரென்று உங்களுடைய நண்பர் சற்று மாறுபட்ட விதமாக செயல்பட்டுக் கொண்டிருப்பதை நீங்கள் கவனிக்கிறீர்கள். நீங்கள் அதை மறப்பதற்கு முயற்சி செய்து உங்களுக்குள்ளேயே நீங்கள் இப்பொழுது அப்படி விஷயங்களை கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றும், அது உண்மையான பிரச்சனையாக இல்லை என்றும் நீங்களாகவே கூறிக்கொள்ளுகிறீர்கள். ஆனால் காலம் கடந்து செல்லுகின்றபோது அந்த சான்றுகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன என்பதுடன் கடைசியில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்று உங்களுடைய நண்பரிடத்தில் கேட்க வேண்டும் என்பதற்கு வற்புறுத்தப்படுவதை உணருகிறீர்கள். ஒரு யுகம் போல் காணப்படுகின்ற காலத்தைச் செலவு செய்தபின் உங்களுடைய நண்பனால் நன்கு காணும்படி கட்டி நிறுத்தப்பட்டுள்ள கல்சுவரைக் கடப்பதற்குமுன் வேறுயாரோ ஒருவர் உங்களுக்கெதிராக உங்களுடைய நண்பரைச் சுவாதீனம் செய்திருக்கின்றதை நீங்கள் காண்கிறீர்கள். அவைகள் உங்களுடைய செயல்களைத் திகைக்கச் செய்கின்ற விதமாக விளக்கும்படி செய்கின்ற விதமாக உங்களை விட்டுவிட்டிருக்கின்றது.

2. பகுத்தறிவு நிச்சயமாகவே உங்கள்மேல் வெற்றிபெறும், அப்பொழுது உங்களால் விரைவில் இந்தத் தவறான புரிந்துகொள்ளுதலை விடுவிக்க முடியும். ஆனால் அப்படி இல்லை! நீங்கள் நியாயமான ஒரு விளக்கத்தைக் கொடுப்பதற்கு வகைதேடும்போது, நீங்கள் வெட்கம்கெட்ட விதமாக ஒரு மறைத்தலை போலியாகத் தயார் செய்வதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீர்கள். இந்தக் கட்டத்தில் புண்படுத்துதல், வேதனை, கோபம் அல்லது உங்களுடைய நண்பர் எளிதில் நம்பக்கூடிய ஒரு நாசம் போன்றவைகளை வேறு ஒருவர் ஒரு

வார்த்தையும் கூடக் கூறாமலிருந்திருக்கின்றபோது அது மட்டுமே உங்களை தற்காக்கும்படியாக (மேற்கண்ட) பல மனக்கிளர்ச்சிகளில் ஏதாவது ஒன்று உங்களை மேற்கொள்ளலாம். உங்களுடைய திடீர்ப் பாய்ச்சல் அல்லது மௌனம் (இதில் எது பொருந்துகின்றதோ அது) அவைகள் சரியாக இருந்தன என்றும் உங்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது. அனைத்தும் உண்மையாக இருந்தது என்று உங்களுடைய நண்பருக்குச் சமிக்ஞை செய்கின்றது. காயத்தில் கத்தியைத் திருப்புவதைப் பற்றிப் பேசுகிறார்கள்!

3. இங்கு பூமியின் மீது ஏறக்குறைய காலம் உதயமான போதிருந்து, மேலும் மேலும் திரும்பவும் கட்டப்பட்டிருக்கின்ற, இந்தக் காட்சியின் உண்மையை நீங்கள் உறுதிப்படுத்தும்போது முன்சென்ற இரண்டு பாராக்களை (இரண்டு பகுதிகளை) நீங்கள் வாசித்திருந்தபோது, ஒரு வேதனையுள்ள ஞாபகம் மேற்பரப்பிற்கு வந்திருக்கின்றது. எனக்காக அப்படிப்பட்ட ஒரு நிகழ்வை நான் எழுதுகின்றபோதும் நினைவுக்குக் கொண்டுவருகின்றபோதும் நான் நின்று மறுபடியும் ஒரு தடவை கேட்கிறேன். ஏன்.?

4. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசித்த அந்த வினாடியில், தேவன் எப்படி உணர்ந்தார் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு, அவைகள் ஒருவிதமாக நமக்கு உதவ முடியும் என்று நான் யூகம் செய்வதுடன், அதைப் போன்றவிதமான நிராகரிப்பிலிருந்து, நம்மில் அதிகமானவர்கள் அந்தத் தழும்புகளை உடையவர்களாக இருக்கிறோம் என்பதில் நான் நிச்சயமுள்ளவனாக இருக்கிறேன். மிகவும் அதிகச் சிறப்பான நண்பர்களையும் கூட ஒரு

அந்நியனின் வார்த்தைகளால் பிரிக்க முடியும் என்பது வாழ்க்கையின் மிகப்பெரிய இரகசியங்களில் ஒன்றாக இருக்கின்றது.

5. தேவனுடைய மகளான ஏவாள் தோட்டத்தின் நடுவில் இருப்பதை அவள் தானாகக் கண்டதுடன் திடீரென்று அந்நியனுடன் உரையாடலில் ஈடுபட்டிருந்ததைத் தேவன் நெருக்கமாகக் கவனித்துக் கொண்டிருந்தார் என்பதை நான் அடிக்கடி கற்பனை செய்திருந்திருக்கிறேன். தேவன் நேரம் முழுவதையும் ஏவாளுடன் செலவு செய்திருந்த பின்னும் அவருடைய எண்ணிலடங்காத அன்பின் அடையாளங்களை அவளிடத்தில் காட்டிக்கொண்டிருந்த பின்னும், அவள், அவளுடைய பரலோகத் தந்தையின் பாதுகாப்பைப் பற்றிக் கொண்டிருந்திருக்க வேண்டுமா அல்லது சர்ப்பத்தின் வழியாகப் பேசியிருந்த சாத்தானின் வார்த்தைகளைத் தழுவியிருந்திருக்க வேண்டுமா?

அவர்களுடைய உறவை முறிப்பதை நிறுத்துவதற்குத் தேவன் ஏன் குறுக்கிட்டு ஒரு தேவதூதனை அனுப்பவில்லை? இந்தக் கட்டத்தில் பதில் கூருவதற்கு அநேக ஏன்? ஏன்னும் கேள்விகள் இருக்கின்றன என்பதை நான் யூகம் செய்கிறேன். ஆனால் அவைகளுக்கெல்லாம் பதில் கூருவதற்கு நாம் நேரம் அல்லது இடம் இல்லாதவர்களாக இருக்கின்றபோது, உண்மையில் நாம் அவரை முகமுகமாகப் பார்க்கின்றவரை அவைகளில் சில பதிலளிக்கப்பட முடியாதவைகளாக இருக்கின்றன. அன்புமையமான பதிலாக இருக்கின்றது. தெரிவு செய்வதைக் கொடுப்பவருக்கு, தெரிவுசெய்தல் கடுமையாகத் தீங்கிழைக்கின்றபோதும் கூட, அன்பு தெரிவு செய்யும் சலுகையை அனுமதிக்கின்றது. தேவனுடைய பிள்ளைகள் ஒரு தவறான பாதையில் புறப்படுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் தேவன் குறுக்கிடுகின்ற பழக்கத்தை

உடையவராக இருந்தார் என்றால், அப்பொழுது உண்மையில் அவர்கள் தெரிவு செய்துகொள்ளுதலை இல்லாதவர்களாக இருப்பார்கள். உபதேசம் பண்ணுவதற்கும் சீர்படுத்துவதற்குமான ஒரு நேரம் இருக்கின்றது. ஆனால் நான் உங்களை நேசிக்கிறேன் என்று அவர்கள் கூறுகின்ற அனைத்தையும் தெரிவுசெய்வதைக் கொடுப்பவரின் மௌனம் மதிக்கின்ற ஒரு நேரமும் கூட வருகின்றது. ஏனென்றால் தெரிவு செய்தல் இல்லாத அன்பு அன்பாக இருப்பதே இல்லை. அனைத்துப் பெற்றோர்களும் அவர்களுடைய பிள்ளைகளுடன் இடைப்படுகின்றபோது மல்யுத்தம் செய்கின்றனர் என்னும் இது ஒரு உண்மை நிகழ்வாக இருக்கின்றது. நமது உபதேசங்கள் வழிநடத்துதல்கள் அனைத்திற்குப் பின்னும் நமது பிள்ளைகள் இன்னும் நமக்கு எதிராகத் தெரிவு செய்கின்றபோது, நிராகரிப்பின் வேதனையிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக நாம் அவர்களைத் தடை செய்கிறோமா? அல்லது நாம் நம்மை நிராகரிக்கின்ற அவர்களுடைய தெரிவு செய்தலை அனுமதித்துக்கொண்டு நாம் மௌனமாக அல்லது வருத்தத்துடன் இருப்போமா? (இது) எந்தப் பெற்றோருக்கும் ஒரு கடினமான தெரிவுசெய்தலாக இருக்கின்றது.

6. தேவன் அன்பின் பலத்தை ஆடையாக அணிந்துகொண்டவராக, அவருடைய விலைமதிப்புமிக்க மகளாக உள்ள ஏவாள், அவருடைய நேசகுமாரனான ஆதாமை அழிப்பதில் கருவியாக ஆவதைக் கவனிக்கிறார். இப்பொழுது தேவனுடைய இருதயத்திலுள்ள வேதனையின் அளவு நம்பமுடியாததாக இருந்திருக்க வேண்டும். தேவனுடைய மகளின் இழப்பில் அவருடைய இருதயத்தில் உண்டான வேதனை, ஆதாமைக் காப்பாற்றுவதற்காக அவரைக் குறிக்கிடச் செய்திருக்குமா? இல்லை. தெய்வீக அன்பு அதன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு, அவர்

உண்மையாகவே சுதந்தரம் ஆகியவைகளின் தேவனாக இருக்கிறார் என்பதைக் கேள்விக்கு அப்பால் மெய்ப்பித்துக்கொண்டு மௌனத்தில் காத்திருக்கின்றது. ஆதாம் அவனுக்கென்று தெரிவுசெய்து கொள்ளுவதற்கு அவர் அனுமதிப்பார். போட்டிகளைப் பற்றி நாம் பேசும்போது பரலோக விளையாட்டு சங்கத்தின் பகுதியாக ஆவதற்கு எது எடுத்துக்கொள்ள அவசியமாக இருக்கின்றதோ அதை ஆதாமும் ஏவாளும் அடைந்துகொண்டிருக்கின்றனரா என்பதைக் காண்பதற்கு பரலோகத்தின் பாதுகாப்பான இடத்திலிருந்துகொண்டு, தேவன் கவனமில்லாமல் அந்தப் போட்டியின் செயல்முறைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்னும் கீழ்த்தரமான யோசனையைத் தயவுசெய்து மனதில் ஏற்றுக்கொள்ளாமலிருங்கள். அப்படிப்பட்ட யோசனைகள் நரகபாதாளத்தில்தானேயிருந்து மட்டும் உயர்ந்தெழமுடியும். ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்பட்டிருந்ததைப் போன்ற அதேவிதமாக தேவனும் சோதிக்கப்பட்டுக்கொண்டிருந்தார். ஆதாமும் ஏவாளும் விழுவார்களானால், அப்பொழுது அவர் சமநிலையான நஷ்டத்தை (கெடுதியை) தாங்கிக்கொள்ள வேண்டியதாக இருந்திருக்கும். அதன் அர்த்தம் என்னவென்றால் உலகம் படைக்கப்படுவதற்டு முன்னே தீர்மானிக்கப்பட்டிருந்த வாக்குறுதியை, அவர்களைத் திரும்பவும் வெற்றிகொள்ளுவதற்காக அவருடைய குமாரனுடைய ஜீவனை-இயேசு கிறிஸ்துவின் ஜீவனை கொடுக்கும்படி அவரை உதவிக்கு அழைக்க வேண்டும். தேவன் ஆதாமையும் ஏவாளையும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தபோது அவர் இவைகளனைத்தையும் பற்றி முழுவதுமாக அறிந்திருந்தார். அந்த மௌனத்தில் என்னவிதமான அன்பு இருந்தது? தேவன் நமது ஆதி பெற்றோர்களுடன் இடைப்பட்டிருந்ததில் சுய

அனுகூலத்தினால் நகர்த்தப்பட்டிருந்தார் என்னும் துன்மார்க்கமான யோசனையை அன்பின் இந்தச் செயல்விளக்கம் என்றென்றைக்குமாக அடியோடு இல்லாமல் நிர்மூலமாக்கும்.

7. ஆதாமும் ஏவாளும் அந்த மரத்திலிருந்து புசித்தபோது, அவர்களிருவரும் தழுவிக்கொண்டிருந்த தத்துவத்தை நாம் முதலாம் அதிகாரத்தில் விவாதம் செய்தோம். மேலும் நம்மால் தேவன் இல்லாமல் வாழமுடியும் என்றும் நாம் எதனை அடைகின்றோமோ (சாதனை செய்கின்றோமோ) அதனால் நாம் நமது சொந்த அடையாளத்தை அமைத்துக்கொள்ள முடியும் என்றும் கற்பனை செய்யும்படி சாத்தானை நடத்தின கிளர்ச்சிகளின் விபத்தான கலவையைப்பற்றி நாம் முந்தின அதிகாரத்தில் விவாதம் செய்தோம். ஆதாம் ஏவாள் ஆகியோரின் வயிற்றுச் சாறுகள், அந்தக் கனியைச் சீரணம் செய்துகொண்டிருந்தபோது, மதிப்பில்லாத தன்மையையும் குற்றத்தையும் நோயாக உண்டுபண்ணுகின்ற ஒரு மேகம் அவர்களுடைய மனங்களை மெதுவாக உறையிட்டுக்கொண்டிருந்தது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த உறவை, அந்த வசீகரமான சந்தோஷமான, மகிழ்ச்சிமிக்க உறவைக் கீழ்நோக்கி மூடிக்கொண்டிருந்தது. நீண்ட ஆயுளுள்ள உயிரணுக்களின் மரத்தின் சாபம் அதன் மறைமுகமான வேலையைச் செய்யத் தொடங்கியிருந்து காலத்தின் சிறிய காலகட்டத்தில் ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய குற்றத்தினாலும் பயத்தினாலும் சூழ்ந்துகொள்ளப்பட்டிருந்தனர். அவர்கள் சாத்தானுடனும் அவனுடைய தூதர்களுடனும் சேர்ந்து மனத்தாலும், மனக்கிளர்ச்சியினாலும் தற்கொலை செய்திருந்தனர். அவர்கள் அவர்களுடைய அடையாளத்தையும் மதிப்பையும் இழந்திருந்ததுடன், அதைத் திரும்பவும் கொண்டுவருவதற்கு

எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர். தேவனுடனுள்ள ஆதரவைப் புதுப்பிப்பதற்கு அவர்களால் ஒன்றும் செய்யமுடியாதவர்களாக இருந்தனர். அந்த உறவை அவர்கள் உடைத்திருந்தனர்; தேவனால் மட்டுமே அதைப் புதுப்பிக்க முடியும். நாம் நமது சொந்த அனுபவத்தைப் பிரதிபலிக்கின்றபோது, இந்த உண்மை சுயசான்றாக இருக்கின்றது. யாராவது ஒருவர், நம்முடனுள்ள ஒரு உறவை மீறுவார்களானால், அந்த உறவைப் புதுப்பிக்கின்ற வல்லமை, எதிர்ப்புச் செய்யாமலிருக்கின்ற கட்சியினிடத்தில் தங்கியிருக்கின்றது. குற்றம் செய்திருக்கின்ற கட்சிக்காரர்கள் அந்த உறவில் உள்ள அதிகாரத்தைச் சரணடையச் செய்திருக்கின்றனர்.

8. இந்தக் கட்டத்தில் இரண்டாம் அதிகாரத்தில் நாம் எதைப் பார்த்தோம் என்று நினைப்பது முக்கியமானதாக இருக்கின்றது. தேவன் ஜீவன் சந்தோஷம், ஞானம் ஆகியவைகளின் ஆதாரமாக இருக்கின்றார். ஆதாமும் ஏவாளும் இவைகளனைத்தையும் தங்களுக்குள் உடையவர்களாக இருக்கின்றனர் என்னும் பொய்யை நம்பினதால் இப்பொழுது அவர்கள் அந்த ஆதாரத்திலிருந்து தங்களைத் தாங்களாகவே வெட்டித் தூரமாக முறித்திருக்கின்றனர். அவர்களுடைய பகுத்தறியும் வல்லமை இனிமேல் சுயநலம் இல்லாதவிதமாகவும் அல்லது நோக்கமில்லாமலும் பயன்படுத்தப்பட முடியாததாக இருக்கின்றது. அவர்களுடைய மனங்கள் மொத்தமாகச் சாத்தானுடன் இசைவுள்ளவைகளாக இருக்கின்றன. சாத்தான் அவர்களிடத்தில் கூறுகின்ற பொய்களின் முகமூடியை நீக்குவதற்கு அவர்கள் திறமையில்லாதவர்களாக இருக்கின்றனர். சாத்தான் தேவனுடைய சுபாவத்தைப் பற்றி நிறையத் தவறான தத்துவ

விளக்கங்களினால் அவர்களை நிரப்புவதற்கு ஆரம்பிக்கிறான். அதேநேரத்தில் சாத்தான் ஆதாமிடத்திலும் ஏவாளிடத்திலும் அவர்கள் கெட்டவர்கள் என்று கூறுகிறான். அவன் அவர்கள் மரிப்பதற்கு யோக்கியதை உள்ளவர்கள் என்றும், அவர்கள் விலை மதிப்பில்லாத தனிப்பட்டவர்கள் என்றும் அவர்களிடத்தில் கூறுகிறான். சாத்தான் இன்னும் நமது அடையாளத்தின் அறிவை அழிப்பதில் தீர்மானமுள்ளவனாக இருப்பதுடன் அவன் தேவனைப் பற்றிய பொய்களைக் கூறுவதுடன் நம்மைப் பற்றியும் பொய்களைக் கூறுவதனால் இதைச் செய்கிறான். தேவனைப் பற்றியும் நம்மைப் பற்றியும் உள்ள பொய்களை நாம் நம்புகின்ற காலம் வரை நம்மால் ஒருபோதும் தேவனுடன் ஒப்புரவாகமுடியாது.

9. அந்த அந்நியன் நண்பர்களின் மிகவும் நல்லவர்களைப் பிரித்திருக்கிறான். தேவன் அவர்களைச் சந்திக்கும்படி வந்து அவர்களுடைய பெயர்களைச் சொல்லி அழைக்கின்றபோது, ஒரு சமயத்தில் அவர்கள் அதனைப் பிரபஞ்சத்தில் மிகவும் இனிமையானதாகக் கருதியிருந்தனர். இப்பொழுது அவர்களைப் பயத்திலும் ஆபத்தை உணர்ந்துள்ள துணிவிலும் மறைவான இடத்திற்குள் அனுப்புகிறான். சாத்தானின் நிகழ்ச்சி ஏற்பாடுகள் அதன் வேலையைச் செய்திருக்கின்றன.

10. ஒருநாள் வேலையிலிருந்து வீட்டை நோக்கி உங்களுடைய பிள்ளையுடன் நீங்கள் பழக்கப்படுத்தியிருக்கின்ற சந்தோஷமான சடங்காச்சாரத்தை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக்கொண்டு வந்துகொண்டிருப்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பிற்பகலிலும் உங்களுடைய பிள்ளை அப்பா அப்பா என்று பாடிக்கொண்டு முன்கதவு வழியாக வெளியே ஓடிவருவதையும் அதற்குப்பின் ஒரு

மென்மையான தழுவலுடன் உங்களுடைய புயங்களுக்குள் விழுகிறான். (இன்று) நீங்கள் வீட்டை நெருங்கும்போது, உங்களுடைய நேசகுமாரன் உங்களை வரவேற்பதற்கு வந்திருக்கின்றதில்லை என்பதை நீங்கள் காண்கிறீர்கள். பதற்றத்துடன் நீங்கள் முன் கதவில் நுழைகிறீர்கள். அப்பொழுது நீங்கள் பயத்துடனுள்ள வீறிட்ட அழுகுரலையும் தோட்டத்தில் மறைவதற்காக அவன் அவனுடைய சிறிய பாதங்களுடன் விரைவாக ஓடுகின்ற சத்தத்தையும் கேட்கிறீர்கள். ஏதோ ஒன்று உறவை முறித்திருக்கின்றது. எங்கு அன்பு இருந்ததோ அங்கு இப்பொழுது பயம் இருக்கின்றது. உண்மையான எந்தத் தகப்பனும் அவனுடைய குரல் ஒலியின் சைகையில் அவனுடைய பிள்ளைகள் தூரமாக ஓடுவதை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதில்லை. அது புண்படுத்துகின்றது. பிரபஞ்சத்தில் மிகவும் அதிகமாக அன்பு கூறுகின்ற, தாராளமனமுள்ள பொறுமையுள்ள சுதந்திரத்தை நேசிக்கின்ற நபரைப் பற்றி, பாவம், நம்மைப் பயப்படும்படி செய்கின்றது என்பது ஒரு துயரமிக்க நிகழ்வாக இருக்கின்றது.

11. தேவன் அபாயகரமான ஒரு இக்கட்டான நிலைமையைச் சந்திக்கப்பட்டவராக இருக்கிறார் வேறொரு குரலைக் கவனித்துக் கொண்டிருக்கின்ற அவர்களை இப்பொழுது அவர் எப்படி சமீபிக்கிறார்? தேவன் கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் இப்பொழுது ஒரு தீமையான ஒளியில் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆதாமும் ஏவாளும் அவர்கள் குற்றமுள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதை அறிந்திருக்கின்றனர். ஆனால் இப்பொழுது குற்றமுள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதை ஒப்புக்கொள்ளுவதற்கு அவர்கள் பாதுகாப்பும் விலைமதிப்பும் இல்லாதவர்களாக இருப்பதுடன் ஜீவனுக்கும் ஞானத்திற்கும் ஆதாரமானவராக இருக்கின்ற தேவனைப் பற்றிய தவறான யோசனைகளை

உடையவர்களாக இருக்கின்றனர். குற்ற உணர்வுடன் பாதுகாப்பு இல்லாமையையும் உடைய ஒரு ஆவியினால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்ற அவர்கள் கீழ்ப்படிய மறுப்பவர்களாகியிருக்கின்றனர். நேர்மையான விதமாகப் பகுத்தறிகின்ற வல்லமையை இழந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

12. தேவனுடைய பொறுமையில் வெளிக்காட்டப்பட்டிருக்கின்ற தேவனுடைய அன்பில் நான் ஆச்சரியமடைகிறேன். தேவன் ஆதாமினிடத்தில் எங்கே இருக்கிறாய்? என்று கேட்கிறார். அவர் அறியாததினால் இப்படிக் கேட்காமல் ஆதாம் அந்தப் பிரச்சனையைச் சந்திக்கும்படி அனுமதிப்பதற்காக இப்படிக் கேட்கிறார். ஆதாமே உன்னுடைய மனம் எங்கே இருக்கின்றது? உனது அடையாளத்திற்கு என்ன நிகழ்ந்தது? உடற்கூற்றின் தன்மை எப்பொழுதும் ஆவிக்குரிய தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் உடல் சார்ந்த விதமாக ஆதாமும் ஏவாளும் ஒளிந்துகொண்டது.ⁱ. அவர்களுடைய மனங்களில் சென்று கொண்டிருந்த ஒளித்துக்கொள்ளுவதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அவர்களைப் பயமுறுத்துவதுபொல் காணப்பட்டிருந்த சத்தியத்தைச் சந்திப்பதிலிருந்து அவர்களைத் தடைசெய்து கொள்ளுவதற்காக அவர்கள்.ⁱ. அவர்களாகவே வஞ்சகம் செய்தல், ஏமாற்றுதல் ஆகியவைகளின் ஆடைகளை அணிந்துகொண்டனர். தேவன் அந்தப் பிரச்சனையின் விவரத்தைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவி செய்யவும் ஆசீர்வாதமான தீர்வைக் கொண்டுவருவதற்கும் அவர்களுக்கு உதவி செய்யவும் தேவன் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்.

13. ஆதாம் அந்தக் கேள்விக்கு, அவன் நிர்வாணியாய் இருந்ததினால் அவன் பயந்திருந்தான் என்று தேவனிடத்தில் கூறுவதனால்

பதிலளிக்கிறான். ஆதாமும் அவன் மனைவியாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் என்னும் ஆதியாகமம் 2:25ன் ஒளியின் அடித்தளத்தில் உள்ள இந்த அறிக்கை ஆர்வத்தை உண்டுபண்ணுவதாக இருக்கின்றது. இங்கு இருக்கின்ற அனுமானம் என்னவென்றால், இந்தக் கனியைப் புசிப்பதற்கு முன் ஆதாம் நிர்வாணியாயிருந்தான். ஆனால் அவன் வெட்கப்படாமலிருந்தான் (Bவ்ஷ்) என்னும் எபிரெயச் சொல், குழப்பமாயிருந்தது. பிரமிக்கச் செய்திருந்தது. ஏமாற்றமடையச் செய்திருந்தது என்னும் அர்த்தங்களையும் கூடக் கொடுக்கின்றது. ஆதாமும் குற்றத்தினாலும் குழப்பத்தினாலும் ஏமாற்றத்தினாலும் நிறைந்தவனாக இருந்தான். அவன் யாராக இருந்தான் என்பதைப் பற்றியும் அவன் என்ன செய்திருந்தான் என்பதைப் பற்றியும் உள்ள குற்றத்தையும் உணர்ந்தவனாக இருந்தான். தேவன் இப்பொழுது ஆதாமின் வேதனையின் கடுமையின்மீது அவருடைய விரலை வைப்பதற்கு வகை தேடுகிறார். நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ? நீ நிர்வாணியாய் இருக்கிறாய் என்பதை நீ எப்படி அறிந்திருக்கிறாய்? என்று தேவன் கேட்கின்றதில்லை. நீ நிர்வாணியாய் இருக்கிறாய் என்று உனக்கு அறிவித்தவன் யார்? என்று அவர் ஆதாமினிடத்தில் கேட்கிறார். வேறு வார்த்தைகளில் என்னிடத்திலிருந்து உன்னைத் தூரமாக ஓடும்படி செய்துகொண்டிருப்பவன் யார்? உனக்கும் எனக்கும் இடையில் எவன் வந்திருக்கிறான்? என்று அவர் ஆதாமினிடத்தில் கேட்கிறார்.

14. புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்று ஆதாம் நேரடியாகக் கேட்கப்பட்டிருக்கிறான். இது ஆம் அல்லது இல்லை என்பதைக் கோரிக்கை செய்கின்ற சாதாரணமான கேள்வியாக இருக்கின்றது. இப்பொழுது ஆதாமின் மனம் தேவனைச் சுயநலமுள்ளவராகவும் பழிவாங்குபவராகவும் தன்னைப் புத்தியில்லாதவராகவும் விலைமதிப்பில்லாதவராகவும் சித்தரிக்கின்றது. அவன் இரண்டையும் ஒன்று சேர்த்து அவனுடைய மனதில் வைத்து 64ஐ அடைகிறான். ஆதாம் ஆம் என்று கூறினால் அவன் அதைத் தண்டனைக்குக் குறிக்க இருக்கிறான். இல்லைஎன்று கூறினால் அவன் இரண்டு மடங்காகச் செய்ய இருக்கிறான் என்பதை அறிந்திருக்கிறான் அதாவது ஒரு தடவை அந்த மரத்திலிருந்து புசித்ததற்காகவும், பொய் சொன்னதற்காக ஒரு தடவையும் ஆக இரண்டு மடங்கான தண்டனையையும் குவிக்க இருக்கிறான். தப்பி வெளியேற ஒரு வழியும் இல்லை என்பதை அறிந்து கொண்டு ஆதாம், அவனுடைய குத்துச் சண்டையின் உறைகளை அணிந்துகொண்டு (பாதுகாப்பில்லாத ஏதோ நபரைப் போல) தனது மூடிய கையை உயர்த்திக்கொண்டு தேவன் மீது சில குத்துகளைக் கொடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டு அவனுடைய மூலையிலிருந்து வருகிறான். நீ கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாய் என்றால் நீ அதைப்போல சண்டையிட்டுக்கொண்டு கீழ்நோக்கிச் செல்லலாம் என்னும் வழக்குச் சொல்லைப்போல அது செல்லுகின்றது. அதற்கு ஆதாம் ஏன்னோடே இருக்கும்படி **தேவரீர் தந்த ஸ்திரீயானவள்** அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்று அவன் குற்றம் சாட்டினான்.

15. அது சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு கப்பலைப் போன்றதாக இருக்க வேண்டியதாக இருந்தது. இந்த மனிதன் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டிருக்கிறான். ஆயினும் அவன் ஏவாள்மீது இரண்டு அடிகளையும் தேவன் மீது ஒன்றையும் வைக்கிறான். சிறிது நேரத்திற்கு முன்புதான் அவளுக்கு என்ன நேரிட்டாலும் அவளுடன் சேர்ந்து அதைச் சந்திப்பான் என்று பிரதிக்ஞை செய்திருந்த இந்த மனிதன் அவனுடைய ஓட்டத்தின் முதல் தாண்டுதலிலேயே முகங்குப்புற நீண்டு நெடுக விழுந்து கிடப்பதைக் கண்ட ஏவாள், அடைந்த அதிர்ச்சியை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தன்னைத்தானே சுயநலமில்லாமல் மற்றவர்களுக்கு உதவி செய்யவும் தாங்கவும் கூடிய ஒரு வெற்றிவீரனைப் பாவத்தினால் உண்டுபண்ண முடியாது. அது எப்பொழுதும் ஒவ்வொருவனும் தனக்காகவே இருக்கிறான் என்னும் பலன்களை உண்டுபண்ணுகின்றது.

16. இங்கு நிகழ்ந்துகொண்டிருக்கின்ற செயல்முறையைத் தவறவிடுவதற்கு நாம் விரும்புவதில்லை. ஆதாமின் எதிர்ச் செயல்கள் அவனுடைய குற்றத்தின் உக்கிரத்தினாலும் பாதுகாப்பின்மையினாலும் தேவனுடைய சுபாவத்தின் தன்மையைப் பற்றி ஒரு தவறான எண்ணத்துடனும் சேர்ந்தும், இவைகளனைத்தும் இப்பொழுது, அகந்தையின் பெரிய உதவியுடன் ஒன்றுசேர்ந்து கலக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது இதற்குமேல், அவன் தன்னைத் தேவனுடைய ஒரு பிள்ளை என்று காண்பதில்லை என்பதுடன், எனக்காக நான் நிற்பதில்லை என்னும்போது வேறொருவரும் நிற்கமாட்டார்கள் என்னும் தத்துவத்தை அவன் தழுவ வேண்டும். இனிமேல் அவன் ஒரு தகப்பன் இல்லாதவனாக இருப்பதனால் அவன் இதை நினைக்கிறான். இங்கு பாவத்தின் பெரிய இருதயத்தை உடைத்தல் இருக்கின்றதுடன்

ஆதாம் அவனுடைய தகப்பனைப் பற்றி எப்படி ஒரு தவறான சித்திரத்தை உடையவனாக இருக்கிறான் என்பதை தேவன் காட்டுவதுடன் அவன் விலைமதிப்பில்லாதவனாகவும் புத்தியில்லாதவனாகவும் இருக்கவில்லை என்பதையும் எப்படிக் காட்டுகிறார்? ஆதாம் வெளிப்பொருள்களை மையமாகக் கொண்டு, காரணம் காண்பதற்கான வல்லமையை இழந்திருக்கின்றபோது, அவனுடைய உண்மையான நிலைமையைப்பற்றி அவனுக்கு எப்படி மதிப்பீடு கொடுக்கப்பட்டிருந்திருக்க முடியும்? தேவன் ஒருவர் மட்டுமே ஞானத்தின் உண்மையான ஆதாரமாக இருக்கின்றபோது, ஆதாம் அந்த ஆதாரத்தினிடமிருந்து அவனுடைய பிணைப்பை நீக்கியிருக்கிறான். மேலும் ஆதாம் காரணகாரியங்களை ஆராயும்போதுங் கூட அவனுடைய பகுத்தறிவு, சத்தியத்தைப்போல தோற்றமளிக்கின்ற எதையும் பயங்கரமாக நிராகரிக்கின்ற குற்றத்திலிருந்தும் அகந்தையிலிருந்தும் உள்ள கலவையிலிருந்து அவனுடைய பகுத்தறிவு எப்படிச் சுதந்திரமானதாக இருக்க முடியும்? ஆதாம் தவறானவனாக இருக்கிறான் என்று தேவன் அவனிடத்தில் கூறிக்கொண்டிருக்கின்ற போதிலும், அது அன்பினால் அவனுடைய சொந்த நன்மைக்காகச் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், அவனுடைய பகுத்தறிவை, அவனுடைய பாதுகாப்பின்மையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதனால் ஆதாம் தவறில் இருக்கிறான் என்று தேவன் கூறிக்கொண்டிருப்பதை அவனால் கையாள முடியாது.

17. ஒரு தடவை ஆதாமும் ஏவாளும் அவர்களாகவே தேவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்களானால், அவர்கள் நம்பிக்கையில்லாத விதமாக இழக்கப்பட்டிருந்தால் ஏறத்தாழ அவர்கள் சீர்பொருந்துவதற்கு அப்பால் இருந்தனர் என்பதை நீங்கள் காண்பீர்கள் என்பது எனது

உண்மையான ஜெபமாக இருக்கின்றது. அவர்கள் மொத்தமாகச் சாத்தானின் ஆவியினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். எருசலேமில் தேவனுடைய குமாரனைக் கொலை செய்வதற்குத் தீர்மானமுள்ளவர்களாக, துன்மார்க்கமான சாத்தானின் தூதர்களுடன் தோழமை கொள்ளுவதற்கு, வெற்றி பெறுவோம் என்னும் நம்பிக்கையில்லாத துணிவுடன், அவர்களுடன் ஒன்று சேருவதற்கு, அவர்களுடைய பிள்ளைகளை முடிவாக நடத்துகின்ற விதைகள் அவர்களுடைய இருதயங்களில் கிடக்கின்றன. அது முழுவதுமாக வெளிக்காட்டப்படாமல் இருந்திருந்தாலும் அவர்களுடைய இருதயங்கள் தேவனுடனோ அல்லது அவருடைய ராஜ்யத்துடனோ எதையும் செய்ய விரும்பாமலிருந்தன. அதை உணராமல் அவர்கள் உண்மையில் தேவனை வெறுத்திருந்தனர்.

18. இந்த விஷயத்தில் கொஞ்சம் நிறுத்துங்கள், இதை நீங்கள் கொஞ்சம் தூரமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சிந்திக்கப்படும்படி நீங்கள் சோதிக்கப்பட நேரிடலாம். அவர்கள் ஒரு பிரச்சனையை உடையவர்களாக இருந்தனர் என்பதை நான் உணருகிறேன். ஆனால் அவர்கள் மொத்தமாக தேவனை வெறுத்திருந்தனர் என்று கூறுவது அந்தக் கதையைக் கொஞ்சம் நீட்டுவதாக இருக்கின்றது. அதற்கு மறுமொழியாக எல்லா நல்லவைகளும் அன்பும் ஞானமும் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்பதை நாம் தொடர்ந்து நினைக்க வேண்டும் என்று நான் கூறுபவனாக இருக்கிறேன். அது மானிடர்களின் இருதயங்களிலிருந்து பிறப்பதில்லை. ஜீவாதாரமான இந்த விஷயத்தை நாம் மறந்தால், இந்தக் கதையை நம்மால் உண்மையுடன் வாசிக்க முடியாது என்பதுடனேகூட, நாமும்கூட நமக்கென்று உண்மையுடன் புரிந்துகொள்ளாமலிருக்கிறோம். இந்த

விஷயத்தின்மீது வேதாகமம் மிகவும் தெளிவானதாக இருக்கின்றது. பின்வரும் வேதவாக்கியங்களைப் பாருங்கள்.

19. எப்படியென்றால் மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை, அது தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கின்றது ரோமர் 8:7.

20. அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை. தேவனைத் தேடுகிறவன் இல்லை. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை ரோமர் 3:10-12.

21. எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? எரேமியா 17:9.

22. நமது மனங்கள் அவைகளின் இயற்கையான நிலையில் தேவனை வெறுப்பதாகவும் அல்லது எதிர்ப்பதாகவும் இருக்கின்றது. நமது மனங்கள் அவைகளின் இயற்கையான நிலைமையில் கலகம் செய்பவைகளாக இருப்பதுடன் அவைகள் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதுடன் இந்த நிலைமையிலிருந்து நமது மனங்களை விடுதலையடையச் செய்வது முடியாததாக இருக்கின்றது. எனது சொந்த அனுபவத்திலும் தடை செய்வதன் உக்கிரமான ஆவியுடனும் இருக்கின்ற அநேக மக்களுடைய அனுபவங்களிலும், நான் இந்த மக்களுடைய அனுபவங்களிலும், நான் இந்த உண்மையில் பங்கு பெற்றிருந்திருக்கிறேன். தடை செய்யும் இந்த ஆவியின் உண்மைத் தன்மை என்னவென்றால் மனித இயற்கை, ஒட்டமொத்தமாக தேவனுக்கு நேராக வெறுப்புள்ளதாக இருக்கின்றது என்பதை ஆதாம் தேவனுக்கு நேராக

வெளிக்காட்டினதுடன் அவனுடைய நிலைமையை ஒத்துக்கொள்ளுவதை விட அதிகமாக அவன் ஏவாளின் மீதும், தேவன் மீதும் குற்றம் சாட்டினது தடை செய்வதன் ஒரு நேரடியான எதிரொலியாக இருக்கின்றது. ஆதாமின் பாதுகாப்பின்மை, நமது சுதந்திரவீதமாக வாரிசுரிமையாக இருக்கின்றது. அவனால் தாங்கிக்கொள்ள முடியாமலிருந்ததைவிட அதிகமாக நம்மால் சத்தியத்தைத் தாங்க முடியாது. இந்த அறிக்கைகளில் உங்களை நீங்கள் நிலை வேறுபட்டவராகவும் அல்லது கோபமுள்ளவராகவும் உங்களைக் காணமுடிந்தால் கண்டனம் செய்கின்ற ஒரு நிலைமையில் உங்களைக் காணுகிறீர்கள் என்பதுடன், இந்த அறிக்கைகளை நீங்கள் பரிகாசம் செய்கிறீர்கள் என்றால், இந்தப் புத்தகத்தின் ஆக்கியோனை, சந்தோஷத்தைக் கொலைசெய்கின்ற ஒருவனாகவும், மக்களை அவர்கள் கெட்டவர்களாக இருக்கின்றனர் என்று கூறுவதைவிட நல்லது எதையும் செய்ய முடியாதவர்கள் என்று பாகுபாடு செய்பவராக நீங்கள் காண்கிறீர்கள் என்றால், அப்பொழுது நீங்கள் அந்தவிதமாக ஏன் உணருகிறீர்கள் என்று நீங்களே உங்களைக் கேளுங்கள். உங்களுக்குள் நீங்கள் பாதுகாப்புள்ளவராக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்தால் அப்பொழுது அந்த அறிக்கை உங்களுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்காது. ஆதாமின் பாதுகாப்பின்மையும் வெறுமையுமான தன்மையும் நமது வாரிசுரிமையாக இருக்கின்றது. அவனால் நமக்குத் தரமுடிகின்றதாக அது மட்டுமே இருக்கின்றது. அதிகமாகவேறு எதுவும் இல்லை.

23. மானிட இயல்பு தேவனுடன் பகைமை உள்ளதாக இருக்கின்றது என்னும் உண்மையை உங்களால் தழுவிக்கொள்ள முடிந்தால் அப்பொழுது நீங்கள் உண்மையாகவே ஒரு விருந்திற்குரியவராக இருக்கிறீர்கள். நம்மை இரட்சிப்பதற்கான

தேவனுடைய திட்டத்தின் அடக்கத்தில் உங்களால் நல்லது எதையும் செய்யமுடியாது என்பதை உணருவதில் பெரிய அளவிலான சுதந்திரம் இருக்கின்றது. பிரிவினை செய்வதன் முயற்சியை உங்களால் நிறுத்த முடியும். உங்களுடைய கெட்ட இயல்பு வெளியில் குதித்து யாராவது ஒருவரை உணர்ச்சிமிக்க விதமாக அல்லது உடல்சார்ந்த விதமாக வாறினால் அடிக்க முயலும்போது, உங்களை நீங்களே அடிப்பதை உங்களால் நிறுத்த முடியும். ஆனால் எனக்கு முன்னால் நானே முந்திச் செல்லுகிறேன். அடுத்த அதிகாரத்திற்காக நாம் இதைக் காத்து வைப்போம்.

24. ஆதாம் ஏவாள் ஆகியோரிடத்திற்குத் திரும்பி வந்து தேவனுக்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த தடுப்புச் சுவரை உடைத்து வீழ்த்துவது ஒரு பெரிய கடினமான வேலையாக இருப்பதை நம்மால் காணமுடியும். அவர்களுடைய சுகமடைதலும் அவர்களுடைய பிள்ளைகளின் சுகமடைதலும் எண்ணிக்கையில் உள்ள விஷயங்களை அவசியப்படுத்தும்.

25.1 மனித இனத்திற்கு அவர்களுடைய நம்பிக்கையில்லாத துணிவுடனுள்ள நிலைமையை இனம் கண்டுகொள்ளும்படியாகவும், சரியான திசையிலான ஒரு செல்வாக்கினால் அவர்களுடைய தெரிவு செய்துகொள்ளுதலின் சுதந்திரத்தை மீறாமலும் இருக்கும்படியாகக் கொடுக்கின்ற ஒரு உபாயம்.

2. அவர்கள் தேவனுடைய சுபாவத்தையும் அவருடைய ராஜ்யத்தையும் பற்றி ஒரு தவறான உணருதலை உடையவர்களாக இருந்தனர் என்பதை அவர்களுக்குக் காட்டுகின்ற ஒருவழி என்பதுடன்

அவர் உண்மையாகவே அவர்களை நேசிக்கிறார் என்பதை அவர்களுக்குக் காட்டும் ஒரு மார்க்கம்.

3. அவர்களுடைய குற்றத்தையும் பாதுகாப்பின்மையையும் நீக்குவதற்கும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர் என்பதற்கான உண்மையான அடையாளத்தையும் மதிப்பையும் புதுப்பிப்பதற்குமான ஒரு வழி.

4. அவர்களுடைய நோக்கத்தின் அறிவு, அவர்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் அல்லது அவர்களுடைய தலைவிதியைச் சீர்படுத்துவதற்கான ஒரு வழி.

5. மேலே உள்ள அனைத்தும் நேரத்தை அவசியப்பட்டிருந்தன. ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய சொந்த ஜீவன்களை இழந்திருந்தனர். அப்பழயே தெரிவு செய்வதற்கும் முடிவு செய்வதற்கும் அவர்களுக்கு நேரத்தைக் கொடுப்பதற்கு அவர்கள் உயிரைத் தாங்குகின்ற ஒரு முறையை அவசியமுள்ளவர்களாக இருந்தனர்.

6. இவைகளையெல்லாம் செய்துகொண்டிருக்கின்றபோது, தேவன் நீதியின் ஒரு அறிவைப் பராமரிக்க வேண்டும். அவரால் அவர்களுடைய கலகத்தைப் புறக்கணித்து அது சரி என்று கூறமுடியாது. கலகத்திற்கான ஒரு தண்டனை இருந்தாக வேண்டும். இந்தத் தண்டனை பாவத்தின் விளைவுகளிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டதாக இருக்கின்றது. ஏதேன் தோட்டத்திலிருந்து நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது பாவத்திற்கான ஒரு தண்டனையாக இருக்கவில்லை. அது அவர்களுடைய தெரிவு செய்தலின் ஒரு விளைவாக இருந்தது.

26. இங்கு நாம் செய்வதற்கு அவசியமான ஒரு கடினமான விஷயம் இருக்கின்றது. எதிர்பாராத விதமாக தேவன் பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

பரலோகத்தின் மூவர்களான பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் இந்தக் கட்டத்திற்கு வந்தால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்திருந்தனர். அந்தத் திட்டம் ஏற்கனவே போட்டு வைக்கப்பட்டிருந்தது. இந்த நம்பிக்கையில்லாத துணிவுள்ள நிலைமையைச் சந்திப்பதற்குப் போதுமான விதமாக விசாலமாக இருந்த ஒரு திட்டமாக அது இருந்தது.

## 7-ம் அதிகாரம்

## பரலோகத்தின் உயிரோட்டமுள்ள பாதை

1. ஒரு ரயில் பாலத்திற்குக் கீழாகக் கப்பல்கள் கடந்து செல்லுவதற்காக அந்த ரயில் பாலத்தைத் திறக்கவும் மூடவும் செய்கின்ற பொறுப்பை உடையவராக இருந்த ஒரு ரயில் நிலைய அதிகாரியைப் பற்றி இந்தக் கதை கூறப்பட்டிருக்கின்றது. அந்தப் பாலம் உயர்த்தப்பட்டிருந்தபோது, ஒரு சைகை, உயர்த்தப்பட்டிருந்த அந்த ரயில் பாதையில் அந்தப் பாலம் திறக்கப்பட்டிருந்தபோது ரயிலின் ஓட்டுனர் காத்திருக்க வேண்டும் என்பதைக் காட்டியிருந்தது. குறிப்பிட்ட இந்த நாளில் அந்தப் பாலம் உயர்த்தப்பட்டிருந்து, சற்று நேரத்திற்குக் கீழே இறக்கப்படக்கூடாததாக இருந்தது. அந்த ரயில் நிலைய அதிகாரி ஒரு ரயில் அந்த வளைவுக்கருகில் வந்து கொண்டிருந்ததைத் திடீரென்று கவனித்தார். அந்த சைகை (சிக்னல்) தவறியிருந்திருக்க வேண்டும். சரியான நேரத்தில் அவரால் அந்தப் பாலத்தைத் தாழ்த்தியிருந்திருக்க முடியும் என்று அவர் உணர்ந்தார். ஆனால் அப்பொழுது அவருடைய மகன் அந்தப் பாலத்தை உயர்த்தவும் தாழ்த்தவும் செய்கின்ற அந்தப் பெரிய பற்சக்கரங்களின் மீது ஏறிக்கொண்டிருந்ததை அவர் கவனித்தார்.

அந்த ரயில் நிலைய அதிகாரி அவருடைய மகனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அந்த பாலத்தைக் கீழே இறக்காமலிருந்தால் அந்த ரயிலில் இருந்த பயணிகள் அனைவரும் இறக்க வேண்டியதாகிவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார். அந்த ரயிலில் இருந்த பயணிகளைக் காப்பாற்ற அவர் விரும்பியிருந்தால், அவர் அவருடைய மகனைத் தியாகம் செய்திருந்திருக்க வேண்டும். முடிவு செய்வதற்கென்று தாமதம் செய்வதற்கு நேரம் இருக்கவில்லை. அவருடைய இருதயத்தைக் கிழிக்கின்ற உக்கிரமான வேதனைக்கூடாக அவர் அந்த நெம்புகோலைத் திருகினபோது அந்தப் பாலம் கீழே இறங்கத் தொடங்கினது. பூதாகரமான அந்தப் பெரிய பல்சக்கரங்களில் அவருடைய மகன் நொறுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவனுடைய வேதனைமிக்க அழுகுரலை அவர் கேட்டபோது வேதனைமிக்க தேம்புதலுடன் அவர் அவருடைய முழங்கால்களில் விழுந்தார். அந்த ரயிலில் பயணம் செய்திருந்த பயணிகள் அவர்கள் சந்தித்திருந்த பெரிய அபாயத்தைப் பற்றி ஒன்றும் அறியாதவர்களாக அல்லது அவர்களைக் காப்பாற்றுவதற்காக இப்பொழுதுதான் நிகழ்ந்திருந்த, நம்பமுடியாத தியாக பலியைப் பற்றி ஒன்றும் அறியாதவர்களாக அந்த ரயிலும் அதன் பயணிகளும் பாதுகாப்புடன் அந்தப் பாலத்தின்மீது கடந்து சென்றிருந்தனர்.

2. மனித இனத்துடனும் அதன் தலைவிதியுடனும் இடைப்படுவதில் தேவன் சந்தித்த முடிவுடன் இந்தக் கதை சமச்சீராக இருப்பதை நான் கேள்விப்படும்போது, அது இயற்றப்பட்டதாக இருந்திருக்க வேண்டியதாக இருந்தது என்பதை எப்பொழுதும் நான் காண்கிறேன். தேவன் மனித இனத்தைத் தண்டவாளங்களைவிட்டு விலகிக் கீழே உள்ள இருளுக்குள் ஆழமாக மூழ்கும்படி விட்டுவிடுவாரா அல்லது அவர் வேறு ஏதாவது மாற்றுவழி ஏற்படுத்துவாரா? ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய

ஜீவ சக்தியிலிருந்து அவர்கள் அவர்களாகவே தங்களை வெட்டி முறித்துக் கொண்டதனால், செயலாற்றுவதற்குக் குறைவான நேரம் மட்டுமே உள்ளவர்களாக இருந்து, அவர்கள் மரணம் என்னும் கல்லறையில் அவர்களுடைய தலைவிதி என்றென்றைக்குமாக முத்திரையிடப்பட்டவர் களாக நிலத்தின்மீது விரைவில் பிரேதங்களாக இருப்பார்கள்.

3. பரலோகத்தில் பிதாவாகிய தேவனும் அவருடைய குமாரனும் ஆழமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். வேதாகமம் அதை சமாதானத்தின் ஆலோசனை என்று அழைக்கின்றது. தேவனுடைய பாடுகளை யாரால் மதிப்பீடு செய்ய முடியும்? ஆதாம் ஏவாள் ஆகியோரின் பிணையாளியாக இருப்பதற்கு, அவர் அவருடைய குமாரனை அனுமதித்து, அவர்களுடைய தெரிவுசெய்துகொள்ளுதலின் பலன்களைக் கொடுக்கும்படி அவருடைய குமாரனை அனுமதிப்பாரா? அவர்களுடைய விலைமதிப்பின்மையையும் நம்பிக்கையில்லாத தன்மையையும் கல்லறைக்கு எடுத்துச் செல்லும்படி செய்வதற்கு அவருடைய குமாரனை அவர் அனுமதிப்பாரா? ஏன் என்னைக் கைவிட்டீர் என்னும் வார்த்தைகள் அவருடைய இருதயத்தை முறுக்கிப் பிழிவதிலிருந்து, அவருடைய குமாரன் அவருடைய அடையாளத்தை மொத்தமாக இழக்கும்படியாகவும் அவருடைய குமாரன் என்னும் பிறப்புரிமையை முறிக்கவும் அவர் அனுமதிப்பாரா?

4. இந்த வார்த்தைகளை நான் எழுதிக்கொண்டிருக்கின்றபோது என் மகன், எனக்குக் குறுக்காக சமாதானத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவனுக்காக என்னுடைய இருதயத்தில் எழுகின்ற மகிழ்ச்சி அன்பு ஆகியவைகளின் உணர்ச்சியை உணரவும், நான் அவனுடைய அழகிய முகத்தைப் பார்ப்பதற்காகவும் திரும்புகிறேன்.

அதற்குப்பின் என்னை நான் தேவனின் இடத்தில் வைத்துக்கொண்டு, இப்பொழுது என்னை வெறுக்கின்றவர்களாகவும் எவைகளுக்காக நான் நிற்கின்றேனோ அவைகளுக்கெதிரான ஒரு கூட்டம் மக்களுக்கான மரண தண்டனையை என்னுடைய மகன் எடுத்துக்கொள்ளும்படி அவனை அனுமதிக்கிறேன். அப்படிப்பட்ட எண்ணங்களை என் மனம் உடனே மூடிவிட வேண்டும் என்று விரும்புவதை நான் அறிக்கை செய்கிறேன். அவைகளை நினைப்பதற்கும்கூட என்னை நான் அனுமதிக்க மாட்டேன். அதைப்பற்றிய எண்ணமும்கூட எனக்கு மிகவும் அதிகமான வேதனை உள்ளதாக இருக்கும் என்பதையும் அதனுடன் இடைப்படுதல் என்னை அழிக்கும்படி செய்யும் என்பதையும் எனது உள்ளுணர்வு அறிந்திருக்கிறது. எனது எண்ணங்கள் தேவனிடத்திற்கும் அவருடைய இக்கட்டுக்கும் திரும்புவதுடன் நான் மரத்துப்போனவனாக இருப்பதை உணருகிறேன். அது நிகழும்படி அனுமதித்ததற்காக நான் மிகவும் அதிக ஆழமான நன்றி உணர்வை உணருகிறேன். அதாவது அந்த ரயிலில் பயணம் செய்திருந்த பயணிகளில் ஒருவனாக நான் இருந்ததைப் போலவும் அநேக வருடங்களாக பரலோக நிலைய அதிகாரியின் நம்பமுடியாத தியாகத்தையும் நான் புரிந்துகொள்ள முடியாதவனாகவும் பாராட்ட முடியாதவனாகவும் விட்டுவிட்டிருந்தேன். இந்த எண்ணம் எப்பொழுதும் என்னைத் தயங்கி நிற்கும்படியாகவும் அவருடைய எல்லையில்லாத அன்புக்காகவும் தியாகத்திற்காகவும் நன்றியுடன் அவரைத் தொழுது கொள்ளும்படியாகவும் செய்கின்றது.

5. பின்பு இயேசுவாக ஆன தேவகுமாரன் நமக்காக இதைச் செய்வதில் விருப்பமுடையவராக இருந்தார் என்பதில் நான் வியப்படைகிறேன். தேவன் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அறிந்திருக்கிறார். எனவே அவர் பூமிக்கு வந்தபோது, அவருக்காக என்ன

காத்திருந்தது என்பதை, நிராகரிப்பு, அடிக்கப்படுதல், பரிகாசம் பண்ணப்படுதல், வெறுப்புக்காட்டப்படுதல், சபிக்கப்படுதல், நிந்திக்கப்படுதல், நிர்வாணம் சிலுவையின் மீதான கருமையான இருள், கோடிக்கணக்கான ஆத்துமாக்களின் விலைமதிப்பில்லாத தன்மை அவர்மேல் குவிக்கப்பட்டது நூற்றுக்கணக்கான தலைமுறையினரின் ஒன்று சேர்ந்திருந்த குற்றமும் துயரமும் அவரால் பார்க்க முடிந்ததாக இருந்தது என்பதை வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. அவைகளனைத்தையும் அவர் கண்டார். ஆயினும் தேவகுமாரன் உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப் பிரமாணம் எனது உள்ளத்திற்குள் இருக்கிறது என்று கூறுகிறார். தேவகுமாரன் அதைச் செய்வதற்கு விருப்பமில்லாமல் ஒத்துக்கொள்ளுபவராக இருக்காமல் ஆனால் அவர் அதைச் செய்வதற்கு வாஞ்சித்தார். அவருடைய பிதாவினுடையதைப் போன்ற அவருடைய இருதயம் அவருடைய பிள்ளைகளின் சந்தோஷத்தின் நிறைவை அதாவது அவர்களுடைய தலைவிதியாக இருக்க வேண்டியதாக உள்ள சந்தோஷத்தின் நிறைவைப் புதுப்பிக்க (திரும்ப எடுத்துக்கட்ட) ஏங்குகின்றது. இந்த தேவன் எந்தவிதமான ஒருவராக இருக்கிறார்? யாருடன் நாம் அவரை ஒப்பிடலாம் என்பதுடன், அவரைப் போற்றுவதற்கு எந்த வார்த்தைகள் போதுமானவைகளாக இருக்கின்றன?

6. ஆதாமும் ஏவாளும் உயிரைத் தாங்கக்கூடிய ஒரு முறையை அவர்களுக்கு அவசியமுள்ளவர்களாக இருந்தனர் என்பதுடன், தவறிலிருந்து சத்தியத்தைப் பிரித்தறியக்கூடிய ஒரு திறமையையும், தேவனைப் பற்றிய உண்மையைக் காண்பதற்கானவர்களாக அவர்கள் இருந்தனர் என்பதுடன், சாத்தான் அவர்களிடத்தில் கூறிக்கொண்டிருந்த பொய்களைக் கண்டுபிடிக்கவும் வெளிக்காட்டவும்

நிராகரிக்கவும் உதவி அவசியமானவர்களாக இருந்தனர் என்பதை நாம் சென்ற அதிகாரத்தில் கவனித்தோம். உண்மையான ஆவிக்குரிய வடதிசையை அறிந்துகொள்ள அவர்களுக்கு உதவக்கூடிய ஒரு சன்மார்க்க திசை காட்டும் கருவியை அவசியமுள்ளவர்களாக அவர்கள் இருந்தனர்.

7. இந்த விஷயங்களனைத்தும் உலகத்திற்கு தேவனுடைய குமாரனின் ஈவின் மூலமாக ஏற்படுத்தப்படும் ஆதியாகமம் 3:15ல் இது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கூறப்பட்டிருந்ததுடன், தேவன் சாத்தானிடத்தில் நேரடியாகப் பின்வரும் விதமாகக் கூறினார்.

8. உனக்கும் ஸ்திரீக்கும் உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். ஆதி 3:15.

9. அந்த வசனம் அப்படியே வாக்குத்தத்தமும் நம்பிக்கையும் நிறைந்ததாக இருக்கின்றது. சாத்தானுக்கும் ஸ்திரீக்கும் இடையில் பகைமை உண்டாக்குவேன் என்று தேவன் கூறினார். தேவன் ஸ்திரீயைப் பற்றிப் பேசும்போது, அவர் அவளிலிருந்து வரக்கூடிய அனைவரைப் பற்றியும் பேசுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் மனித குடும்பம் முழுவதையும் பற்றிப் பேசுகிறார். பகைமை என்பதன் அர்த்தம் வெறுப்பு விரோதம் என்பதாக இருக்கின்றது. தேவன் மனித குடும்பத்தின் இருதயத்தில் தீமையை வெறுக்கின்றதும் நல்ல தன்மையையும் சத்தியத்தையும் வாஞ்சிக்கின்றதுமான ஏதோ ஒன்றை வைக்கிறார். தேவனால் இதை ஏன் செய்ய முடிந்திருக்க வேண்டும் என்பதற்கான ஒரே காரணம் மட்டும் இருக்கின்றது. அது என்னவென்றால் அவருடைய குமாரன் பூமியில் இருக்கின்றபோது அவருடைய ஜீவனாலும் மரணத்தினாலும் மனித குடும்பத்தை ஒப்புரவாக்கும்படி செய்ய

இருக்கிறார். ஸ்திரீயின் வித்துக்கும் சாத்தானின் வித்துக்கும் அல்லது பிள்ளைக்கும் இடையில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் வெறுப்பு என்றால் அதற்கான அர்த்தமாக இது இருக்கின்றது. பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் தீமையின் இந்த வெறுப்பையும், கிருபையையும் அல்லது வல்லமையையும் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

10. ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில் ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும், இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய் பெருகியிருக்கிறது. ரோமர் 5:15.

11. எது சரியென்று தெரிவு செய்யும் திறமை தேவன் அவருடைய குமாரனின் ஈவின் மூலமாக நமது இருதயங்களில் வைத்திருக்கின்ற பகைமையிலிருந்து நேரடியாக வருகின்றது. இந்த அதே ஈவு மிகவும் அதிகமாக அவசியமாக இருக்கின்ற ஜீவனின் ஈவை ஏற்படுத்துகின்றது. பவுலும்கூட ரோமருக்கு எழுதின நிருபத்தின் அதே அதிகாரத்தில் இந்த உண்மையைக் குறிப்பிடுகிறான்.

12. ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கும் ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ரோமர் 5:18.

13. **(Footnote) இங்குள்ள வாழ்க்கையைப்பற்றி நாம் குறிப்பிடும்போது, நாம் நித்திய ஜீவனைப் பற்றிப் பேசாமல் இங்குள்ள தவணையின் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறோம். தேவன் பூமியின் மீதுள்ள ஒவ்வொரு நபருக்கும் தேவனைப் பற்றியும் அவருடைய ராஜ்யம்**

**பற்றியும் உள்ள ஒரு சத்தியத்தைத் தெரிவுசெய்யும்படியாகவோ அல்லது நிராகரிக்கும்படியாகவோ கொடுத்திருக்கிறார்.**

14. இது ஒப்பிடுவதற்கு அப்பால் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொண்டுவருகின்ற நம்பமுடியாத ஒரு சத்தியமாக இருக்கின்றது. (நீங்கள் தேவனுடைய குமாரனையும் அவருடைய தியாகபலியையும் நம்பினாலும் நம்பாவிட்டாலும்) நீங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு மூச்சும் இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து நேரடியாக வந்திருக்கின்றது என்று மேலேஉள்ள உண்மை அர்த்தப்படுத்துகின்றது. அவருடைய ஜீவன்தான் உங்களுடைய இருதயத்தைத் துடிக்கச் செய்வதுடன் உங்களை மூச்சுவிடச்செய்வதுடன் உங்களை உயிருடன் காக்கச் செய்கின்றது. நமது பகுதியாகத் தானாக இயங்குபவைகள் என்று நாம் குறிப்பிடும் உறுப்புகள் அனைத்தும் உண்மையில் தேவனின் பகுதியில் இயக்கப்படுபவைகளாக இருக்கின்றன.

15. கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று கூறுகின்ற சத்தியத்தின் இருதயமாக அவர் இருக்கிறார். அப்.நடபடிகள் 27:27,28.

16. நமக்காகச் சிலுவையின்மீதுள்ள இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் புண்ணியத்தினால் அவருடைய ஜீவனால் நாம் தாங்கப்பட்டிருப்பதனால் தேவன் நம்மில் ஒவ்வொருவரையும் விட்டுத் தூரமாக இருப்பவராக இல்லையே. நீங்கள் தேவனைவிட்டு மிகவும் தூரமாக இருப்பதாக உணருகிறீர்கள் என்னும்போது உண்மை

என்னவென்றால் அவர் உங்களிடத்திலிருந்து ஒருபோதும் வெகுதூரத்தில் இல்லை. அவர் உங்களைக் கைவிட்டிருக்கவில்லை என்பதை அறிவதற்கு நீங்கள் உடனே உங்களுடைய நாடித்துடிப்பை உணரவேண்டியவராக இருக்கிறீர்கள்.

17. தேவன் நமது இருதயங்களில் சரியானவைகளைச் செய்வதற்கான ஒரு வாஞ்சையையும் தீமையைத் தடைசெய்வதற்கான ஒரு வாஞ்சையையும் வைப்பதற்கு விரும்புகிறார் என்பதை இதனடன் கூட்டிக் கொள்ளுங்கள். இவ்வாறாக நாம் நன்றி உள்ளவர்களாக இருப்பதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. தவறாக எதையோ செய்யப்போகும்படி நீங்கள் சோதிக்கப்பட்டிருந்த நேரங்களைப்பற்றி நினைத்திருந்து அதற்குப்பின் அதைப்பற்றி நல்லதாக நினைத்து அதைச் செய்யாமலிருந்ததை நினையுங்கள். இது தேவன் உங்களுக்குக் கொடுத்திருந்த ஈவாக, தீமைக்கு எதிரான பகைமையாக இருந்திருந்தது. நீங்கள் தேவனில் நம்பிக்கை உள்ளவராக இருந்தாலும் இல்லாதவராக இருந்தாலும் அது காரியமாக இருக்கின்றதில்லை. நீங்கள் இன்னும் இந்த ஈவை இயேசுவின் மூலமாகக் கொடுக்கப்பட்டவராக இருக்கிறீர்கள். தேவன் நல்லோர் மீதும் தீயோர் மீதும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் என்று நாம் வேதவாக்கியத்தில் கூறப்பட்டவர்களாக இருக்கிறோம். உனக்கு எதையாவது செய்ய வேண்டுமென்றும் அல்லது உனது உடமைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தேவனால் அவர்களுடைய இருதயங்களில் வைக்கப்பட்ட பகைமை அதைச் செய்யாமலிருக்கும்படி அவர்களைத் தைரியப்படுத்த வேண்டும் என்றும் யாரோ ஒருவருடைய மனதில் உனக்கு ஏதாவது (தீமை) செய்ய வேண்டும் என்னும் தீய எண்ணத்தை சாத்தான் எத்தனை தடவைகள் வைத்திருக்கிறான். உண்மையில் அந்த ஏவுதலை நிராகரிக்கின்ற

தெரிவுசெய்தலை இன்னும் நாம் உடையவர்களாக இருந்து முன்சென்று தீமைசெய்யும்போது, ஆனால் அந்தப் பகைமை அங்கு இல்லாவிட்டால் நமது மனங்களில் வைக்கப்பட்டுள்ள தீய எண்ணங்களைச் செயலாற்றுவதை நிறுத்துவதில் நம்மில் ஒருவரும் தகுதி உள்ளவராக இருக்கமாட்டோம்.

18. நமக்காக இவைகளையெல்லாம் செய்வதற்கு எப்படிப்பட்ட நம்ப முடியாத ஒரு தேவன் ஜனங்களின் ஒரு இனமாக இருக்கின்ற நாம், சாத்தானின் பொல்லாத வழிகளுக்கு மொத்தமாக இழக்கப்பட்டவர்களாகவும் அடிமைப்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்தோம். நமக்கு நாமே உதவி செய்து கொள்ளுவதற்கு மொத்தமாக அப்பால்பட்டவர்களாக இருந்ததுடன் துன்பத்திற்கும் மொத்தமான அழிவுக்கும் தண்டனை விதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் மென்மைமிக்க நமது பரலோகப் பிதா இவைகளையெல்லாம் நம்மீது வருவதற்கு அனுமதிக்க மறுத்து விட்டார். அவரிடத்திலிருக்கின்ற மிகவும் அதிகமான விலை மதிப்புள்ள பொருளை அவருடைய குமாரனை நமக்குக் கொடுத்திருக்கிறார். இயேசு என்றென்றைக்கும் மனித குடும்பத்தில் ஒருவராக நம்முடன் இருப்பார். மீதியாக இருக்கின்ற நித்திய காலம் முழுவதிலும் நமது ஆராய்ச்சிக்கும் தியானத்திற்குமான விவாதப் பொருளின் மையமான ஒரு தியாகமாக இது இருக்கும்.

19. இந்த விஷயங்கள் அனைத்தைப் பற்றியும் நீங்கள் சிந்திக்கின்றபோது, உங்களுக்காக தேவன் செயல்படுத்தியிருக்கின்ற அனைத்தைப் பற்றியும் நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? இப்பொழுது அவரை ஏற்றுக்கொள்ளும்படியாகவும் அவரைப் பற்றிய உண்மையை நம்பும்படியாகவும், ஆவியானவர் உங்களை இழுத்துக்கொண்டிருக்கிறார். வெற்றிபெற முடியும் என்னும் நம்பிக்கையில்லாத துணிவுடன் அவர்

உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புவதுடன், எல்லாவற்றையும் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளும் விதமாக உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். இந்தவிதமான அன்பை என்னால் தடைசெய்ய முடியாது. எனக்காக அது மிகவும் அதிகமான வல்லமை உள்ளதாக இருக்கின்றது. உங்களுடைய காரியம் எப்படி இருக்கிறது?

**20 (Footnote) மனிதன் தேவனுடைய பிரமாணத்தை உடைத்தான். அதனால் மீட்பரின் மூலமாகப் புதியதும் புதுமையுமான வாக்குத்தத்தங்கள் ஒரு வித்தியாசமான அடித்தளத்தின்மீது உண்டுபண்ணப்பட்டிருந்தன. அனைத்து ஆசீர்வாதங்களும் ஒரு மத்தியஸ்தரின் மூலமாக வந்தாக வேண்டும். இப்பொழுது மனித குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் முற்றிலுமாகக் கிறிஸ்துவின் கைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். நாம் எவைகளையெல்லாம் உடையவர்களாக இருக்கிறோமோ அவைகள் பணம், வீடுகள், நிலங்கள், பகுத்தறியும் வல்லமைகள், உடல்பலம், நுண்ணறிவுத்திறன்கள் ஆகிய இந்த வாழ்க்கையில் உள்ளவைகள் அனைத்தும் எதிர்கால வாழ்க்கையின் ஆசீர்வாதங்களும் விசுவாசத்துடன் கிறி!துவுக்காக, மனிதனின் நன்மைக்காக செலவு செய்யப்படும்படி நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள தேவனுடைய கருவூலங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு பரிசுப்பொருள்மீதும் சிலுவை முத்திரையாகப் பதிக்கப்பட்டிருப்பதுடன் இயேசுகிறிஸ்துவின் உருவம் பதிக்கப்பட்டதாகவும் இருக்கின்றது. அனைத்துப் பொருட்களும் தேவனுடையதாக இருந்து வருகின்றது. மிகவும் சிறிய நன்மைகளுடன் மிகவும் பெரிய ஆசீர்வாதங்கள் வரை அனைத்தும் ஒரு வாய்க்காலின் மூலமாக மனிதனுக்கு மேலான ஒரு மத்தியஸ்தத்தின் மூலமாக மதிப்பீடு**

**செய்யப்படுவதற்கு அப்பாலுள்ள மதிப்பை உடைய இரத்தத்தினால் தெளிக்கப்பட்டதாக இருக்கிறது. ஏனெனில் அது, அவருடைய குமாரனில் இருந்த அவருடைய ஜீவனாக இருந்தது. விசுவாசமும் செயல்களும் பக்கம்.21 மத்தேயு 5:45.**

## 8ம் அதிகாரம்

## இரண்டு ராஜ்யங்களை ஒப்பிடுதல்

1. நாம் நகர்ந்து செல்லுவதற்குமுன் இப்பொழுது இந்த உலகத்தில் உள்ள இரண்டு தனித்தனியாக வேறுபட்ட ராஜ்யங்களையும் சுருக்கமாக அறிந்துகொள்ளுவது நமக்கு உதவியுள்ளதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முன்வைக்கப்பட்டிருந்து, இப்பொழுது உலகத்தில் இருக்கின்ற தேவனுடைய நித்திய ராஜ்யமும் சாத்தானின் ராஜ்யமும் ஒரு ராஜ்யத்தை எது விளக்குகின்றது என்பதை வினாடி நேரம் நாம் சிந்திக்கின்றபோது, நாம் சிந்திக்க வேண்டியதாக உள்ள மூன்று சிறப்புகள் இருக்கின்றன.

2.1 **அரசு :** அந்த ராஜ்யம் ஆட்சி செய்யப்படுகின்ற ஒரு முறை. உதாரணத்திற்கு - குடிஅரசு அல்லது சர்வாதிகாரம்.

2. **காகித நாணயம் :** ஒரு மதிப்பு முறை. அதனால் ஒரு ராஜ்யத்தின் மக்கள் தங்களுடைய பொருள்களை மாற்றம் செய்துகொள்ளலாம்.

3. **பிரஜா உரிமை :** யாராவது ஒருவரால் எவ்விதமாக ராஜ்யத்தின் அங்கத்தினராக முடியும் என்பதைத் தீர்மானிக்கின்ற ஒரு வழி.

3. அந்த இரண்டு ராஜ்யங்களையும் நாம் பின்வரும் விதமாக ஒப்புமை செய்கிறோம்.

| அரசு காகித நாணயம் | God's Kingdom குடும்பம் அன்பான உறவுகள் | சாத்தானின் உலகராஜ்யம் அதிக பலமுள்ள சொத்துக்கள் |
|---|---|---|
| பிரஜை | தேவனுடைய பிள்ளைகள் | உங்களாலும் பிறராலும் வெற்றியுடன் மதிப்பிடப்பட்டுள்ள செயல்கள் சாதனைகள் |

4. தேவனுடைய அரசாங்கம் குடும்ப முறையை அடித்தளமாக உடையதாக இருக்கின்றது. தகப்பன் குடும்பத்தின் தலைவராக இருக்கிறார். அந்தத் தலைவர்களுக்கும் பிரஜைகளுக்கும் இடையில் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதாகவும் அந்தரங்கமானதாகவும் இருக்கின்றது. மற்றொரு பக்கத்தில் சாத்தானின் ராஜ்யம் மிகவும் பலமுள்ளதுபோல் இருக்கக்கூடியதாக இருக்கின்றது. மிகவும் அதிகமான பலமுள்ளவர்களாக எவர்கள் இருக்கின்றனரோ அவர்கள் ஆளுகை செய்கின்றனர். ஒரு குடிஅரசிலும்கூட தங்களுடைய தூதை விளம்பரம் செய்வதில் ஓட்டளிப்பவர்களை இணங்கச்செய்வதில் அதிக பலமுள்ளவர்களாக இருப்பவர்களும் ஆட்சிக்கு உயருகின்றனர்.

5. தேவனுடைய ராஜ்யம் அதன் உறவுகளில் உள்ள பலத்தின் வணிகங்களில் செயல்படுகின்றது. அன்பு பரலோகத்தின் காகித நாணயமாக இருக்கின்றது. ஒவ்வொரு நகரவாசியும் அவர்களுடைய தகப்பனின் அன்பில் பாதுகாப்புள்ளவர்களாக இருப்பதுடன் அவர்களுடைய மதிப்பையும் அல்லது விலைமதிப்பையும் மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். மறைத்து வைக்கப்பட்டுள்ள எந்தவிதமான நிகழ்ச்சி நிரல்களும் இல்லாமல், களங்கமில்லாதவிதமாக ஒருவருடன் ஒருவருக்குள்ள தோழமையை அவர்களால் மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியும். தேவனை அறிந்து கொள்ளுவதற்காகக் கற்பது மிகவும் உயர்வான மகிழ்ச்சியாகவும் பேராவலாகவும் இருக்கும். ஏனென்றால் தேவனுடைய அறிவும் ஞானமும் சுபாவமும்

எல்லையில்லாதவைகளாக இருப்பதுடன் மகிழ்ச்சிமிக்க இந்த ஈடுபடுதல் ஒருபோதும் முடிவடையாது. அவரைப்பற்றி அறிந்து கொள்ளுவதற்கு எப்பொழுதும் ஏதாவது இருந்துகொண்டே இருக்கும். அதன் பிரஜைகள் அவரைப்பற்றி நேரடியாக அல்லது அவர் உண்டுபண்ணியிருக்கின்ற பொருள்களின் மூலமாக அறிந்துகொள்ளுகின்றனர். ஆகையால் ஒருவரை ஒருவர் ஊன்றிக் கவனிப்பதும் இயற்கையையும் பிரபஞ்சத்தையும் ஆராய்வதும்கூட இந்த ராஜ்யத்தின் ஒரு உறுப்பாக இருப்பதன் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அனைத்தும் அவரிடத்திலிருந்து வருகின்றது என்பது தெளிவாக ஒப்புகை செய்யப்பட்டிருப்பதனால் படைப்பு முழுவதும் மகிழ்ச்சிமிக்க நன்றியறிதலுடனும் நன்றி செலுத்துவதுடனும் தேவனைத் தொழுகின்றது.

6. சாத்தானின் ராஜ்யத்தின் சொத்துக்களின் வியாபாரம் ஒப்புமை உள்ளதாக இருக்கின்றது. நாம் எவைகளை சாதனை செய்கின்றோமோ அதிலிருந்து விலைமதிப்பு வருகின்றது. அப்படியே சொத்துக்களைத் திரட்டுதல் மதிப்புள்ளவர்களாக இருப்பதற்கான ஜீவாதாரமாக இருக்கின்றது. இந்த சொத்துக்கள் பொருளாலானவைகளாக அல்லது மனதாலானவைகளாக அல்லது உறவாலானவைகளாக இருக்க முடியும். வீடு எந்த அளவுக்குப் பெரியதாக இருக்கின்றதோ அந்த அளவுக்குப் பெரிய பொம்மைகளை நீங்கள் சொந்தமாக உடையவராக இருக்கிறீர்கள். அதிகமான விலைமதிப்பையும் நீங்கள் உடையவராக இருக்கிறீர்கள். கல்வியில் எந்த அளவுக்கு உயர்வானவர்களாக நீங்கள் இருக்கிறீர்களோ, நீங்கள் வேலையில் உயர்வான நிலையை உடையவராக இருப்பதுடன் அதிகமான விலை மதிப்பையும் உடையவராக இருக்கிறீர்கள். நீங்கள் தோழமை கொள்ளுகின்ற மக்கள் மிகவும் முக்கியமானவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால் ஒரு நபர் உங்களுடைய விஷயங்களுக்கு

ஒரு பெரிய சொத்தாக இருக்க முடியும். மக்கள் அவர்களுக்குள்ளேயே வல்லமை உள்ளவர்களாக இருக்கின்றனர் என்று சாத்தானின் ராஜ்யம் நம்புகின்றது. அப்படியே மற்ற ஜனங்களை உடையவர்களாக இருப்பது மக்களுடனுள்ள உறவுகள் கருவிகளாகி, அவைகளால் நாம் அதிக லாபமடைகிறோம். இது மற்ற ஜனங்களை மிகவும் முக்கியமானவர்களாகக் கட்டுப்படுத்தும்படியான அவசியத்தை உண்டுபண்ணுகின்றது. மற்ற மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அநேக வழிகள் இருக்கின்றன. விரும்பப்படக்கூடியவர்களாகவும் நட்புள்ளவர்களாகவும் இருப்பது பொதுவானதாக இருக்கின்றது. இது விற்பனை செய்யும் மக்களால் எல்லா நேரங்களிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. பெரிய செயல்களைச் செயல்படுத்துவது உங்களைப் பின்பற்றும்படி மக்களால் மன உணர்த்துதலை உண்டுபண்ண முடியும். இவைகள் தோல்வி அடைகின்றபோது மக்களைக் கட்டுப்படுத்தவும் நீங்கள் அவர்களுடைய உறவைப் பாதுகாக்கவும் கட்டாயப்படுத்துவதையும் ஏமாற்றுவதையும் பயமுறுத்துவதையும் செய்ய முடியும். ஏனென்றால் இதன் காரணமாகத்தான் அநேக உறவுகள் இன்று வேதனையினாலும் துயரத்தினாலும் நிறைந்திருக்கின்றன. ஏனெனில் மக்கள் அடிக்கடி அவர்களுடைய மதிப்பையும் விலைமதிப்பையும் அதிகரிக்கச் செய்வதற்காக ஒன்று சேர்ந்திருக்கின்றனர்.

7. நாம் கவனித்திருக்கின்ற வேறொரு ஒப்புமை என்னவென்றால் அது நகரவாசி உரிமை என்பதைப் பற்றியதாக இருக்கின்றது. நீங்கள் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருப்பதனால் தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு நகரவாசியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறீர்கள். வாழ்க்கையின் அந்த சூழ்நிலைகளையும் கஷடங்களையும் பற்றிக் கருதாமல் இந்த உண்மை ஒருபோதும் மாறாமலிருக்கின்றது. தேவனுடனுள்ள உங்களுடைய

நகரவாசி என்னும் உறவு அவர் உங்களுடைய தகப்பனாக இருக்கிறார் என்பதில் பாதுகாப்பாக இருக்கிறது. சாத்தானுடைய ராஜ்யத்தில் நீங்கள் எதையாவது செய்வதினாலும் அல்லது செய்யாமலிருப்பதினாலும் நீங்கள் ஒரு நகரவாசியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய செயலாற்றுதல் அல்லது நீங்கள் செய்வது ஆகியவைகளின்மீது குவிமையமாக்கப்பட்டிருக்கின்றவரை சாதனை சோம்பேறித்தனம் ஆகிய இரண்டும் உங்களுக்கு நகரவாசி எனும் உரிமையை அனுமதிக்கும். இந்த ராஜ்யத்தில் நீங்கள் ஒவ்வொரு நாளும் துயிலெழுந்து அந்த நாளில் உங்களைப் பற்றி நல்லதாக உணருவதற்கு எது சாதனையாக்கப்பட வேண்டும் என்று சிந்திக்கிறீர்கள். நீங்கள் சாதனை செய்வதற்காக எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகளுக்கு மக்கள் இடையூறு செய்யும்போது நீங்கள் ஏமாற்றமும் கோபமும் அடைகிறீர்கள். நீங்கள் அந்த நாளின் முடிவை அடைந்தபோது நீங்கள் அதிகமாக எந்த சாதனையும் செய்துவிடவில்லை என்பதை உணருகின்றபோது நீங்கள் வெறுமையை உணர்ந்து மனச்சோர்வு அல்லது அதிகமாகத் தீர்மானம் செய்தல் ஆகிய இரண்டில் ஒன்றை உடையவராகிறீர்கள். வாழ்க்கை அகந்தை விலைமதிப்பின்மை ஆகிய இரண்டையும் சுற்றிச்சுழன்று கொண்டிருக்கின்ற ஒரு வட்டமாக இருக்கின்றது. நீங்கள் சாதனை செய்கின்றபோது பெருமை உள்ளவர்களாகின்றீர்கள். நீங்கள் தோல்வி அடையும்போது நீங்கள் மதிப்பில்லாதவராக இருப்பதை உணருகிறீர்கள். வெற்றிக்கம் தோல்விக்கும் இடையில் உள்ள வாழ்க்கை சாதனையை அடைவதற்கான குழப்பப்பட்டுள்ள தீர்மானமாக அல்லது அதற்கு நேர் எதிராக நீங்கள் எதை அடைந்திருக்கிறீர்களோ அதை இழந்து விடுவோமோ என்னும் பயமுமான இரண்டிற்கும் எதிரானதாக இருக்கின்றது. அது நீங்கள்

இறக்கும்வரை உள்ள அல்லது ராஜ்யங்களை மாறுதல் செய்கின்ற வரை உள்ள ஒருபோதும் முடிவடையாத ஒரு வட்டமாக இருக்கின்றது.

8. நாம் நமக்குள் வல்லமையை உடையவர்களாக இருக்கிறோம் என்னும் நம்பிக்கையின் சாதாரணமான பலனாக இந்த வட்டம் இருக்கின்றது. நாம் சுயவல்லமையை உடையவர்களாக இருக்கிறோம் என்னும்போது நாம் ஒருவரையும் சார்ந்தவராக இல்லாமல் ஒருவரிடமிருந்தும் மதிப்பை அடைந்துகொள்ளாதவராகவும் இருக்கிறோம். நாம் நமது சொந்த மதிப்பை விவசாயம் செய்து அதை உற்பத்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு வெற்றியும் நம்மை மதிப்பிற்குரியவர்களாக்குவதுடன் ஒவ்வொரு தோல்வியும் நம்மை ஒன்றுமில்லாமைக்கருகிற்குத் துரத்துகின்றது.

9. பிரசங்கங்களைக் கொடுப்பதற்கு நான் முதலில் ஆரம்பித்தபோது என் இருதயத்தில் உண்டான போராட்டத்தை நான் நினைவு கூறுகிறேன். வேதாகம சத்தியங்களை நான் மக்களுக்குச் சுட்டிக்காட்டினபோது, நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருந்ததை நான் உணர்ந்தேன். ஆனால் மக்கள் வெளியேறுவதற்காகத் தொடங்கினபோது, அவர்களை வாழ்த்துவதற்காக நாசன் வாசலில் நின்றிருந்தபோது, நான் நன்றாகப் பிரசங்கம் செய்தேன் என்று அவர்கள் என்னிடத்தில் கூறவேண்டும் என்பதை நான் எனக்குள் உணர்ந்தேன். எந்த அளவுக்கு அதிகமாக நான் பிரசங்கம் பண்ணியிருந்தேனோ அந்த அளவுக்கு அதிகமான அங்கீகாரத்தை எனது இருதயம் விரும்பியிருந்தது. இவ்விதமாகச் சிந்திப்பது தவறாக இருந்தது என்று நான் அறிந்திருந்தேன். அப்படியே சிறிது நேரத்திற்கு மக்கள் என்னிடத்தில் நான் நன்றாகப் பேசினேன் என்று கூறினபோது தேவனுக்கு நன்றி கூறுங்கள் எனக்கல்ல என்று நான் கூறியிருந்தேன். ஆனால் அடிக்கடி அது விகாரமானதாகக்

காணப்பட்டிருந்ததுடன் சில சமயங்களில் மக்களை நான் தூரமாகத் தள்ளிக்கொண்டிருந்தேன் என்று அவர்கள் உணர்ந்திருந்தனர். நல்லவைகளைத்தும் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்பதை நான் இனம் கண்டு கொள்ளுகின்றபோதும், நாம் செயலாற்றுகின்ற எவைகளுக்கும் அப்பால் நாம் அவரால் மதிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் அப்பொழுது நாம் வெற்றியடைவதற்கோ அல்லது தோல்வி அடைவதற்கோ விலைமதிப்பில்லாதவர்களாக இருக்கிறோம் என்னும் உணர்ச்சி பற்றிய கவலை இல்லாமலும் மற்றவர்களிடத்திலிருந்துள்ள மதிக்கப்படுதலை உணரவேண்டிய அவசியம் இல்லாதவர்களாகவும் இருக்கிறோம்.

10. தேவனுடைய ராஜ்யத்தின் அங்கத்தினர்கள் அவர்களுடைய விலைமதிப்பை அவர்களுடைய சாதனைகளிலிருந்துஅடைந்து கொள்ளாமலிருக்கின்றபோதும்கூட அவர்கள் இன்னும் அடைந்து கொண்டிருக்கின்றனர் என்பதை நினைக்க வேண்டியது முக்கியமானதாக இருக்கின்றது. உண்மையில் மிகவும் அதிகமாக அடைந்து கொள்ளுவதற்கான தகுதியை உடையவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தோல்வி அடைந்தாலும் விலைமதிப்பின்மையின் தன்மையைச் சந்திக்கின்ற பயத்தை அவர்கள் சந்திக்கவேண்டிய அவசியம் இல்லாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் படாடோபமாக நேசிக்கப்படுவார்கள். அவர்கள் வென்றாலும் தோற்றாலும் அதைக் கருதாத அசையாமலிருக்கக்கூடிய தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர். தேவனுடைய ராஜ்யம் உங்களுடைய உறவுகளைக் கந்தைகளாக விட்டுவிடாமலும், உங்களுடைய விலைமதிப்பை அழிக்கப்பட்டதாக விட்டுவிடாமலும் உங்களுடைய

முழுசாத்தியதைகளையும் அடைந்துகொள்ளுவதற்கான மிகவும் நல்ல வழியைக் கொடுக்கின்றது.

11. இந்த இரண்டு ராஜ்யங்களின் இயல்பையும் நாங்கள் சுருக்கமாகக் கோடிட்டு வரைந்து காட்டியிருக்கிறோம். இந்தப் புத்தகத்தின் மீதியான பகுதியில் இந்த நாடுகள் மனித வரலாற்றின் வாய்ப்பில் எப்படி முன்னேறின என்றும் இந்த இரண்டிற்கும் இடையில் அடிக்கடி நிகழும் போராட்டங்களையும் நாம் அடிக்கடி சந்திக்கிறோம. இரண்டு ராஜ்யங்களும் சுதந்திரத்தை வாக்களிக்கின்றன. இரண்டு ராஜ்யங்களும் மிகவும் அதிகமாக வாக்குத்தத்தம் பண்ணுகின்றன. ஆனால் எந்த ஒரு ராஜ்யம் உங்களை அசைக்கமுடியாததாக உள்ள ஆழமான முக்கியத்துவம் வாய்ந்த உணர்விலும் விலைமதிப்பிலும் உங்களை விட்டுவைக்கும்?

## 9ம் அதிகாரம்

## பாபிலோனின் இருதயம்

1. எங்கு நாம் தவறாகச் சென்றோம்? இப்பொழுது அவன் சந்தித்துக்கொண்டிருந்த உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்ளுவதற்காகப் போராடிக்கொண்டிருந்தது. தகப்பனின் இருதயத்தை உடைக்கின்றதாக இருக்கின்றது. நாங்கள் ஒரு நல்ல நிலைமையில் உள்ள குடும்பத்தை உடையவர்களாக இருந்தோம் என்பதுடன் நாங்கள் அவனை நேசிக்கிறோம் என்பதை அவன் அறிந்திருந்தான் என்று நம்பிக்கையில்லாத துணிவுடன், அவருடைய மகன் போதைப்பொருள் கடத்துவதற்காகவும் திருடுவதற்காகவும் கொலை செய்வதற்காகவும் ஏன் சிறைத்தண்டனை பெற்றிருக்கிறான் என்பதற்கு அந்தத் தகப்பன் ஏதாவது விளக்கத்தைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

2. நாம் கற்பனை செய்யத் துணிவதைவிட மிகவும் அதிகமான தடவைகளில் அந்த உடைந்த இருதய்தின் அழுகைகள் அழப்பட்டிருக்கின்றன. கலகம் செய்வதிலும் துன்மார்க்கத்திலும் விழுந்திருக்கின்ற ஒரு பிள்ளையின் பெற்றோர்கள் வெட்கத்துடனும் வேதனையுடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இருதயமுடைந்த இந்த அழுகையின் ஆதாரமாக நமது முதல் பெற்றோரை வரைந்து அடையாளம் காணமுடியும் என்பதுடன் அவர்களுடைய முதல் மகனான ஆபேலின் துர்பாக்கியமான மரணத்திலும் காணமுடியும். சிறிய காயீனைத் தங்களுடைய கைகளில் ஏந்திக்கொண்டிருந்தபோதும் ஆதாமும் ஏவாளும் உணர்ந்திருந்த மகிழ்ச்சியைப் பெற்றோர்கள் அறிவார்கள். பற்றிக்கொண்டு சந்தோஷத்தை அனுபவிப்பது இப்பொழுது அவர்களுடைய அன்பின் கனியாக இருந்தது. ஏவாள் அவளுடைய புதிய விலைமதிப்புமிக்க மூட்டையை கட்டித் தழுவிக்கொண்டபோது நான் கர்த்தரை ஒரு மனிதனாக உடையவளாக இருக்கிறேன் என்று அவள் கூவினாள். ஆதியாகமம் 3:15ல் குறிப்பிடப்பட்டிருந்த காயீன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த வித்தாக இருப்பார் என்றும் அது எல்லா ஜாதிகளுக்கும் ஆரோக்கியத்தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும் என்று நம்பினாள். ஓ, காயீனின் வாரிசுரிமை ஏவாளுக்கான வஞ்சப் புகழ்ச்சிமிக்க ஒரு கசப்பான உண்மையாக இருந்திருந்தால் அது துன்பத்தையும் அழிவையும் லட்சக்கணக்கானவர்களுக்குக் கொண்டு வரும். தங்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தின் சொந்த நிபந்தனைகளில் தங்களை நடத்துகின்ற தொழுகை செய்கின்ற ஒரு கூட்டத்தினருக்குக் காயீன் தலைவனானான். உலக மக்கள் தொகையின் பெரும் பகுதியினராக இந்த மக்கள் குழுவினர் உண்டாயிருக்கின்றனர். இவர்கள் பிற்காலத்தில் வேதாகமத்தினால் பாபிலோன் என்று குறிப்பிடப்படக்கூடிய

மக்களாக இந்த ஒரு கூட்டத்தினர் இருப்பார்கள். இந்த அதிகாரத்தில் இந்த மக்கள் கூட்டத்தினருக்குப் பின்னாலிருந்து அவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்ற ஆவியை நாம் கண்டுபிடிப்பதுடன் அவை எவ்விதமாக உங்களையும் என்னையும் பாதிக்கின்றன என்பதையும் நாம் காண்போம்.

3.அப்பா, அந்தப் பலவீனமானதும் குற்றமில்லாததுமாக இருக்கின்ற ஆட்டுக்குட்டியை நாம் ஏன் கொலை செய்ய வேண்டும்? ஒரு ஆட்டுக்குட்டியை வெட்டுவது மனித குடும்பத்திற்கு முன்பாக அவர்களுடைய இரட்சிப்புக்காகக் கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கின்ற விலையையும் அப்படிப்பட்ட ஈவைக் கொடுப்பதில் உள்ள தேவனுடைய அன்பையும் மனித குடும்பத்திற்கு முன்பாக வைப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது முன்னால் நம்பிக்கை பின்னால் அவமானம் ஆகிய இரண்டையும் சுட்டிக் காட்டியிருந்தது. அது மனிதனின் நன்றிகெட்ட தன்மை சுயநலம் ஆகியவைகளின் வேதனைமிக்க நினைவு கூறுதலாக இருந்தபோது, அது அதேநேரத்தில் தேவனுடைய அன்பின் அதிசயமான ஆறுதல்படுத்தும் நினைவுகூறுதலாக இருந்தது. இந்த ஆராதனையில் பங்குபெறுவது எப்பொழுதும் கலப்புள்ள உணர்ச்சிகளை உண்டுபண்ணுகின்றது. தனது மௌனமான வேதனையைத் தழுவிக்கொண்டிருந்த குற்றமில்லாத ஆட்டுக்குட்டியின் முகத்திற்குள் பார்த்துக் கொண்டிருந்தது இரட்சிப்பின் விலை மதிப்பை மிகுந்த வலிமையுடன் வீட்டிற்குள் அனுப்புகின்றது. ஏனெனில் தேவ ஆட்டுக்குட்டியின் முகத்திற்குள் பார்த்துக்கொண்டிருக்கின்ற அனைவரும் இரட்சிப்பின் விலையை அறிந்துகொண்டிருக்கின்றதுடன் ஆத்துமாவின் வேதனையுடன் கலந்திருக்கின்ற நம்பிக்கை எப்பொழுதும் வரவேண்டும். இதைச் செய்வதில் உள்ள தவறுதல் ஆத்துமாவை நம்பிக்கையின்மைக்கும்

அல்லது அப்படிப்பட்ட தெளிவான விலையின் பயங்கரத்திலிருந்தும் பின்வாங்கும்படியாகவும் முதலிடத்தில் அப்படிப்பட்ட வீழ்ச்சி நடந்தது என்பதை மறுப்பதனாலும் மனித இனத்தின் தோற்றுவாய்களைத் திரும்பவும் எழுதுகின்றது. தேவனுடைய குமாரனை மரிக்கக் கொடுப்பதிலுள்ள அவருடைய அன்பை நாம் மறுதலிக்கும்போது சிலுவையின் ஒளியிலிருந்து இருளுக்கும் நம்பிக்கையின் ஒரு அடையாளத்திலிருந்து வெட்கத்தின் ஒரு அடையாளமாக உருமாற்றம் செய்யப்படுகின்றது.

4. காயீனின் பெற்றோர்கள் அநேக வருடங்களுக்குப் பின்னும் ஆட்டுக்குட்டியைப் பலியிடுவதையும், அவர்களுடைய கண்ணீர்களும், வருத்தமும், பொறுமையும் வரஇருக்கும் வித்தின்மீதுள்ள நம்பிக்கையையும் அவன் கண்டு காயீன் வெட்கத்தின் உணர்வையும் தாழ்மைக்கான அவசியத்தையும், இனிமேலும் அவனால் தாங்கிக்கொள்ள முடியாது என்று முடிவுசெய்தான். வெட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டி வெளிக்காட்டியிருந்த மனித இனத்தின் தோல்வியை அப்படிப்பட்ட ஒரு பரிசில் உள்ளதேவனுடைய பெரிய அன்பை நினைவு கூறுவதில்லை என்று காயீன் தெரிவு செய்திருந்தான். காயீனுக்கு அந்த ஆட்டுக்குட்டி அவனுடைய பாதுகாப்பின்மையை மட்டும் கலக்கிவிட்டிருந்தது. பிறப்புரிமையின் பகுதியை அவன் அவனுடைய தகப்பனிடத்திலிருந்து பெற்றிருந்தான். அவனுடைய தகப்பன் அதைச் சாத்தானிடத்திலிருந்து பெற்றிருந்தான். அந்த ஆட்டுக்குட்டி காயீனிடத்தில் அவனுடைய சொந்த உரிமையில் அவன் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவனாக இருக்கிறான் என்று மட்டும் அந்த ஆட்டுக்குட்டி கூறியிருந்ததுடன் அவனுடைய நடத்தை தேவனால் அங்கீகரிக்கப்படாததாக இருந்தது. சாத்தான் தெளிவான விதத்தில் காயீனுடைய ஆராதனையிலிருந்து

ஆட்டுக்குட்டியைப் பலி செலுத்துவதை நீக்குகின்ற துணிச்சலான அடியை எடுத்து வைப்பதற்குக் காயீனைத் தைரியப்படுத்தினான்.

5. காயீன் கர்த்தருக்குக் கனிகளை ஒரு காணிக்கையாகக் கொண்டு வந்தான் என்று வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. காயீன் ஒரு விவசாயியாக இருந்தான் என்றும் அவனுடைய வேலைக்கு அப்பால் உணவுப் பொருளை உற்பத்தி செய்திருந்தான் என்றும்கூட நாம் கூறப்பட்டிருக்கிறோம். காயீனின் முயற்சிகள் அவனுடைய கைகளில் தேவனுடைய மரியாதையைச் சம்பாதிக்கின்ற அவனுடைய முயற்சிகளின் அடையாளமாக இருந்தது. அவன் அவனுடைய தாழ்மையான தொழுகையின் அனபவத்தை தாழ்மையான விசுவாசங்கள் ஒன்றிலிருந்து அகந்தைமிக்க விளம்பரத்திற்கு மிகவும் நெருக்கமான நம்பிக்கையுள்ள உறவிலிருந்து சமாதான ஒப்பந்தத்திற்கு அவன் மாற்றுருவம் செய்தான். அப்படிப்பட்ட ஒரு மதம் நாம் தேவனுடன் ஒப்பந்தம் செய்கின்ற வல்லமை இல்லாதவர்களாக இருக்கிறோம். இளைப்பாறுவதற்கும் நமது சொந்த ஜீவன் இல்லாதவர்களாக இருக்கின்றோம். துயரமிக்க விதமாகக் காயீன் இதை மறந்துபோனான். ஆட்டுக்குட்டியின் வெட்கத்திலிருந்து அவனை விடுதலை செய்வதில் உள்ள சுதந்திரம் பற்றி சாத்தான் அவனிடத்தில் வாக்குத்தத்தம் பண்ணினான். ஆனால் ஆட்டுக்குட்டியை நீக்கினதால், காயீனின் மதம், உண்மையான தேவனுடனிருந்துள்ள விசுவாச உறவில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணி, அவனாலேய உபாயமாக உண்டுபண்ணப்பட்டிருந்த ஒரு தெய்வத்திற்கு, உண்டுபண்ணப்பட்டிருந்த, செயல்கள் நிறைந்த ஒருவகையான சமயச் சடங்குகளின் கூட்டத்தை அடித்தளமாகக் கொண்டிருந்தது. இந்த மாற்றத்தில் காயீன் நீண்ட ஆயுளுள்ள உயிரணுக்களின் மரத்தின் விஷத்தைத் தழுவிக்கொண்டான். அவன் இந்த மரத்தின்மீது தனது

செயல்களான மீள்கயிறு காலில் கட்டிக்கொண்டு குதிப்பதை அவன் செய்தான். தொடக்கத்தில் அவன் வெற்றியின் சிரிப்பின் சுதந்திர உணர்வை அனுபவித்திருந்த போதிலும் அந்த மீள்கயிறு அதன் எல்லையைச் சென்று சேருவதற்கு முன்னும், விஷம் கடிப்பதற்கு ஆரம்பிப்பதற்கு முன்னும், அது நேரத்தின் ஒரு விஷயமாக மட்டும் இருந்தது.

6. 5வது அதிகாரத்தில் குடும்பத்தின் உறவுகளை உடைப்பதிலிருந்து வருகின்ற மனக்கிளர்ச்சிமிக்க பயமுறுத்தல்களில் சிலவற்றை நாம் கண்டோம். இங்கு ஒரு சுருக்கம் உள்ளது.

1.7.1. தொடர்ச்சியாக அங்கீகாரம் தேடுதல்

2. தங்களைத் தாங்களே கடுமையாக நியாயம் தீர்த்தல்

3. தங்களிடம் கட்டுப்பாடு இல்லாத நிலைமைகளைக் கட்டுப்பாடு செய்ய அளவுக்கு அதிகமாகச் செயல்படுதல் அதாவது அவர்கள் அடிக்கடி கட்டுப்பாடு செய்கின்றனர்.

4. உறவுகளுடன் கஷ்டங்கள் உடையவர்களாக இருக்கின்றனர்.

8. காயீனை இரட்சிப்பதற்காகத் தேவன் நியமித்திருந்த திட்டத்திலிருந்து அவன் தேவனைவிட்டுத் தூரமாக விலகிச் சென்றபோது அவன் தேவனிடத்திலிருந்து தூரமாக இருந்தான். அவனுடைய குடும்ப உறவு முழுவதுமாக உடைந்து கீழே விழுந்திருந்தது. இந்தத் தூரம் அவனுடைய பாதுகாப்பின்மையின் அக்கினி ஜுவாலைக்கு எரிபொருளைக் கொடுத்தது. அதற்குப்பின் தேவனுடைய ஆவியினால் அவனுடைய பயங்களை அமைதிப்படுத்த முடியவில்லை அல்லது சத்தானின் பொய்களை மறுக்க முடியவில்லை. அந்த வெறுமை அதிகரிக்க மட்டும் செய்ததுடன் வெட்கத்தின் உணர்வு பெருகவும் செய்தது. சாத்தானைப் போலக் காயீனும் தேவனுடனுள்ள அவனுடைய உடைந்துபோன உறவின்

உணர்வை திரும்பவும் சீர்செய்வதற்கு வீணாகப் போராட வேண்டியவனாக இருந்தான். மன உணர்த்துதலுடன் அவன் தேவனிடத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய திட்டத்திற்கும் திரும்பி வருகின்றவரை அவன் எவ்வளவு கடினமாக முயன்றாலும் அவனால் அந்த வெறுமையின் ஆழமான உணர்வை ஒருபோதும் நீக்கமுடியாது.

9. காயீனின் கொந்தளிக்கும் மனக்கிளர்ச்சிகள் விரைவில் வெளிவரும். காயீனும் ஆபேலும் தேவனை ஆராதனை செய்வதற்கு வந்தபோது அது நிகழ்ந்தது. தேவன் ஆபேலின் பலியான ஆட்டுக்குட்டியை அக்கினியால் எரித்ததனால் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் காயீனின் காணிக்கையைத் தொடாமல் விட்டுவிட்டார். காயீனைப் பெரும் கோபாவேசத்திற்குள் அனுப்புவதற்கு அது அனைத்தும் போதுமானதாகவும் அவசியமானதாகவும் இருந்தது. பாவம் அளவுக்கு அதிகமாகச் சட்டவிரோதமானதாக இருக்கின்றது. காயீன் உபதேசங்களைப் பின்பற்றாமலிருக்கிறான் என்பதுடன் அதற்குப்பின் அது அவனுக்காகச் செயலாற்றாமலிருக்கின்றபோது அவன் பயங்கரமாக ஆச்சரியமடைந்திருக்கிறான்.

10. கடைக்குச்சென்று ரொட்டி தயாரிப்பதற்கான எல்லாப் பொருள்களையும் வாங்கிக்கொண்டு வந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ரொட்டி தயாரிப்பது எப்படி என்று நீங்கள் அந்தக் கடைக்காரரிடம் கேட்கிறீர்கள். அவர் உங்களுக்கு வீட்டிற்கு எடுத்துச் செல்லும்படி ஒரு பட்டியலைக் கொடுக்கிறார். ஈஸ்ட் என்னும் பொருளின் வாசனையை நீங்கள் உணரும்வரை எல்லாக் காரியங்களும் சரியாக நிகழுகின்றன. அந்த ஈஸ்ட் இல்லாமல் ரொட்டி நன்றாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஈஸ்ட் கலக்காத மாவை நீங்கள் அடுப்பில் வைக்கிறீர்கள். சற்று நேரத்திற்குப்பின் நீங்கள் வருத்தப்படக்கூடிய

விதமான ஒரு தட்டையான ரொட்டியை உடையவராக இருக்கிறீர்கள். இப்பொழுது கோபாவேசத்திற்குள்ளாகி அந்தக் கடைக்கு ஓடி உங்களை வெறுக்கத்தக்க ஒரு சமையல்காரனைப் போலச்செய்துகொண்டு உங்களுடைய மனதின் ஒரு பகுதியைக் கடைக்காரருக்குக் கொடுப்பதில் அது ஏதாவது அறிவை உண்டுபண்ணுகின்றதா? அபூர்வமாக! ஆயினும் காயீன் தேவனிடத்தில் என்ன செய்தானோ அது மிகச் சரியாக இதைப்போன்றதாக இருக்கின்றது.

11. காயீன் திரும்பிவரமுடியாத இடத்தைச் சமீபித்துக் கொண்டிருக்கிறான். சாத்தானின் ராஜ்யத்தைத் தழுவிக்கொண்டதனால் எங்கு அவனுடைய முயற்சிகளும் செயல்பாடுகளும் அவனுடைய திறமையும் வழிகாட்டப்படவும் சரிப்படுத்தப்படவம் வேண்டியதாக இருந்து விரைவாகக் குறைவுபடுகின்றது. காயீன் தான் தவறான காரியத்தைச் செய்திருக்கிறான் என்பதை அறிந்திருக்கிறான். ஆனால் மனித மனத்தினால் தன்னைத்தானே எளிதில் வஞ்சிக்க முடியும் என்பதுடன் அதைவிட அதிகமாக தாழ்மையாகத் தேவனுக்குப் பணிய முடியும் என்பதில் அவன் கோபமுள்ளவனாகிறான். தேவன் சாதுவான தன்மையுடன் அவனுக்கு உதவிசெய்ய வகை தேடுவதுடன் அவனைச் சீர்படுத்தவம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள ஈவாக உள்ள அவருடைய குமாரனைப் பின்னால் சுட்டிக்காட்டவும் செய்கிறார். ஆனால் காயீன் அந்த எச்சரிக்கைக்குச் செவிசாய்க்காமலிருக்கிறான். கலகம் செய்யும் அவனுடைய உணர்வுகள் வளருவதுடன் மானிட அடிப்படைச் சோதனையில் ஏறத்தாழ அது மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்து விட்டது.

12. இப்பொழுது சாத்தான் பரலோகத்தில் வெளியிட்டிருந்த மனக்கிளர்ச்சிகளின் சக்திகளினால் காயீனின் இருதயம் மொத்தமாக

ஆதிக்கம் செலுத்தியிருந்தது. அவன் அவனுடைய சொந்த நிபந்தனையில் தவனுடைய அங்கீகாரத்தை விரும்புகிறான். அவனுடைய தகுதியற்ற நிலைமை பற்றிய அவனுடைய உணர்வு அவன் வெடிப்பதற்குத் தயாராயிருந்த கட்டத்திற்கு அதிகமான தூரத்திலிருந்தது. ஏற்றுக்கொள்ளப் படுவதற்கும் மதிப்புள்ளவனாக இருப்பதற்கும் உள்ள அவனுடைய ஏக்கத்தை உயர்வான வல்லமைகளிடத்திலிருந்து திருப்திப்படுத்தவும் அதே நேரத்தின்போது அவன் எல்லாவற்றிலும் தேவனுக்குக் கடனாளியாக இருக்கின்றான் என்பதைப் புறக்கணிக்கவும், ஆட்டுக்குட்டியானவரின் அன்புள்ள ஏற்பாட்டுக்காக அவன் தாழ்மையுடன் நன்றி உள்ளவனாகவும் இருக்க வேண்டும். ஆபேலுக்கு முன்பாகப் பொது இடத்தில் கேவலப்படுத்தினதற்காக இன்னும் மன எரிச்சல் உள்ளவனாக இருந்து அவன் அவனுடன் வாதிடத் தொடங்கினான். ஆபேல் காயீனின் தொழுகை முறைபற்றிச் சவால் செய்யத் தொடங்கி, தேவனுடைய திட்டத்திற்குத் திரும்பி வரும்படி தைரியப்படுத்துகிறான். காயீனுக்கு அவசியமாக இருந்ததெல்லாம் இதுதான். அவனுக்குள் ஏதோ திடீரென்று முறிந்தது. அவனுடைய விலைமதிப்பில்லாத நிலை பற்றிய உணர்வு எதைப்பற்றியும் இனி அதிகமாகக் கவனிக்க முடியாத ஒரு கட்டத்திற்கு அது அவனைத் துரத்தினதுடன் அந்த வினாடி நேரம் வருகின்றபோது கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ளுகின்ற இலவசமான அனுமதி சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சாத்தான் காயீனை அவனுடைய சகோதரன் மீதான தீவிரமான வெறுப்பினால் நிறைக்கிறான். குடும்ப உறவுகள் மறக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சாத்தானின் ராஜ்யம் தன்னைத் தானே முழுவதுமாக வெளிக்காட்டுகின்றது. ஒரு முதல் கொலை, முழுவதும் ஒரு மதல் பரிசுத்தமான விலைமதிப்புமிக்க உறவின் ஒரு முதல் நிர்மூலம் நிகழ்ந்தபோது, பரலோகம் முழுவதுமாகக்

கவனித்துக் கொண்டிருக்கின்றது. அப்படியே தேவனுடைய பிரமாணங்கள் மீறப்படுகின்றபோது நிகழக்கூடியது என்னவென்றால் அது இப்படிப்பட்டதாக இருக்கின்றது. ஆபேலின் உயிரில்லாத உடல் அதன் இரத்தத்தினால் நிலத்தைச் சிவப்பாக்கினபோது பரலோகம் மூச்சுத் திணறுகின்றது. சாத்தானும் அவனுடைய தூதர்களும்கூட ஆபேலின் உயிரற்ற வடிவத்தைக் கண்டபோது, அந்த வினாடி நேரத்தில் மரத்துப்போன தன்மையை அனுபவித்தனர்.

13. இந்த நிகழ்ச்சியின் பயங்கரத்தைச் சாத்தான் தூரமாக அசைத்து வீசி எறிந்துவிட்டு, அவனுடைய அடிமையை நிச்சயம் செய்து கொள்ளுவதற்காக, தேவன் காயீனை மன்னிப்பார் என்று காயீனால் ஒருபோதும் நம்பமுடியாத விதமாகச் சாத்தான், காயீனின் குற்ற உணர்வை அந்த அளவுக்கு அவனுக்குள் ஆழமாக அழுத்துகிறான். இது சாத்தானின் பைத்தியக்காரத்தனமாக இருக்கின்றது. அவன் நமக்கு சுதந்திரத்தையும் அவனுடைய கலகம் செய்யும் நடத்தையைப் பின்பற்றுவதில் உள்ள சந்தோஷத்தையும் வாக்குத்தத்தம் செய்கிறான் என்பதுடன் உரத்த சத்தத்துடன் நமது அழிவைக் கோரிக்கை செய்வதும் அவனுடைய குரலாக இருக்கின்றது. அதே நேரத்தில் நாம் மறுபடியும் எப்பொழுதும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவர்களாக இருக்கிறோம் என்று நமது ஆத்துமாக்களிடத்தில் மெல்லிய சத்தத்தில் கூறுவதும், நாம் மறுபடியும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அளவுக்கு அதிகமான கெட்டவர்களும் துன்மார்க்கர்களுமாக இருக்கிறோம் என்று கூறுவதும் அவனுடைய குரலாக இருக்கின்றதுடன், நாம் இறக்க விரும்புகின்றவிதமாக அந்தக் கட்டத்திற்கு நமது குற்றத்தின் உணர்வினை அதிகரிக்கச் செய்கின்றதும் அவனுடைய குரலாக இருக்கின்றது. மனித இனத்தின் துர்ப்பாக்கியமான எதிரியே, உன்னுடைய

கோழைத்தனமானதும் தண்டுவடம் இல்லாததுமான உபாயங்களுக்குத் தக்க பரிசை நீ பெறுபவனாக இருக்கின்றாய்! இப்பொழுது காயீன் (பாவ அறிக்கை செய்தல் என்னும் பாதுகாப்பின்) கோட்டையைக் கடந்து காலடிவைத்துச் சென்றுவிட்டதனால் அவனுடைய ஆத்துமாவுக்கு அவன் முற்றிலுமாகப் பாதுகாப்பை உடையவனாக இருக்கின்றதில்லை என்பதுடன் மன்னிக்கப்பட முடிவதைவிட என்னுடைய அக்கிரமம் மிகவும் பெரியதாக இருக்கின்றது என்று அழும்படி, சாத்தான் அவனைத் துரத்துகின்றான். கற்பனை செய்யக்கூடியவைகளில் இவைகள் மிகவம் துயரமான வார்த்தைகளாக இருக்கின்றன. தேவன் காயீனை வெட்டி நீக்குவதற்காக அவனிடத்திற்கு வராமல் ஆனால் அவனைச் சீர்படுத்துவதற்காக (தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளுவதற்காக) அவனிடத்திற்கு வந்தார். அவர் காயீனிடத்தில் அவனுடைய சகோதரன் எங்கே இருந்தான் என்று அவனைக் குற்றப்படுத்துவதற்காகக் கேட்காமல் ஆனால் காயீனுக்கு மனந்திரும்புவதற்கும் தேவனிடத்திற்குத் திரும்புவதற்கும் ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்காகவும் அப்படிக் கேட்டார். காயீன் துயரத்துடன் என்னுடைய அக்கிரமம் மன்னிக்கப்படுவதைவிட பெரியதாக இருக்கின்றது என்னும் துயரமுள்ள வார்த்தைகளைக் கூறினான். அவன் தேவனுடைய வார்த்தைகளைவிட அதிகமாக சாத்தானின் பொய்களை நம்பினான். அவன் விதைத்திருந்து இப்பொழுது அறுவடை செய்திருக்கிறான்.

14. நான்காம் அதிகாரம் 12ம் வசனத்தில் தேவன் ஒரு சாபத்தைக் கூறுகிறார். அந்த சாபத்தின் பின்பகுதியில் தேவன் காயீனிடத்தில் நீ பூமியிலே அலைகிறவனாயிருப்பாய் என்றார். இந்த வார்த்தைகள் நடுங்குபவனும் தள்ளாடுபவனுமாக இருக்கின்ற ஒருவனைப் பற்றிக் கூறுகின்றது. அது எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கையை இல்லாதவனாக

இருக்கின்ற ஒரு மனிதனுக்கு மனித அறிவைக் கொடுக்கின்றது. பரலோகம் சார்ந்த ஏதோ மந்திரக்கோலை அசைப்பதனால் இந்த சாபம் தேவனால் பொருத்தப்பட்டிருக்காமல் தேவ குடும்ப ராஜ்யத்துடன் உள்ள உறவுகளில் நிராகரிக்கப்படுவதில் பிரிக்கப்பட முடியாததாக இருந்தது. நெருக்கமாக இருப்பதற்காக அவன் படைக்கப்பட்டவனாக இருந்ததனால் அவனுடைய ஆத்துமா சித்திரவதை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவனுடைய இருதயம் ஒரு மாறுபட்ட பாதையைத் தெரிந்துகொண்டிருந்தது. அன்புக்காக ஏக்கமுள்ளவனாக இருந்தான். ஆயினும் எப்பொழுதும் அவனுக்கருகில் நெருக்கமாக இருந்தவர்களைத் துரத்திக்கொண்டுமிருந்தான். நெருக்கமாக இருப்பதில் விருப்பமுள்ளவனாக இருந்தான். ஆயினும் அவனுடைய இருதயத்தின் இரகசியமான அறைக்குள் எங்கு அவனுடைய விலைமதிப்பில்லாத தன்மை வாசம் செய்திருந்ததோ அந்த இடத்திற்கு மக்கள் வருவதை ஒருபோதும் அனுமதிக்கத் தகுதியில்லாதவனாக இருந்தான். எப்பொழுதும் நண்பர்களை அவசியமுள்ளவனாக இருந்தான். ஆனால் அவனுடைய தீரத்திற்குப் போட்டியாக இருக்கின்ற ஒருவனிடத்தில் களைப்புள்ளவனாக இருந்தான். துன்மார்க்கனுக்கு இளைப்பாறுதல் இல்லை என்னும் நீதிமொழியின் உண்மை இங்கு இருக்கின்றது.

15. காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டுப் போனான் என்று வேதாகமம் கூறுகின்றது. தேவன் அவனுக்கு அருகில் இருந்தார் என்னும் உணர்வு (அறிவு) இல்லாமல் அவன் இப்பொழுது வாழ்ந்தான். அவனுடைய பாவம் அவனைத் தேவனிடத்திலிருந்து மூடிவிட்டது என்று அவன் நம்பிக்கொண்டு அவன் தேவனிடத்திலிருந்து தன்னை மூடிக்கொண்டான். இப்பொழுது அங்கீகரிப்பையும் விலைமதிப்பையும் விட அதிகமாக எப்பொழுதுமுள்ள பெரிய அவசியத்திற்கு அவன் ஒரு பெரிய

நகரத்தைக் கட்ட ஆரம்பித்தான். அவன் அவனைச் சுற்றிலும் மக்களைக் கூட்டிச் சேர்க்க முடிந்தவனாகவும் அவர்களுடைய தலைவனாக இருக்க முடிந்தவனாகவும் இருக்கிறான். அவன் பெரிய கட்டிடங்களைக் கட்டக் கூடியவனாகவும் அவன் எதனைச் சாதனையாக அடைந்திருந்தானோ அதிலிருந்து மதிப்பை பெற்றுக்கொள்ளுபவனாகவும் இருந்தான். அவன் அவனுடைய சொந்தக் கைகளின் செயல்களால் தன்னை சூழ்ந்துகொள்ளச் செய்பவனாகவும் தேவனுடைய செயல்களின் சான்றுகளை, எந்த அளவுக்கு அவனால் முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக மன உணர்விலிருந்த தடை செய்பவனாகவும் இருந்தான். அவன் அவனுடைய ஆத்துமாவின் நிலையைப் பற்றித் தன்னைத்தானே கேட்பதற்கான நேரம் இல்லாதவனாக இருக்கக்கூடிய கட்டத்திற்கு அவன்தானே சுறுசுறுப்புள்ளவனாக இருக்கக்கூடியவனாக இருந்தான்.

16. அப்படியே பூமியின்மீது சாத்தானின் ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்குக் காயீன் அதற்கான வாய்க்காலானான். அவன் மூலமாகப் பாதுகாப்பின்மையும் விலைமதிப்பின்மையும் எல்லா அடையாளங்களையும் அவன் வெளிக்காட்டியிருந்த மனித இனத்தின் ஒரு முன்னேற்றம் உண்டாயிற்று. அவர்கள் வல்லமையையும் பதவியையும் தேடுபவர்களாக இருந்ததுடன், அவர்கள் எந்த எதிர்ப்பின்மீதும் கட்டுப்படுத்தும் ஒரு பொறாமையின் ஆவியை முன்னேற்றமடையச் செய்பவர்களாக இருந்ததுடன், வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின தேவன் இல்லாத ஒரு அடையாளத்திற்காக முடிவில்லாத ஒரு துரத்துதலை உடையவர்களாக இருந்தனர். மனிதர்கள் அவர்களுடைய மிகப்பெரிய பகுத்தறிவுள்ள தனிப்பட்டவராக இருக்கின்ற தேவனின் புயங்களில் தேடுவதைவிடத் தங்களுடைய விலைமதிப்பைத் தங்களுக்குள்ளேயே தேடுகின்ற காலம்வரை மனிதர்களை அப்படிச்

செய்துகொண்டிருக்கும்படி அவர்களை வைக்கின்றவரை அவனால் சாத்தானால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும். அதைப்போலவே அவன் அப்படிச் செய்திருக்கிறான். யுகங்களின் காலத்திற்கூடாக சாத்தான் ஒரு கூட்டம் ஜனங்களை அவனுடைய அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறான். அவர்களடைய விலைமதிப்பில்லாததும் பாதுகாப்பில்லாததுமான ஆத்துமாக்களை உலகத்தை ஆளுகை செய்வதற்காக அவனுடைய சொந்த (ஆத்துமா)வுடன் சேர்த்துக் கட்டிவைத்துக் கொண்டிருக்கிறான்.

17. அடையாளம் பண்ணப்படுவதற்கும் விலை மதிப்பை அடைவதற்கும் வகைதேடிக் கொண்டிருக்கின்ற ஒன்றை, அது என்ன செய்கிறது என்பதிலிருந்தும் அதன் வீரச் செயலிலிருந்தும் சூழல்களைக் கைவசப்படுத்த முயற்சிப்பதிலிருந்தும் அங்கீகரிப்புக்கு வகை தேடுகிறது என்பது சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்ற பாபிலோனின் ஒரு இருதயம் பற்றி நாம் ஆராய்ந்திருக்கிறோம். அதனால் அதனைப் பயன்படுத்த முடியாது. அடுத்த அதிகாரத்தில் இந்த இருதயத்தின் முன்னேற்றத்தையும் அது மனித வரலாறின் மூலமாக வெளியேற்றுவதையும் நாம் தொடருவோம். பின் காண்போம்.

## பகுதி - 2 10-ம் அதிகாரம்

## ஒரு தலைவிதி, திரும்பப்பெற வேண்டிய அடையாளத்தை வற்புறுத்துதல்

### 1. நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் உரிமை பாராட்டுதல்களை உடைத்தல்

அவைகள் ஒன்றையொன்று பிடித்துக் கொண்டிருந்ததனால் ஒரு நீண்ட தாமதம் இருந்தது. மனக்கிளர்ச்சியின் உக்கிரம் ஆழமாக ஓடுகின்றது. ஆனால் அவைகள் இரண்டும் நேரம் வந்திருந்தது என்பதை

அறிந்திருந்தன. காலத்தின் யுகங்களுக்கூடாகப் பிதாவும் குமாரனும் ஒருவருடன் ஒருவர் நெருக்கமான தகவல் தொடர்பை உடையவர்களாக இருந்து இப்பொழுது அந்த தகவல் தொடர்பு விரைவில் முறிக்கப்பட வேண்டியதாக இருந்தது. இப்பொழுது தேவகுமாரன் அவருடைய இழக்கப்பட்டுப்போன மனித குமாரர்களையும் குமாரத்திகளையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதற்கான ஊழியத்தில் இரங்கவேண்டியவராக இருந்தார். பிதாவும் குமாரனுமான இருவரும் அபாயகரமான நிலைமைகளையும் சம்பந்தப்பட்டுள்ள செலவையம் அறிந்திருக்கின்றனர். ஆனாலும் அன்பு அவர்களை முன்நோக்கிச் செல்லும்படி துரத்துகின்றது.

2. ஒரு குறுகிய நேரத்திற்கு பிதாவும் குமாரனும் எதிர்காலத்திற்குள் பார்த்து அந்த ஊழியம் விரிவடைவதைக் கவனிக்கின்றனர். அந்தப் பரிகாசம் செய்தல், நிராகரிப்பு, வெறுப்பு, எச்சில் உமிழ்தல், உதைத்தல், சவுக்காலடித்தல் ஆணிகளடித்தல் ஆகிய அனைத்தையும் வானமும் பூமியும் அசையாமல் நின்று பிதாவும் குமாரனும் பிரிகின்றதைக் காணுகின்ற காலத்தின் அந்த பயங்கரமான வினாடி நேரத்துடன் ஒப்பிடுகின்றபோது வெளிறி ஒன்றுமில்லாமைக்குள்ளானது. கோடிக்கணக்கான குற்றங்கள், பாடுகள், கலகம் மதிப்பில்லாத தன்மை ஆகியவைகள் குமாரனின் மீது உருண்டு வருவதையும் அவர்தாமே அவருடைய பிதாவின் பின்நோக்கிச் செல்லும் அடிச்சுவடுகளையும், அவர் (பிதா) அவரை மரணத்தின் பயங்கரங்களுக்குக் கைவிடுவதுமான உணர்வினால் அவர் (குமாரன்) ஒரு பிளக்கப்பட்ட கிழிக்கப்பட்ட இலையைப் போல அவரே நடுங்குவதையும் அவர் கவனிக்கிறார்.

3. அந்தத் தழுவுதல் இறுகுகின்றது. இந்த ஒரு விதிக்கு அவரைப் பிதாவினால் எப்படி விட்டுக்கொடுக்க முடியும்? பாவத்தின்

எல்லமையினிடத்தில் தோற்றுவிடக்கூடிய இழந்துவிடக்கூடிய ஒரு சாத்தியதையுடன் ஒரு ஆழமான மட்டத்தில் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து மல்யத்தம் செய்கின்றனர். தேவ குமாரன் அவருடைய தலைமைப் போட்டியாளனாக இருக்கின்ற சாத்தானுக்கு, அவரை மேற்கொள்ளுகின்ற ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்காக, மானிட இயல்பை அவர் தம்மீது எடுத்துக்கொண்டு சன்னலைத் திறந்துவைத்து ஒரு வாய்ப்பை ஏற்பாடு செய்வார். வெற்றிக்கான உத்தரவாதங்கள் எதுவும் இருக்கவில்லை. அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தன்மையுடனும் அபாயகரமான காரியத்தையும் அவர்கள் இருவராலும் ஒன்று சேர்ந்து எப்படிச் செய்ய முடிந்தது? அப்படிப்பட்ட கீழ்த்தரமான ஒரு திட்டத்தை அவர்களால் எப்பழ வரவேற்க முடிந்தது? ஆயினும் அன்பு அவர்களைச் செயலாற்றும்படி செய்கின்றது.

4. நித்திய காலம்போல் காணப்படுகின்ற ஒரு நீண்ட தாமதம் கடைசியாக முடிவடைகின்றது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அவர்களிருவரும் தீர்மானம் செய்கின்றனர். குமாரன் பரலோகத்தின் விளிம்புக்குக் காலடி எடுத்து வைக்கிறார். அன்புள்ள பிதாவின் முகத்தை முடிவாக ஒரு தடவை அவர் பார்க்கிறார். பின் அவர் சென்று விட்டிருக்கிறார்.

5. தேவன் பூமியிலுள்ள அவருடைய குமாரர்களையும் குமாரத்திகளையும் அவர் இரட்சிக்க வேண்டியவராக இருந்திருந்தாரானால் நாம் ஆறாம் அதிகாரத்தில் பார்த்த நீண்டதும் சவால் செய்கின்றதுமான பட்டியலைத் தேவன் இடைப்படுவதற்கென்று அவசியமுள்ளவராக இருந்திருக்க வேண்டும். நாம் ஒன்பதாம் அதிகாரத்தில் மனிதனுடைய இருதயத்தில், சாத்தானின் ராஜ்யம் எப்படி முன்னேற்றமடைகின்றது என்றும், சாத்தான் நமது விலைமதிப்பில்லாத தன்மையின் உணர்வை

எப்படி ஆளுகை செய்கிறான் என்பதையும் நாம் பார்த்தோம். இயேசு அந்த வல்லமையை உடைக்க வேண்டியவராக இருந்தார் என்றால் அவர் அந்த விலைமதிப்பில்லாத தன்மையை உடைக்க வெண்டும் என்பதுடன் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்னும் நமது அடையாளத்தின் உணர்வைத் திரும்பவும் பிணைத்து, நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் மரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தவறான அடையாளத்தின் மேல் நாம் வெற்றிபெற வேண்டும்.

6. மேசியா வந்துவிட்டார் என்று தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்குப் பாடின மகிழ்ச்சியின் வாழ்த்துப் பாடலகளைச் சாத்தான் கவனித்தபோது, அவனுடைய இருதயம் வரப்போகும் கெடுதலைப் பற்றிய ஆழமான உணர்வினால் பற்றிக்கொள்ளப்பட்டது. அந்த ஞானவான்களைத் தாழ்மையான தொழுவத்திற்கு வழிநடத்தியிருந்த ஒளிவீசும் விண்மீன் கொஞ்சம் ஆறுதலைக் கூட்டியிருந்தது. மேன்மைமிக்க இந்தச் சிறு குழந்தையை அவன் பார்த்தபோது, அவன் ஒரு சண்டைக்காக வந்திருக்கிறான் என்பதை அவன் அறிந்திருந்தான் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியும். அந்தச் சிறு குழந்தையின் மீது தங்கியிருந்த சமாதானமான அமைதியை, இதற்கு முன்னாலிருந்த ஒவ்வொரு பிள்ளையுடனும் அவனால் எப்பொழுதும் செயல்பட முடிந்திருந்த விதமாக அவனால் உடைக்க முடியவில்லை. அது ஒரு கஷ்டமான பிரச்சனையாக இருந்தது. அந்தக் குழந்தை மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் உண்டுபண்ணப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் குழந்தையின் இருதயத்தின் ஆழத்தில் முடிவில்லாத தேவனின் காணமுடியாத கரத்தின் மீது ஏதோ ஒருவிதமான சமாதானமிக்க நம்பிக்கை இருக்கின்றது. சாத்தான், தான் கஷ்டத்திற்குள் இருந்ததை அறிந்தான்.

7. தொல்லைபடுத்தப்பட்டுள்ள இந்த ஆவி ஏரோதின் இருதயத்தின் மீது தங்கியிருக்கின்றதுடன், இருண்ட ஆவி உலகத்தைக் கலக்குகின்ற கலகத்திற்குள் நாம் ஒரு சன்னல் கொடுக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். ஏரோதை ஆளுகை செய்திருந்த பாதுகாப்பின்மையின் ஆழமான உணர்வு, பரலோக ராஜ்யத்திற்கெதிராகச் சாத்தானின் நடவடிக்கையாக இருந்த சாத்தானின் அதிர்ச்சியும் திகிலும் ஏரோதின் நம்பிக்கையை எளிதில் இழக்கும்படி செய்தது. உண்மையான போட்டி ஆரம்பமாவதற்குமுன் அவன், அவனை வெளியேற்றுவான். அந்தக் குழந்தை அரசரின் சமாதானமிக்க நம்பிக்கை, தவறாக வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவர் தப்பிச் செல்லுவதற்கான ஒரு பாதையை தெய்வீக ஏற்பாடு ஏற்பாடு செய்திருந்தது. அதனால் அந்தகார அதிபதியுடனும் அவர் மனித மாம்சத்தில் தண்டனையளிக்கப்பட்டதாக இருந்து பாதுகாப்பில்லாததாக இருந்த மனித இனத்தை அடிமைப்படுத்தியிருந்த பாதுகாப்பின்மையின் சங்கிலிகளை உடைக்கவும் போர் செய்யக் கூடியவராக இருந்தார்.

8. இயேசுவின் வாழ்க்கையை யோவான் 8:29ல் கணக்கிட முடியும். என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியாயிருக்க விடவில்லை என்றார். சாத்தான் என்ன செய்தான் என்பது பெரிய காரியமாக இருக்கவில்லை. அவனால் அந்த கௌரவம் நம்பிக்கை ஆகியவைகளின் உணர்வை உடைக்க முடியவில்லை. கிறிஸ்து அவருடைய குமாரன் என்னும் தன்மையை அந்தகாரப் பிரபுவும் கூடத் திகைக்கக்கூடிய விதமாக உறுதியுடன் பற்றிக் கொண்டிருந்தார். கிறிஸ்துவைப் பாவம் செய்ய வைக்க அசைப்பதில் சாத்தானின் முயற்சிகள் வீணானதில் சாத்தான் கோபாவேசம் உள்ளவனாக

இருந்திருக்கக்கூடும். கடைசியாக யாரோ ஒருவரால் சாத்தானைத் தடைசெய்ய முடிந்திருந்தது. ஒவ்வொரு தனி நபருடனும் நாலாயிரம் வருடங்களாக அடைந்திருந்த வெற்றிக்குப்பின், தனது தேவனுடைய குமாரன் என்னும் தன்மையில் நம்பிக்கையுள்ள ஒரு கெட்டியான பாறையைப் போன்ற உறதிஉள்ள சுவராக உள்ள மனித ஆத்துமாவின்மீது சாத்தான் படாரென்ற சத்தத்துடன் மோதுகிறான். குமாரன் என்னும் தன்மை வெற்றிக்குத் திறவுகோலாக இருந்தது. மனித இனத்தை மூழ்கச் செய்துகொண்டிருந்த விலைமதிப்பின்மை என்னும் சோனாமாரிக்கு எதிரான மிகவும் நிச்சயமான அரணாக இருக்கின்றது. அதனால் அந்த இரண்டு போட்டியாளர்களுக்கும் இடையில் குமாரன் என்னும் தன்மை போரின் குவிமையக் கட்டமாக இருந்தாக வேண்டியதாக இருக்கின்றது.

9. நாசரேத் என்னும் பேரூர் மனக்கிளர்ச்சியுடன் துடித்துக் கொண்டிருக்கின்றது. ஞானஸ்நானம் கொடுப்பவரைப் பற்றிய செய்தி விரைவில் பரவுகின்றது. மேசியாவுக்கு முன்னோடியாக இருப்பவர் வந்துவிட்டார் என்பதுடன் இந்தத் தூது தாழ்மையான ஆசாரியனின் பட்டறையைச் சென்று சேருகின்றபோது, யுத்தத்திற்கான நேரம் வந்திருந்தது என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் அவருடைய உளியையும் ரம்பத்தையம் கீழே வைத்துவிட்டு, அவருடைய அன்னையைத் தழுவிக்கொண்டு யோர்தானை நோக்கி விரைகிறார்.

10. இயேசு குமாரன் என்னும் அவருடைய நிலையில் நம்பிக்கை உள்ளவராக இருக்கிறார் என்பதுடன், ஆனால் வனாந்தரத்தில் வந்து கொண்டிருந்த அந்த யத்தம் இதற்குமுன் ஒரு மனிதனும் சோதிக்கப்பட்டிருக்காதவிதமாக அவரைச் சோதனை செய்யும். மானுடத்தின் ஆபத்துக்களின் கதவுகள். உடைகின்ற ஒரு

அணையைப்போல அவர் மீது திறந்துவிடப்படும். மானிட விலைமதிப்பில்லாத தன்மையை இயேசு அதன் முழு வலிமையுடன் சந்தித்து ஜிப்ரால்டரின் பாறையைப் போல நிற்க வேண்டும். அவரால் உறுதியுடன் நிற்க முடியுமானால் அப்பொழுது முதல் தடவையாக, யாரோ ஒருவர் நீண்ட ஆயுளுள்ள உயிரணுக்களாலான சங்கிலிகளை உடைத்திருந்திருப்பார். இந்த வெற்றியின் கொள்ளைப் பொருள்கள் அவரை நம்புபவர்களுக்கு சுதந்தர வீதமாக வேண்டும்.

11. சிலுவையின் பணியின் அஸ்திபாரமாக வனாந்தரத்தில் நிகழ்ந்த போர் இருந்தது. மனித ஆத்துமா அவனுடைய இல்லாமையின் சங்கிலிகளை உடைக்க முடியாததாக இருக்கின்றபோது, மன்னிப்புக் கொடுக்க முன்வருவதில் உள்ள பயன் என்ன? ஒரு புருஷன் அல்லது ஒரு ஸ்திரீ அல்லது ஒரு பிள்ளை ஆகிய ஒருவராலும் அந்த ஈவைத் தழுவிக்கொள்ள முடியாததாக இருந்தபோது, அந்த அன்பின் வல்லமைமிக்க செயல்முறை விளக்கத்தின் பயன் என்ன? இல்லை! நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் மதிப்பின்மையின் மேலும் வெறுமையான தன்மையின்மேலும் முதலில் வெற்றிபெற்றாக வேண்டும் என்பதுடன், வெற்றியின் கொள்ளைப் பொருள்கள் மனித இனத்தின் கைகளில் வைக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதனால் சிலுவையின் ஈடுஇணையற்ற ஈவைத் தழுவிக்கொள்ளும்படி அனைவரும் வல்லமைப்படுத்தப்படுவார்கள்.

12. பிதாவானவர் என்ன வந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்திருந்தார். அவர், அவருடைய குமாரனின் கரங்களை அந்த யுத்தத்திற்காக வல்லமைமிக்க வெளிக்காட்டுதலினால் இல்லாமல் இயற்கைக்கு மேலான சில சக்திகளுடன் அல்லது ஆயுதத்துடன் இல்லாமல், ஏனென்றால் இவைகளில் எதனாலும், வந்துகொண்டிருக்கும்

எதிராளியைச் சந்திக்க முடியாது. தேவன் அவடைய மிகவும் சிறந்த நல்ல ஆயுதத்தைக் கொடுக்கிறார். ஒருவருடன் ஒருவருக்குள்ள, அவர்களுடைய உறவிலிருந்து வருகின்ற அதிகாரமளிப்பதைத் தேவன் கொடுக்கின்றார். இயேசு தண்ணீரிலிருந்து வெளியே வருகின்றபோதும், புறா இரங்குகின்றபோதும் வானங்கள் திறப்பதையும் இயேசு பிதாவின் குரலைக் கேட்கக்கூடிய விதமாகக் கேட்கிறார். இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இந்த வார்த்தைகள் யுத்தத்திற்கென்று பிதாவானவர் அவருடைய குமாரனுக்குக் கொடுத்திருந்திருக்கக்கூடிய மிகவும் கூர்மையான பட்டயமாக இருக்கின்றது. அவருடைய பிதாவின் வார்த்தையில் பாதுகாப்பாக இருந்த அவர் அவருடைய கெட்ட எதிராளியுடன் போர் செய்து, நமது சார்பாக நம்மால் ஒருபோதம் உடைக்க முடியாததாக இருக்கின்ற அந்த சங்கிலிகளை அவர் உடைப்பார்.

13. மிகவும் அதிகமானவர்கள் கற்பனை செய்வதைவிட இந்த அறிக்கையின் முக்கியத்துவம், மிகவும் ஆழமாகச் செல்லுகின்றது. மனித இனத்தின் அங்கத்தினர்களில் ஒருவரைத் தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார் என்னும் உண்மை நம்மில் மீதமாக இருக்கின்ற அனைவருக்கும் நம்பமுடியாத நம்பிக்கையைக் கொடுக்கின்றது. இயேசுவின் மூலமாகத் தேவன் நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் சென்று சேர்ந்து நாம் அவருடைய நேசமான பிள்ளைகள் என்று நம்மிடத்தில் கூறுகிறார். சிலுவையின் ஈவை ஏற்றுக்கொள்ள எப்பொழுதும் நாம் முதலில் அந்த விலைமதிப்புமிக்க வார்த்தைகளைக் கேட்கவேண்டும். நீ என்னுடைய நேசமான பிள்ளையாக இருக்கிறாய். நான் உன்னில் பிரியமாயிருக்கிறேன். ஒரு எதிரியினிடத்திலிருந்துள்ள பரிசு கண்ணிவெடி மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக அல்லது வெடிப்பதற்குக் கயிறுகள்

பிணைக்கப்பட்டுள்ளதாக இருக்கிறதா என்று ஆச்சரியப்படாமல் பெற்றுக்கொள்ளுவது முடியாததாக இருக்கின்றது. ஆனால் அன்புள்ள ஒரு குடும்ப அங்கத்தினரிடமிருந்துள்ள பரிசை ஏற்றுக்கொள்ள முடியும். ஏனென்றால் தூய்மையும் சாதாரணமுமான அது எதற்காக இருக்கின்றது? தேவனுடனுள்ள நமது குமாரன் என்னும் தன்மை அல்லது குமாரத்தி என்னம் தன்மையின் மீதுள்ள ஒரு நம்பிக்கை கெட்டியானதாக அந்தப் பாலத்திற்குக் குறுக்காக இல்லாதவரை சிலுவையைச் சமீபிப்பதற்கு வேறு பாதை இல்லை. வேறு எந்தப் பாதையும் பிரமாணத்தைப் பற்றிக்கொள்ளுவதாகவும் அல்லது பாவம் செய்வதற்கான அனுமதியாகவும் இருக்கும்.

14. பரலோகத்திலிருந்துள்ள அந்த வார்த்தைகள் சாத்தானைக் கோபாவேசப்படுத்தியிருந்திருக்க வேண்டும். யாரோ ஒருவனாக அவன் இருந்தான். ஆனால் இப்பொழுது ஒரு குமாரனாக இல்லாமலிருப்பதின் நினைவுபடுத்துதல் என்பதாக இருக்கின்றது. அது அவனுடைய வெறுமையான தன்மை வீணான தன்மை ஆகியவைகளின் ஒரு ஞாபகப்படுத்துதலாக இருந்தது. ஆயினும் பெருமை எளிதில் சாகக் கூடியதாக இருப்பதில்லை. அதனால் அப்படியே சாத்தான் அவனுடைய சோதனைகளின் தீவிரத்தாக்குதல்களை இயேசுவின்மீது அவிழ்த்துவிட வனாந்தரத்தில் ஆயத்தம் செய்கிறான்.

15. இயேசு நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டவராக இருந்தார் என்று வேதாகம ஆவணம் கூறுகின்றது. பத்து நிமிடத் தொடர்ச்சியான சோதனை தங்கள்மீது வெற்றிகொள்ளுவதை அதிகமான மக்கள் காண்பார்கள் என்று நான் உணருகிறேன். நாற்பது நாட்கள் தனியாக விட்டுவிடப்படட்டும்! சரியாகச் சோதனை செய்கின்ற நடைமுறை அனுபவத்தைச் சாத்தான் 4000

வருடங்களாக உடையவனாக இருந்திருந்தான் என்பதுடன், இயேசு நரகத்தின் ஒவ்வொரு ஆயுதத்தின் அடையாளத்தையும் தம்மீது உடையவராக இருந்தார் என்று நான் நிச்சயமாகக் கூறுகிறேன். இந்தப் போராட்டத்தின் ஆழத்தை யாரால் பரிந்துகொள்ள முடியும்? தேவ குமாரனின் மீது சாத்தான் அடியின்மேல் அடியாக வைத்தபோது, பிரபஞ்சத்திலிருந்த அனைவரும் மொத்தமாக மூச்சுவிடுவதை நிறுத்தியிருந்தனர். நம்மைப் பொருத்தவரை நாம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தோம். இயேசுவின் வீரத்தனமான நிற்றலை நாம் அறியாத இருளில் நமக்கு விடுதலை வழங்குவதற்காக அவர் நின்றார். இங்கு இயேசு தோற்றிருந்தாரானால் நாமனைவரும் நமது வெறுமையான தன்மை என்னும் சங்கிலியினால் நொறுக்கப்பட்டிருந்திருப்போம். அந்த இருளைத் துளைப்பதற்கு இயேசு ஒருவர், ஒருவர்மட்டுமே நமது நம்பிக்கையாக இருந்தார்.

16. இதைப்போன்ற ஒரு கட்டத்தை நான் அடைகிறேன் என்பதையும், நான் உடனே நின்று அவரைப்பற்றி நினைக்க வேண்டியவராக இருக்கிறேன் என்பதையம் நீங்கள் அறிவீர்களா? என்னால் என்ன கூற முடியும் என்று நான் நினைக்கிறேன். நமது உதவியற்ற நிலைமையில் இந்த தேவ மனிதனின்மீது நடத்தப்பட்ட தீர்மானமான இரக்கமற்றவிதமான தாக்குதலின் மீது என்னுடைய இருதயம் நன்றி உள்ள மகிழ்ச்சியினால் நிரம்பி வழிகின்றது. இது எரிந்துகொண்டிருக்கும் வீட்டிற்குள்ளிருந்த தங்களுடைய பிள்ளையைக் காப்பாற்றுவதற்காக உள்ள ஓடுகின்ற தகப்பனைப் போன்றதாக அல்லது தாயைப் போன்றதாக இருக்கின்றது. அவர் சாத்தானால் மனத்தில் பெரிதாகத் தாக்கப்பட்டவராக உணர்வில்லாதவராக இருந்தார். ஆனால் அவர் விட்டுவிடாதவராக இருந்தார். நான் ஏதோ ஒருவிதமாக விலைமதிப்புள்ளவனாக இருந்தாக

வேண்டும்! என்று சத்தமிடும்படி இந்த மனிதர் எனக்குள் ஆழமாக எதையோ செய்கிறார். உண்மையில் அவர் கரிசனை உள்ளவர்களாக இல்லாதவரை எந்த ஒருவரும் இதைச் செய்ய மாட்டார்கள். இந்த அன்பு தடைசெய்ய முடியாதவிதமானதாக இருக்கின்றதை நான் காண்கின்றேன் என்னும்படியாக இந்த அன்பு ஒருவிதத்தில் என்னை இழுத்துக் கொள்ளுகின்றது என்று நான் உங்களிடத்தில் கூறுகின்றேன். நானும் அவரைத் தடைசெய்கிறேன். ஆனால் நான் இருப்பதைவிட அவர் அதிகமான தீர்மானமுள்ளவராக இருக்கிறார் என்பதற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

17. இயேசு களைப்படைந்தவராகவும் பசியுள்ளவராகவும் தனிமையானவராகவும் மிகவும் அதிகமாகக் காயப்படக்கூடியவராகவும் இருக்கின்ற கட்டத்தில் அனைத்தும் மானுடத்தைச் சமரசத்திற்குள் ஓட்டக் கூடிய கட்டத்தில் சாத்தான் அந்தப் பிரச்சனையின் கடினமான கட்டத்திற்கு வருகிறான். "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகளை அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான். குமாரன் என்னும் தன்மை பற்றி வேறு என்ன சோதனை இருக்க முடியும்? இயேசு எத்தனை நாட்கள் வனாந்தரத்தில் இருக்கப்போகிறார் என்பது அவருக்குக் கூறப்பட்டிருந்திருக்கவில்லை. நாற்பது நாட்களில் அவைகளனைத்தும் முடிந்துவிடும் என்று ஆவணம் கூறுகின்றதில்லை. இயேசு இன்னும் அங்கேயே வெளியில் இருந்தார். அவரைப் போஷிக்கப் பறவைகள் எதுவும் வரவில்லை. வானத்திலிருந்து மன்னா விழவும் இல்லை. வானத்திலிருந்துண்டான குரலைப் பற்றி அவர் தவறாக எண்ணியிருந்திருக்கலாம். "உங்களுடைய பிதா நீங்கள் இந்த நிலைமையில் இருப்பதை விரும்பியிருந்திருக்க மாட்டார். அதைப்பற்றி எதையாவது செய்யுங்கள்" என்று அவன் மெல்லிய குரலில் கூறுகிறான்.

18. சாத்தான் இயேசுவின் அவருடைய பிதாவின் மீதுள்ள விசுவாசத்தை உடைப்பதற்காக, பசி என்னும் ஊடகத்தின் மூலமாக முயற்சி செய்துகொண்டிருந்தான். நாற்பது நாட்களுக்கு முன் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று கூறினார். இயேசு கல்லுகளை அப்பங்களாக மாற்றியிருந்தாரென்றால் அப்பொழுது தேவனுடைய வார்த்தையைச் சந்தேகப்படுகிறார் என்னும் அந்த சந்தேகம் அவருடைய அடையாளத்தைப் பற்றிக் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்குப் போதுமானதாக இருந்திருக்கும். இதற்கு அப்பால் இயேசு அவருடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக எதையாவது செய்து காட்டும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கப்படுகிறார். அவர் யாராக இருக்கிறார் என்பதை மெய்ப்பிப்பதற்காகக் கல்லுகளை அப்பங்களாகச் செய்யும்படி இயேசுவைக் கேட்டுக்கொள்ளவது, சாத்தானின் ராஜ்யத்திற்கான ஒரு நேரடியான கதவாக இருந்தது. செயலினாலும் சாதனையினாலும் அடையாளமாக இருந்திருக்கும்.

19. நமது மதிப்பை மெய்ப்பிப்பதில் நாம் எதனைச் சாதனை செய்வதனால், நம்மில் எத்தனை பேர்கள் இந்தக் கண்ணியில் விழாதவர்களாக இருக்கிறோம்? உச்சியை அடைவதற்கு என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத் துரத்தப்பட்டு நித்திரை செய்வதையம் ஓய்வெடுப்பதையும் புறக்கணித்து எல்லாவற்றிற்கும் அதிகமாக ஜெப நேரத்தையும் வேதாகமத்தை ஆராய்வதையம் விட்டுவிட்டு அலுவலகத்தில் காலதாமதமாகத் தங்கியிருப்பதுடன் ஜீவாதாரமான குடும்ப நேரத்தையும் இழந்து கொண்டிருக்கிறீர்கள். பதவி உயர்வு பெறுவதற்காக அல்லது போனஸ் பெறுவதற்காக இப்படிச் செய்கிறீர்கள். நம்மை நாமே ஏன் இவ்விதமாக

முன்நோக்கித் தள்ளுகிறோம்? அநேக விஷயங்களில் நாம் "நீங்கள் தேவனுடைய ஒரு குமாரனாக அல்லது குமாரத்தியாக இருந்தால் அதை மெய்ப்பிப்பதற்கு ஏதாவது பெரிய செயலைச் செய்து காட்டுங்கள்." என்னும் அந்தக் கேள்விக்கு நாம் பதிலளித்துக் கொண்டிருக்கிறோம் என்று நான் நம்புகிறேன்.

20. காலையில் நீங்கள் துயிலெழும்போது தியானம் செய்வதற்கும் தேவனுடனிருப்பதற்கும் நீங்கள் கொஞ்ச நேரத்தைச் செலவு செய்ய விரும்புகின்றபோது, அந்த நாளில் செய்யப்பட வேண்டியதாக உள்ள எல்லா விஷயங்களாலும் உங்களுடைய தலை நிரம்பத் தொடங்குகின்றதுடன், அதற்குமேல் உங்களால் அதை எடுத்துக்கொள்ள முடியாது என்னும் வரை, நீங்கள் ஒரு ஐந்து நிமிட ஜெபத்துடன் சமரசம் செய்து கொள்ளுகிறீர்கள்; அதற்குப்பின் நீங்கள் அந்த நாளுக்குள் தூரமாகச் சென்றிருக்கிறீர்கள். இது உங்களுக்கு நிகழுகின்றதா? ஏன்? நீங்கள் அந்த நாளில் முடிவுவரை செயலாற்றி, நீங்கள் அதிகமாக எதையும் சாதித்து விடவில்லை என்பதை நீங்கள் காணுகின்றபோது, நீங்கள் இன்னும் திருப்தியும் சந்தோஷமும் உள்ளவராக இருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் ஏமாற்றமடைந்தவராக இருப்பதாக உணருகின்றீர்களா? அல்லது கொஞ்சம் மனச்சோர்வடைந்தவராக இருப்பதை உணருகிறீர்களா? காலத்தை வீண்செய்து விட்டதாக நீங்கள் குழப்ப உணர்வை உடையவராக இருக்கிறீர்களா? நோயாளியின் படுக்கையில் நீங்கள் படுத்துக்கொண்டு செய்யவேண்டியவைகளாக இருந்தவைகளின் பட்டியலில் உள்ளவைகளில் செய்யப்படாமல் விட்டிருப்பவைகளை நீங்கள் குறுக்கிட முடிந்திருந்தபோது, அப்படிச் செய்யாமலிருந்தீர்களா? நாம் என்ன செய்கிறோம் என்பதனால் நமது அடையாளத்தையும் மதிப்பையும் மெய்ப்பிப்பதற்குத் தவிர்க்க முடியாத

விதமாக நாமனைவரும் சாத்தானின் சோதனைக்குள் விழுகிறோம் என்பதை இந்த உண்மைகளனைத்தும் சுட்டிக்காட்டுகின்றன. அந்த ஆழத்தின் உள்பகுதியில் உள்ள உண்மையின் காரணத்தினால் ஆதாமினாலும் ஏவாளாலும் நம்மிடத்திற்குக் கடத்தப்பட்டுள்ள பாதுகாப்பின்மையின் காரணத்தை நாம் சுமக்கிறோம். நம்மை நாமே நமது நிர்வாணத்தை மறைப்பதற்கு ஆவியைச் சார்ந்ததும் மனத்தைச் சார்ந்ததுமான அத்தி இலைகளை உண்டுபண்ணி அவசியமுள்ள எளிதான இலக்காக இருக்கிறோம். பாதுகாப்பில்லாத ஒரு நபர் அவருடைய அடையாளம் பற்றிய சவாலுக்கு எப்பொழுதும் பதிலளிப்பார். அதே நேரத்தில் பாதுகாப்புள்ள ஒரு நபர் அதைப்பற்றி தொந்தரவும் கூடப்படமாட்டார். அது ஒரு பெரிய ராட்வெய்லர் இன நாயை உடையவராக இருந்த எனது நண்பருடன் சேர்ந்து நான் நடந்து சென்றிருந்த ஒரு நேரத்தை எனக்கு நினைவுபடுத்துகின்றது. நாங்கள் ஒரு மிகவும் சிறிய நாயை உடையவராக இருந்தவரின் இடத்தைக் கடந்து சென்றிருந்தோம். அந்த சிறிய நாய், ராட்வெய்லரின் கவனத்தை ஈர்ப்பதற்காக குலைத்துக்கொண்டும் குரைத்துக்கொண்டும் சுற்றிவந்து கொண்டிருந்தது. அந்த ராட்வெய்லர் நாய் அந்தச் சிறிய நாயைப் பார்ப்பதற்கு அதன் தலையைக்கூட திருப்பவில்லை. திரு.ராட்வெய்லர் அவர்களே, வாருங்கள் நான் உங்களுடன் சண்டையிட்டு எனது உரிமையாளரிடத்தில் என்னால் ஒரு பெரிய நாயுடன் கூடச் சண்டையிட்டு ஜெயிக்க முடியும் என்பதை மெய்ப்பிப்பேன் என்பதுபோல அது இருந்தது. ஆனால் அந்த ராட்வெய்லர்தான் யாராக இருந்தது என்பதைப் பற்றி நம்பிக்கை உள்ளதாக இருந்ததுடன் அந்த சவாலுக்கு பதிலும்கூட அளிக்காமலிருந்தது. அந்தப் பெரிய நாயின் மதிப்பை அந்தச் சிறிய நாய் எப்படிக் கூட்டும்?

21. இந்த இதே காரணத்திற்காக இயேசு வனாந்தரத்தின் சோதனையில் பிரவேசிக்க வேண்டியவராக இருந்தார். அவர் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருப்பதை அவர் நம்பினார் என்பதற்குச் செயல்முறை விளக்கம் கொடுக்கக்கூடிய ஒரு நபர் மனித குடும்பத்திற்கு அவசியமாக இருந்தது. ஏனெனில் தேவன் எதைக் கூறியிருந்தாரோ அதை மெய்ப்பிப்பதைவிட அதிகமாகச் சாதாரணமாக தேவன் அதைக் கூறினார் என்பதை நம்பினதால் அவர் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருந்தார். பார்வைக்கு ஜெயிக்க முடியாதவனாகக் காணப்பட்டிருந்த மதிப்பில்லாத கோலியாத்தை, நமது பாவங்களுடன் நம்மைச் சேர்த்துக் கட்டுகின்றதுடன் நம்மைப் பிசாசுக்கு அடிமைகளாக்குகின்றவனிடத்திலிருந்து நம்மை எடுத்துக்கொள்ளுகின்ற ஒரு தாவீது உலகத்திற்கு அவசியமாக இருக்கின்றான். உண்மையில் கிறிஸ்துவின் வனாந்தரத்தில் நிகழ்ந்த சோதனையின் கதை தாவீது-கோலியாத் கதையுடன் அநேக ஒத்த தன்மைகளை உடையதாக இருக்கின்றது.

22. (1) ஆவியான ஒருவனாக இருக்கின்ற சாத்தான் மானிட இயல்பின் தடைகளை உடையவரான இயேசுவைவிட அநேக அனுகூலங்களை உடையவனாக இருந்தான் 1 சாமுவேல் 17:33.

(2) மனித இனம் முழுவதற்கும் இயேசு பிரதிநிதியாக இருந்தார் என்பதுடன் கிறிஸ்துவின் ஒரு வெற்றி நமக்கான விடுதலையாக இருக்கின்றது. அதைப்போலவே சாத்தான் நரகத்தின் சக்திகளனைத்திற்கும் பிரதிநிதியாகத் தன்னை எடுத்துக் காட்டுவதுடன் அவனுடைய வெற்றி என்பது நாம் என்றென்றைக்கும் அந்தகார சக்திகளின் அடிமைகளாக இருப்போம் என்பதை அர்த்தப்படுத்துகின்றது. 1 சாமுவேல் 17:9.

(3) கோலியாத் 40 நாட்கள் இஸ்ரவேலை இகழ்ந்ததைப் போன்ற அதேவிதமாக இயேசுவும் வனாந்தரத்தில் சாத்தானின் இகழ்ச்சியையும் சோதனைகளையும் 40 நாட்களில் சந்தித்தார். 1 சாமுவேல் 17:16.

(4) சாத்தான் அவனுடைய சொந்த வல்லமையில் வந்தான். ஆனால் இயேசு ஜீவனுள்ள தேவனுடைய சேனைக்குக் கீழ்ப்படிய மறுத்திருந்தவனை அழிப்பதற்குக் கர்த்தருடைய நாமத்தில் வந்தார்.257

(5) உலகத் தரங்களினால் ஒப்பிடப்படுகின்றபோது இயேசு உபயோகம் செய்திருந்த ஆயுதங்கள் அற்பமானவைகளாக இருந்தன. அவர் தேவனுடைய வார்த்தைகளை நம்பியிருந்தார் என்பதுடன் சாத்தானின் மனத்தைத் தாக்குவதற்கு அவர் அவைகளை மிகவும் சரியாக உபயோகம் செய்தார்.

23. அந்த சமச்சீர்கள் மூச்சை எடுத்துக் கொள்ளுபவைகளாக இருக்கின்றன. அந்த மலைச் சரிவில் நின்றுகொண்டிருக்கின்ற இஸ்ரவேலின் சேனை வீரர்களில் ஒருவனாக நிற்காமல், என்னுடைய தேவனையும் என்னுடைய மதத்தையும் நேரடியாக என்னையும் அவமானப்படுத்திக் கொண்டு நிற்கின்ற கோலியாத்தையும் கவனித்துக்கொண்டு நிற்க, என்னால் உதவ முடியாது. உன்னுடைய தேவன் எங்கே இருக்கிறார்? நீங்கள் அந்த அளவுக்குப் பலமுள்ளவர்களாக இருந்தால், என்னுடன் ஏன் சண்டையிடாமலிருக்கிறீர்கள்? நீங்கள் பலவீனமானவர்களாகவும் உபயோகமற்றவர்களாகவும் உங்களுடைய தேவனுக்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறவர்களாகவும் இருக்கிறீர்கள். நாற்பது நாட்களாக இந்தவிதமான தகாத விதமான பேச்சுக்களைக் கவனித்துக்கொண்டு நிற்பது, உண்மையில் உங்களைக் கீழே விழும்படி செய்யும். அவனுடைய உருவத்தை சற்று பாருங்கள். அவனுடைய போராயுதங்கள் சூரிய

ஒளியில் திளங்குகின்றன. அவனுடைய ராட்சதக் குரலில் உள்ள நிந்தனைகளும் அந்தப் பள்ளத்தாக்கை நிரப்புகின்றது. நிலைமை நம்பிக்கையற்றதுபோல் காணப்படுகின்றது. அடிமைத்தனத்தில் மூழ்குகின்ற ஒரு சகித்துக்கொள்ளுதல் இருக்கின்றது. இன்று ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா? நாம் நமது தகுதியின்மைகளையும் பலவீனங்களையும் பற்றிய சாத்தானின் நிந்தனைகளை உடையவர்களாக இருக்கிறோம். அவனுடைய சோதனைகள் மிகவும் பலமுள்ளவைகளாகவும் நம்மைத் திகைக்கச் செய்பவைகளாகவும் இருப்பதுபோல் காணப்படுவதுடன் நாம் அவைகளுக்கு முன்பாக மறுபடியும் மறுபடியும் கீழே விழுகிறோம் என்பதுடன் அந்த அடிமைத்தனத்தை சகித்துக் கொள்ளுகின்ற உணர்வு நமக்குள் இருக்கின்றது. நமது அடிமைத்தனம் ஒருபோதும் மறைந்து போகக்கூடியதாக இருக்காமல், பாவம் எப்பொழுதும் நம்மில் உள்ள நல்லதைப் பெற்றுக்கொள்ளும் என்றும்கூட நமது அடிமைத்தனம் பற்றிப் பிரசங்கம் பண்ணுபவர்கள் இருக்கின்றனர். அப்படிப்பட்ட எண்ணங்கள் தூரமாக இருக்கட்டும். தாவீதின் குமாரன் நமது பாளையத்தில் இருக்கிறார். அவர் பிசாசின் சங்கிலிகளிலிருந்து நம்மை விடுதலை செய்திருக்கிறார். வனாந்தரத்தின் சோதனையில் அவர் அடைந்த வெற்றி மனித குடும்பம் முழுவதற்குமான வெற்றியாக இருக்கின்றது. நீங்கள் இன்னும் உங்களுடைய கோலியாத்தை சந்தித்தாக வேண்டும் என்பதை உங்களால் தெரிவுசெய்துகொள்ள முடியும் அல்லது அந்த மலைச்சரிவில் உங்களுடைய சோதனைக்காரனின் தலையை இயேசு துண்டிப்பதை உங்களால் திகிலுடன் பார்க்க முடியும். நீங்கள் விசுவாசிப்பீர்களானால் நீங்கள் ஏற்கனவே வெற்றியை உடையவராக இருக்கிறீர்கள். ஏனென்றால்

நம்பவதைவிட அதிகமாக உங்களை விடுவிப்பார். அப்பொழுது நீங்கள் விசுவாசத்தின் மெய்யான கடினமான கட்டத்தைக் கண்டிருந்திருக்கிறீர்கள்.

24. விலைமதிப்பற்ற தன்மையின் வல்லமையிலிருந்து என்னைத் தாவீதின் குமாரன் விடுதலை செய்திருக்கிறார் என்பதில் நான் பெரிய அளவில் சந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். அவர் என்னுடைய கலகம் செய்கின்றதும் பெருமை உள்ளதுமான இருதயத்தை நீக்கியிருக்கிறார். நான் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருக்கிறேன் என்று அடையாளப்படுத்தப்படும்படி, அவர் என்னுடைய பாதங்களைக் கெட்டியான பாறையின்மீது நிறுத்தியிருக்கிறார். எனக்காகச் சந்தேகங்களை அவர் நேரடியாகச் சந்தித்து நமது பிதாவின் வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தினால் அவைகளின் மீது வெற்றி அடைந்திருக்கிறார். தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக இருக்கின்றவர்களே, என்னுடன் சேர்ந்து பாடுங்கள், மகிழ்ந்து களிகூருங்கள். நீண்ட ஆயுளுள்ள மரபணுக்களின் சங்கிலிகளை இயேசு நொறுக்கியிருக்கிறார். நேசகுமாரனில் நம்மை ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாகச் செய்திருக்கிறார்.

## 11-ம் அதிகாரம்

## நரகத்தின் வாசல்களுக்கூடாகக் கடந்து செல்லுவதனால் பரலோகத்தின் வாசல்களைத் திறத்தல்

1. இருளுக்கூடாகக் கிழித்துக்கொண்டு செல்லுகின்ற ஒரு ஒளியின் கீற்று உதயம் வந்திருக்கின்றதென்று சைகை காட்டுகின்றது. கடினமான வேலையின் நேரம் ஆரம்பிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது என்றும் கூட அது சைகை காட்டுகின்றது. பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றபோது, நாடித்துடிப்பு விரைவாகின்றது. சுவாசம் குறுகுகின்றது. அதிகாலையில் அவர்கள் வெளியேறுகின்றபோது ஆபிரகாமின் மனம் நினைவுகளால் வெள்ளம்போல் நிறைந்திருக்கின்றது.

முதல் தடவையாக ஈசாக்கைப் பற்றிக்கொண்டிருப்பதையும், அப்படிப்பட்ட நீண்டநேர காத்திருப்புக்குப்பின் விடுவிக்கப்பட்டதன் மகிழ்ச்சியின் பெரிய உணர்வையும் அவன் நினைவு கூறுகிறான். தகப்பனின் படுக்கையில் குதித்துக்கொண்டிருந்து நெருக்கமாகப் படுத்துக்கொண்டிருந்து கரிசனையுடன் கவனித்திருந்த ஆதாம் ஏவாள் நோவா மற்றநேகரின் கதைகளின் நினைவுகளை அவன் தியானம் செய்கின்றபோது, சிறிய ஈசாக்கின் தோள்களில் பெரிய ஈயக் கட்டிகளின் பாரம்போல அவனுக்கு முன்பாகக் கடினமான வேலையாக அவைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

2. "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்."

3. தேவன் பேசியிருந்தார். இப்பொழுது அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கு ஆபிரகாம் அவனுடைய பலம் முழுவதையம் அழைக்கிறான். அந்தக் கட்டளை என்பதைத் தவிர வேறு எந்த விளக்கமும் இல்லை. எந்தக் காரணமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. சென்றுபோன வருடங்களில் ஆபிரகாம் தேவனுடன் நடந்திருந்தான். அவருடைய கட்டளைக்குத் தடை செய்யக்கூடாது என்பதை அவன் அறிந்திருந்தான். மிகவும் நல்லதைத் தேவன் அறிந்திருந்தார் என்பதுடன் பின்பற்றுவதற்கு அவருடைய பாதை ஒன்று மட்டுமே பாதுகாப்பானதாக இருக்கின்றது. அவன் நம்புவதற்கு வந்திருந்தான். ஆனால் அந்தப்பாதை கடினமானதாக இருந்தது, நினைக்க முடியாத அளவுக்குக் கடினமானதாக இருந்தது.

4. ஆபிரகாமின் மனதில் தீவிரமாக எழுந்து கொண்டிருந்த போராட்டத்தை யாரால் புரிந்துகொள்ள முடியும்? அவனுடைய மகனுக்குப் பதிலாக வேறு எதையாவது பலியிடும்படித் தெரிவு செய்வதை அவனால் மகிழ்ச்சியுடன் தெரிவுசெய்து கொண்டிருந்திருக்கக்கூடும். அவனுடைய மகனின் விதியிலிருந்து அவனைக் காப்பாற்றுவதற்கு அவனால் செய்ய முடியாத எதுவும் இருக்கவில்லை. ஆபிரகாம் அவனுடைய வேதனையை அவனுடைய குமாரனிடத்திலிருந்து மறைப்பதற்காக அவன் போராடுகின்றபோது அவன் கஷ்டப்பட்டு மூச்சுவிடுகிறான். இது ஒரு கெட்ட கனவாக இருந்து அது விரைவில் கடந்து சென்றுவிடும். ஈசாக்கு கேள்வி கேட்கின்றபோது உண்மை வீட்டைத் தாக்குகின்றது. "தகப்பனே, இதோ நெருப்பும் கட்டையும் இருக்கின்றது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்றான். ஆபிரகாமின் இருதயத்தில் ஒரு அம்பு பாய்கின்றது. அவன் எப்படி பதில் கூறுவான்? ஞானத்திற்காக ஒரு விரைவான ஜெபம் தேவனை நோக்கி உயருகின்றது. அதற்குப்பின் ஆபிரகாம் என் மகனே தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்ளுவார்" என்றான் என்று பதில் கூறினான்.

5. அந்த மலையின் உச்சியின்மேல் ஆபிரகாம் வேதனையுடன் ஈசாக்கினிடத்தில் அவனுக்காகக் காத்திருக்கின்ற விதியைப்பற்றி வெளிப்பத்துகிறான். ஈசாக்கு ஒரு இளைஞனான மனிதனாக இருந்து அவனுடைய தகப்பனை எளிதில் மேற்கொள்ளக்கூடியவனாகவும் ஓடிவிடக் கூடியவனாகவும் இருந்தான். ஆனால் ஈசாக்கு கீழ்ப்படிதலின் ஒழுக்கத்தைக் கற்றிருந்து அவனுடைய சொந்த வாஞ்சைகளை அவனுடைய தகப்பனின் ஞானத்திற்கு இணங்கச் செய்கிறான். ஆபிரகாம் அவனுடைய மகனை அவனுடைய விலைமதிப்புமிக்க குமாரனை அந்தக் கடைசி வினாடிக்காக ஆயத்தம் செய்வதைப் பரலோகம் முழுவதும்

கவனிக்கின்றது. மானிடக்காரணம் காணுதல் இப்பொழுது விசுவாசத்திற்கெதிரான ஒரு கூட்டமான வாதங்களைக் கட்டவிழ்த்து விடுகின்றது. ஆனால் ஆபிரகாம் ஒரு உயரமான கேதுரு மரத்தைப்போல புயல்காற்றுகளிலும்கூட வளைகின்ற போதிலும்கூட அவனிடத்தில் செய்யப்பட்டிருந்த வேண்டுகோளைச் செயலாற்றுவதில் அவனுடைய தீர்மானத்தை விட்டுக்கொடுக்க இணங்காதவனாக இருக்கிறான்.

6. ஒவ்வொன்றும் தயாராக இருக்கின்றது. ஆபிரகாம் அவனுடைய மகனைப் பார்க்கிறான். அந்த வேதனை அவனுடைய இருதயத்தைப் பிளந்துகொண்டு செல்லுகின்றதுடன் அவனுடைய பலம் குன்றத் தொடங்குகின்றது. ஆனால் அவன் உறுதியாகப் பிடித்துக்கொள்ளுகிறான். ஒரு ஜெபத்தை ஏறெடுத்துக்கொண்டு, அவனுடைய மிகவும் அதிகமான விலைமதிப்புமிக்க குமாரனின் ஜீவனை முடிவுசெய்வதற்காக அந்தக் கத்தியை மூழ்கும்படி செய்வதற்கு அவன் அவனடைய மனத்தைத் தயாராக்குகிறான்.

7. அந்த வினாடியில் ஒரு குரல் கேட்கப்படுகின்றது. ஆபிரகாமே பிள்ளையாண்டான் மீது உன் கையைப் போடாதே. நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

8. அந்தக் கதையை நான் சிந்திக்கின்றபோது என்னால் என்னை ஆபிரகாமின் காலணிகளிலும் என் மகனை ஈசாக்கின் காலணிகளிலும் வைப்பதைத் தடைசெய்ய என்னால் உதவ முடியாது. அவர் உணர்ந்த பிரயாசம் பற்றிய புரிந்துகொள்ளுதலை நான் பற்றிக்கொள்ளுகிறேன். ஆனால் அந்தச் சித்திரம் உடனே நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆழத்தில் உள்ள ஏதோ ஒன்று மேல்நோக்கி வந்து அந்த உருவம் நிறைவடைவதைத் தடைசெய்கின்றது. மனக்கிளர்ச்சி மிக்க எனது மனத்தால் அப்படிப்பட்ட ஒரு காட்சியில் ஒன்றிக்க முடியாது.

9. இயேசுவின் சிலுவையின் மீதுள்ள பயங்கரத்தையும் தியாகத்தையம் அறிந்துகொள்ளுவதற்கு பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் உள்ள உறவின் ஆழம்பற்றிய ஒரு பார்வையை நீங்கள் பார்ப்பது அவசியமாக இருக்கின்றது. அவர்களுடைய ராஜ்யத்தின் சாராம்சம் அவர்களுக்கிடையில் மாதிரியாக்கப்பட்டிருக்கின்றது. ஜீவன் பற்றிய அவர்களுடைய சமீபிப்பின் முக்கிய ஆதாரமான விஷயம், ஒருவர்மீது ஒருவருக்குள்ள அன்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த உறவின் அளவை (வடிவத்தை) நீங்கள் சிலுவைக்குக் கூட்டாவிட்டால், அப்பொழுது நீங்கள் உண்மையாகவே விஷயத்தை (கருப்பொருளை) தவறவிட்டிருக்கிறீர்கள்.

10. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். யோவான் 3:16.

11. விலைமதிப்புமிக்க ஒரு உறவை முறிப்பது ஒரு நபரால் அனுபவிக்கக்கூடிய மிகவும் அதிகமான பாழாக்குகின்ற விஷயமாக இருக்கின்றது. நீங்கள் அன்பு செலுத்துகின்ற ஒருவரிடத்திலிருந்து பிரிந்துவிட இருப்பதுபோன்ற எண்ணம் ஒவ்வொரு மனித ஆத்துமாவின் இருதயத்திலும் ஆழமாக உள்ளூர இருக்கின்ற ஒரு பயமாக இருக்கின்றது. பேசுகின்ற ஒரு வேலையில் ஈடுபட்டு நான் ஒரு வாரத்திற்கு என்னுடைய குடும்பத்தை விட்டுத் தூரமாக இருப்பதை நான் காணுகின்றபோது நான் நேசிப்பவர்களுடன் வீட்டில் இருப்பதற்கு என்னுடைய இருதயம் ஏங்குகின்றது. என்னுடைய குடும்பத்துடனுள்ள உறவை நான் விற்பதற்கு இந்த உலகத்தில் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு நினைப்பும்கூட நோயை உண்டுபண்ணுவதாக

இருக்கின்றது. அப்படி இருந்தபோதிலும் நாம் தேவனுடைய இருதயத்திற்குள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றதைப்போல பார்க்கும்பொழுது, பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் அவர்களுடைய ஒருவருடன் ஒருவருக்குள்ள உறவை முறித்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். அப்படிச் செய்வதனால் நீங்களும் நானும் பரலோகத்தின் வாசல்கள் வழியாக நடந்து சென்று மீண்டும் நமது படைப்பாளருடன் நாம் ஒன்றுபட்டிருக்க முடியும் என்பதற்காக அப்படிச் செய்தனர்.

12. யாராவது ஒருவர் இப்படிப் பதிலளிக்கலாம், "ஆம், ஆனால் தாம் மறுபடியும் எழுவார் என்பதை இயேசு அறிந்திருந்து அவருடைய பிதாவுடன் மறுபடியம் ஒன்றுபட்டிருப்பார். எனவே அது அந்த அளவுக்குக் கெட்டதாக இருக்கவில்லை." இந்த எண்ணங்களை நீங்கள் மனதில் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களென்றால் அப்பொழுது நான் கூறும் கருத்து, "இயேசு, என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று வீரிட்டபோது அவர் எப்படி உணர்ந்தார் என்பதை நீங்கள் இயேசுவிடம் கேளுங்கள் என்பதாக உள்ளது. கலகம் செய்கின்ற ஒரு உலகத்தின் குற்றம் அவர் மீது உருண்டு வந்தபோது, நமது பாவங்களுக்கான வெறுப்பு அவருடைய பிதாவின் அன்பை மூடி மறைத்துக்கொண்டிருந்தது. நித்திய காலம் முழுவதற்கூடாக எப்பொழுதும் அவருடைய மகிழ்ச்சியாக இருந்த அந்த அன்பான முகத்தைக் காண்பதற்காக அந்தக் கருமையான தன்மைக்குள் தேடிக்கொண்டிருந்தார். ஆனால் அவர் கண்டது அனைத்தும் பிரிவினையும் கோபமுமாக இருந்தது. அவருடைய நம்பிக்கை விழுங்கப்பட்டிருந்தது. அவருக்காகக் காத்திருந்ததெல்லாம் மரணமாக இருந்தது. அவர் நேசித்திருந்த ஒருவரிடத்திலிருந்து என்றென்றைக்குமாக முறித்து நீக்கப்பட இருப்பதை அவர் உணர்ந்தபோது அதனால் அவர் என்

தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று வீரிட்டழுதார். அதைப்பற்றி நிமிட நேரத்திற்குச் சிந்தியுங்கள். அது அச்சமூட்டக்கூடியது, சாதாரணமாக அச்சமூட்டக்கூடியது.

13. தேவனுக்கும் நமக்கும் இடையில் உள்ள வேலிகளை (தடைகளை) உடைப்பதைப் பற்றி தேவன் எவ்வளவு ஆழ்ந்த யோசனை உள்ளவராக இருக்கிறார் என்னும் கேள்வியை இவைகளனைத்தும் கேட்கின்றன. ஆபிரகாம் ஈசாக்கு ஆகியோரின் கதையில் உள்ள தேவனைச் சித்தரிக்க முயற்சி செய்து இயேசுவில் இருந்த இடைவெளிக்குள் பிரவேசிப்பதற்கு ஒருவரும் இருக்கவில்லை என்பதைக் காணுங்கள். இருதயத்தைக் கிழிக்கின்ற கடுமையான தியாக பலி என்னும் வேலையிலிருந்து பிதாவை விடுதலை செய்வதற்கு ஒருவரும் இருக்கவில்லை. கத்தியை மூழ்கும்படி செய்கின்ற வேலையிலிருந்து தெய்வீகக் கரத்தைத் தடுத்து நிறுத்த ஒருவரும் இருக்கவில்லை. விதிமிக்க அந்த நாளின் பூமி அதிர்ச்சியிலும் இருளிலும் நமது பாவங்களின் காரணமாக ஒருபோதும் இருந்திராத மிகப்பெரிய அன்பு துண்டிக்கப்பட்டிருந்தது. என் மகனே என் மகனே என்னால் உன்னைப் போகும்படி எப்படிக் கைவிட முடியும்? நரகம் இங்கு இருக்கிறது. நமது சார்பாகத் தங்களுடைய உறவைத் துண்டித்துக்கொண்ட பிதாவும் குமாரனுமாகிய இருவரும் நரகத்தில் இருந்திருக்கின்றனர். தேவனுடைய ராஜ்யம் எதற்காக நிற்கின்றதோ அந்த அன்பின் மிகவும் நெருக்கமான உறவுக்கு எதிராக நரகத்தின் சாராம்சத்தினால் வேறு எதைச் செய்ய முடியும்!

14. அப்படியே இது நமக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கின்றது? அதன் அர்த்தம் என்னவென்றால், நமது சார்பாகப் பிரிவினையின் பயங்கரத்தைத் தேவன் ருசித்திருக்கிறார். அதனால் நாம் அதை

அனுபவித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? இப்பொழுது தேவனடைய அன்பைவிட்டு நம்மை ஒன்றும் பிரிக்காது. ஏனென்றால் நமக்கு எவைகள் அவசியமோ அவைகளை நமக்காகப் பிதாவும் குமாரனும் செயலாற்றியிருக்கிறார்கள்.

15. நரகத்தின் வாசல்களை மூடுவதற்காக தேவன் நரகத்திற்குச் சென்றதனால் பரலோகத்தின் வாசல்கள் நமக்காகத் திறந்து வைக்கப்பட்டு அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. அதனால் நாம் ஒருபோதும் அங்கு பிரவேசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் நமக்காக இயேசு என்ன செய்திருக்கிறாரோ அவைகளை நிராகரிப்பவர்களுக்கு நிகழ உள்ள அழுகையும் பற்கடிப்புமான அனுபவத்திற்குள் நாம் ஒருபோதும் பிரவேசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் தெய்வீக அன்பிலிருந்து நிரந்தரமான துண்டிக்கப்படுதலுக்குள் பிரவேசிக்கவும் மாட்டோம்.

16. இப்பொழுது நமக்காகத் தங்கியிருக்கின்ற சவால் என்னவென்றால், நாம் எங்கு மதிப்பில்லாதவர்களும் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் தீர்மானமுள்ளவர்களாகவும் (நாம் எதைச் செய்கிறோமோ அதனால் ஒரு அடையாளத்தைச் செதுக்கிக்கொண்டு) இருக்கிறோம் என்பதை, எங்கு நாம் உணருகிறோமோ அந்த நிலைமையிலிருந்து நமது மனங்களில் எங்கு அன்பு நமக்காகக் காத்திருக்கின்றதோ அந்த இடத்திலிருந்தும் நாம் அவருடைய நேசமான பிள்ளைகள் என்பதை அறிந்திருக்குமிடத்திலிருந்தம், ஜீவனின் ஆதாரமாக இருப்பவரின் இடத்திற்குப் பின் திரும்பி நமது பயணத்தைச் செய்கிறோம். இயேசு பரலோகத்தின் வாசல்களை நமக்காகத் திறந்திருக்கின்றபோதிலும், நாம் நீண்ட உயிருள்ள மரபணுவின் ராஜ்யத்திலிருந்து தேவனுடைய

ராஜ்யத்திற்கு அந்தப் பயணத்தைச் செய்தாக வேண்டும். சாதனையிலிருந்துண்டான அடையாளத்திலிருந்து, குமாரன் என்னும் தன்மைக்கும் குமாரத்தி என்னும் தன்மைக்கும் இல்லாத வேறு வார்த்தைகளில் கூறுவதானால் கிரியையினால் இரட்சிப்பு என்பதிலிருந்து, விசுவாசத்தினால் இரட்சிப்பு என்பதற்கும் நாம் நமது பயணத்தைச் செய்ய வேண்டும். இந்தப் புத்தகத்தின் மீதமான பகுதி இந்தப் பயணத்தில் உள்ள சவால்களுக்கும் சிலாக்கியங்களுக்கும் அர்ப்பணம் செய்யப்படும்.

## பகுதி - 3

## 12-ம் அதிகாரம்

## திரும்பிச் செல்லும் பயணம்

**நீண்ட ஆயுளுள்ள உயிரணுவினால் ஜீவன் வல்லமைப்படுத்தப்படுகின்றது.**

1. எதிர்பார்த்தலின் ஒரு காற்று அந்த அறையில் பரவுகின்றது. நான் எனது உடன் மாணவர்களுடன் அந்த மண்டபத்தில் உட்கார வைக்கப்பட்டு பழக்கப்பட்ட ஒரு பெயரைக் கேட்பதற்காக நான் பேராவலுள்ளவனாக இருக்கிறேன். அந்த வருடத்தில் நான் எனது படிப்பில் கடினமாக வேலை செய்திருந்து, உண்மையில் அது ஒரு காரியமல்ல என்று நான் எனக்குள் கூறிக்கொண்டிருந்தபோது, ஆனால் உள்ளே மிக ஆழமாக அந்த வாஞ்சை வளர்ந்து கொண்டிருக்கின்றது.

2. அந்த வருடத்திற்கூடாக பல்வேறு மாணவர்களுக்கு அவர்கள் செய்த சாதனைகளுக்காகப் பரிசுகளைப் பள்ளி வழங்கிக் கொண்டிருந்தது. இந்த நிகழ்வின்போது நான் ஆர்வமிக்க ஒரு சிறு மன விளையாட்டை விளையாடிக்கொண்டிருந்தேன். "இந்த வருடத்தில் நீ கடினமாக வேலை செய்திருக்கிறாய். இந்த அடுத்த பரிசை உன்னால் பெற்றுக்கொள்ள முடியும். இல்லை, வேறு யாராவது அதை ஜெயிப்பார்கள். ஆனால் உனக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. தலைவிதியான வினாடி நேரம் வருகின்றபோது பெயர் வாசிக்கப்பட

வேண்டியதாகும்போது, எனது இருதயம் எதிர்பார்ப்புடன் அதிக வேகமாகத் துடிக்க ஆரம்பிக்கின்றது. அதற்குப்பின் நான் அந்தப் பெயரைக் கேட்கிறேன். இது என்னுடைய பெயராக இல்லாமல் ஆனால் எனது நண்பர்களில் ஒருவனுடையதாக இருக்கின்றது. எங்கு அது ஆர்வத்தை உண்டுபண்ணுமோ அந்த இடமாக இது இருக்கின்றது. வெளிப்புறத்தில் நான் எனது நண்பனுக்காகவும் அவர்களுடைய வெற்றிக்காகவும் கைதட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால் உட்புறத்தில் ஒரு மாறுபட்ட காட்சி நடந்துகொண்டிருக்கின்றது. அவன் ஏன் அதைப் பெற்றுக்கொண்டான்? நான் அவனைவிட கடினமாக வேலை செய்தேன். அவர்கள் அதை அவனுக்குக் கொடுப்பார்கள் என்று என்னால் நம்பமுடியாது. ஆ, ஏன் என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன். அவன் ஆசிரியர்களில் ஒருவருக்கு உறவினன். அதனால்தான் அவர்கள் அவனை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அது எப்பொழுதும் மோசம் செய்யப்பட்டிருக்கின்றது. அது ஒருபோதும் நீ அறிந்திருக்கின்ற விதமாக இல்லை. நான் கைதட்டிக் கொண்டும் புன்சிரித்துக் கொண்டும் இருக்கின்றபோதெல்லாம் நான் அமைதி உள்ளவனாக இருப்பதுபோல் தோற்றமளிக்க முயற்சிக்கிறேன். மேகங்கள் ஒன்றுசேர ஆரம்பிக்கின்றன. அடுத்த சில மணி நேரங்களாக நான் கொஞ்சம் மனச்சோர்வடைந்திருப்பதை உணருகிறேன் என்பதுடன் கொஞ்சம் கோபம் உள்ளவனாகவும் இருக்கிறேன். இது நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் பொருளினால் வல்லமைப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு நாளாக இருக்கின்றது.

3. அவர்கள் மதிக்கப்படவும் ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டுமானால், அதற்காக ஒரு பிள்ளைக்கு அதிகமான நீண்டநேரம் வேலைசெய்யப்பட வேண்டும் என்பதில்லை. அவர்கள் சமமானவர்களுக்கு

மத்தியில் முதலானவர்களாக இருக்க வேண்டும். ஒப்பிட்டுப் பார்த்தலின் உலகத்திற்கு வரவேற்பு! உங்களுடைய பிள்ளைகளில் யாராவது ஒருவருடைய பிறந்தநாளுக்காக எதையாவது வாங்குகின்ற கண்ணியில் நீங்கள் எப்பொழுதாவது விழுந்திருக்கிறீர்களா? தாயையோ தந்தையையோ பொதுவாகக் கொண்ட சகோதர சகோதரிகளுக்கு ஒன்றும் வாங்காமலிருக்கிறீர்களா? வழக்கமாக நரகங்களனைத்தும் கட்டவிழ்க்கும்படி உடைந்திருந்து இழக்கப்பட்டுள்ள உங்களடைய குழந்தை கிளிப்பிள்ளைபோல் இந்த வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றது. கண்ணீர்களுக்கும் தேம்புதல்களுக்கும் சில சமயங்களில் காரணமில்லாத ஒரு கோபத்திற்கும் மத்தியில் அது சரியாகக் கூறுகின்றது. அதற்குப்பின் என்னைக் கவனியுங்கள் என்னும் போட்டி பூங்காவில் நடைபெறுகின்றது. உங்களுடைய பிள்ளைகளில் ஒன்று சருக்கி விழுவதை நீங்கள் பார்க்கிறீர்கள். அவர்கள் சருக்கி விழும்போது, நீங்கள் புன்சிரிக்கிறீர்கள். உங்களுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல், என்னைக் கவனியுங்கள் என்று அழைக்கின்றது. உடனே உங்களுடைய அந்த வேறொரு பிள்ளை ஊஞ்சலில் ஆடுவதைக் கவனிக்க நீங்கள் திரும்புகிறீர்கள். நீங்கள் ஏதோ வேறு ஒன்றின்மீது உங்களுடைய கவனத்தைத் திருப்பி, உங்களுடைய பிள்ளைகளில் ஒன்று என்னைக் கவனியுங்கள் என்று கூறுவதைக் கவனிக்கத் தவறிவிடுகிறீர்கள். அதற்குப்பின் இயந்திரத் துப்பாக்கி வெடிப்பதைப்போல ஒரே சமயத்தில் பல இடங்களிலிருந்தும் என்னைக் கவனியுங்கள் என்பதைக் கேட்கிறீர்கள். இப்பொழுது அந்த என்னைக் கவனியுங்கள் என்பது அதிகரிப்பதுடன் அதன் சத்தமும் அதிகரிக்கின்றது, உயருகின்றது. அதற்குப்பின் நீங்கள் மதிய உணவுக்காக உட்காருகிறீர்கள். நீங்கள் உண்ணத் தொடங்கும்போது, இந்த இனிமையான சிறிய குரலைக் கவனிக்கிறீர்கள்.

நீங்கள் அவன் அதிகமான அளவைப் பெற்றுக் கொண்டிருக்கிறான். அது சரியல்ல. எனக்கும் அதிகமாக வேண்டும். இது நீண்ட ஆயுளுள்ள உயிரணுவினால் வல்லமையூட்டப்பட்ட வாழ்க்கையின் சாராம்சமாக இருக்கின்றது. நாம் வயது முதிர்ந்தவர்களாகும்போது நாம் சற்று அதிகமாகத் தேர்ச்சி அடைந்தவர்களாக இருப்பதற்கு முயற்சி செய்கிறோம். ஆனால் ஒப்பிடுதலும் கவனம் தேடுதலும் மானிட வாழ்க்கையின் உயிருடனிருத்தலின் (சக்கரத்தின் குடமாக) மற்றவைகளுக்கு ஆதாரமாக இருக்கின்றது.

4. மிகவும் அதிகமான பள்ளியின் பாடத்திட்டம் இந்த ஒப்பிடுதல் கவனம் செய்தல் ஆகியவைகளைத் தேடுதலின் அவசியத்தைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதுபோல் காணப்படுகின்றது. உங்களுடன் சமமானவர்களாக உள்ள ஒரு குழுவினருடன் ஒன்று சேர்ந்து, வீட்டின் சூழலின் பாசங்களிலிருந்து மிகவும் தூரமாக இருப்பது நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் கோட்பாடுகளை மனதில் பதியவைப்பதற்குப் பூரணமான பண்பாட்டை ஏற்பாடு செய்கின்றது. அடுத்த 12 வருடங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டுள்ள எண்களுள்ள பிரதேசங்களில் ஒப்பிடும்போது வெற்றிபெறுவதற்கான ஒரு ஓட்டப்பந்தயமாக இருந்து இப்படியாக ஒரு பிரகாசமும் மகிழ்ச்சியுமிக்க எதிர்காலத்தை அடைந்துகொள்ளும் மிகவும் அதிகமான நுண்ணறிவாளர்களை நமது மேற்கத்திய பண்பாடு அனுகூலம் செய்வதுபோல் காணப்படுகின்றது. ஒப்பிடுகின்ற நுண்ணறிவு உங்களைத் தூரமாக எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சொத்தாக இருக்கின்றது. அறிவைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்கும், திரும்ப வெளியில் கொண்டு வருவதற்கும், திறமை உள்ளவர்களாக இருந்து, தங்களுடைய கைகளால் அதிகமாகப் பரிசு பெறக்கூடியவர்களாக இருக்கின்ற பிள்ளைகளைவிட (கல்வியில்

சிறந்தவர்கள் மட்டும்) ஏன் அதிகமாகப் பரிசு பெறும்படி நடத்தப்படுகின்றனர் என்பதில் நான் அதிசயிக்கிறேன். ஒரு தோட்டத்தைப் பார்த்துக்கொள்ளுவது எப்படி என்பதற்காகவும் அல்லது ஒரு கார் இஞ்சினைப் பொருத்துவது எப்படி என்பதற்காகவும், பல்கலைக்கழக நுழைவை ஆதாயமாக அடைவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? இந்தத் திறமைகளுடன் உள்ள மக்களுக்கான இடங்கள் இருக்கின்றன. ஆனால் செயல்முறைப் பயிற்சியற்ற கொள்கை அறிவு மிகுந்தவர்களை மட்டுமே அதிர்ஷ்டம் கல்வித்தரத்தில் உச்சியில் வைப்பதற்கு நடத்துகின்றது.

5. வருடத்திற்குப்பின் வருடமாகப் பிள்ளைகள் அவர்களுடைய கல்வி அறிக்கை அட்டைகளை வீட்டிற்குக் கொண்டு வருகின்றனர். அந்த அறிக்கை அட்டைகளின் அடித்தளத்தின்மீது அவர்கள் அவர்களுடைய முன்னேற்றம் பற்றிய ஒரு உணர்த்துதலை அடைகின்றனர். நான் எண்ணிக்கையில் உள்ள பல நிலைமைகளை அனுபவித்திருக்கிறேன். அதில் ஒரு நபர் அவர்களுடைய கைகளிலிருந்து பரிசுகளைப் பெற்றவராக இருந்திருக்கிறார். ஆனால் கல்வியில் போராடியிருந்தார். அதன் ஒரு பலனாக அடிக்கடி நீங்கள் அவர்களை இப்படிப்பட்ட விதமாகச் சுயமாக வரையறை செய்யும் இதுபோன்ற வர்ணனையுடன் காண்பீர்கள். அது எனக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. அல்லது என்னால் அதை ஒருபோதும் செய்யமுடியாமலிருக்கின்றது. நான் அதற்கு மிகவும் அதிகமான ஒளிவு மறைவு இல்லாத ஊமையாக இருக்கிறேன்.

6. ஆனால், ஒருபோதும் பயப்படாமலிருங்கள், வெற்றியடைவதற்கான வேறு பாதைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளி முறையும், பிள்ளைகள் உடற்பயிற்சி விளையாட்டில் முன்னேற்ற மடைவதற்காக ஒப்பிடுகின்ற ஒரு வழிநடத்துதலை உடையவர்களாக

இருக்கும்படியாக ஒரு விளையாட்டு நிகழ்ச்சி நிரலை உடையவையாக இருக்கின்றது. பிள்ளைகள் நம்பிக்கையுடன் ஒருநாள் அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்ற வல்லமையையும் மகிமையையும் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடன், அவர்கள் உடற்பயிற்சி விளையாட்டுத் திறமையை முன்னேற்றமடையச் செய்வதற்காக ஆயிரங்களான மணிநேரங்களை அவர்கள் செலவு செய்வார்கள். பொழுதுபோக்கு என்பது ஒரு விளையாட்டாக இருக்கின்றது என்பதை நாமனைவரும் அறிந்திருக்கிறோம். சரிதானே உலகக் கால்பந்தாட்டக் கோப்பைப் பந்தயத்தின்போது ஐரோப்பாவின் தெருக்களுக்கூடாக பதற்றத்துடன் நடக்கும் ஆங்கிலக் கால்பந்தாட்ட விசிறிகளிடம் கூறுங்கள். உலகக் கிரிக்கெட் பந்தயத்தின்போது அதைத் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த ஒரு ரசிகர் அவருக்குப் பிரியமான விளையாட்டுக்குழு தோல்வியைச் சந்தித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தபோது அதன் பலனாக மாரடைப்பு உண்டாகி அந்த விளையாட்டு முடிவதற்குமுன் இறந்துபோன மனிதனைப்பற்றி என்ன? தோலினால் உருண்டை வடிவமாக்கப்பட்டுள்ள ஒரு பந்தை நிறுத்தப்பட்டிருக்கும் இரண்டு கம்புகளுக்கு நடுவில் உதைத்துத் தள்ளுவதற்காக பல்வேறுபட்ட விளையாட்டு வீரர்களுக்கு ஒரு வருடத்தில் மில்லியன்களான டாலர்கள் கொடுக்கப்பட முடியும் என்பது ஏன்? விளையாட்டு என்பது ஒரு கடுமையான தொழிலாக இருக்கின்றது. ஏனென்றால் மிகவும் சாதாரணமான ஒரு ஊடகத்தினால் மதிப்பையும் சாதனையையும் அடைகின்றதுடன் நீங்கள் விரும்பக்கூடிய எல்லா கவனத்தையும் உங்களால் பெறக்கூடியதாக அது இருக்கின்றது. நீண்ட ஆயுளுள்ள உயிரணுவைப் போஷிப்பதற்கான மிகச்சிறந்த முறைகளில் ஒன்றாக அது இருக்கின்றது. சாதனைகளைவிட உறவினால் நாம் மதிக்கப்படலாம்

என்னும் நம்பிக்கையைக் கொலைசெய்கின்ற மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாக அது இருக்கின்றது.

7. விளையாட்டைப் பற்றிய மிகவும் அதிகமான ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடிய விஷயங்களில் ஒன்று என்னவென்றால், உங்களால் மிகவும் அதிகமாக உயர்ந்த மட்டத்தில் செயலாற்ற முடியும் என்றாலும், நீங்கள் இரண்டாவதாக வருகிறீர்களென்றால் எந்த ஒருவரும் உங்கள் பெயரை நினைவில் வைக்க மாட்டார்கள். இழப்பின் மனக்கிளர்ச்சி சார்ந்த காயம் பாழாக்குதலை உடையதாக இருக்க முடியும். ஒரு பெனால்டி உதையில் கோல் அடைகின்ற முயற்சியில் தோல்வியடைந்து விட்டதனால் வெற்றிக் கோப்பையை இழந்ததனால் ஒரு சிறு குழந்தையைப் போல நிலத்தின்மீது சுருண்டு விழுந்து தேம்பித் தேம்பி அழுத ஒரு கால்பந்தாட்ட விளையாட்டு வீரனை நான் கவனித்துக் கொண்டிருந்ததை நான் நினைவு கூறுகிறேன். விளையாட்டு மைதானத்திற்கு வெளியில், அவனுடைய பயிற்சியாளர் வெளியிலிருந்து அவனுக்கு உதவிசெய்து கொண்டிருந்ததை நான் கவனித்துக் கொண்டிருந்ததை நான் நினைவுபடுத்துகின்றதுடன் அவன் எந்த அளவுக்கு மதிப்புள்ளவனாக இருந்தான் என்பதை அவன் வினடி நேரத்தில் உணர்ந்திருந்தான் என்பதில் அதிசயப்பட்டுக் கொண்டிருந்ததை நான் உணர்ந்தேன். ஆனால் உண்மையில் அது ஒரு விளையாட்டாக மட்டும் இருந்தது. ஆம், அது ஒரு விளையாட்டுதான். ஆனால் விலைமதிப்புக்காகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகவும் இருந்த அந்த ஒரு விளையாட்டு ஜீவ மரணப் போராட்டமாக இருந்தது.

8. நமக்கு ஆதரவளிக்குமென்றும் நாம் வாஞ்சிக்கின்ற ஒரு வெற்றியையும் மகிழ்ச்சியையும் நமக்குத் தருமென்றும் நாம் நம்பக்கூடிய மற்ற தெய்வங்களின் ஒரு பட்டியலை நம்மால் உண்டுபண்ண முடியும்.

உடலழகின் ஒரு பிரதேசம் இருக்கின்றது நம்பிக்கைத் துரோகம் செய்கின்ற இந்த உலகத்தில் எங்கு உங்களுடைய கன்னத்தின் எலும்புகளின் வடிவத்தின் அடித்தளத்தினால் அல்லது மார்பின் அளவினால் உங்கள் புகழை வெற்றியாக அல்லது தோல்வியாக அடைந்துகொள்ள முடியும். எத்தனை பெண்களால் அவர்களுடைய தரத்தை இல்லாமலிருந்ததை நினைத்து இரவுக்குப்பின் இரவாக நித்திரை இல்லாதவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? முக்கியமாகப் பெண்களை மட்டும் பசியில்லாதவர்களாக பட்டினி கிடக்கும்படி ஓட்டுகின்ற **அனோரெக்சியா** என்று அழைக்கப்படுகின்ற பிரச்சனை சமீபகாலமாக அதிகரித்து வருவதை நாம் கண்டிருக்கிறோம். அதனால் அவர்களால் முடியாத விதமாகச் சிறிய உருவத்தை அடைந்துகொள்ள முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

9. செல்வத்தை உண்டுபண்ணுதல் அல்லது வேலையில் உள்ள அந்தஸ்து நாட்டுப்புற அந்தஸ்து என்பது பற்றியும்கூட என்ன? நான் சிலகாலம் வெள்ளைக்காலருள்ள கம்பெனித்துறையில் சில வருடங்கள் வேலை செய்திருந்திருக்கிறேன் என்பதுடன், பெரிய அளவிலான ஆர்டர்களை கவனிப்பது மிகவும் ஆர்வமிக்கதாக இருந்தது. ஒரு நபரின் அந்தஸ்தை அவருடைய அலுவலகத்தின், மேஜை, நாற்காலி ஆகியவைகளின் தரத்தை வைத்து உங்களால் கூற முடியும். எல்லோருக்கும் மேலாக உயர்ந்த அதிகாரி அவருடைய அலுவலகத்திற்குத் தனியான ஒரு அறையை உடையவராக இருந்து கீழே உள்ள தெருவைப் பார்க்கக்கூடிய விதமாக ஒரு சாளரத்தை உடையவராக இருந்தார். பின்புறமாகச் சாய்ந்துகொள்ளுவதற்காக ஒரு தோலால் ஆன பின்புறச் சாய்வுப் பகுதியை உடைய ஒரு நாற்காலியை உடையவராக அவர் இருக்கிறார். அதில் கைகளை ஓய்வுகொள்ளும்படி

வைத்துக்கொள்ளுகின்ற சௌகரியமும் இருந்தது. அவர் ஒரு பெரிய வர்ணம் பூசப்பட்ட சாய்வு மேஜையை உடையவராக இருந்ததுடன் அதன்மீது மிகவும் நவீனமான கணினி இயந்திரமும் நிறுத்தப்பட்டிருந்தது. அடுத்த நபரும்கூட அவருடைய சொந்த அலுவலகத்தை உடையவராக இருந்தார். ஆனால் அவருடைய சன்னல் பார்வை அவ்வளவு நல்லதாக இல்லாமலும் அவருடைய நாற்காலியும் வினோதமாக இல்லாததாகவும் இருந்ததுடன் அவருடைய கணினி விரைவாகச் செயல்படக்கூடியதாக இல்லாததாகவும் இருந்தது. அதற்கும் அடுத்தவராக இருந்தவர் அவருடைய அலுவலகம் பிரிக்கப்பட்டதாக மட்டும் இருந்ததுடன் அவருடைய நாற்காலி இளைப்பாறக் கைத்தாங்கிகள் இல்லாததாக இருந்தது. அவரால் சன்னலுக்கு வெளியில் பார்க்கவும்கூட முடியாமலிருந்தது. அதைப்பற்றி நீங்கள் நினைக்கின்றபோது அது சிரிக்கத்தக்கதாக இருக்கின்றது. ஆனால் கம்பெனித்துறை உலகில் அது ஒரு அபாயகரமான தொழிலாக இருக்கின்றது. அலுவலக மேஜை நாற்காலி போன்றவைகள் பலன்தரக்கூடிய விதமாக சமமானவர்களுடன் (சகாக்களுடன்) ஒப்பிடப்படுகின்றபோது முக்கியமான ஒரு பகுதியாக இருக்கின்றது.

11. ஒப்பிடுதலின் வாய்ப்புக்களின் பட்டியல் இந்த உலகத்தின் முடிவில்லாத நீண்ட உயிருள்ள உயிரணுவாக இருக்கின்றது. ஆனால் அவைகள் வழக்கமாக உள்ள சில அடித்தளமான வர்க்கங்களில் ஒன்றில் விழும்படி நடத்தப்படுகின்றன.

(1) கல்வியின் மட்டம் (2) விளையாட்டுப் போட்டித்திறன் (3) வேலை அந்தஸ்து / வருமான மட்டம் (4) உடல் தோற்றம் (5) உடைமைகள் / சொத்துக்கள் (6) தேசீயம்.

12. தங்களுக்கு ஆதரவு காட்டும் என்று உலகம் ஆராதனை செய்கின்றதும் நம்புகின்றதுமான தெய்வங்களாக இவைகள் இருக்கின்றன. அவர்கள் வசூல் செய்கின்ற ஆளோட்டிகளாக இருக்கின்றனர் என்பதுடன் அவர்களால் உங்களுக்கு அனுகூலம் செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் நம்பினால் அவர்கள் வழக்கமாகக் குடும்பம் நண்பர்கள் ஆகியோரின் தியாகத்தைக் கோரிக்கை செய்வதுடன் நீங்கள் அதிர்ஷ்டமுள்ளவராக இருக்கிறீர்கள் என்றால், நீங்கள் இல்லாமைக்குள் மங்கி மறைந்து போவதற்குமுன் உங்களுடைய மகிமையின் வினாடியை உடையவராக இருப்பீர்கள். நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் வல்லமையின் மூலமாக நாமனைவரும் இந்தத் தெய்வங்களுக்கு அடிமைகளாகி இருக்கிறோம் என்பதுடன், வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின தேவன் இந்த தெய்வங்களிடத்திலிருந்து நம்மைக் காப்பாற்ற வகை தேடுகிறார்.

## 13-ம் அதிகாரம்

## பரலோகத்திற்கான ஏணிப்படிகள்

1. நாட்கள் குறுகினவைகளாகவும் குளிர்ச்சியானவைகளாகவும் ஆகிக்கொண்டிருந்தன என்பதுடன் குளிர்காலம் அதன் பாதையின் மேலிருந்தது. மகிழ்ச்சிமிக்க அந்தச் சிறிய பள்ளத்தாக்கில் விரைவில் இரங்கக்கூடியதாக இருந்த குளிருக்கூடாக சூடு செய்யக் கனல் மூட்டும் அடுப்புக்கு விறகு விநியோகம் செய்வதற்காக விறகுக் கட்டைகளை அடுக்குகின்ற நேரமாக அது இருந்தது. அந்த வீட்டுக்கார மனிதன் விரைவாக விறகு வெட்டிக் கொண்டிருந்தபோது, அவனுடைய கண்களின் ஓரத்திலிருந்து ஒரு மூலையிலிருந்து ஒரு ஜோடி சிறிய காலணிகள் கிடப்பதை அவன் கண்கள் துப்பறிந்தன. அவன் மேலே பார்த்தபோது

அவனுடைய ஒவ்வொரு அசைதலையும் ஒரு சிறு பையன் கவனித்துக் கொண்டிருந்தான். "என்னுடைய தகப்பனால் இதைவிட வேகமாக விறகு வெட்ட முடியும்" அது அப்படியா? என்று அந்த மனிதன் வேடிக்கையாகவும் அதைவிட அதிகமாக இந்த இளைஞனின் தைரியத்தில் வேடிக்கையாகவும் பதிலளித்தான். "அவரால் நிச்சயமாக முடியும்" என்னுடைய தகப்பனால் எதையும் செய்ய முடியும். அங்கு இருப்பவர்களில் அவர் மிகவும் சிறந்தவர். நல்லது அப்படிப்பட்ட ஒரு தகப்பனை உடையவனாக இருக்கின்ற சிலாக்கியத்தை உடையவனாக நீ இருக்கின்றாய்.

2. என்னுடைய சிறுபிள்ளைத்தனம் அப்படிப்பட்டதாக இருந்தது. இந்த நாட்கள் அம்மாவினாலும் அப்பாவினாலும் எந்தத் தவறும் செய்ய முடியாத நாட்களாக இருந்தன என்பதுடன் அச்சுறுத்தக்கூடிய மிகவும் அதிகமான ஜனங்களால் கற்பனை செய்ய முடிந்ததாக இருந்த நாட்களாக இருந்தன. சிலவிதங்களில் அந்த சாதாரணமான நிலைமையில் இருந்திருப்பது மிகவும் நேர்த்தியானதாக இருந்திருக்கும் என்பதுடன் ஆனால் அது அப்படிப்பட்டதாக இருந்திருக்கக்கூடாததாக இருந்தது. பள்ளியில் சிறிது காலத்திற்குப்பின் ஒப்பிடுதல்களின் தொடர்ச்சியான வட்டத்தில் என்னை நான் ஒப்பிடுகின்ற விதத்தில் சரிசெய்துகொள்ள ஆரம்பித்தேன். பிள்ளைகளின் சிறிய சமுதாயத்தில் என்னுடைய இடத்தைக் காண்பதற்கு வகைதேடிக்கொண்டு நான் என்னுடைய கல்வியின் அனுபவத்தில் பங்குபெற்றுக்கொண்டிருந்தேன். ஆரம்பப் பள்ளியின் நாட்களின்போது ஒப்பிடுதலின் மட்டம் அவ்வளவு உக்கிரமானதாக இருக்கவில்லை. அப்படியே என்னுடைய ஆரம்ப காலப் பள்ளி அனுபவத்தை நான் இனிமையான நினைவுகளுடன் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏராளமான கைவினைகளும்

விளையாட்டுக்களும் செயல்பாடுகளும் அவைகளில் மிக முக்கியமாக ஏராளமான வேடிக்கையும் இருந்தன. ஆனால் எதிர்காலம் முன்னால் கொண்டுவரப்பட்டிருந்த நேரங்களும் இருந்தன. அப்பொழுது நான் நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் ராஜ்யத்தின் கசப்பான / இனிப்பான அனுபவத்தை நான் அனுபவிப்பவனாக இருந்தேன்.

3. நான் ஏழு வயதுள்ளவனாக இருந்தபோது என்னுடைய குடும்பம் ஒரு புதிய இடத்திற்கு மாறிச் சென்றதுடன் நான் ஒரு புதிய குழுவின் பிள்ளைகளிடத்திற்கு எனது பாதையை நான் உணர்ந்து கொண்டிருந்தேன். நான் விரைவில் நண்பர்களை உண்டுபண்ணினேன். ஆனால் சில அருவருக்கத்தக்கவர்களையும் சந்திக்க நேரிட்டேன். நான் நல்ல உறுதியான உடல்கட்டை உடையவனாக இருந்தபோது எலும்பும் தோலுமாக இருந்த சில சிறுவர்கள், நான் அவர்களை விட உடல் நலனும் பருமனும் உள்ளவனாக இருந்ததனால் சில மைல்கள் என்னுடன் மோதலாம் என்று முடிவு செய்திருந்தனர். "ஃபாஸ்டோ" "ஃபாட்ஆல்பெர்ட்" "ஸ்லோநப்" என்னும் சில பெயர்களை நான் நினைக்கிறேன். சிறுவர்களாக இருந்தபோது நம்மில் அநேகர் சந்தித்திருந்தது அச்சம்தரத்தக்க ஒரு அனுபவமாக இருந்தது. இது நாளுக்குப்பின் நாளாக நடந்தது. என்னுடைய மதிப்பின் உணர்வை அழிப்பதற்காக ஆத்துமாக்களின் எதிரியாக இருப்பவன் இந்தப் பையன்களை உபயோகப்படுத்திக் கொண்டிருந்தான். ஒருநாள் காலையில் நான் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த பாதையில் நான் போதுமான அளவுக்கு அடைந்திருந்தேன் என்று நான் நினைத்தேன். "அம்மா நான் காரை விட்டு வெளியேற மாட்டேன்" "நான் பள்ளிக்குச் செல்லப் போவதில்லை". "உண்மையாகவே நீ என்னுடைய மகனாக இருக்கிறாய்". "இல்லை நான்

அப்படி இல்லை", நாங்கள் காரை உள்ளே ஓட்டினபோது, கெடுதி செய்யக்கூடிய அந்த ஜோடி கழுகுகள் அவைகளின் இரையின்மீது தாக்குதல் நடத்தப்போவதைப்போல, என்னைக் கவனித்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அம்மா கதவைத் திறந்து என்னை இறக்கி விடுவதற்கு முயற்சி செய்தாள். அடுத்த சில வினாடிகள் மிகவும் உக்கிரமானவைகளாக இருந்தன. நான் உதைத்தேன், கிரீச்சிட்டேன். உரக்கக் கத்திக்கொண்டு எனது நாற்காலியைப் பிடித்துக்கொண்டேன். அது கெட்டவிதமாக நடந்துகொள்ளக்கூடிய விதமானதாக இருந்தது. அப்படி இருக்கவும் செய்யலாம். ஆனால் ஒரு நபராக இருக்கின்ற உங்களுடைய அடையாளத்தின் உணர்வு தோற்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது, உங்களை நீங்கள் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக நம்பிக்கையில்லாத துணிச்சலுடன் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள். அடுத்து என்ன நடந்தது என்பதை உண்மையாக நான் நினைவு கூறவில்லை. ஆனால் அந்த எளியவரைக் கொடுமை செய்தல் நின்றுவிட்டது. முன்னால் என்ன கிடக்கிறது என்பதற்கான உண்மையான சுவை இங்கு இருந்தது.

4. பிள்ளைகளிடத்தில் காணப்படுகின்ற கொடூரம் சாத்தானின் ஒப்பிடுதலின் ராஜ்யத்தில் உள்ள வேகாத கடிவாளமிடப்படாத கொள்கைகளின் செயலின் பலனாக இருக்கின்றது. நாணமில்லாத சுயநலத்தினாலும் பிள்ளைகள் வெளிக்காட்டுகின்ற நன்றிகெட்ட தன்மையினாலும் நாம் ஒன்றும் விளங்காதவர்களாக அடிக்கடி திகைத்து நிற்க முடியும். சுபாவத்தின் இந்த நடத்தைகளுக்கு வெளியில், நாம் வளருகிறோமா? இல்லை! நாம் வயதானவர்களாக வளருகின்றபோது. நாம் சாதாரணமாகவே அதிகமான தந்திரமுள்ளவர்களாகவும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் ஆகிறோம்.

5. நான் உயர்நிலைப்பள்ளியின் மத்திக்குச் சென்று சேர்ந்த நேரத்தில், நான், நன்கு நிகழ்ச்சிநிரல் உண்டுபண்ணப்பட்டவனாக இருந்தேன். நான் கல்வி தெய்வத்தையும் விளையாட்டின் தெய்வத்தையும் உடல்தோற்றத்தின் தெய்வத்தையும் ஆராதனை செய்வதற்கு நான் கற்றுக்கொண்டிருந்தேன். நான் பணத்தின் தெய்வத்தை ஆராதனை செய்ய விரும்பியிருந்தேன். ஆனால் எனக்கு ஒரு வேலை கிடைக்கவில்லை. என்னைச் சுற்றிலும் இருந்த அனைத்தும் நான் முதலாவதானவனாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியவனாகவும் சாதனை படைக்க முயல வேண்டியவனாகவும் இருக்கிறேன் என்றும் கூறிக்கொண்டிருந்தது. ஜெயம் கொள்ளுகிறவர்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதையும், இழந்தவர்கள் எந்த மதிப்பும் இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்பதையும் நான் அறிந்தேன். அநேக நேரங்களில் எனது தூண்டுவிசை, நான் கற்றுக்கொண்டிருந்த விஷயங்களின் அடக்கங்களைச் சாதாரணமாக அனுபவிப்பதைவிட முதலாவது இடத்தை அடைந்துகொள்ளுகின்ற சாதனையை அடைகின்ற சாத்தியதையினால் பள்ளியில் அதிகமாக ஊக்கப்படுத்தப்பட்டிருந்தேன். இந்த நம்பிக்கையை வலிமைப்படுத்துகின்ற சினிமாப் படங்களையும் தொலைக்காட்சிகளையும் நான் கவனிப்பவனாக இருந்தேன். முன்னணியிலிருந்த ஆண் நடிகர்கள் ஏதோ ஒரு வாலிபப்பெண்ணை வியப்பூட்டும் காட்சியை அடைந்துகொள்ள இருப்பதுபோல காட்டி, அந்த வாலிபப் பெண்ணுடைய இருதயத்தை உருகச் செய்யும் விதமாகச் சித்தரித்திருந்தனர். இது ஒரு உறவு என்பது, நீங்கள் அடைந்துகொண்ட ஏதோ ஒன்று என்னும், அந்த வாலிபப் பெண் ஒரு நண்பனைவிட அதிகமாக ஒரு பரிசைப்போல இருந்தாள் என்றும் எனக்குப் போதனை செய்தது. நீங்கள் அதை அந்தவிதமாகக்

கூறவேண்டும் என்பதற்காக இல்லாமல் இவைகளனைத்தும் உள்மனதின் மட்டத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தது.

6. இது கனவு காண்பதற்கான நேரமாக இருந்தது. நான் அடிக்கடி எனது படுக்கையின் மேல் படுத்துக்கொண்டிருந்து ஆஸ்திரேலியாவுக்கான ஒரு கிரிக்கெட் பந்தயத்தில் வெற்றிக்கான ரன்களை அடித்துக்கொண்டிருந்தேன். அல்லது இறுதிக்கோலை அடித்துக்கொண்டிருந்தேன் அல்லது துன்பத்திலிருந்த யாரோ ஒரு வாலிபப் பெண்ணை காப்பாற்றுவதற்காக உயிரையும் உடலுறுப்பையும் அபாயத்திற்குள்ளாக்குவதில் ஈடுபட்டிருந்தேன் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன். இந்தக் கனவுகள் என்னுடைய மதிப்பு முறையின் துணிவை அமைத்துக் கொண்டிருந்தது.

7. எந்த அளவுக்கு அதிகமாக நான் கனவு கண்டிருந்தேனோ, அந்த அளவுக்கு அதிகமாக நான் எனது கோல்களை அடைவதில் அதிகமான தீர்மானமுள்ளவனாக இருந்தேன். கடினமான பகுதி என்னவென்றால் ஒரு சூன்யத்தில் உங்களால் இந்த கோல்களை (இலட்சியங்களை சாதனையாக அடைய முடியாது. நீங்கள் மற்ற மக்களைத் தோற்கடித்தாக வேண்டும். நான் எனது நண்பர்களை விரும்பினேன். ஆனால் முதலில் நான் எனது கனவுகளை விரும்பினேன். எனது கனவுகள் பயப்படுத்தப்படாதவைகளாக இருந்தபோது என்னால் மரியாதையுள்ளவனாக இருக்க முடிந்தது. ஆனால் என்னுடைய கனவுகள் சவால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் உணர்ந்தபோது அது யுத்தமாக இருந்தது.

8. எனது கோல்களைச் சாதனைகளாக அடைவதில் நான் கடினமாக உழைத்தேன். நான் விளையாட்டுக்களிலும் என்னுடைய கல்வியிலும் நான் வெற்றியடைந்தேன். நல்லது மூன்றில் இரண்டு (வெற்றி)

என்பது கெட்டதாக இல்லை. அதற்குப்பின் நான் வேறொரு பகுதியில் நுழைவதற்கு ஆரம்பித்தேன். ஒரு தடவை நீங்கள் உச்சியை அடைந்துவிட்டால் நீங்கள் முயற்சி செய்து அங்கு தங்க வேண்டியவராக இருக்கிறீர்கள். உங்களுடைய தோளுக்கு மேலாக ஒரு தொடர்ச்சியான பார்வை இருக்கின்றது என்பதுடன் உங்களுடைய விலைமதிப்புமிக்க அந்தஸ்தைக் காவல் செய்துகொண்டும் இருக்கின்றது. அப்பொழுது புகழின் எதிர்பார்த்தல் இருக்கின்றது. ஒரு தடவை நீங்கள் புகழைச் செதுக்கியிருக்கின்றபோது நீங்கள் கெட்டவிதமாகச் செயல்பட்டால் என்னவாகும்? அது பயங்கரமானதாக இருந்தாக வேண்டும். அதனால் நீங்கள் மிகவும் அதிகமாகக் கூடத் தீர்மானமுள்ளவராகலாம்.

9. சற்று நேரத்திற்கு இந்த யுத்தத்தின் பெருங்கோபம், அதிகரித்து எனது கோல்களையெல்லாம் (லட்சியங்களையெல்லாம்) சென்றடைவது ஏறக்குறைய முடியாதது என்று நான் உணருகின்றவரை அதிகரித்திருந்தது. இது பெருங்கோபத்தின் வெடிப்புகளுக்கு நடத்தினது. நான் வஞ்சிக்கப்பட்டவனாக இருந்திருக்கிறேன் என்பதை நான் உணர்ந்தேன். நான் எனது எஜமானர்களுக்கு நன்றாகச் சேவை செய்திருந்தேன். இப்பொழுது அவர்கள் என்னைப் பரிகாசம் செய்கின்றனர். நான் கடைசியானவன் என்னும் உணர்வை எனக்கு ஒருபோதும் கொடுக்காத ஒரு முறையில் நான் பயிற்சியளிக்கப்பட்டிருந்தேன். அது எனக்கு நான் கடைசியானவனாக இருக்கிறேன் என்னும் மதிப்பில்லாத உணர்வை ஒருபோதும் கொடுக்காது. எனவே நான் கோபமுள்ளவனாக இருக்கிறேன்.

10. இளைஞர்களாக உள்ள மக்களால் அடிக்கடி வெளிக்காட்டப் படுகின்ற ஏற்ற இரக்கத்தையும் அழிக்கும் தன்மையையும் அறிந்துகொள்ளுவதற்கு அநேக மக்கள் போராடுகின்றனர். அவர்களில்

அநேகா் நச்சுப்பொருள்கள் கலந்த பானங்களையும் மருந்துகளையும் பருகுவதிலும் அல்லது தற்கொலை செய்துகொள்ளுவதையும் ஏன் செயல்படுத்துகின்றனா்? அவா்கள் ஒருபோதும் அவா்களுடைய கனவுகளை அடிக்கடி அவா்கள் போதனை செய்யப்பட்டுள்ள முறைகளின் மூலமாக அவா்கள் ஒருபோதும் அடைந்துகொள்ள மாட்டாா்கள் என்று நான் நம்புகிறேன். அவா்கள் மற்றவா்களின் கண்களுக்கு முன்பாக ஒருபோதும் பெரியவா்களாக இருக்க மாட்டாா்கள். எனவே அவா்கள் சுயத்தை அழிக்கின்றனா்.

11. ஒருநாள் கூடைப்பந்து விளையாண்டு கொண்டிருந்ததை நான் நினைவு கூறுகிறேன். அந்த விளையாட்டு சமீபித்துக்கொண்டும் அதன் அழுத்தம் அதிகரித்துக்கொண்டும் இருந்தது. நான் குறிப்பிட்டுக்கொண்டிருந்த அந்த வாலிபன் அந்த வளையத்திற்கு நேராகத் திடீரென்று ஒரு துரத்துதல் செய்தான். அவன் அந்தப் பந்தை உயா்த்தினபோது, நான் அங்கு சென்று சோ்ந்து அவனுடைய கையிலிருந்து தெளிவாகத் தட்டி நீக்கினேன். எனது நம்பிக்கைக்கு எதிராக நடுவரின் விசில் ஒலி கேட்டதுடன் குற்றம் (தவறு) என்ற வாா்த்தையையும் நான் கேட்டேன். நான் அவனைத் தொடவில்லை என்பதை நான் அறிந்திருந்தேன் என்பதுடன் திடீரென்று இந்தக் கோபம் எனக்குள் கொந்தளித்தது. இந்த உலகத்தை எனக்குத் தருவதாக வாக்குத்தத்தம் செய்திருந்த இந்தத் துா்ப்பாக்கியமான முறை எனக்கு ஒன்றையும் தரவில்லை என்னும் கோபம் உண்டாயிற்று. நான் அந்த நடுவருடைய முகத்திலிருந்து இரண்டங்குல தூரத்தில் புயலாகத் திரும்பி நின்று உரத்த குரலில் கெட்ட வாா்த்தைகளைப் பேசினேன். எனக்குள்ளாக ஏதோ என்னை வெட்டி முறித்தது. நான் பின்னிடாதவனாக இருந்தேன். நான் விளையாட்டு அரங்கத்திலிருந்து

உதைத்து வெளியேற்றப்பட்டதுடன், அந்தப் போட்டியிலிருந்து நீக்கப்பட்டேன். நான் வெளியே தூரமாக நடந்து சென்றபோது, தேவன் என்னுடன் பேசினார் என்று நான் நம்புகிறேன். மனிதனே உனக்குள் என்ன தவறு இருக்கின்றது. நீ உண்மையாகவே அதை அங்கு இழந்துவிட்டாய், நீ கட்டுப்பாட்டை இழந்து கொண்டு வருகிறாய் என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். உண்மையாகவே என்னை நானே பார்த்துக்கொண்டதும் நான் செல்லத் தொடங்கியிருந்த திசையைப் பற்றிக் கேள்வி கேட்டிருந்ததுமான அது முதல்தடவையாக இருந்தது. ஏதோ நல்லதைத் தேடிக்கொண்டு நான் புறப்பட்டிருப்பதை தேவனால் பார்க்க முடிந்திருந்தது. அதைப்பற்றி அங்கு ஒரு மேலான நல்ல பாதை இருந்தாக வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன்.

12. எனது ஆத்துமாவின் சத்துருவும்கூட இதை உணர்ந்து என்னை நானே மெய்ப்பிக்க முயற்சி செய்யும்படி ஆழமாகத் துரத்துவதற்கு முயற்சி செய்தான் என்னும் இதையும் அறிந்திருந்தான். அது புகைபிடிக்கும் ஒருவர் அதை விட்டுவிட வேண்டிய நேரம் வந்திருக்கின்றது என்பதை உணர்ந்து இரண்டத்தனையான அநேக சிகரெட்டுகளைப் புகைப்பதைப் போன்றதாக அது இருந்தது. எனது கனவுகள் மங்கி மறைந்தபோது நான் பின்வாங்கத் தொடங்கினபோது நான் மிகவும் திடமனமில்லாதவனானேன். ஒருநாள் அன்னை எனது அறைக்குள் வந்து என்னுடைய அறையின் நிலைமைபற்றி என்னிடத்தில் குற்றம் கூறத் தொடங்கினாள். அது மிகவும் அநேக 13 வயது முதல் 19 வயதிற்கு உட்பட்ட பையன்களுடைய அறைகளைவிடக் குறைவான சாதகங்களை உடையதாக இருக்கின்றது என்று நாம் இப்பொழுது கூறிக்கொள்ளுவோமாக. அவள் என்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள் என்பதையும் என்னிடத்தில் கட்டளைகளையிட்டுக் கொண்டிருந்தாள் என்பதையும் நான்

நுகர்ந்துகொண்டேன். என்னுடைய மூச்சின் கீழிருந்த தெரிவு செய்யப்பட்டிருந்த வரிசையான வார்த்தைகளை நான் பறக்கவிட்டு, என்னைத் தனியாக விட்டுவிடும்படி அவளிடத்தில் நான் கூறினேன்.

13. உங்களை அடைந்துகொள்ளுவதற்காக தேவனிடத்தில் உள்ள பல்வேறுபட்ட வழிகள் ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடியவைகளாக இருக்கின்றன. என்னுடைய நண்பர்களில் அநேகர் அவர்களுடைய அன்னையை "பழைய பை" போன்றவர்கள் அல்லது அதற்குச் சமமான பிரியமுள்ள வார்த்தைகளால் குறிப்பிடுகின்றனர். எப்படியோ என்னுடைய தகப்பனார் என்னுடைய பெற்றோர்களின்மீது மரியாதை உணர்வை உடையவனாக இருக்கும்படி கற்றுத்தர மேலாதிக்கம் செய்தார். என்னுடைய நண்பர்களில் சிலர் செய்ததைப் போல என்னுடைய அன்னையைப் பற்றி நான் ஒருபோதும் பேசமாட்டேன் என்று நான் பிரதிக்ஞை செய்தேன். என்னுடைய அன்னையைப் பற்றி இந்த வார்த்தைகளை நான் பேசினபோது அது என்னிடத்திலிருந்த கௌரவத்தின் கடைசித் துண்டைப்போல இருந்து அது தூரமாக நீக்கப்பட்டதாக இருந்தது. அப்படிப்பட்டவைகளைப் பேசினதற்காக நான் அதிர்ச்சி அடைந்தவனாக இருந்ததுடன் எனது மனச்சோர்வு ஆழமடைந்தது. இனிமேல் எதைப்பற்றியும் நான் கவலைப்பட போவதில்லை என்னும் கட்டத்தை நான் அடைந்துகொண்டிருந்தேன் என்பதுடன் அது ஒரு அபாயகரமான இடமாக இருக்க வேண்டியதாக இருந்தது. நான் ஒரு குறுக்குச் சாலைகளில் வந்திருந்தேன் என்னும் ஒரு உண்மையான அறிவை உடையவனாக நான் இருந்தேன். அந்த அகலமான பாதை அதன் மதுபானத்தினாலும் பெண்களினாலும் பாடல்களினாலும் நிறைந்து திறந்த தாடையுடன் என்னைச் சைகை காட்டி அழைத்தது. மற்றொரு பக்கத்தில் வேதாகமத்தினால் வைக்கப்பட்டதைப்

போன்ற வேறொரு பாதை இருந்தது. என்னுடைய பெற்றோர்கள் எனக்குப் போதனை செய்திருந்த மதத்தை நான் பின்பற்ற வேண்டுமா அல்லது எரியும் ஒரு வால்நட்சத்திரம் போல நான் அகலமான ஒரு பாதைக்குள் செல்ல வேண்டுமா? இதற்கு மேலாக என்னை நான் ஒரு கிறிஸ்தவன் என்று பாசாங்காகக் கூறிக்கொள்ளுவதில் எந்த அர்த்தத்தையும் என்னால் காணமுடியவில்லை. நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கவில்லை என்பதும் ஒருபோதும் இருந்திருக்கவில்லை என்பதும் நான் ஒரு கிறிஸ்தவ சுற்றுப்புறத்தில் வளர்க்கப்பட்டிருந்தபோதிலும் அப்படி நான் இருக்கவில்லை என்பது இப்பொழுது எனக்கு வெளிப்படையாக இருந்தது. அது கிறிஸ்து அல்லது பிசாசு ஆகிய இரண்டில் ஒன்றாக இருந்தது. நான் நன்றியுடன் வேதாகமத்தில் உள்ள உண்மையான இயேசுவைத் தெரிவுசெய்துகொள்ள முயற்சி செய்வதுடன் காணவும் முயற்சி செய்கிறேன்.

14. அநேக வருடங்களாக எங்களுடைய வீட்டில் இருந்த ஒரு புத்தகம் எனக்கு வாசிப்பதற்கு அவசியமாக இருக்க வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். அது கடவுளிடத்திற்கு வழி என்று அழைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அந்தப் பெயர் என்னுடைய அவசியங்களுக்குப் பூரணமானது என்பதுபோல் காணப்பட்டிருந்தது. நான் அவரைக் காண்பதற்காக ஒரு பசியுடன் வெற்றியின்மீது நம்பிக்கையில்லாத துணிவுடனும் நான் வாசிக்க ஆரம்பித்தேன். நான் பரலோகத்திற்கான படிக்கட்டுகளைக் காணவேண்டியவனாக இருந்தேன். ஏனென்றால் இனிமேலும் நான் சாத்தானுடைய ராஜ்யத்தைக் கைகாரியம் செய்ய முடியாதவனாக இருந்தேன்.

15. மனித இனம் தேவனைப் பற்றித் தழுவியிருந்த பொய்களை விலக்கும்படி இயேசு வந்தார் என்றும் தேவன் நம்மை உண்மையாகவே

எப்படி நேசித்தார் என்பதைக் காட்டுவதற்காகவும் இயேசு வந்தார் என்பதை இந்தப் புத்தகத்தின் ஆக்கியோன் அதன் ஆரம்பத்தில் விளக்கியிருந்தார். வெயில் காலத்தில் பிளந்திருந்த நிலம் வசந்த காலத்து மழைகளின்கீழ் இருந்ததைப்போல் நான் அந்த வார்த்தைகளில் பருகினேன். அந்த ஆசிரியர் கெத்செமெனே தோட்டத்திலிருந்த இயேசுவைப் பற்றிச் சிந்திக்கும்படியாகவும், அத்துடன் சிலுவைக்கு அவரைப் பின்தொடரும்படியாகவும் என்னை அழைத்தார்.

16. இந்தக் காட்சிகளை நான் மனத்தோற்றம் செய்துகொண்டிருந்த போது, திடீரென்று நான் உண்மையில் நின்றுகொண்டிருந்ததைப் போலவும் அவரைக் கவனித்துக்கொண்டிருந்ததைப் போலவும் நான் உணர்ந்தேன். சிலுவையின் மீதிருந்த உருவம் உண்மையானதுபோல் காணப்பட்டிருந்ததுடன் அவர் என்னை நேசித்ததனாலும், சாத்தானின் ராஜ்யத்தைவிட்டு நான் தப்புவதற்கான அவசியம் பற்றிய நம்பிக்கையில்லாத துணிச்சல் காரணமாகவும் அவர் சிலுவையின்மேல் தொங்கிக்கொண்டிருந்தார் என்னும் பலமிக்க மனத்தோற்றத்தை நான் பெற்றிருந்தேன். எனது மிகவும் நல்ல சிநேகிதராக என்னால் அவரை நம்பமுடியும் என்றும், அவர் என்னைப் பரலோக ராஜ்யத்திற்கு நடத்துவார் என்றும் என்னால் நம்பமுடியும் என்ற எண்ணத்தை நான் பெற்றுக்கொண்டேன். நான் அவரை அங்கு கண்டபோது, அவர் என்னை இரட்சிப்பதற்கு விருப்பமுள்ளவராக இருக்கிறார் என்பதுடன் நான் குற்றத்தின் பாரத்தையும், கவலை, மனச்சோர்வு, வருடங்களாக நான் சுமந்துகொண்டிருந்த பயம் ஆகியவை எனது முதுகிலிருந்து தூரமாக உருண்டோடுவதையும் நான் உணர்ந்தபோது நான் இந்தப் பெரிய அளவிலான நன்றியறிதலின் உணர்வை உணர்ந்தேன். நான் இதற்குமுன் ஒருபோதும் உணர்ந்திராத சமாதானம் என் இருதயத்திற்குள்

பிரவேசித்ததை உணர்ந்தபோது நான் அழுதேன், சந்தோஷத்தினால் அழுதேன்.

## 14-ம் அதிகாரம்
## மாறுபடாத தெய்வங்கள்
## வித்தியாசமான பெயர்கள்

1. செயல்பாடுகளால் அந்த அறை உயிரோட்டமுள்ளதாக இருந்தது. சிரிப்பு, இசை, வாலிபத்தின் மனக்கிளர்ச்சி ஆகியவைகளால் அப்படி இருந்தது. முன் அறைக்கு நேராகப் பெரிய ஒலிபெருக்கிகள் வைக்கப்பட்டிருந்து பெரிய கிட்டார்களிலிருந்து துரத்தும் ஒலிமிக்க இசையை எழுப்பிக்கொண்டிருந்தன. எனது நண்பர்களின் ஒரு குழுவினருடன் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்துவதற்கு நான் ஏற்பாடு செய்திருந்தேன். நல்லது குறைந்தபட்சம் நான் அதைச் செய்வதற்கு முயன்றிருந்தேன். நான் அந்த அறையின் ஒரு மூலைக்குச் சென்று அங்கு நான் உட்கார்ந்தேன். அங்கு ஒரு உற்சாகமுள்ள பதிமூன்று வயதுப் பையன் ஒரு சமீபத்திய படக்காட்சியின் ஒரு காட்சியை விவரித்துக் கொண்டிருந்தான். அங்கு நான் உட்கார்ந்து அந்த சூழலில் நனைய முயன்றேன். ஆனால் ஏதோ சில காரியங்கள் சரியானதாக இருக்கவில்லை. நான் எழுந்து பின்புறவழியாக உட்புற முற்றத்திற்குச் சென்று அங்கு தங்களுடைய சமீபத்திய கனவில் கண்டிருந்த பெண்களைப் பற்றிக்கொண்டிருந்த விஷயம் பற்றி விவாதம் செய்து கொண்டிருந்த இளைஞர்களான சில ரோமியோக்களுடன் சேர்ந்து கொண்டேன். இல்லை என்னால் அதற்குள் கலந்துகொள்ளவும் முடியவில்லை. பையனே, என்னிடத்தில் என்ன தவறு இருக்கின்றது? என்னுடைய நரம்புகளைப் பற்றிக்கொள்ளக்கூடிய விதமான இசை புறப்பட்டுக்கொண்டிருந்தது. நான் அந்த அறைக்கூடாகப் பார்த்தபோது ஒரு

காட்சியை வீடியோவில் பார்த்தபோதும் அது எனக்கு எதிர்ப்பானதாக இருந்ததை நான் கண்டேன். அந்த எண்ணம் என்னை ஒரு சரக்கு ரயிலைப்போலத் தாக்கினது. இந்தப் பொருளை நான் வெறுக்கிறேன்.

2. சாத்தியமான காட்சிகளுடன் என்மனம் வேகமடைந்தது. இதுவரை இது வேடிக்கை பற்றிய என்னுடைய விவரணமாக இருந்தது. இப்பொழுது என்னால் இதற்குமேல் அதை எடுத்துக்கொள்ள முடியாது. ஏதோ ஒன்று என்னுடைய இருதயத்தைப் பிடித்துக்கொண்டிருந்ததுடன் இருக்கிறபடியே இருக்கட்டும் என்னும் நிலைமையைப் பராமரிப்பதை சாத்தியமில்லாததாகச் செய்திருந்தது. எங்கோ பாதாளத்திலிருந்து என்னுடைய வேடிக்கையான வாழ்க்கை முடிவடைந்து விட்டது என்னும் மறைவான எண்ணம் வந்ததுடன் இனிமேல் என்னால் எதையும் அனுபவிக்க முடியாது என்ற எண்ணமும் வந்தது. அந்த வீட்டின் முன்னாலிருந்து நான் வெளியே முன்புறத்துப் புல்வெளியை நோக்கி ஓடி என்னுடைய கையைக் காற்றில் மறைத்துக்கொண்டு "நீ என்னுடைய வாழ்க்கையைத் தகர்த்திருக்கிறாய்" என்று கத்தினேன்.

3. அது தமஸ்குவின் சாலையில் இயேசுவுடன் நிகழ்ந்த அனுபவத்திற்குச் சில வாரங்கள் பின்னான அனுபவமாக இருந்தது. அதன் தலையின்மேல் என் வாழ்க்கை திரும்பியிருந்தது. அந்த அளவுக்கு அதிகமான சமாதானத்தை எனது வாழ்க்கையில் ஒருபோதும் உணர்ந்தவனாக நான் இருந்திருக்கவில்லை என்பதுடன், வேதாகமம் இப்பொழுது ஜீவனுடன் வருவதற்குப் புறப்பட்டிருந்தது. அது அனைத்தையும் நான் பருகிக்கொண்டிருந்தேன் என்பதுடன் இதற்குமுன் ஒருபோதும் நான் அறிந்திருக்காத ஒரு சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன். இயேசு என்னுடைய வாழ்க்கைக்குள் வந்தபோது அது ஒரு திடீரென்றுள்ள சத்தத்துடன் இருந்தது. என்னுடைய மொழிகளில் சில

பொருத்தமில்லாததாக இருந்தது. என்னுடைய வேடிக்கைப் பேச்சுக்களில் சிலவைகள் மட்டரகமானதாக இருந்தன. என்னுடைய வாழ்க்கையின் விதம் இப்பொழுது நான் சென்று கொண்டிருந்த புதிய திசையுடன் பொருந்தாததாக இருக்கின்றது. புதிய ராஜ்யத்தை நோக்கிய ஒரு பயணத்தில் நான் இருந்தேன். மொத்தமாக ஒரு அயல்நாட்டுக்குச் சென்றுகொண்டிருப்பவனைப் போல அது இருந்ததுடன் மொழியையும் சம்பிரதாயங்களையும் ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொண்டிருந்தேன். நான் கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவனாக இருந்தேன். ஏனென்றால் அந்த ராஜ்யத்தின் கர்த்தரை நான் நேசித்தேன். ஆனால் வித்தியாசமான ஒரு ராஜ்யத்தில் நான் கற்றிருந்ததனாலும் அதில் இணங்குவதற்கு கொஞ்சக் காலம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகவும் இருந்தது.

4. மாற்றுருவம் நிகழ்தல் எப்படி அடிப்படையானதாக இருந்தது என்பதை அறிவது அந்தக்கூட்டத்தின் இரவுவரை என்னால் முடியாததாக இருந்தது. இயேசு அவருடைய அன்பினால் என்னுடைய இருதயத்தைப் பிடித்துக்கொண்டிருந்ததனால் அவர் என்னை அழைத்தபோது என்னால் அவரைத் தடைசெய்ய முடியவில்லை. எனவே அந்தக் கூட்டத்தின் இரவில் நான் எதைச் சரியென்று எண்ணியிருந்தேனோ அதைச் செய்துகொண்டிருந்தேன். அந்த வாழ்க்கையிலிருந்து அவர் என்னைத் தூரமாக அழைக்கிறார் என்பதை என்னால் உணரமுடிந்திருந்தது. நான் வேறு ஒன்றையும் அறியாமலிருந்திருந்ததிலிருந்து எது வேறிடத்தை உண்டுபண்ணுமோ அது அவ்வளவு நல்லதாக இருந்தது என்று நான் பயந்திருந்தேன். அது சரியாக இருக்கின்றபோதும்கூட அறியாததாக இருக்கின்றதைப் பற்றி பயப்படக்கூடியதாக இருப்பது சரியானதாக இருக்கின்றது. இயேசு என்னைக் கவனித்துக்கொள்ளுவார் என்று நான் இயேசுவை நன்றியுடன்

நம்புவதற்குப் பழக்கப்பட்டிருக்கிறேன் என்பதுடன் என்னுடைய உணர்ச்சிகளைவிட அவரை நம்புவது நல்லதாக இருந்தது.

5. இயேசுவை எனது இரட்சகராக நான் ஏற்றுக்கொண்டபோது, நான் வாரங்களைச் சாதாரணமாகக் கழித்துக்கொண்டிருந்தேன். இந்த நாள்வரை என்னுடன் தங்கியிருக்கின்ற அவருடனுள்ள ஒரு சிறப்பான நெருக்கத்தின் உணர்வை நான் உணர்ந்தேன். இயேசு எனக்காகப் பரலோகத்தின் வாசல்களைத் திறந்திருந்தார். ஆனால் இப்பொழுது அவர், நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் விதைகளை நீக்குவதற்கு அவர் எனக்கு உதவிசெய்தாக வேண்டும். என்னுடைய மதிப்பு முறையின் மையமாக எனது செயலையும் சாதனையையும் வாழ்க்கைக்கென்று செய்திருந்த அந்தத் தத்துவத்தையும் வேருடன் பிடுங்கி நீக்குவதற்கு அவர் உதவி செய்ய வேண்டும். ஆதாமின் ஒவ்வொரு பிள்ளையும் எடுத்துக்கொள்ள வேண்டியதாக உள்ள ஒரு பயணமாக அது இருக்கின்றது. அதைச் செயல்படுத்துகின்ற ஒரு பாதையாக நமது கண்களை சிலுவையின் ஒளியின்மேல் பதிப்பதும் புதிய ராஜ்யத்தின் கொள்கைகளுக்குள் தைரியமாகக் காலடி எடுத்து வைப்பதும் மட்டும் இருக்கின்றது.

6. நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து ஒரு ஜெபக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் புறப்பட்டேன். முதல்நாள் இரவில் நாங்கள் ஒன்றுசேர்ந்து முழங்காலில் நின்றபோது நான் எங்களைச் சுற்றிலும் தேவனுடைய இனிமையான ஆவியை உணர்ந்தேன். ஆனால் என்னுடைய பழைய வாழ்க்கையிலிருந்துள்ள வேறொரு ஆவி இருந்து, அது என்னைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த வட்டத்தில் நாங்கள் ஜெபம் பண்ணினபோது, இந்த மக்களால் ஜெபம் பண்ண முடிவதைப்போல என்னால் ஜெபம் பண்ண முடியாது. அவர்கள் அந்த அளவுக்கு வாக்குவன்மை உள்ளவர்களாக இருக்கின்றனர் என்னும் ஒரு எண்ணம்

என்னைத் தாக்கினது. என்னுடைய மனம் இந்த எண்ணத்திற்குள் பூட்டப்பட்டு விட்டதுபோல் தோன்றினதுடன் அந்த ஜெப வட்டம் என்னை நெருங்கினபோது என்னுடைய இருதயம் வேகமாக ஓடத்தொடங்கினது. விரைவில் நான் ஒளியின் இடத்தில் இருப்பேன் என்பதுடன் ஒவ்வொருவரும் என்னைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் நிமிட நேரம் காத்திருங்கள். இது என்னைப் பற்றியதாக இல்லாமல் இயேசுவைப் பற்றிய ஒரு ஜெபக் கூட்டமாக இருந்தது.

7. நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் சாபம் இங்கு இருக்கின்றது. நான் என்னுடைய இருதயத்தை இயேசுவுக்குக் கொடுத்திருந்து அவரைப் பின்தொடர வகை தேடிக்கொண்டிருந்தபோதிலும், என்னுடைய பழைய வாழ்க்கையின் கொள்கைகள் என்னைப் பின்னாலிழுப்பதற்குத் தயாராகவும் விருப்பமுள்ளதாகவும் இருந்ததுடன் என்னை எல்லாவற்றிற்கும் மையமாக்கவும் செய்து கொண்டிருந்தது. ஜெபத்தில் உள்ள எனது செயலைப் பிரச்சனையாகச் செய்து கொண்டிருந்ததுடன், ஜெபத்தில் தேவனிடத்திலுள்ள எனது உறவை எதிரானது போலாகும்படியானதுபோலச் செய்திருந்தது.

8. நான் வேதாகமத்தை முதலில் வாசிக்கத் தொடங்கினபோது, நான் ஒரு கிறிஸ்தவ சுற்றுப்புறத்தில் வளர்க்கப்பட்டவனாக இருந்திருந்தபோதிலும், நான் என்னை அடிக்கடி போதுமானவனாக உணராமலிருந்தேன் என்பதுடன், நான் வேதாகம முறைகளில் அதன் முதல் வகுப்பிலிருந்து பட்டதாரியாக இல்லாதவனாக இருந்தேன் என்பதை உணர்ந்திருந்தேன். நான் எதைப் பற்றிப் போதனை செய்யப்பட்டவனாக இருந்தேனோ அதிலிருந்து, கவனிப்பதை நேசிப்பவனாக இருந்திருந்தேன் என்பதுடன் என்னுடைய மனதின் பின்புறத்தினால் என்னால் பார்க்க முடியாமலிருந்த இந்த வசனங்களை

அவர்களால் எப்படி எளிதாகப் பார்க்க முடிகின்றது என்பதைப் பற்றி, ஏதோ அறிவற்றவிதமாகக் காலத்தை வீணாக்கிக்கொண்டிருந்தது என்பதைக் கூறிக்கொண்டிருந்தது. அந்தப் புத்தகத்தையும் வசனத்தையும் பார்ப்பதற்கு சுற்றித் தடுமாறிக்கொண்டிருந்து நான் கடைசியானவனாக இருந்துவிடக்கூடாது என்று ஜெபம் பண்ணினேன். ஒவ்வொருவரும் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கக்கூடிய விதமாக நான் அப்படிக் கடைசியானவனாக இருந்துவிடக்கூடாது என்று ஜெபம் பண்ணினேன். எப்படிச் சங்கடம் செய்வதாக இருக்கின்றது என்னை மற்றவர்களுடன் ஒப்பிடுவதற்காக நான் வருடங்களாகப் பெற்றிருந்த பயிற்சி என்னுடைய புதிய கிறிஸ்தவப் பயணத்தில் மேல்நோக்கி எழுவதற்கு ஆரம்பமாயிருந்தது. என்னுடைய மொழியையும் வாழ்க்கை விதத்தையும் பற்றிய மன உணர்த்துதலை எனக்கு உண்டுபண்ணுவதற்குப் பரிசுத்த ஆவிக்கு மிகவும் எளிதாக இருந்தது. ஆனால் எனக்கு நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் ஓட்டத்தில் எளிதில் வளையக்கூடிய உறுப்புகள் எவ்வளவு ஆழமாக வேர்பற்றி இருக்கின்றன என்பதை உணர்த்துவதற்கு அது காலத்தை எடுத்துக்கொள்ளும்.

9. என்னுடைய பயணத்தை நான் தொடர்ந்தபோது வேதாகமத்தின் மீதான ஒரு ஆழமான அன்பை நான் முன்னேற்றமடையச் செய்தேன். எனக்காக அவருடைய ஜீவனைக் கொடுத்த என்னுடைய வீரரைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாக அது இருக்கின்றது. இயேசுவைப்பற்றி வாசிப்பதை நான் இப்பொழுது நேசிக்கத் தொடங்கினேன். அது அப்படிப்பட்ட ஆசீர்வாதமாக இருந்தது. ஆனால் என்னுடைய பழைய வாழ்க்கை என்னைக் கண்ணியில் அகப்படுத்தத் தயாராக இருந்தது. நான் வேதாகம விஷயங்களைச் செயலாற்றினதைவிட என்னைச் சுற்றிலும் இருந்த மக்கள் மிகவும் குறைவான அறிவை

உடையவர்களாக இருந்ததை நான் கவனிக்க ஆரம்பித்தேன். வளர்ந்து கொண்டிருந்த என்னுடைய வேதாகம அறிவு எனக்குப் பேசுவதற்கு அதிகமான நம்பிக்கையைக் கொடுத்ததுடன், விரைவில் நான் சிறிய குழுவினர்களுடனும் அதற்குப்பின் பெரிய குழுவினருடனும் வேதாகம ஆராய்ச்சியில் பேசுவதற்குத் தொடங்கினேன். மறுபடியும் அது எனக்கும் என்னைச் சுற்றிலும் இருந்தவர்களுக்கும் அப்படிப்பட்ட ஆசீர்வாதமாக இருந்தது. ஆனால் நான் மெதுவாகவும் சீராகவும் உறவினால் உள்ள மதிப்பு என்பதைவிட அதிகமாக செயலினாலான மதிப்பு என்னும் மேடையை நோக்கி பின்னாகச் சென்றுகொண்டிருந்தேன். அது மெதுவாகவும் உணரமுடியாதவிதமாகவும் நிகழுகின்றது. ஆனால் அது நிகழுகின்றது. பின்புறப் பார்வையில் நம்மில் அநேகர் ஒருவிதமான தெய்வத்தை உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் வித்தியாசமான பெயர்களை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை நான் காண்கிறேன்.

10. கீழே உள்ள கட்டத்தை நீங்கள் பார்ப்பீர்களானால் வேதாகமத்தை நம்புவது ஆனால் உலகத்தைப்போல் வாழ்வது எவ்வளவு எளிதானதாக இருக்கும் என்பதையும் உங்களால் காணமுடியும். காட்டுத்தனமான ஒரு வாழ்க்கை முறையை நான் அர்த்தப்படுத்துவதில்லை. எதைச் செயல்படுத்துவதனால் நீங்கள் மதிப்பை அடைகிறீர்கள் என்று நான் அர்த்தப்படுகிறேன்.

| **உலகத்தில்** | **சபையில்** |
|---|---|
| கல்வி | வேதாகம அறிவு |
| உடற்பயிற்சித்திறன் | பொது இடங்களில் பேசும் திறன் |
| வேலை அந்தஸ்து | சபை அலுவலகம் |
| உடமைகள் | ஆவிக்குரிய வரங்கள் |
| உடல் தோற்றம் | சபை அலங்கார அணிவகுப்பு |

| | |
|---|---|
| தேசீயம் | தாராள மனப்பான்மை இல்லாத தாராளமான இறையியல் |

11. நம்மில் அநேகருக்கு இயேசுவுடனான நமது நடை நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் வல்லமையினால் மறைமுகமான விதமாகக் கள்ளக்கடத்தல் செய்யப்பட்டிருக்கின்றது. இன்று நான் சபையைச் சுற்றிலும் பார்க்கின்றபோது நாம் இந்த உலகத்தில் தப்பிக்க வகைதேடியிருந்த தெய்வங்கள் இன்று நம்மைச் சபையில் கண்டிருக்கின்றன. அவைகள் தாங்களே தங்களுக்கு ஒளியின் ஆடைகளை அணிந்துகொண்டவைகளாக இருப்பதுடன் நாம் அவைகளை நல்ல நண்பர்களாகத் தழுவிக்கொண்டிருந்திருக்கிறோம். கோபம், கசப்புகள், சபைக்குள் சண்டையிடுதல் ஆகியவை தவிர்க்க முடியாத பலனாக உள்ளன.

12. சபையில் பக்தி உள்ளவர்கள்போல் தோற்றமளிப்பது எளிதானதாக இருக்கின்றது. ஆனால் சபையின் மற்றொரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவரைப் பற்றி என்ன? நீங்கள் அவரைப் பற்றி அவர்களுக்குப் பின்னால் எதையோ கூறினதால் அது அவர்களிடத்திற்குத் திரும்பிச் சென்றதனால் அவர் உங்களுடன் பேசமாட்டார். வேறொரு சபைக்குச் சென்றுவிட்ட பியானோ வாசிப்பவள் பற்றி என்ன? அவள் பியானோ வாசிப்பது தரக்குறைவானது என்று அவளிடம் கூறப்பட்டதனால் அவள் சென்று விட்டாள். கொள்கை பற்றிய பழமை வாதத்திற்குசந்தா செலுத்தாதவர்களைக் கண்டுபிடித்து நீக்குவதற்காகச் சபையில் மேலும் கீழுமாக நடக்கின்ற காவலர் பற்றி என்ன? ஆராதனைக் குழுவைக் கள்ளக்கடத்தல் செய்யவும் தங்களுடைய புதிய ஆராதனை முறையை மற்றுள்ள ஒவ்வொருவரின் மீதும் வற்புறுத்துகின்றதை விரும்பாதவர்களை மிகவும் கெட்டவர்கள் என்று கூறுகின்ற சுதந்திர ஆவியினர் பற்றி என்ன?

அந்தப் பட்டியல் முடிவில்லாததாக இருக்கின்றது என்பதுடன், நமது ஆத்துமாக்களின் பெரிய சத்துரவாக இருப்பவன் அவனுடைய இசைக்கு ஏற்ப நாம் ஆடுகின்ற காலம் வரைக்கும் நாம் முக்கியமாக இன்னும் அவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளாக வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

13. சாத்தானின் ராஜ்யத்தின் கொள்கைகளால் நாம் இன்னும் முடவர்களாக இருக்கிறோம் என்பதற்கான மிகவும் பலமுள்ள சான்று, உயர்மட்டத்திலுள்ள ஒற்றுமையின்மையாகவும் சபையில் கிறிஸ்தவ அன்பின் இல்லாமையாகவும் இருக்கின்றது. தேவன் அவருடைய முறையை மதிப்பதைப்போல நாம் நமது உறவின் முறையை மதிப்போமானால் சபையில் இன்றும் மிகவும் அதிகமான அன்பின் குவியல் இருக்கும் என்பதுடன் மற்ற ஒவ்வொருவருடனும் நாம் எப்படி இடைப்பட வேண்டும் என்பது பற்றிய மிகவும் அதிகக் குஷியாலான ஜாக்கிரதை இருக்கும்.

14. தெய்வங்களை உலகத்திலிருந்து சபைக்கு தந்திரமாக மாற்றம் செய்வது மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கின்றது. நமது பொதுச்சபை சார்ந்த அனுபவத்திலும்கூட நிகழ்ந்திருப்பதுடன் சொந்த அனுபவத்திலும் இது நிகழ்ந்திருக்கின்றது. நான்காம் நூற்றாண்டில், காண்ஸ்டண்டைன் பேரரசன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினபோது கிறிஸ்தவ சபையில் முழு அளவில் மாறுதல்கள் உண்டாயிருந்தன. குறிப்பிடப்படும்படியான ஒரு ஆர்வமிக்க மாறுதலின் கட்டத்தில் அஞ்ஞான தெய்வங்களின் அநேக சிலைகளில் இருந்த தேவ கணங்களின் சிலைகள் கிறிஸ்தவ ஆலயத்திற்குள் மாற்றம் செய்யப்பட்டதுடன் அவைகளின் பெயர்களும் வேதாகமத்தில் காணப்பட்டிருந்தவர்களைப்போன்ற மோசே, தாவீது, பேதுரு

போன்றவைகளாக ஒரேவிதமான தெய்வங்கள் ஆனால் வித்தியாசமான பெயர்கள் என்பதற்கு மாற்றப்பட்டிருந்தன. அதற்கு நீங்கள் எவ்விதமாக ஆடை அலங்காரம் செய்கிறீர்கள் என்பது காரியமல்ல. இன்னும் அது அஞ்ஞானியாகவே இருக்கின்றது என்பதுடன் இன்று நம்மால் என்ன கூற முடியும்? தலைமை அப்போஸ்தல சபையிலிருந்துள்ள அதன் அப்போஸ்தல சத்தியத்திலிருந்துள்ள மருள விழுகைக்காகத் தாக்குவது ஒரு விஷயம. அதே கொள்கைகள் நமது சொந்த சபையில் செயல்படுவதைப் பார்ப்பது வேறொரு விஷயம். நமது சகோதரருடைய கண்ணில் உள்ள துரும்பை நீக்குவதற்கு முன்பாக நமது கண்ணில் உள்ள உத்தரத்தை நீக்குவதற்கு நாம் முதலில் வகை தேடுவோமாக.

15. மிகவும் அதிகமான தீவிரமான ஆர்வம் உள்ள கிறிஸ்துவின் அடியார்களின் பயணம் பற்றிக் கருத்துடன் ஆராய்வது ஆர்வமுள்ளதாக இருக்கின்றது. அவருடைய சீஷர்களுக்கு ஆர்வமுடையதாக இருக்கின்றது. வல்லமை நிலைமை ஆகியவை பற்றிய பிரச்சனை அடிக்கடி அதன் தலையை உயர்த்திக் கொண்டிருந்தது. நாம் சில வேத வாசகங்களைக் கவனிப்போமாக.

16. அந்த நேரத்தில் சீஷர்கள் பரலோக ராஜ்யத்தில் எவன் மிகவும் பெரியவனாக இருப்பான் என்று இயேசுவிடத்தில் கேட்டுக்கொண்டு வந்தனர்.

17. ஒரு காரணம் இருக்கின்றது. அந்தக் கேள்வியைச் சீஷர்கள் ஏன் கேட்டுக்கொண்டிருந்தனர்? என்பதற்கான அந்த ஒரே ஒரு காரணம் மட்டும் இருந்தது. சுயத்தின் மீதுள்ள ஆர்வம் இயேசுதான் கிறிஸ்துவாகிய மேசியாவாக இருக்கிறார் என்று சீஷர்கள் நம்பியிருந்தனர். அவர் மீதுள்ள அவர்களுடைய நம்பிக்கையில் அவர்கள் மனக்கிளர்ச்சியும் வெறியும் உள்ளவர்களாக இருந்தனர். சிலர் அவருக்காக மரிப்பதற்குக்கூட

விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். அது நான் ஜெபம் பண்ண ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது என்னுடைய மனம் என்னுடைய ஜெபத்தின் உறவிலிருந்து ஜெபத்தில் உள்ள செயலுக்கு நகர்ந்ததைப்போல இருந்தது. சீஷர்கள் மேசியாவுடனிருந்த அவர்களுடைய உறவைவிட்டு அவருடைய புதிய ராஜ்யத்திலுள்ள அந்தஸ்திற்கு நகர்ந்தனர்.

18. அப்பொழுது செபதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து, போதகரே நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் உமது மகிமையிலே எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள் செய்ய வேண்டும் என்றார்கள்.

19. யாக்கோபும் யோவானும் கற்றுக்கொண்டிருந்த புதிய ராஜ்யத்தின் கொள்கைகளை பதவி நிலை ஆகியவைகளின் தெய்வம் மேற்கொண்டிருந்ததனால் அவர்கள் இயேசுவினிடத்தில் அவருடைய ராஜ்யத்தில் அவருக்கு வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் உட்கார முடியுமா என்று கேட்டிருந்தனர். பழைய ராஜ்யத்தின் கொள்கைகளை விட்டு விடுவதற்குத் தொடர்ச்சியாக முடியாதவர்களாக இருந்த அவர்களுடைய தோல்வியில் நன்றியுடன் ஒருபோதும் களைப்பில்லாதவராக இயேசு இருந்தார். சாத்தானின் ராஜ்யத்தின் கொள்கைகள் எவ்வளவு ஆழமாக உண்மையாகவே வேர் பதிந்தவைகளாக இருக்கின்றன என்பதைக் காண்பதற்கு நமக்கு காலம் தேவையாக இருக்கின்றது என்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். நாம் சந்திக்கும் பிரச்சனை என்னவென்றால் பின்வருபவைகளை நிகழ நாம்

அனுமதிக்கின்றபோது பழைய கொள்கைகள் நம்மை மேற்கொள்ளுகின்றன.

20. மற்றப் பத்துப் பேரும் அதைக் கேட்டு யாக்கோபின் மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்.

21. பழைய ராஜ்யத்தின் கொள்கைகள் நம்மை ஆளுகை செய்யும்படி நாம் அனுமதிக்கின்றபோது போட்டி எப்பொழுதும் பலனாக இருக்கும். மற்ற சீஷர்கள் கோபமடையும்படி யாக்கோபும் யோவானும் என்ன செய்திருந்தனர்? ஏன்? ஏனென்றால் "நாங்கள் உங்களைவிட மிகவும் நல்லவர்களாக இருக்கிறோம்" என்னும் ஒரு தூதை அவர்கள் அனுப்பிக்கொண்டிருந்தனர். அப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்கள் அர்த்தப்படுத்தியிருந்திருக்க மாட்டார்கள். ஆனால் கிட்டத்தட்ட அது எப்பொழுதும் அந்த அர்த்தத்தை உடையதாக இருக்கின்றது. அவர்கள் எந்த ஒன்றுடன் வளர்ந்திருக்கின்றார்களோ அதிலிருந்து தேவனுடைய ராஜ்யம் எப்படி வித்தியாசமானதாக இருக்கின்றது என்பதைப் பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலை முயற்சி செய்யவும் விரிவடையச் செய்யவும் இயேசு இந்த வாய்ப்பை எடுத்துக்கொண்டார். அவர்கள் வித்தியாசமான விதமாகச் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர்.

22. அப்பொழுது இயேசு அவர்களைக் கிட்ட வரச்செய்து, புற ஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள் அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும்

முதன்மையானவனாக இருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

23. இந்த வார்த்தைகள் எப்பொழுதும் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருப்பதாக. நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பெரியவனாக இருக்க விரும்பினால் மற்றவர்களிடத்திலிருந்து வேலை வாங்குவதையும் அவர்களைக் கட்டுப்படுத்துவதையும்விட மிகவும் அதிகமாக பிறருக்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்குத் தெரிந்து கொள்ளுங்கள். அஞ்ஞானிகள் (புறஜாதியினர்) மற்றவர்களின்மீது அதிகாரம் செலுத்துவதுடன் அவர்களுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் மகிழ்ந்துகொண்டு யார் தலைவன் என்பதைக் காட்டுவதில் சந்தோஷப்படுகின்றனர். போதுமான அளவில் மாறுபட்டவிதமாக அதேவிதமான ஆவியுடன் பல்வேறுபட்ட அங்கத்தினர்களின் மீதும் சபையின் மீதும் தங்களுடைய சித்தத்தையும் அதிகாரததையும் செலுத்துவதற்கு வகை தேடுகின்றனர். சிலுவையிலிருந்து இரண்டாயிரம் வருடங்களாக நம்மில் அநேகர் அதை மழலையர் வகுப்புக்கு வெளியே செயலாற்றியிருப்பதில்லை.

24. நமது ஆத்துமாக்களின் எதிரி நமது பழைய வழிகளில் நாம் சிந்திக்கும்படி நம்மைப் பின்நோக்கி இழுக்கிறான் என்பதை அவ்வளவு எளிதாக ஏன் காண்கிறான். நாம் ஆரம்பத்திலேயே அறிந்திருந்ததைப் போல அது நமது பாதுகாப்பின்மையின் ஆழமான உணர்வு நம்மை மெய்ப்பிப்பதற்குச் சாத்தானுக்கு அவ்வளவு எளிதானதாக இருக்கின்றது. நாம் எவ்விதமாக நமது விலைமதிப்பை அடைந்துகொள்ளுகிறோம் என்பதை நாம் நினைக்காதவரை நாம் ஏதோ ஒன்றாக இருக்கிறோம்

என்பதை மெய்ப்பிப்பதற்காக கல்லுகளை அப்பங்களாகச் செய்கின்ற முயற்சியைத் தடைசெய்வது முடியாததாக இருக்கின்றது என்பதை நாம் காண்போம்.

25. இது நம்மை உறுதியுடன் பற்றிக்கொள்ளுகின்ற இந்த நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் கொள்கையைப்பற்றிய ஏதோ ஒன்றாக என்னைப் பயப்படுத்துகின்றதாக இருப்பதை நான் காண்கிறேன். உலகம் ஒருபோதும் கண்டிராத மிகச் சிறந்த ஆசிரியராக இயேசு இருந்தார். அவர் அவருடைய சீஷர்களுடன் மூன்று வருடங்களுக்கும் அதிகமாகச் செலவு செய்தார். அவர் அவர்களுக்கு அவரால் முடிந்த அளவுக்குப் பரலோக ராஜ்யத்தைப்பற்றியும் அவருடைய சிலுவை மரணத்தின் அந்த இரவிலும் கூட சீஷர்கள் இன்னும் கூடப் பழைய வாழ்க்கையின் கொள்கைகளுடன் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவைகள் அனைத்தையும் நாம் காண்கிறோம்.

26. போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார். பின்பு இதோ என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது. தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார். ஆனாலும் அவரைக் காட்டிக் கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார். அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள். அன்றியும் தங்களில் எவன் பெரியனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.

27. பிரபஞ்சம் ஒருபோதும் கண்டிராமலிருந்த அன்பின் பிரம்மாண்டமான செயல்விளக்கத்தின் அந்த அதே மாலை நேரத்தில்,

மற்ற எவர்களையுமவிட அவருடைய ராஜ்யத்தைப் பற்றி மிகவும் அதிகமாக அறிந்திருந்த இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தவர்கள் தங்களில் எவன் மிகவும் பெரியவன் என்று ஒருவருக்கொருவர் வாதம் செய்துகொண்டிருந்தனர். அந்தக் கட்டத்தில் இயேசு அனுபவித்திருந்த துயரம் மிகப்பெரிய அளவிலானதாக இருந்திருக்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருக்கும் நம்மில் உள்ளவர்களால் அந்த சீஷர்கள் செய்திருந்ததைப் போன்ற தவறுகளைத் திரும்பவும் செய்ய முடியுமா - இயேசுவின் ஆர்வமுள்ள அடியார்களாக இருந்தும் நமக்குள் எவன் பெரியவன் என்று நாம் மல்யுத்தம் செய்து கொண்டிருக்கலாமா?

28. நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் கொள்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதைவிட மிகவும் கெட்டதாக ஒரே ஒரு பொருள் இருக்கின்றது. அது சபையில் உள்ளவர்களால் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக இருக்கின்றது. சுயத்தைத் தேடிக்கொண்டிருக்கின்ற இந்தக் கொள்கைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களாக இருப்பதற்கு தேவன் நமக்கு உதவி செய்வாராக. அதனால் நாம் அவருடைய ராஜ்யத்தின் முழு மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியும்.

## 15-ம் அதிகாரம்

## நீங்கள் எப்படி வாசிக்கிறீர்கள்?

1. இன்று ஒரு சிறப்பான நாளாக இருக்கப்போகின்றது. நீங்கள் உள்ளுணர்வுள்ள முன்னால் கிடக்கின்ற எதிர்காலப் பலன் பற்றிய எதிர்பார்ப்பும் மனக்கிளர்ச்சியும் நிறைந்தவராக இருக்கிறீர்கள். நீங்கள் செயலாற்றியிருக்கின்ற ஒரு சிறப்பான வடிவமைப்பின்மீது ஒரு தயாரிப்பு அமைப்பின் தலைவர் ஆர்வமுள்ளவராக இருப்பதுடன் அதை, உலகைச்

சுற்றிலும் ஏற்றுமதி செய்வதைப்பற்றியும் கடுமையாகச் சிந்தனை செய்து கொண்டிருக்கிறார். ஒரு நேர்த்தியான சிறிய உள்ளூர் உணவு விடுதியில் மதிய உணவுக்குச் சந்திப்பதாக நீங்களிருவரும் முடிவு செய்திருக்கிறீர்கள். இதற்குமுன் ஒருபோதும் சந்திக்காதவராக இருந்து நீங்கள் இந்த உங்கள் கனவுகளை உண்மையாக்கக்கூடிய இந்த நபரை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள உணர்ச்சியின் மிகுதியுடன் சுற்றிப் பார்க்கிறீர்கள். கடைசியில் அவர் வந்து சேரவே நீங்கள் பலமாக அவருடன் கைகுலுக்குகிறீர்கள். அதற்குப்பின் நீங்கள்இருவரும் அந்த சிற்றுண்டி சாலைக்குள் பிரவேசித்து உங்களுடைய இடத்தைக் காணுகிறீர்கள். உங்களுடன் உணவருந்திக் கொண்டிருக்கும் உங்களுடைய பங்குதாரர் உங்களுடன் அறிமுகப்படுவதற்காக, உங்களுடைய குடும்பம் பற்றியும் அது எங்கு வசிக்கின்றது என்றும் உங்களுடைய பிள்ளைகள் எப்படிப் பள்ளிக்குச் செல்லுகின்றனர் என்றும் கொஞ்சம் கேட்கிறார். உங்களுக்குப் பின்னால் ஒருவர் இருந்துகொண்டு, உரத்த சத்தத்துடன் அவருடைய "சூப்"பைப் பருகிக் கொண்டிருந்தார் என்னும் உண்மையைத் தவிர அனைத்தும் நேர்த்தியாக நேராகச் சென்றுகொண்டிருந்தன. முடிவில் நீங்கள் அதை அலட்சியம் செய்து தூரமாக விலக்கினீர்கள். ஆனால் சிறிது நேரத்திற்குப்பின் அது கொஞ்சம் தொல்லைப்படுத்துவதாக ஆகின்றது. சில மனிதர்கள் சில மரியாதைகளைக் கற்றுக்கொள்ளும் அவசியம் உள்ளவர்களாக இருக்கின்றனர் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் கவனத்தைத் திருப்பாதவராக இருக்கும்படி அதை நீக்கி விடுங்கள். ஆனால் உள்ளூர உங்களுடைய தொழிலின் பாகஸ்தராக வரக் கூடியவராக இருப்பவர் நன்றாகச் சென்று கொண்டிருப்பதுடன், உங்களுடைய வடிவமைப்பினால் உண்டாகக்கூடிய சில அதிகப்படியான

பலன்களைப் பற்றிய உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றபோது திடீரென்று உங்களுக்குப் பின்னாலிருக்கும் ஒருவர், உங்களை நடுங்கச் செய்கின்ற விதமாகவும் உங்கள் பாத்திரங்களை அசையச் செய்யக்கூடிய விதமாகவும் பெரிய ஓசையுடன் ஏப்பம் விட்டு, பழக்கமில்லாதவர்போல் காணப்படும் இந்த ஒருவரின் மீது அனைவருடைய கண்களும் திரும்புகின்றன. அந்த அறை கௌரவமில்லாமல் சிரிப்பவர்களின் குரலினாலும் ஓசையை அடக்கிக்கொண்டு சிரிப்பவர்களுடனும் சேர்ந்து பயங்கரத்தினாலும் வெறுப்பினாலும் நிறைந்ததாக இருக்கின்றது. இறுதியில் அந்த உணவு விடுதியின் உரிமையாளர் அந்த இடத்திற்கு வந்து, அந்த மனிதனிடத்தில் இந்தவிதமான செயல்கள் அந்த உணவு விடுதியில் வரவேற்கப்படுவதில்லை என்று கூறி அவரை வெளியேற்றுகிறார்.

2. அந்த அதே மனிதர் சீனத்துப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஒருவராக இருந்து ஒரு உணவு விடுதியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் என்றால், அந்தக் காரியம் உண்மையாகவே அதிசயமானதாக இருந்திருக்கும். எந்த ஒருவரும் தன் கண்இமைகளைச் சிமிட்டியிருந்திருக்க மாட்டார். உண்மையில் இந்தவிதமான அங்க அசைவுகளை நீங்கள் செய்யாமலிருந்திருந்தால் உணவு பரிமாறுபவரும் பரிமாறும் பெண்மணியும் ஏமாற்றமடைந்திருந்திருப்பார்கள். சீன தேசத்தின் பண்பாட்டின்படி இதற்கு முன் நீங்கள் சந்தித்திருந்திருக்காத யாரோ ஒருவருடன் நீங்கள் கைகுலுக்கினால் அல்லது உணவருந்துகின்ற வேளையில் குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசினால் நீங்கள் மிகவும் கடுமையானவர் என்று எண்ணப்படுவீர்கள்.

3. அந்தவிதமான செயல்கள் முழுமையாக வித்தியாசமான விதத்தில் எவ்விதமாக விளக்கம் செய்யப்பட்டிருந்திருக்கும் என்பது

நீங்கள் எந்த உலகத்திலிருந்து அல்லது எந்தப் பண்பாட்டு வழியிலிருந்து வந்திருக்கிறீர்கள் என்பதன் வித்தியாசமான விதங்களை நீங்கள் சார்ந்திருக்கிறீர்கள் என்பதைப் பொருத்ததாக இருக்கும். நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கும் சாத்தானின் ராஜ்யத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசமுள்ள இரண்டு பண்பாடுகளையும் நாம் பார்க்கின்றபோது, இந்த உண்மை வித்தியாசமானதாக இருக்கின்றதில்லை.

4. கிறிஸ்தவ விசுவாசம் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே ஒரு அஸ்திபாரத்தை உடையதாக இருக்கின்றது. ஆயினும் இயேசுவின் பெயரை எடுத்துக்கொள்ளுகின்ற, மிதமிஞ்சினதாக உள்ள குழுக்களை நாம் பரிசோதனை செய்கின்றபோது ஒரே ஒரு அஸ்திபாரத்தின் மீது பலதரப்பட்ட முரண்பாடுகளைக் காண்பதில் நாம் குழப்பமுடையவர் களாக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்திற்குள்ளான பயணத்தில், பண்பாட்டின் ஒரு மாறுதலும் உலகப் பார்வையில் ஒரு மாறுதலும் சம்பந்தப்பட்டிருக்கின்றது. பரலோகத்தின் பாதைகள் பற்றி நாம் சிந்திப்பதில், நாம் கற்றுக்கொள்ளும்போது, நாம் அடிக்கடி சந்திக்கின்றதில் உள்ள கஷ்டங்களைப் பற்றி, சென்றுபோன அதிகாரத்தில் நாம் விவரித்தோம்.

5. கிறிஸ்தவ நடத்தையில் உள்ள மிகப்பெரிய கஷ்டங்கள் என்னவென்றால், தேவனுடைய வார்த்தையையும் வேதாகமத்தையும் எப்படி சமீபிக்கிறோம் என்பதிலும் எப்படிச் சுற்றி நடந்து வருகிறோம் என்பதிலும் அது இருக்கின்றது. பதவியைக் கைப்பற்றிக் கொள்ளும்படியாகக் கற்பிக்கப்பட்டுள்ள உலகத்தின் பள்ளியிலிருந்து நாம் வெளிவருகிறோம். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தை நோக்கி நாம் நகரும்போது, நாம் நமது தெரிந்துகொள்ளுதலை சரணடையச் செய்துவிட்டு தேவனுடைய வார்த்தையை எப்படி வாசிப்பது என்று தேவனுடைய ஆவி நமக்கு

உபதேசம் பண்ணும்படி நாம் எல்லாவற்றையும் நமது அபிப்பிராயங்கள் அனைத்தையும் அவரிடத்தில் விட்டுவிடுவது முழுவதுமான ஜீவாதாரமானதாக இருக்கின்றது. துயரப்படுகின்றவிதமாக அடிக்கடி இந்த விஷயம் அப்படிப்பட்டதாக இருக்கின்றதில்லை என்பதுடன் அநேக முரண்பாடுகளும் மதப்புரட்டுகளும் வாய்ச்சண்டைகளும் கிறிஸ்தவ விசுவாசத்திலும் வரலாறிலும் காணப்படுகின்றன என்பதுடன் சட்டப்படியானதாகவும் நெருக்கமானதாகவும் உள்ள உறவைக் குவிமையப் படுத்துகின்ற பரலோகத்தின் விஷய அடக்கத்தில் இருப்பதைவிட அதிகமாக நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் தன்மையின் அடக்கத்துடனும் வேதாகமத்தை வாசிப்பதனாலும் நேரடியாக வருகின்றது.

6. லூக்கா 10ம் அதிகாரத்தில் ஒரு நியாய சாஸ்திரியுடனுள்ள இயேசுவின் வாக்குவாதத்தில் இந்த விஷயத்தை அவர் ஆழமாகப் பதிக்கின்றார். போதகரே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று அந்த நியாய சாஸ்திரி இயேசுவிடம் கேட்கிறான். நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? என்று இயேசு பதிலளித்ததுடன், அந்தப் பிரச்சனைகளில் ஆழமாகச் சென்று சேருவதற்காக நீ வாசித்திருக்கிறது என்ன? என்று அவர் கேட்கிறார். நீ என்ன வாசிக்கிறாய்? என்று அவர் கேட்பதில்லை. நீ எப்படி வாசிக்கிறாய் அல்லது நீ வாசிப்பதற்கு எப்படி விளக்கம் கொடுக்கிறாய் என்று அவர் கேட்கிறார். பூமிக்குரிய நீண்ட ஆயுளுள்ள உயிரணுவிலிருந்து பரலோக உறவுகளுக்குப் பயணத்தை எடுத்துக்கொள்ள விரும்பும் எந்த ஒருவருக்குமான திறவுகோல் கேள்வியாக இது இருக்கின்றது. நீ எப்படி வாசிக்கிறாய்?

7. அந்த நியாயசாஸ்திரி இயேசுவிடம் கேட்டிருந்த கேள்வி கிறிஸ்தவ நடத்தை பற்றிய மிகவும் அதிக அபாயகரமான கேள்விகளில்

ஒன்றாக இருந்தது. நீங்கள் இடம்பற்றியிருக்கும் அந்தஸ்தும் நீங்கள் கலந்துகொள்ளுகின்ற மக்களும் இந்த உலகத்தில் உங்களுடைய விலைமதிப்பைச் சுட்டிக்காட்டும் பலமிக்க கருவியாக இருக்கின்றது. ஒப்புமையினால் பரலோக ராஜ்யத்தில் ஒவ்வொரு நபரும் தேவனுடைய பிள்ளையாக இருப்பதுடன் மரியாதைக்கும் கௌரவத்திற்கும் தகுதியானவராக இருக்கின்றார். அந்த விவாதத்தை நாம் பின்தொடருகின்றபோது அந்த நியாயசாஸ்திரி வேதவாக்கியத்தை பின்னால் உள்ளதைவிட மிக அதிகமாக முன்னால் உள்ள விதமாக விளக்கம் செய்வதற்கு விரும்புகிறார் என்பதை நாம் கவனிக்கிறோம்.

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதனால் அவன் இயேசுவுக்குச் சரியான பதில் கூறுகிறான். அதன் பயனாக இயேசு அவனை நோக்கி நிதானமாய் உத்தரவு சொன்னாய், அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார். ஆனால் அந்த நியாயசாஸ்திரி அதில் என்ன சம்பந்தப்பட்டிருந்தது என்பதன் முழு தாத்பரியத்தையும் உணர்ந்துகொண்டு எனக்குப் பிறன் யார்? என்பதன் அர்த்தத்தைக் கேட்பதனால் அதன் அர்த்தத்தை மாற்றுவதற்கு வகை தேடுகிறான். அந்த வேதவாக்கியத்தின் அர்த்தம் மிகச் சாதாரணமானதாக இருக்கின்றது. ஆனால் நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் செல்வாக்கிற்குக் கீழானதாக இருக்கின்ற மனித இருதயம் பழையதை நீக்கிவிட்டுப் புதியதை முழுவதுமாகத் தழுவிக்கொள்ள விருப்பமில்லாததாக இருப்பதனால், அதைப் புரிந்துகொள்ளுவது கடினமானது என்பதுபோல் நடிக்கின்றது. அரைகுறையாக வெந்து சூம்பினவர்களாக உள்ள அநேக கிறிஸ்தவர்கள்

இருப்பதற்கான காரணம் இங்கு இருக்கின்றது. அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தை நம்புகின்றனர். ஆனால் சாத்தானின் ராஜ்யத்தின்படி வாழுகின்றனர். அதன் பலன் குழப்பமானதாகவும் ஏமாற்றமடைந்ததாகவும் தீமையானதாகவும் இருக்கின்றது.

8. இரட்சிப்பு என்னும் பிரச்சனையில் கிறிஸ்தவ விசுவாசம் முழுவதும் குழப்பமடைந்துள்ளது. ஏனென்றால் கிருபையினால் வல்லமைப்படுத்தப்பட்டுள்ள ஒரு கிறிஸ்தவன் பத்துக் கற்பனைகளுக்கு இசைவாக வாழுவான் என்று வேதாகமம் தெளிவாகப் போதனை செய்கின்றது. அப்படியிருந்தாலும் நம்மில் அநேகர் பத்துக் கற்பனைகளை நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் உள்ளுறையில் சமீபிக்கிறோம். இரட்சிப்பு என்னும் குறிக்கோளை அடைவதற்காக நாம் அவைகளைச் செயல்படுத்த வகை தேடுகிறோம் என்பதைவிட மிக அதிகமாக தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இடையில் நிகழ உள்ள உறவின், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள ஒரு விளக்கமாகப் பத்துக் கற்பனைகள் இருப்பதைக் காண்கிறோம்.

9. எதிரிடையாகவும் அதிக சாதாரணமாகவும் பேசுவதில் நியாயப் பிரமாணம் அவசியப்படுகின்ற அனைத்தையும் செயலாற்ற முடியாதவர்களாக இருப்பதைக் காணுகின்ற திரள் கூட்டமாக உள்ள அனைவரின் சாத்தியமின்மையைவிட அதிகமாக ஆனால், ஒரு விசுவாச உறவினால் உள்ளே பிரவேசிப்பதும், தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளுவதும் முடியாதது என்று அவர் அறிவிப்பதும் அதனால் அவர்கள் கிறிஸ்துவில் உள்ள சுதந்தரத்தை ஒருபோதும் அனுபவிப்பதில்லை. நீங்கள் செயலாற்ற வகை தேடினாலும் அல்லது செயலாற்றாமலிருக்க வகை தேடினாலும் அந்தப் பிரச்சனை இன்னும் உறவைவிட அதிகமாகச் செயல்படுவதாக இருக்கின்றது. நமக்காக

மரித்திருக்கின்ற ஒருவரின் உறவின் அடித்தளத்தில் உள்ள ஒரு விசுவாசத்தின் உள்ளடக்கத்தில் உள்ள பத்துக் கற்பனைகளை அவர்கள் தழுவாதவரை இந்த அணிகளில் உள்ள ஒருவரும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மாட்டார்கள்.

10. செயலாற்றுவதற்கு எதிரான மனச்சார்பைப் பற்றிக்கொள்ளுகின்ற கிறிஸ்தவர்களின் அணிக்காகவும் கிறிஸ்தவ நடத்தையில் உள்ள வெற்றிக்கான சாத்தியதையின்மைக்காகவும் ஒரு விசுவாச உறவுக்குள் பிரவேசிப்பதைவிட பிரமாணம் அவசியப்படுபவைகளைச் செய்துகொண்டு, தேவனுடைய பிரமாணங்களைக் காத்துக்கொள்ளுவது முடியாதது என்று அவர்கள் கூறுகின்றனர் என்பதுடன் அவர்கள் சேவிக்கின்ற தெய்வத்தாலும் அதைச் செயலாற்ற முடியாது என்பது விரைவாகப் பின்தொடருகின்றது. இந்த நிலைமையை உலகப் பிரகாரமானவிதமாக அடையாளம் காண்பதற்கான வாஞ்சையுடன் இணைக்கும்போது எழுத்தின்படியான ஆறு நாட்களில் உலகத்தைப் படைக்கின்ற தேவனின் திறமையை நிராகரிப்பவர்களையும் கிறிஸ்தவ அறிஞர்களையும் ஆசிரியர்களையும் விசுவாசிகளையும் காண்பது ஆச்சரியமானதல்ல. அந்த நியாயசாஸ்திரி அவருடைய அயல்வாசியை நேசிக்க வேண்டியவராக இருந்ததுடன், ஆனால் அதற்குப்பின் எனக்குப் பிறன் யார்? என்று கேள்வி கேட்பதுபோல அப்படியே இன்று அநேக அறிஞர்கள் சட்டவிரோதமாக ஆம் நாங்கள் ஒரு ஆறுநாள் படைப்பை நம்புகிறோம். ஆனால் அந்த நாட்கள் எவ்விதமானவைகளாக இருக்கின்றன என்று கேள்வி கேட்கின்றனர். துன்மார்க்கம் எப்பொழுதும் தனக்குப் பொருந்தக்கூடிய விதமாக வேதவாக்கியங்களைத் திருப்புவதற்கு ஒரு வழியைத் தேடுகின்றது.

கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளவும் அப்படியிருந்தபோதிலும் இந்த உலகப்பிரகாரமாக வாழ்வதற்கும் வகை தேடுகின்றது.

11. ஒரு நபர் ஒரு சமயத்தில் புதிய இருதயத்தை அவரில் / அவளில் படைக்கக்கூடிய தேவன் மீதுள்ள நம்பிக்கையை இழந்திருப்பதுடன் வேதவாக்கியத்தில் உள்ள வெளிப்படையான அறிக்கைகள் பற்றி சாமர்த்தியமான கேள்விகளைக் கேட்பதற்குக் கற்றுக் கொள்ளுகிறார் / கற்றுக்கொள்ளுகிறாள். அதற்குப்பின் வேதாகமம் தெளிவாக நமக்கு முன்பாக வைத்திருக்கின்ற ஆண் பெண் வேலைப்பகுதிகளை நிராகரிப்பதுடன் அதற்குப்பின் ஓரினச் சேர்க்கையை ஒரு கிறிஸ்தவ மாதிரியாகத் தழுவுவதும் ஏற்றுக்கொள்ளுவதும் மிகவும் எளிதானதாக இருக்கின்றது. இந்தக் கருத்து பரலோக ராஜ்யத்திற்கு அந்நியமானதாக இருக்கின்றது. மதிப்பு என்பது எப்பொழுதும் அந்தஸ்தினாலானதாக இல்லாமல் உறவைச் சார்ந்ததாக இருக்கின்றது.

12. வல்லமை, அந்தஸ்து, செயல்பாடு ஆகியவைகளின் கொள்கைகளுக்குப் பொருந்தக்கூடிய விதமாகத் திரிக்கப்பட்டும் திருப்பப்பட்டும் உள்ள வேதாகமப் போதனைகளை, நம்மால் போதனைக்குப்பின் போதனையாகப் பட்டியலிட முடியும். ஆனால் நாம் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தால், அப்பொழுது நாம் வேதவாக்கியங்களை நாமனைவரும் எந்த ராஜ்யத்திலிருந்து வந்திருக்கிறோம் என்பதைவிட அதிகமாக வேதவாக்கியங்களை அவருடைய ராஜ்யத்திற்குத் தக்கவிதமாக விளக்கம் செய்வோம் என்னும் அந்த விஷயம் தெளிவு செய்யப்பட்டிருக்கின்றது என்று நான் நினைக்கிறேன்.

## 16-ம் அதிகாரம்

## இனிமேல் ஒரு வேலைக்காரன் அல்ல

1. அது சிறப்பான நேரங்களில் ஒன்றாக இருந்தது. நானும் ஆறு வயதான என் மகனும் ஒன்று சேர்ந்து ஒரு காரில் பயணம் செய்து கொண்டிருந்தோம். நாங்கள் ஆழமான அர்த்தமுள்ள ஒரு உரையாடலில் இருந்தோம். நல்லது அது முந்தின விலைமதிப்புமிக்க மகனின் அனுபவம் போன்ற அவ்வளவு ஆழமுள்ளதாக இருந்தது. அதன் சக்கரங்கள் மிகவும் ஒழுங்கான விதமாக அதன் தலையில் சுழன்றுகொண்டிருந்ததை என்னால் காணமுடிந்தது. அவன் மிகவும் ஆழமான ஏதோ ஒன்றின் விளிம்பில் இருந்தான் என்பதை நான் உணர்ந்தேன். பின்பு அது வெளியே வந்தது. அப்பா நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். சில சமயங்களில் நீங்கள் தலைவராக இருந்தால், சில சமயங்களில் நான் தலைவராக இருந்தால் காரியங்கள் மிகவும் நன்றாகச் செயல்படும் என்று நான் நினைக்கிறேன் என்றான். நல்லது மகனே, நிச்சயமாகவே அது ஒரு உற்சாகத்தை உண்டுபண்ணுகின்ற கருத்தாக இருக்கின்றது என்று நான் எனது குரல்வளையைச் சரிப்படுத்திக்கொண்டு கூறினேன். ஒரு நல்ல காரணம் பற்றி நான் சிந்திக்க முயன்றவனாக இருந்ததனால் வினாடி நேரத்திற்கு ஒரு மௌனம் இருந்தது. அவனுடைய கருத்து ஏன் குறைஉள்ளதாக இருந்தது என்பது பற்றி என்னால் சிந்திக்க முடியாவிட்டால் நாங்கள் இருவருமே கஷ்டத்தில் முடிவடைய நேரிடலாம். நல்லது மகனே, அதை எப்படிச் செய்வது என்று வேதாகமம் முழுவதுமாக நமக்குக் கூறுவதில்லை.

2. ஆனால் எல்லா நேரத்திலும் நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னிடத்தில் ஏன் கூறவேண்டியவனாக இருக்கிறாய்? நல்லது மகனே, நீ எப்படி அவருக்காக ஒரு பலமுள்ள இளைஞனாக எப்படி இருக்க வேண்டும் என்று உனக்குப் போதனை செய்யும்படி இயேசு என்னிடத்தில் கேட்டிருக்கிறார். அவர் என்னுடைய தலைவராக

இருப்பதனால், அவர் என்ன செய்யும்படி என்னிடத்தில் கூறுகிறாரோ, நான் அதைச் செய்வது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

பெற்றோராவது உண்மையில் ஒரு கற்கும் விளைவாக இருக்கின்றது. மகனே நீ உணவருந்தும்போது தயவுசெய்து கீழே உட்கார். ஆவ் அழகாக இல்லை.

ஸ்வீட்டி (இனியவளே) தயவுசெய்து உனது பொம்மைகளை எடுத்து அவைகளைத் தூரமாக வை.

ஆ, அம்மா, நான் வெளியே சென்று விளையாடப் போகிறேன்.

3. மகனே இது படுக்கைக்குச் செல்லவேண்டிய நேரமாக இருக்கின்றது. அழுதல், எரிச்சலூட்டும் விதமாக முணுமுணுத்தல், அலறுதல், ஆனால் நீங்கள் இப்பொழுது படுக்கைக்குச் செல்லப் போவதில்லை. நான் மட்டும் ஏன் சென்றாக வேண்டும்? இந்தச் சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் பெற்றோர்களைக் கொடிய அரக்கர்கள் என்று எப்பொழுதும் எண்ணும்படி செய்யும். பிள்ளைகள் அசையாமல் உட்கார்ந்து மேஜையில் மெதுவாக உணவருந்தும்படியும், அதனால் அவர்களுக்குச் சீரணக் கோளாறுகள் உண்டாகாமலிருக்கும் என்பதையும் நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைப் பிள்ளைகளால் ஏன் புரிந்துகொள்ள முடிவதில்லை? அவர்கள் நேர்த்தியானவர்களாகவும் சுத்தமானவர்களாகவும் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவதனால் அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டவர்களாகவும், முதிர்வயதினராகும்போது அதிகமான திறமை உள்ளவர்களாகவும் இருப்பதை அவர்கள் கற்க வேண்டும் என்பதை நீங்கள் விரும்புகிறீர்கள். பிள்ளைகள் அதிகமாகத் தூங்குவதனால் அவர்கள் நோயாளிகளாகி விடுவதை நீங்கள் தவிர்க்க விரும்புகிறீர்கள் என்பதைப் பிள்ளைகள் ஏன் மதிப்பதில்லை. ஏன்?

ஏனென்றால் அவர்கள் வாழ்க்கையின் குழிகளையும் விழுகையின் அபாயங்களையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

4. அப்போஸ்தலனான பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையில் உள்ள நமது பயணத்தைச் சித்தரித்துக் காட்டுவதற்காக இந்த உவமையை எடுத்துக் கொள்ளுகிறார்.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும் அவன் சிறு பிள்ளையாய் இருக்குங்காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை.

5. பவுல் ஒரு சிறுபிள்ளையின் அதன் பெற்றோருடனுள்ள உறவை விவரிக்கின்றபோது, ஒரு வேலைக்காரனுக்கும் அவனுடைய எஜமானனுக்கும் இடையில் உள்ள உறவில் வித்தியாசம் இல்லை என்று காட்டுகிறான். தகப்பன் அவனுடைய மகனுக்குத் தேவனுடைய ராஜ்யத்திலுள்ள கொள்கைகளில் பயிற்சியளிக்க வேண்டியவனாக இருக்கிறான். ஆனால் தனது நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் தன்மையுடன் மகன் இந்தப் பயிற்சிகளுக்கெல்லாம் உள்ள காரணத்தைப் புரிந்துகொள்ளாமலிருக்கிறான். அவனுடைய தகப்பன் அவனுக்குப் போதனை செய்ய இருக்கின்ற பாடங்களில் அநேகமானவைகள் அவனுடைய இயல்புக்கு முரண்பட்டதாக இருப்பதுடன் அவைகள் அடிக்கடி ஒரு வேலைக்காரனாக இருப்பதிலிருந்து வித்தியாசமில்லாததாக இருக்கின்ற கடினமான வேலையைப்போல் காணுகின்றது. நான் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்ற அநேக விஷயங்களிலிருந்து எனது தகப்பன் ஏன் என்னைத் தடை செய்கிறார்? என்று அந்தப் பையன் எளிதாக அதிசயிக்கலாம். மகனே இதைச் செய், மகனே அதைச்

செய்யாமலிரு என்னும்போதெல்லாம் அது நியாயமானதாக இருப்பதில்லை. நான் ஒரு அடிமையைப்போல உணருகிறேன்.

6. தேவன் அவருடைய ராஜ்யத்திற்காக நம்மை ஆயத்தம் செய்கின்றதற்கு வகைதேடுகின்றபோது, நம்முடனுள்ள தேவனுடைய இடைப்படுதல்களைப் பூரணமாக இந்த நிலைமை விவரிக்கின்றது. தேவன் அவசியப்படுபவைகளை அவர்கள், அநேகர், கடினமானதாகவும் வசூலிப்பதாகவும் பார்ப்பதுடன், தேவன் எனக்கு இதை நிகழும்படி ஏன் அனுமதித்தார் அல்லது கிறிஸ்தவ வாழ்க்கை ஏன் இவ்விதமான தடைகள் உள்ளதாக இருக்கின்றது? என்று அடிக்கடி கேள்வி கேட்கின்றனர். சபைகளில் சேருகின்ற அநேகர் இருப்பதுடன்கூட பிள்ளைகளாகவும் வேலைக்காரர்களாகவும் இருப்பதில் திருப்தி உள்ளவர்களாகவும் காணப்படுகின்றதுடன் கிறிஸ்தவ வாழ்க்கையின் கடமைகளைச் செய்துகொண்டும் அவர்களுடைய முயற்சிகளுக்குப் பரிசளிக்கப்படும் என்று நம்பிக்கொண்டும் அநேகர் இருக்கின்றனர். அப்படிப்பட்ட மக்கள் கெட்ட குமாரனுடைய கதையில் உள்ள மூத்த குமாரனைப்போல உணர்ச்சிகளால் சூழப்பட்டுள்ள அபாயத்தில் இருக்கின்றனர்.

7. வாழ்க்கையின் அநேக குழப்பங்களிலிருந்தும் நம்முடனுள்ள தேவனுடைய இடைப்படுதல்கள் பற்றிய கேள்விகளிலிருந்தும் நாம் எவ்விதமாக விடுதலை செய்யப்பட்டவர்களாக இருக்கலாம் என்பதைப் பவுல் விளக்குகிறார். தேவன் நமது தகப்பன் என்பதையும் நாம் அவருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர் நம்மை ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார் என்பதையும், அவர் நம்மைத் தீவிரமாக நேசிக்கிறார் என்பதையும் உண்மையாகவே நாம் புரிந்துகொள்ளுகின்றபோதும் தேவனுடனுள்ள நமது உறவு அறிவை, அர்த்தத்தை உண்டுபண்ணுவதற்குப் புறப்படுகின்றது. இனிமேல்

சட்டங்களும் ஒழுங்குகளும் நாம் வேடிக்கையை உடையவர்களாக இருப்பதிலிருந்து நம்மை நிறுத்துவதற்கான தடைகளாகவும் எல்லைகளாகவும் இல்லாமல் அதற்குப் பதிலாக நம்மீதான தேவனுடைய மென்மையான பற்றுதல்களையும் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்னும் நமது முழு புத்திரசுவீகாரத்தையும் நாம் பெற்றுக்கொள்ளும்படியாக நம்மீதுள்ள அவருடைய ஏக்கமுள்ள வாஞ்சையையும் வெளிப்படுத்தி அவைகள் சுதந்தரத்தின் கதவுகளாகின்றன. பவுல் அதை இந்தவிதமாக விளக்குகிறார்.

8. அப்படியே நாமும் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் இவ்வுலகத்தில் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். நாம் புத்திர சுவீகாரத்தை அடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா, பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்திரனாயுமிருக்கிறாய். நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்.

9. இவைகள் வேதாகமத்திலுள்ள சில வேத வாக்கியங்களில் அழகான வசனங்களாக இருக்கின்றன. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்னும் புத்திர சுவீகாரத்தை அடைந்து கொள்ளுவதற்காக நிகழ்ந்த இயேசுவின் தியாகபலியை இனம்கண்டு கொள்ளுகின்றபோது, நாம்

சாத்தானுடைய ராஜ்யத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறோம். நாம் நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் கொடுங்கோன்மையிலிருந்து உடைத்து விடுவிக்கப்பட்டிருப்பதுடன் நாம் தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் பலமுள்ளவர்களாகவும் மேன்மைமிக்கவர்களாகவும் நிற்கிறோம். இயேசுவின் காரணமாக நாம் எப்பொழுதும் தேவனுடைய நேசமான பிள்ளைகளாக இருப்போம் என்பதை அறிந்திருக்கிறோம். "அப்பா" "பிதாவே" என்று தேவனுடைய ஆவி உங்களுடைய இருதயத்தில் சத்தமிட்டிருப்பதில்லையா? அப்பா! அப்பா! அவருடைய அன்பில் நீங்கள் மிகவும் பாதுகாப்புள்ளவராக இருக்கிறீர்கள் என்பதை உணருவது மட்டுமின்றி அவருடைய புயங்களுக்குள் உங்களால் ஓடமுடியும் என்பதுடன் நீங்கள் வரவேற்கப்பட்டுமிருக்கிறீர்கள் என்பதுடன் மட்டுமின்றி ஆனால் ஆழமாக விரும்பப்பட்டும் இருக்கிறீர்களா? உங்களுடைய தகப்பன் அருகில் இருக்கும்போது அவர் சந்தோஷப்படுகின்ற விதமாக நீங்கள் உங்களுடைய தகப்பனைச் சிறுபிள்ளைத்தனமாகப் போற்றுவீர்களா? இந்த சுதந்திரத்தை நீங்கள் அனுபவிக்கின்றவரை நீங்கள் எப்பொழுதும் ஒரு வேலைக்காரனாக நிச்சயமில்லாமையுடன் எப்பொழுதும் இருந்து, நாளைக்கு நீங்கள் உங்களுடைய வேலை நீக்கம் செய்யப்படும் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளுவீர்கள் என்னும் நிச்சயமின்மையுடன் எப்பொழுதும் இருக்கும் ஒரு வேலைக்காரனாக இருப்பீர்கள்.

10. தேவனுடைய பிள்ளைகளாக நாம் நமது சுதந்திர வீதத்தில் நிச்சயமுள்ளவராக இருந்து நாம் தைரியத்துடன் அவரிடத்திற்கு வந்து நமது வேண்டுகோள்களைச் செய்யலாம். நமக்கு எது மிகவும் நல்லதாக இருக்கின்றது என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பதை நாம் நிச்சயத்துடன் நம்பி, தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்பையும் நீண்ட

ஆயுளுள்ள உயிரணுவின் அடிமைத்தனத்தை உடைக்கவும், வாழ்க்கையில் அனைத்தும் அதன் ஆழமான புரிந்துகொள்ளுதலின் வளர்ச்சிக்கு உதவவும் நமக்கு நிகழுகின்றது.

11. ஆறாம் அதிகாரத்தில் தேவனுடைய அன்புள்ள தழுவுதலுக்கு மனித இனத்தைத் திரும்பவும் கொண்டுவருவதற்கு வகைதேடி, தேவன் சந்தித்த நம்பமுடியாத கடினமான வேலைபற்றி நாம் விவாதம் செய்தோம் என்பதை நீங்கள் நினைவுபடுத்துவீர்கள். மறுபடியும் அந்த விஷயங்கள் இங்குள்ளன.

12. (1) மனித இனம் அவைகளின் வெற்றிபெறுவோம் என்னும் நம்பிக்கையில்லாத துணிச்சலைச் சரியாக இனம் கண்டுகொள்ளும்படியாகவும் அவர்களுடைய தெரிவுசெய்து கொள்ளுதலின் சுதந்திரத்தை மீறாமல் சரியான திசையில் அவர்கள் சுவாதீனப்படுத்தப்படும்படியாகவும் மனித இனத்திற்குக் கொடுக்கின்ற ஞானத்தின் ஒரு ஊடகமாகவும் இருக்கின்றது.

(2) அவர்கள் அவருடைய சுபாவத்தையும் ராஜ்யத்தையும் பற்றி அவர்கள் ஒரு தவறான உணர்வினை உடையவர்களாக இருந்தனர் என்பதை அவர்களுக்குக் காட்டிக் கொண்டும், அவர் உண்மையாகவே அவர்கள் மீது அன்புள்ளவராக இருந்தார் என்பதையும் எப்படியாவது அவர்களுக்குக் காட்டிக்கொண்டும் இருந்தார்.

(3) அவர்களுடைய குற்றத்தையும் பாதுகாப்பின்மையையும் நீக்குவதற்கான ஒரு வழியையும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர் என்னும் உண்மையான அடையாளத்தையும் விலை மதிப்பையும் புதுப்பிப்பதற்கான ஒரு பாதையாக இது இருந்தது.

(4) அவர்களுடைய நோக்கத்தின் உணர்வு அவர்கள் உயிர்வாழ்வது அல்லது அவர்களுடைய தலைவிதி ஆகியவைகளின்மீது மீண்டும் உரிமை பாராட்டுகின்ற ஒரு பாதை.

(5) மேலே உள்ள அனைத்திற்கும் காலம் அவசியமாக இருக்கின்றது. ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய சொந்த ஜீவனை இழந்திருந்தனர். எனவே அவர்களுக்கு ஜீவனைத் தாங்குகின்றதற்கும் அவர்கள் தெரிவுசெய்து கொள்ளவும் முடிவு செய்யவும் ஒரு முறை அவசியமாக இருந்தது.

(6) இவைகளனைத்தையும் செய்துகொண்டிருந்தபோது தேவன் நீதியின் ஒரு உணர்வை உடையவராக இருக்க வேண்டியவராக இருந்தது. அவர்களுடைய கலகத்தை அவரால் அறியாமலிருந்து அது சரி என்று அவரால் கூறமுடியாமலிருந்தது. கலகத்திற்கான ஒரு தண்டனை வேண்டும். இந்தத் தண்டனை பாவத்தின் பலன்களிலிருந்து முழுவதுமாக வேறுபட்டதாக இருக்கின்றது. ஏதேன் தோட்டத்திலிருந்து நீக்கப்பட்டுக்கொண்டிருந்தது. பாவத்திற்கான ஒரு தண்டனையாக இல்லாமலிருந்தது. ஏனென்றால் அது அவர்களுடைய தெரிவுசெய்து கொள்ளுதலின் ஒரு பலனாக இருந்தது.

13. இயேசுவின் பணி அவருடைய ஊழியம் அவருடைய மரணம் உயிர்த்தெழுதல் ஆகிய இரண்டும் அந்த ஆறு சவால்களுக்கும் பரிகாரத்தை ஏற்பாடு செய்திருக்கின்றது. கிறிஸ்துவின் சிலுவையின் வல்லமையை யாரால் புரிந்துகொள்ள முடியும்? அது நமது தவறான செயல்களைச் சாதாரணமாக நீக்குவதைவிட மிகவும் ஆழமானதாக மிகமிக ஆழமானதாக இருக்கின்றது.

14. இப்பொழுது நீங்கள் சிலுவையண்டையில் முழங்காலில் நின்று அதைப் பார்க்கும்போது நீங்கள் நீண்ட ஆயுளுள்ள

உயிரணுவினிடத்திலிருந்துள்ள உங்களுடைய விடுதலையைக் காணமாட்டீர்களா? நீங்கள் அவரால் போற்றப்படுகின்ற அவருடைய நேசமான பிள்ளையாக இருக்கிறீர்கள் என்னும் பரலோகத்திலிருந்துள்ள குரலை உங்களால் கேட்க முடிகின்றதா? உங்களுடைய குற்றங்களின் மனக்கசப்பு, அகந்தை கசப்பான தன்மையான சுமைகளையெல்லாம் நீங்கள் அவரிடத்தில் இறக்கிவைத்து அவருடைய மகிழ்ச்சியின் நிறைவு உங்களுடைய ஆத்துமாவைப் பெருவெள்ளமாக நிரப்பவைக்க மாட்டீர்களா? ஏற்கெனவே நீங்கள் அப்படியில்லாமல் உங்களால் இப்பொழுது அப்படியிருக்க முடியும். நீண்ட ஆயுளுள்ள உயிரணுவிலிருந்து தப்புவதற்கான இரகசியம், இனிமேல் ஒரு வேலைக்காரனாக இல்லாமல் ஆனால் ஒரு குமாரனாகவோ அல்லது ஒரு குமாரத்தியாகவோ இருப்பதில் இருக்கிறது.

## 17-ம் அதிகாரம்

## பாபிலோனின் வீழச்சி

1. அது மின்னலைப்போல் பாய்ந்தது. ஜெர்மனியர்களின் பான்கெர் சேனைப்பகுதி ஹாலந்து, ∴ப்ரான்ஸ் களங்களுக்குக் குறுக்காக ஓடி ஒரே இரவில் நாஜிகளின் போர்யந்திரத்தின் பிடியில் இறுக்கமாகப் பிடிக்கப்பட்டிருந்தன. எதிரிகளின் சேனைகளால் உங்களுடைய சொந்தநாடு சுவாதீனப்படுத்தப்பட்டிருக்கின்றபோது, அதில் வாழ்வது ஒரு வாடிப்போகின்ற அனுபவமாக இருக்கின்றது. என்னுடைய தகப்பனார் இந்த நேரத்திற்கூடாக ஹாலந்தின் வடபகுதியில் உள்ள அசேன் நகரில் வாழ்ந்திருந்தார்.

2. மனிதர்கள் ஜெர்மனியின் போர் இயந்திரங்களுக்குள் வேலைசெய்யும்படி பலவந்தம் செய்யப்பட்டிருந்தனர். அச்சம் தரும் இரகசியப் போலீசாருக்கு உங்களைப் பற்றித் தகவல் கொடுப்பதற்கு,

தகவல் கொடுப்பவர்கள் எப்பொழுதும் தயாராக இருந்து எந்த நேரத்திலும் நீங்கள் கதவின்மேல் ஒரு தட்டுதலைப் பெறக்கூடியவராக இருந்து, நேசிக்கப்பட்டிருந்தவர்கள் மறுபடியும் ஒருபோதும் பார்க்கமுடியாதவிதமாக இழுத்துச் செல்லப்பட்டிருந்தனர். நாஜிகளின் அரசாட்சி நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் தரக்குறியீடுகள் அனைத்தையும் காட்டியிருந்ததுடன் போட்டியாளர்கள் அனைவரையும் நீக்குகின்ற ஒரு கட்டுப்படுத்தும் ஆவியை உடையதாக இருந்ததுடன், பயப்படுத்துதலின் மூலமாக ஆட்சி செய்துகொண்டு, பேய்த்தனமான திருப்தியுடன் அதன் வல்லமையை வெளிக்காட்டிக்கொண்டு இருந்தது.

3. தனது ஆதாரங்களை உரிந்துவிட்டதாகவும் உரித்துவிட்டதாகவும் இருந்ததுடன் அதனைக் கட்டிவைத்திருந்த ஒடுக்குதல் செய்கின்ற சங்கிலிகளால் களைப்புற்றதாகவும் இருந்த ஹாலந்து 1944ன் குளிர்காலத்திற்கு தன்னை ஆயத்தம் செய்யாததாக இருந்தது. நீங்கள் வீட்டிற்குத் திரும்பி வருகின்றபோது உங்கள் வீட்டுப் பலகைகள் கணப்பு நெருப்புக்காகப் பெயர்த்தெடுக்கப்பட்டதனால் நீங்கள் வீடில்லாதவராக இருப்பீர்கள் என்னும் பயத்தினால் நீங்கள் உங்களுடைய வீட்டை விட்டுச் செல்ல மாட்டீர்கள். பசியிலிருந்தும் குளிரிலிருந்தும் நகரங்களில் இருந்த ஆயிரங்களானவர்கள் அழிந்திருந்தனர். இந்த அச்சம் தரும் கெட்ட கனவு எவ்வளவு காலம் நீடித்திருக்கும்?

4. அவர்கள் எதிரிகளின் சேனைகள் வந்திருந்த அந்தநாளை "வெறிபிடித்த செவ்வாய்க்கிழமை" என்று அழைத்திருந்தனர். ஜெர்மனியர்கள் பாலங்களை உடைத்துக்கொண்டும் யுத்த தளவாடங்களை அழித்துக்கொண்டும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக அழிவை உண்டுபண்ணிக்கொண்டும் ஜெர்மனியர்கள் பின்வாங்கிச் சென்றிருந்தனர். ஒவ்வொருவரும் வீதிகளில் நாட்டியமாடிக்

கொண்டிருந்ததையும் நேசநாட்டுச் சேனை வீரர்கள் ரேஷன் உணவை வழங்கிக் கொண்டிருந்ததையும் எனது தந்தை நினைத்துப் பார்க்கிறார். கடைசியில் சுதந்திரம் அது முடிவடைந்துவிட்டது என்பதைக் கிட்டத்தட்டக் கடைசியாக நம்புவது அவ்வளவு கடினமானதாக இருந்தது.

5. காயீனின் ஆவி இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புத்தகம், கிறிஸ்து திரும்பி வருவதற்குச் சற்று முன்னால், இந்தக் கட்டுப்படுத்தும் பாதுகாப்பில்லாத, பொறாமையுள்ள மதிப்பில்லாத ஆவி அதன் சாவுக்கு முன்னதாக ஒரு முடிவான வல்லமையின் வெளிக்காட்டுதலை உடையதாக இருக்கும். யோவான் அந்த மிருகம் ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும் உடையதாக இருந்து சமுத்திரத்திலிருந்து ஏறிவரும் என்று விவரிக்கிறான்.

6. பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக்கண்டேன். அதற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன. அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும் அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

7. இந்த மிருகத்திற்கு பலமும் மிகுந்த அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றதுடன் அதற்கு ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. இந்த மிருகத்தனமான வல்லமை வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின தேவனுடனுள்ள நமது உறவுக்கு எதிராக நிற்கின்றது. அது தனக்கு ஆராதனை செய்யும்படி வகைதேடுகின்றது.

8. உலகம் முழுவதும் அதைப் பின்பற்றும்படி இந்த மிருகத்தினால் ஏன் எளிதாகத் திருப்திப்படுத்த முடியும் என்றால், அது நீண்ட ஆயுளுள்ள உயிரணுக்களினால் உண்டுபண்ணப்பட்டுள்ள மின்கலங்களினால்

ஓடுகின்றது. நாம் இயல்பாகப் பேசக்கூடிய மொழியை அது பேசுகின்றது. நாம் எவைகளைச் சாதனைகளாக அடைந்துகொண்டும் செயலாற்றிக்கொண்டும் இருக்கிறோமோ அந்த அடையாளத்தைத் தேடும்படி அது நமக்குத் தைரியமூட்டுவதுடன், நாம் தேவனை நமது சொந்த நிபந்தனைகளின்படி சந்திக்க வகைதேடும்படியாகவும் நாம் எவைகளை சாதனைகளாக அடைந்துகொண்டும் செயலாற்றிக்கொண்டும் இருக்கின்றோமோ அந்த அடையாளத்தைத் தேடும்படி அது நமக்கு தைரியமூட்டுவதுடன், நாம் தேவனை நமது சொந்த நிபந்தனைகளின்படி சந்திக்க வகைதேடும்படியாகவும், நாம் எவைகளைச் சாதனையாக அடைகிறோமோ அந்த செயலுடனும் நமது சொந்த நிபந்தனைகளில் நாம் தேவனை சந்திக்கும்படி அது நம்மைத் தைரியப்படுத்துவதுடன் இரத்தமில்லாத நமது சொந்த பலியைக் கொண்டுவரும்படியாகவும் தேவன் நமது ஆராதனைக்கு இணங்கவும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டுமென்று எதிர்பார்க்கின்றது. உலகத்தின் மிகவும் அதிகமான பகுதி இந்த மிருகத்தின் வல்லமையின் கீழ் ஏற்கனவே இருக்கின்றபோதிலும் அதை உணராமலிருக்கின்றது. உலகம் சுதந்திரத்தின் கொள்கைகளை நிராகரித்து உலகளாவிய கட்டுப்பாட்டுக்கு பயத்தின் மூலமாகவும் பலத்தின் மூலமாகவும் திரும்புகின்றபோது அது நம்மில் ஒவ்வொருவருடைய இருதயத்தின் ஆழத்திற்குள்ளும் எது பதுங்கியிருக்கிறது என்பதன் சாதாரணமான புறத்தோற்றமாக வெளிக்காட்டலாக இருக்கும்.

9. தேவன் சோம்பேறித்தனமாக உட்கார்ந்துகொண்டு ஒன்றும் செய்யாமலிருப்பதில்லை. இந்த மிருகத்தின் வல்லமைக்குச் சரணடைய வேண்டாம் என்றும் வெற்றி அடைவோம் என்றும் நம்பிக்கையில்லாத துணிச்சலான ஒரு தூதை, உலகத்தை உச்சரிக்கும்படி அவர்

அனுப்புகிறார். மூன்று தூதுகளின் வடிவில் அது வருகின்றது. முதல் தூது, மனித இனத்தை, நாம் வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின தேவனையே தொழுதுகொள்ள வேண்டும் என்று கவனிக்கும்படி அழைக்கின்றது. அது இயேசுவின் தியாகபலியை நமக்குச் சுட்டிக்காட்டி காயீனின் காணிக்கை தேவனால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளபட மாட்டாது என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றது. நம்மால் தேவனிடத்திலிருந்து அனுகூலத்தை ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. அது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக நமக்கு விலைக்கு வாங்கப்பட்டிருந்தது.

10. அப்பொழுது தேவன் ஒரு முக்கியமான சத்தியம் பற்றி நமக்கு ஞாபகப்படுத்துகிறார். அவர் அதை இந்த மொழியில் அமைக்கிறார். "வேறொரு தூதன் பின்சென்று பாபிலோன் மகா நகரம் விழுந்தது. தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே என்றான்."

11. தேவன் பாபிலோன் என்னும் சொல்லை ஏன் உபயோகம் செய்கிறார்? நாம் வேதாகமத்தின் மூலமாகப் பார்க்கின்றபோது பாபிலோன் என்னும் நகரத்தை நிம்ரோத் என்பவன் கட்டினான் என்பதை நாம் காண்கிறோம். நிம்ரோத் என்பவன் உற்சாகம் தரும் ஒரு சுபாவம் உள்ளவனாக இருந்தான். அவனுடைய ராஜ்யத்தின் முதல் மையமாக பாபிலோன் ஏரிக், அக்காத், கல்னே சீனார் ஆகியவை இருந்தன. தன்னுடைய சொந்த ராஜ்யத்தை அமைத்திருந்தவன் என்று முதலில் பதிவு செய்யப்பட்டிருந்த மானிடனாக நிம்ரோத் இருந்தான். ஒரு காலகட்டத்தில் நிம்ரோத் அவனுடைய அன்னையைத் திருமணம் செய்திருந்தான் என்றும் உண்மையில் அது செயல்படாத ஒரு குடும்பமாக இருந்தது என்றும் குறிப்பிடுவது உற்சாகமுள்ளதாக இருக்கின்றது.

நிம்ரோத் அவனுடைய தாயாரைத் திருமணம் செய்துகொள்ளுவதற்காக அவனுடைய தகப்பனைக்கூடக் கொலைசெய்து விட்டான் என்ற சில கருத்தும்கூட இருக்கின்றது. அந்தக் காரியம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் எங்கு குடும்ப உறவுகள் பரிசுத்தமானவைகளாக இருந்தனவோ அங்கு நிம்ரோதினுடைய வீடு தேவனுடைய ராஜ்யத்தின் கொள்கைகளின்மீது அஸ்திபாரமிடப்பட்டிருக்கவில்லை.

12. நிம்ரோதுடைய வீட்டு வாழ்க்கையில் நிம்ரோதின் வாழ்க்கை பெரிய அளவில் பாதுகாப்பு இல்லாமலிருந்ததனால் அவன் அறியப்பட்டவனாக இருக்க ஆரம்பித்தான். அவன் யாருக்குச் சொந்தமானவனாக இருந்தானோ அதைவிட அதிகமாக அறியப்பட்டவனாக இருந்தான். ஆதியாகமம் பத்தாம் அதிகாரம் மனித இனத்தின் பிறப்பு வரிசையைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தகப்பன்யார் என்பதனால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தான். அவர்களுடைய குடும்ப உறவினால் அவர்களுடைய அடையாளம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தேவனுடைய ராஜ்யம் இயங்குவது இந்தவிதமானதாக இருக்கின்றது. எப்படியிருந்தாலும் நிம்ரோத் ஒரு பலத்த வேட்டைக்காரனாகவும் பலத்த அதிபதியாகவும் இருந்தான் என்று அறியப்பட்டிருந்தான்.

13. இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான். ஆகையால் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப்போல என்னும் வழக்குச் சொல் உண்டாயிற்று. சினேயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதி ஸ்தானங்கள் அந்த தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய்

நினிவேயையும் ரெகொபோத் பட்டணத்தையும் காலாகையும் நினிவேக்கும் காலாருக்கும் நடுவாக நெசேனையும் கட்டினான். இது பெரிய பட்டணம்.

14. தனது பாதுகாப்பின்மையினால் துரத்தப்பட்டவனாக இருந்த நிம்ரோத் தன்னை மெய்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான். அப்படியே அவன் நகரங்களைக் கட்டத் தொடங்கி அதற்குப்பின் அயலகத்தார்களாக இருந்த பழங்குடி மக்களின் குடும்பங்களின்மீது வெற்றிகொள்ளுவதற்காக அவன் சேனைகளைத் திரட்டுவதற்கு ஆரம்பித்தான். புத்திகூர்மையுள்ளஒரு வரலாற்றுஆசிரியன் பின்வருபவைகளைக் குறிப்பிடுகிறான்.

15. முந்தின ஆளுகைகளின் அதிகாரம் உறவினர்களின் உணர்ச்சியின்மீது தங்கியிருக்கின்றதுடன் தலைவனின் உயர்வு, நேரடியான (சொந்தமான) கட்டுப்பாட்டின் ஒரு சொரூபமாக இருந்தது. அதற்கு எதிர்மாறாக நிம்ரோத் ஒரு பிரதேசத்தின் பேரரசனாக இருந்தான் என்பது அதன் குடிகளாக அதுவரை இருந்த மனிதர்கள் சொந்தமான கட்டுகள் எதுவும் இல்லாதவர்களாக இருந்தனர். இதுவரை கோத்திரங்கள் இருந்தன. சமுதாயம் குடும்பம் என்றிருந்தது. இப்பொழுது அவர்கள் ஒரு தேசம் ஒரு அரசியல் சமுதாயம் ஒரு நாடு ஆகியவைகளாக இருந்தன.

16. இன்று ஏறத்தாழ உலகம் முழுவதும் நிம்ரோதின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றியிருக்கின்றன. இன்றுள்ள அரசு அரசியல் சார்ந்ததாகவும் பிரதேசம் சார்ந்ததாகவும் இருக்கின்றன. அவை இனத்தின் பண்புகளை உடையவைகளாகவும் நாடோடி வாழ்க்கையை உடையவைகளாக இல்லாமலும் இருக்கின்றன.

17. அரசியல் அமைப்பை அடித்தளமாகக் கொண்ட ஒரு முறையைக் கட்டி உயர்த்துவதற்காக நிம்ரோத் பின்பற்றின காலடிச் சுவடுகளைக் கவனிப்பது உற்சாகமுள்ள ஒன்றாக இருக்கின்றது. அவன்

கட்டின முதல் நகரத்தினால் அந்த அமைப்புக்கு தேவன் வைத்த பெயர் பாபிலோன் என்பதாக இருக்கின்றது. மனித இருதயங்களின் சாராம்சத்தில் பாபிலோன் எப்படி முன்னேற்றமடைகின்றது என்பதைக் கவனியுங்கள்.

18 (1) அது தனது தகப்பனைவிட்டுப் பிரிந்திருக்கும் ஒரு பிள்ளையினிடத்திலிருந்து அவனிடத்திலிருந்து / அவளிடத்திலிருந்து அது புறப்படுகின்றது.

(2) அவனுடைய / அவளுடைய பாதுகாப்பின்மையில் அவன் / அவள் தொடர்ச்சியாக அங்கீகாரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறான் / தேடிக்கொண்டிருக்கிறாள்.

(3) அங்கீகாரத்திற்கான அந்த ஆவல் அடிக்கடி அவனுடைய / அவளுடைய வெறுமையையும் விலைமதிப்பின்மையையும் நீக்குவதற்காக ஒரு நபரை வெற்றிபெறுவோம் என்னும் நம்பிக்கையில்லாத் துணிச்சலான செயலைச் செய்யும்படி துரத்துகின்றது.

19. பாபிலோனின் மதுவை கெட்ட பழக்கமுள்ள போதைப் பொருளாக மாற்றுகின்ற கெட்ட பழக்கமாக இது இருக்கின்றது. அதை எடுத்துக்கொள்ளுவதில் நாங்கள் எதை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு மெய்ப்பிக்கின்ற தீர்மானத்தை உடையவர்களாக அல்லது பயனில்லாத் தன்மைபற்றிய உணர்ச்சிகளினால் தொற்றுநோயாகப் பீடிக்கப்படாதவர்களாக நம்மில் எத்தனை பேர்கள் இருக்கிறோம்? தேவனைத் திருப்திப்படுத்துவதற்கான நமது முயற்சிகள் ஒட்டுமொத்தமான ஒரு தோல்வியாக இருக்கின்றது என்றும் இதற்குமேல் முயற்சி செய்வதில் அர்த்தமில்லையென்றும் நம்மில் எத்தனை பேர்கள் உணர்ந்திருக்கிறோம்? வேலையில் அல்லது பள்ளியில் அல்லது சபையில் உள்ள வல்லமைக்கான போரில் நம்மில் எத்தனை பேர்கள் பிடிபட்டவர்களாக இருக்கிறோம் என்பதுடன் சுயத்தைத் தற்காத்துக்

கொள்ளுவதற்காக அல்ல, நமது சொந்த சிறிய ராஜ்யத்தை, பெரிதுபடுத்துவதற்கான முயற்சியிலும் சுயத்தைத் தற்காப்பதிலும் உள்ள ஒரு கருவியாகக் கோபமிக்க வெட்டுகின்ற வார்த்தைகளைக் கேட்கவும் பேசவும் செய்திருக்கிறோம்? இந்தக் கோப்பையிலிருந்து உலகம் முழுவதும் குடிக்கின்றதில்லையா? அப்படிப்பட்ட ஒரு விதமாக நாம் செயலாற்றுகிறோம் என்றால், அப்பொழுது நாம் நிச்சயமாகவே பாபிலோனின் அடிமைகளாக இருப்பதில்லையா?

20. அதனால் பாபிலோன் விழுந்துவிட்டது என்பதன் அர்த்தம் என்ன? பாபிலோன் விழுந்துவிட்டது என்னும் சொல்.

21. எரேமியா 51:8லிருந்து நேரடியாக வருவதுடன் அதன் அடக்கத்தை (உட்கருத்தை) எரேமியா 50:51ல் காணுகின்றது. தேவனுடைய ஜனங்கள் எழுத்தின்படி பாபிலோனால் அடிமைகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருப்பதுடன் அவர்களில் அநேகர் அவர்களுடைய உண்மையான வீட்டை இளைப்பாறும் இடத்தை மறந்திருக்கின்றனர்.

ஆனால் தேவன் அவருடைய பிள்ளைகளை மறந்திருக்கின்றதில்லை. அவர் பின்வரும் அழகிய வாக்குத்தத்தத்தைப் பண்ணுகிறார்.

22. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் ஏகமாய் ஒடுங்குண்டார்கள். அவர்களைச் சிறையாக்கின யாவரும் அவர்களை விடமாட்டோம் என்று கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய மீட்பரோவெனில் வல்லமையுள்ளவர், சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம் தேசத்தை இளைப்பாறப்பண்ணுவதற்கும் பாபிலோன் குடிகளைத் தத்தளிக்கப் பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை அவர் நடத்துவார். எரேமியா 50:33,34.

அதற்குப்பின் 51ம் அதிகாரத்தில் பின்வருவதை நாம் வாசிக்கிறோம்.

23. வில்லை நாணேற்றுகிறவனுக்கு விரோதமாகவும் தன் கவசத்தில் பெருமை பாராட்டுகிறவனுக்கு விரோதமாகவும் வில்வீரன் தன் வில்லை நாணேற்றக்கடவன். அதின் வாலிபரைத் தப்பவிடாமல் அதின் சேனையை எல்லாம் சங்காரம் பண்ணுங்கள். குத்திப்போடப்பட்டவர்கள் கல்தேயரின் தேசத்திலும் கொலைசெய்யப்பட்டவர்கள் அதின் வீதிகளிலும் விழுவார்கள். அவர்கள் தேசம் இஸ்ரவேலின் பரிசுததருக்கு விரோதமாகச் செய்த அக்கிரமத்தினால் நிறைந்திருந்தும் யூதா தன் தேவனாலும் இஸ்ரவேல் சேனைகளின் கர்த்தராலும் கைவிடப்படவில்லை. நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்பியுங்கள். இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது. அவர் அதற்குப் பதில் செலுத்துவார். பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம். அது பூமியனைத்தையும் வெறிக்கப் பண்ணினது அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள். ஆகையால் ஜாதிகள் புத்தி மயங்கிப்போனார்கள். பாபிலோன் சடுதியில் விழுந்து தகர்ந்தது. அதற்காக அலறுங்கள். அதின் தோலை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள். ஒரு வேளை குணமாகும். பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்தோம். அது குணமாகவில்லை. அதைவிட்டுவிடுங்கள். நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம். அதின் ஆக்கினைவானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தமும் எட்டினது. கர்த்தர் தம்முடைய நீதியை வெளிப்படுத்தினார். நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலைச் சீயோனில் விவரிப்போம் வாருங்கள். அவர்களைத் துலக்குங்கள். கேடயங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள். கர்த்தர் மேதியர்களுடைய

ராஜாக்களின் ஆவியை எழுப்பினார். பாபிலோனை அழிக்க வேண்டும் என்பதே அவருடைய நினைவு. இது கர்த்தர் வாங்கும் பழி. இது தமது ஆயத்துக்காக அவர் வாங்கும் பழி. பாபிலோனின் மதில்கள் மேல் கொடியேற்றுங்கள். காவலைப் பலப்படுத்துங்கள், ஜாமங்காக்கிறவர்களை நிறுத்துங்கள். பதிவிருப்பாரைவையுங்கள். ஆனாலும் கர்த்தர் எப்படி நினைத்தாரோ அப்படியே நாம் பாபிலோனின் குடிகளுக்கு விரோதமாகச் சொன்னதைச் செய்வார். எரேமியா 51:3-12.

24. இந்த அதிகாரத்தின் உள்ளடக்கத்தின்படி, தேவனுடைய ஜனங்கள் பாபிலோனினால் அடிமைகளாக வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் விலகிச் செல்லும்படி நடத்தப்பட்டிருக்கின்றனர். ஆனால் தேவன் அவர்களை விடுவிக்கப் போகிறவராக இருக்கிறார். அவர்கள் அதற்குத் தகுதியானவர்களாக இருக்கின்றனர் என்பதற்காக இல்லாமல் அவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றனர்.

25. "பாபிலோன் விழுந்திருக்கிறது" என்னும் வார்த்தை நியாயத்தீர்ப்பு ஆக்கினை ஆகியவைகளின் ஒரு அறிக்கையாக இருக்கின்றபோது, அது அதே நேரத்தில் இஸ்ரவேலின் சுதந்திரத்திற்கான ஒரு வாக்குத்தத்தமாக இருக்கின்றது. ஏனென்றால் பாபிலோன் இஸ்ரவேலை அடிமைத்தனத்திற்குள் வைத்திருந்தது.

26. இரண்டாம் தூதனின் தூதில் அடங்கியுள்ள பாபிலோனின் வீழ்ச்சி ஆவிக்குரிய இஸ்ரவேலை பாதுகாப்பின்மையிலிருந்தும் மதிப்பின்மையிலிருந்தும் நம்மைப் பாவம் செய்யும்படி வற்புறுத்துகின்ற கட்டுப்படுத்தும் ஆவியினிடத்திலிருந்தும் விடுவிக்கின்றது. நேசமானவரில் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் இனம் கண்டு கொள்ளுகின்றபோது இயேசுவின் தியாக பலியின் மூலமாக

உண்மையில் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். நமது பாதுகாப்பின்மை அனைத்தும் நமது விலைமதிப்பின்மையும் தூரமாக அடித்துச் செல்லப்பட்டிருப்பதனால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக சுதந்திரமானவர்களாக நிற்கிறோம்.

27. மூன்று தூதர்களின் தூது எலியாவின் தூது என்றும்கூட அழைக்கப்படுகின்றதுடன் மல்கியா 4:6ன் கடைசிப் பகுதியில் உள்ள இந்தத் தூது, தேவன்பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளின் இருதயங்களைப் பிதாக்களிடத்திற்கும் திருப்புவார் என்று கூறுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை உண்மையாக நம்பும்போது அந்தத் தூதின் வல்லமை வெளியிடப்படும். நாம் எதையாவது செய்ததனால் என்பதனால் அல்லாமல் ஆனால் நமக்காக இயேசு மட்டும் தனியாக என்ன செய்திருக்கிறார் என்பதில் இருக்கிறது.

28. பாபிலோனையும் அவருடைய நீண்ட ஆயுளுள்ள உயிரணுவின் கொள்கைகளையும் கைவிட்டு விடுங்கள். இனிமேல் ஒரு வேலைக்காரனாக இருக்காதீர்கள். ஆனால் அப்பா பிதாவே என்று அழுங்கள். மேலும் நீங்கள் அவருடைய நேசமான பிள்ளை என்பதை அறிந்துகொள்ளுங்கள். கிறிஸ்துவின் மூலமாக நாம் சுதந்திரமானவர்களாக இருக்கிறோம்.

* * * * *